Aḻakarpati
Kaḷḷappirāṉpati

Porunai river
Āḻvār-Tirunakari
Nellai-nakar (Tirunelvēli)
Kaḷantaiyaṉ-pati (Kaḷakkāṭu)
Nākaṉār pati
Vāṇumāmalai (Nāṅkunēri)
Tirukkuṟuṅkuṭi
Pālaiputtūr
Neykkuṉṟāmalai
Nīlaneṭumalai
Uppukkaṇṭam Pottai
Vaḷḷinakar (Vaḷḷiyūr)
Toṭṭicci-kuḷam
Tirukkirāmaṃ
Tōvāḷai (with Tāṭakai-malai)
Nāñci-nāṭu (with its unmentioned town)
Civintāpuri (Cucīntiram)
Kōṭṭāṟu
Pañcavaṉṉa-vaṉam (forest)
River vaḷḷiyāṟu
Kaṭikaippaṭṭiṇam
Ceṇṭaiyaṉ-pati
Tiruveṭṭāṟu
Kuḻitturai
Vīracaram
Pāraiccālai
Tavaḷaikaraiyātakuḷam
Utiyaṅkuḷam
Uttaṇmaikkōṭu

Neyyāttaṅkarai
Kūṭṭappaṉai
Kuṟumpaṉaiccēri
Veṅkānalūr
Viḻiñam
Nēmam
Kāṭṭūr
Karumpaṉai-yāṟu
Cālaiyam pati
Tiruvaṉantavaṉam.

The place name *Pañca-vaṉṉac-Cōlai* in Cōḻa-nāṭu is also repeated as *Pañca-vaṉṉa-vaṉam* in Cēra-nāṭu: they appear to be generic rather than specific names. The topography of places mentioned after Tiruvāṉaikkā—Tiruvaiyāṟu, Cīyāḻi, Uṟaiyūr, Tiruvārūr and Tillaivaṉam - is mixed up, places reachable first being mentioned later, showing want of correct knowledge in this matter. The name Tiruvanantapuram or Tiruvananta-vanam is often found with euphonic lengthening of the second vowel *a*.

நூல்முகம்

நூற்பெயர்

பெருமாள் என்பது சிறப்பாகத் திருமாலைக் குறிக்கும் திருப்பெயர். திருமால் திருக்கோவிலை, 'பெருமாள் கோயில்' என இப்பொழுதும் மக்கள் வழங்கி வருகின்றனர். பெருமையில் சிறந்தார் என்னும் பொருள்படுவது பெருமாள் என்னும் இச் சொல். எனவே, பொதுவாக இறைவனைக் குறிக்கும் பெயராகவும் இது அமைகிறது.

திருமாலுக்குச் சிறப்பாக வழங்கும் இப் பெயரை முருகப் பெருமானுக்கும் சூட்டுவது உண்டு. திருப்புகழ்ப் பாடல்களிலே அருணகிரிநாதர் 'பெருமாளே' என முருகப் பெருமானை விளித்துப் பேசும் இடங்கள் பலவாகக் காணப்படுகின்றன. ஆறுமுகப் பெருமாள், செந்திப் பெருமாள், சரவணப் பெருமாள், விசாகப் பெருமாள், வேலாயுதப் பெருமாள், மயிலேறும் பெருமாள் என முருகப் பெருமானைக் குறிப்பிடும் பெயர்களில் இச் சொல் இணைந்து வருதலும் காணலாம்.

'சுவாமி' என்பது எல்லாம் வல்ல இறைவனைக் குறித்து வரும் ஒரு பொதுப்பெயர். பெருமாள் சுவாமி-பெருமாளாகிய சுவாமி என்பதாம். சிவசாமி, இராமசுவாமி, இலக்குமணசாமி, நாராயண சுவாமி, கிருஷ்ணசுவாமி, கந்தசாமி, குமாரசாமி என வரும் பெயர்களைப் போன்ற அமைப்புடையது; இருபெயரொட்டுப் பண்புத் தொகையாய் அமைந்ததொரு தொடர்ப்பெயர்.

'கதை' என்பதற்குப் பெரியசரிதம், வரலாறு என்பன பொருளாம். 'கதையின் பொருளும் கண்ணாநின் பேரே' (இயற்பா 2:64) என இதிகாச-புராணங்களைக் கதை எனச் சுட்டுகிறார் பூதத்தாழ்வார், இரண்டாந்திருவந்தாதியில். ஆகவே காவிய அமைப்புடைய பெருஞ்சரிதம் கதை என்பதாம். திருமாலாகிய பெருமாளின் பெருமையுடையதொரு வரலாறாக இந் நூல் அமைந்துள்ளமையின், 'பெருமாள் சுவாமி கதை' என்று பெயர் பெறுவதாயிற்று.

நூற்பொருள்

திருமால் திருப்பதிகள் நூற்றெட்டு என்பர். அவை எல்லாவற்றுள்ளும் 'கோயில்' என்று வைணவர்களால் சிறப்பாகப் போற்றப்பெறுவது திருவரங்கம் பெரிய கோயிலையே. ஆகவே எல்லாத் திருப்பதிகளுக்கும் மூல முதல் திருப்பதி திருவரங்கம் என்பது பெறப்படும். இங்கே எழுந்தருளிக் காட்சி தரும் பள்ளி கொண்ட பெருமாளுக்கு 'நம் பெருமாள்' என்பது சிறப்புத் திருநாமம்.

'நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர், நம்பிள்ளை
என்பர், அவரவர்தம் ஏற்றத்தால்; — அன்புடையோர்
சாத்துதிரு நாமங்கள் தானென்று நன்னெஞ்சே!
ஏத்ததனைச் சொல்லிநீ இன்று'

என்று மணவாளமாமுனிகள் உபதேச ரத்தினமாலையில் (50) நம்பெருமாள் என்பது ஏற்றத்தால் வந்த திருப்பெயர் என்பதைத் தெரிவிக்கின்றார்.

திருவரங்கம் பெரிய கோயில் அர்ச்சகர் ஒருவருக்குப் பெருமாள் அருளிய திருவாக்கின் பொருட்டாக, நம்பெருமாள் தென்னாடு வந்து, மலை நாடாகிய சேரநாட்டில் திருவனந்தபுரத்திலே திருப்பள்ளி கொண்டருளிக் காட்சி தந்த வரலாற்றைக் கருப்பொருளாகக் கொண்டது பெருமாள் சுவாமி கதை என்னும் இந்தக் கதைப்பாடல்.

திருமருவும் புயரூபன் அரியநெடு மாலோன்
திருவனந் தாபுரி அமர்ந்தகதை பாட
அரியதிரு மாலவனும் வேணி யரனாரும்
ஆனைமுகத் தோனும் அஞ்சலென் றருள்வாய்! (73- 76)

என இந் நூலாசிரியர் தொடக்கத்திலே நூற்பொருளைச் சுட்டியுள்ளார்.

திருமால் திருக்கதை

நூற்பெயர் மூல ஏட்டின் தொடக்கத்திலே தனியேட்டிலும் மாற்றேட்டில் நூல் முடியுமிடத்திலும் குறிப்பிட்டிருத்தல் காணலாம். அன்றி நூலினுள் பெருமாள் சுவாமி கதை என்னும் பெயர் இடம்பெறவில்லை.

'இக் கதையை நான் சிறிது புஞ்சொல்லினால் சொன்னேன்'
என்றும் (49)

'திருமருவும் புயரூபன் அரியநெடு மாலோன்
திருவனந் தாபுரி அமர்ந்த கதை பாட'
என்றும் (73 - 74)

'வந்து கதைக்கு நீ அஞ்சலென் றருள்வாய்'
என்றும் (78)

'உன்கதைக்கு நீ வந்து உதவியருள் செய்வாய்'
என்றும் (84)

'பண்ணாக இக்கதையைப் பாடவருள் தருவாய்'

என்றும் (91)

'உலகுபுகழாகவே கதையருளிச் செய்வாய்!'
என்றும் (100) இந் நூலைக் கதை என்றே ஆசிரியர் பல இடத்தும் குறிப்பிடுகின்றார்.

'திருமால் கதையைப் பார்மீதில் செப்பமுடனே பாடுதற்கு' எனத் தொடக்கத்தில் (69) 'திருமால் கதை' என்று இந் நூலை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

'திருமாலின் திருக்கதையைச் சீராகவே படித்து
... ...
எத்திசையும் தான் புகழ எழுதிப் படித்தவரும்
நித்தியகலி யாணமாக நீடுழி வாழியென்றார்' (1757-1763)

என்று இக் கதைப்பாடலை நிறைவு செய்கிறார் ஆசிரியர் அருதகுட்டி. 'பெருமாள் சுவாமி கதை' என்னும் நூற்பெயரைத் 'திருமாலின் திருக்கதை' என ஆசிரியர் நூலுள் சுட்டுகின்றார். எனவே, 'திருமால் கதை' 'திருமாலின் திருக்கதை' என்பவற்றை இந் நூலின் மாற்றுப் பெயராகக் கொள்ளலாம்.

பாடல் அமைப்பு

பாடல்களில் அமையும் அடியினளவு குறித்துச் சொல்லுமிடத்துத் தொல்காப்பியர்,

'நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே' (தொல். செய்யுள். 32)
என்று வரையறுக்கின்றார். இதற்கு அகலவுரை கண்ட பேராசிரியர்,

''அடி என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன நாற்சீரடி என்றவாறு. எனவே, இருசீரானும், முச்சீரானும், ஐஞ்சீரானும், அறுசீர் முதலியவற்றானும் வருமாயினும் அவை சிறப்பில என்றவாறாம்''
என்று விளக்கம் தருகிறார்.

இது போலவே சீர்நிலைபற்றியும்.

'சீர்நிலை தானே ஐந்தெழுத் திறவாது' (தொல். செய்யுள். 41) என்றும் அளவிட்டுக் கூறுகிறார் தொல்காப்பியர். பெருமை ஐந்தெழுத்தெனவே சிறுமை அதனில் குறைந்து வரலாம் என்பது பெறப்படும். இவ்வாறு வருதல் பண்டு தொட்டு வரும் கவி மரபு ஆகும். கவிஞர்கள் இந்த மரபினைப் போற்றி வந்துள்ளனர். இந்தக் கதைப் பாடலின் ஆசிரியரும் யாப்பு முறை மரபுகளின் படியேதான் பாடியுள்ளார்.

இந் நூலுள் பெரும்பான்மையும் நாற்சீரடிகள் கொண்ட அமைப்பே காணப்படு கிறது. நாற்சீர் அமைப்பிலும் ஈரசை நாற்சீர் கொண்டு வருவனவும் மூவசை நாற்சீர் கொண்டு வருவனவும் வெவ்வேறு சந்த அமைதி பெறுகின்றன. சில இடங்களில் முச்சீர் கொண்ட அடிகளும் இடம் பெற்றுள்ளன. இவற்றை முடுகுநிலைச் சந்தமுடையவை எனலாம். இந் நூலின் பாடல் அமைப்பு அகவற்பாடலின் அமைப்பே. முச்சீர் கொண்ட பகுதிகளை வஞ்சியடிகள் எனலாம்.

சந்தம் வேறு படும் இடங்கள் சுவடியில் குறிப்பிட்டுக் காட்டப்படவில்லை. ஆனால், நூலுள் அங்கங்கே இடம் பெறும் விருத்தங்கள் குறியிட்டுக் காட்டப்பட் டுள்ளன. பாடல் இடையில் வரும் இவ் விருத்தங்கள் அறுசீர் விருத்தங்களாக உள்ளன. விருத்தங்கள் ஒழிந்த பிற பகுதிகள் சந்த வேறுபாடுடையவை என்று பொதுப்படக் கொள்ளலாம். இப்பொழுது விருத்தங்கள் அத் தலைப்பிலும் பிற பகுதிகளில் சந்த வேறுபாடுகள் 'வேறு' எனச் சுட்டியும் காட்டப்பட்டுள்ளன.

பெருமாள் சுவாமி கதையைப் பெரிதும் அடியொற்றிப் பின்னாளில் அமைந்த 'பற்பநாப சுவாமிகதை' என்னும் சுவடியில் விருத்தம் அல்லாத பகுதிகளை 'நடை' என்று தலைப்பிட்டுக் காட்டியுள்ளார். நடைப் பகுதியிடையில் சந்த மாறுமிடங் களை இச் சுவடி 'அடி வேறு' எனக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளது.

பாடலுக்கு ஓசையினிமை தரும் எதுகை மோனை அமைப்புகள் சிறப்பாகவே இக் கதைப்பாடலிலும் அமைந்திருக்கக் காணலாம். மக்கள் இலக்கியமாகிய இந்த விற்கவிதைப் பாடலில் பேச்சுவழக்குச் சொற்களும் சொற்களில் பேச்சொலி மாற்றங்கொண்ட சிதைவு வடிவங்களும் இடம் பெற்ற போதிலும் கவிமரபுகளை ஆசிரியர் நன்கு போற்றியுள்ளார்.

எழுத்து வடிவமும் சந்தியும்

பாடற்பகுதி சுவைபட அமைந்தபோதிலும் சுவடியில் காணப்பெறும் எழுத்து வடிவ மாறுபாடுகளும் சந்திப் பிழைகளும் பலவாம். ஓசை ஒப்புமையுடைய ர, ற, ல, ள, ழ, ண, ந, ன என்பவை ஒன்றற்கொன்று மாறுபட்டு எழுதப்பட்டுள்ள இடங்கள் பலவாம். மோனை ஒப்புடைய ச, த; ம, வ போல்வனவும் மாறுபடச் சிற்சில இடங்களில் உள்ளன. இவையெல்லாம் உரிய முறையில் திருத்தப்பெற்றன. ஒற்றெழுத்துக்கள் புள்ளியிட்டும் குறில்-நெடில் வேறுபாடு காட்டும் கொம்புடைய வற்றைச் சீராக அமைத்தும் தரப்பட்டுள்ளன. நகர எழுத்து வரவேண்டிய பலசொற் கள் தகரமாகவே மாற்றுருப்பெறுகின்றன. இவற்றுள் சில பேச்சுவழக்கு நடையெ னக் கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டன. பொருள் தெளிவில்லாமலும் மாறுபட்ட பொருள் தொனிக்கும் இடங்களிலும் தகரத்தை விடுத்து அவ்வச் சொற்களுக்குரிய நகரவடிவு தரப்பட்டுள்ளது. இச் சுவடியில் கூட்டெழுத்து அமைப்புடையவை

யாய்க் காணப்பெற்றவை உரியமுறையில் பிரித்தெழுதப்பட்டிருக்கின்றன. இப் பொழுது நடைமுறையில் உள்ளபடி புதிய எழுத்து வடிவங்கள் தழுவப்பட்டுள்ளன. பேச்சுவழக்கு மாறுபாட்டினால் சொல்வடிவங்கள் வேறுபட்டுக் காண்பனவும் உள. இவ்வாறு வருவனவெல்லாம் ஒரே சீரான மாற்றம் பெறுதல் காணத்தகும். ஒலியுருமாற்றம் ஆய்வோருக்கு இத்தகு வழக்குகள் காட்டாக அமையும். சந்திப் பிழைகளும் தக்க முறையில் மாற்றி இணைக்கப் பெற்றன. பயன்பாடு கருதி அடிகள் எண்ணிடப்பட்டும் விருத்தங்கள் தொடர் எண்ணிடப்பட்டும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இந் நூல் ஓர் இசைப்பாட்டு

இக் கதைப்பாடல் இசையுடன் பாடுவதற்கு என அமைந்தது.
'பண்ணாக இக்கதையைப் பாடவருள் தருவாய்'(91)
'உள்ளமுறவே இக்கதையை இசல்பாட அருள்வாய்'(100)
'பண்ணு தமிழ் தெரிந்து பாடினவர் தான் வாழி' (1756)

என்று இவ்வாறு இந் நூல் இசைநயம் சான்ற பாடல் என்பதை ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார். இந் நூல் ஒரு கதைப்பாடல் எனக் குறிப்பிட்டுள்ளதோடு இப் பண்ணு தமிழை இசையுடன் பாட வேண்டும் என ஆசிரியர் தெரிவிப்பதனால் இது ஓர் இசைப்பாட்டு என்பது தெளிவாம்.

வில்லிசைப் பாடல்

இந்த இசைக் கவிதை வில்லிசைக்கு ஏற்பவும் அமைந்துள்ள பாங்கு தொட்ட தொட்ட இடங்கள்தோறும் பளிச்சிடுகிறது.

'வல்ல நல்ல இசைபாட வாணரென்னுந் தமிழோங்கும்
வில்லுடனே வீசுகோலும் வெத்தியுடன் கொடுத்தோர்கள்'

என வில்லிசைக்கு உதவும் வில்லையும் வீசுகோலையும் இவ்வாசிரியர் குறிப்பிட்டுள்ளார் (1515-1516).

வில்லிசைக் கதைப்பாடலில் சிற்சில தனி உத்திகள் அமைதல் உண்டு. பாடுவார் தாம் முன்னர்க் கூறிய செய்தியைக் கேட்போர் உளம் கொளும் வகையில் மீண்டும் எடுத்துக் கூறுதல் ஒரு மரபு. இது பல்லவியை மீண்டும் மீண்டும் எடுத்துப் பாடும் இசைப்பாடல் மரபினைத் தழுவியது.

'சீரங்க ராயன் இனிதிருந் தாரே'
என்று உரைத்தவர் (124) மீண்டும் 130 ஆம் அடியாக இதனையே பாடுகின்றார்.

'வந்தார் மாயவர் வந்தா ரென்பார்' (351)
என மாயவர் வருகையை மக்கள் போற்றியமையைப் பாடத் தொடங்கியவர்

பின்னரும் இவ்வடியையே கூறி (369) நிறைவு செய்வதும் நோக்கத்தக்கது.

'கும்பக்குடம் வைப்பார் வீதியெங்கும்' (377)
என்றவர் ஏழு அடிகள் தள்ளி இதே அடியைத் திரும்பவும் கூறுகிறார்.

தெருக்கள் தெருக்களை அலங்கரிப்பார்' (387)
என்றவர் 404 ஆம் அடியாக,

'தெருக்கள் தோறும் அலங்கரிப்பார் (404)
என்று வருணிக்கிறார். இதன் பின்னர் 412 ஆம் அடியாகவும் இது வருகிறது.

'கோலமுடன் மாயவரைக் கண்டபொழு தேதான்' (498)
என்னும் அடியே அடுத்து 502 ஆம் அடியாகவும் இடம்பெறுகிறது.

'சிந்தையுட னேபூசை கொண்டிருந் தந்நாள்'(104)
'கிருபையுட னேமாயன் இனிதிருந் தந்நாள்' (119)
'இனிதாக வேமாயன் இனிதிருந் தந்நாள்' (131)

என அடுத்தடுத்து வருதலும் நோக்கத் தகும்.

உலகுபுக ழாகவே கதையருளிச் செய்வாய்
உள்ளமுற வேகதையை இசல்பாட அருள்வாய்' (99-100)
'மன்னவர்க ளினமுறை கேட்டவரு மில்லை
வளமா யினமுறை நடந்தது மில்லை' (148-149)

என ஒரே செய்தியே அடுத்தடுத்து அழுத்தங்கொடுத்துக் கூறுதல் காணலாம். இங்ஙனமே,

'அமலாகல விமலாஉனக் கவயோம் உனக்கவ யோம்!
கடைந்தே கடல் அமுதாக்கிய கண்ணா உனக்கவ யோம்!
கஞ்சமாமலர்த் திருவானவர் கண்ணா உனக்கவ யோம்!
அவையோமுனக் கவையோமென அருமா மறையோனும்' (238-241)

என்றிவ்வாறு 'அவயம்' என அடைக்கலமடைதலை வலியுறுத்திக் கூறும் வகை காணலாம்.

செய்திகளைத் தொடர்புறக் கூறும் முறை

முன்னடியில் சொன்ன செய்தியையே அடுத்த அடி முதலிலும் உரைத்துச் செய்திகளைக் கேட்போர் உளங்கொளக் கூறும் முறை மற்றொன்று,

'பரமேயெனக் கருள்வாயெனப் பருமாமலை அடைந்தேன்;
அடைந்தேன் உனது அருளே என அரியதவம் புரிந்தேன்'(236-237)

இங்கே அடைந்தேன் என்ற சொல்லை அந்தாதி போல அடுத்த அடியிலும் தொடரும் நிலை காணலாம்.

'உனக்கவயோம் என 240 ஆம் அடி முடிய, 'அவையோம்' என அடுத்த அடி (241) தொடங்குகிறது.

'திருமுன்ம்பது உனக்கே' என 252 ஆம் அடிமுடிய,
'உனக்கே முன்பு தருவோம்' என 253 ஆம் அடி தொடருகிறது.
'தெச்சணா பூமியில் போந்தார்' என நான்காவது விருத்தப் பாடல் முடிய

(264) 'தெச்சணாபூமி தன்னிலே போகவே' என அடுத்த அடி தொடர்கிறது.

'திருவானைக் காவிலே வந்தனர்' (298)
என்பதைத் தொடர்ந்து,

'வந்துதானும் திருவானைக் காவிலே' (299)
என்னும் அடி தொடர்கிறது.

'இன்ம்பமாக விடையுங் கொடுத்தனர்' (334)
என்பதனை அடுத்து,

'வென்றி மாயவன் விடைகொண்டு போகவே' (335)
எனச் செய்தியின் தொடர்ச்சி அமைகிறது. 346 ஆம் அடி,

'கொற்ற மாயன் திருவையாறு தன்னிலே'
என்று முடிய அடுத்து வரும் விருத்தம் (5)

'திருவையாறு தன்னிலே வந்து' என்று தொடங்குகிறது.
'கண்ணரு மினிதிருந்தார்' என 580 ஆம் அடிமுடிய, அடுத்து, 'இருந்து ஒருபொழுது' என்றுதொடங்குகிறார்.

இவ்வாறு முன்பின் தொடர்பாக - அந்தாதி போல் அமையும் முறையை இக் கதைப்பாடல் நெடுகிலும் காணலாகும். இது மேற்பார்வைக்குக் கூறியது கூறல்போலத் தோற்றமளிக்கலாம். ஆனால், இவ்வாறு செய்திகளைத் தொடர்பு படுத்திப் பாடும் மரபு விற்கவிதைப் பாடல்களில் காணும் ஒரு தனிக் கூறாகும்.

இடையிடையே அமையும் விருத்தப் பாடல்கள்

கதைத் திருப்பங்களை எடுத்துரைக்கும் வகையில் இடையிடையே விருத்தக் கவிகளை வில்லிசைப் பாடல்களில் இடை மடுப்பர். இந்தக் கதைப் பாடலிலும் கதைத் திருப்பங்களைப் புலப்படுத்தும் வகையில் 26 விருத்தப் பாக்கள் இடம்பெற் றிருக்கினறன. இசையுடன் பாடி வருகின்ற வில்லிசைப் புலவர் இடையிடையே

கதைத் தொடர்பு, கதைப் போக்கு ஆகியவற்றை விளக்கியுரைக்க முற்படுவார். இவ்வாறு அமையும் விளக்கநிலையைக் காட்டும் வகையில் விருத்தப்பாக்கள் அமைந்துள்ளன.

தொடக்கமும் முடிவும்

எச் செயலையும் தெய்வ வழிபாட்டுடன் தொடங்குதல் இந் நாட்டு மரபாத லின் தெய்வத்துதியுடன் நூலைத் தொடங்குகிறார் புலவர். சிறப்பாக முதலில் விநாயகர் வணக்கம் கூறுதலே பெரும்பான்மை மரபு. பெருமாள் சுவாமி கதையாசி ரியரும்,

'நாயகன் குன்றாத தந்தி பாதமது போற்றி
இக் கதையை நான் சிறிது புஞ்சொல்லினால் சொன்னேன்" (48-49)

என்று விநாயகரைப் போற்றிக் கதை சொல்லத் தொடங்குகிறார். ஆயினும் இதன்பின் இந் நூலாசிரியர் தம்மை அறிமுகப்படுத்தி, அவையடக்கம் கூறிய பின்னரே முறையாக இக் கதையைத் தொடங்குகிறார். கதைப்பாடலின் தலைவர் நம்பெருமாளாதலின் திருமாலை முதலில் குறித்து அடுத்து அயன், சிவன், விநாயகர் ஆகியோரை இங்குக் குறிப்பிடுகிறார். இப் பகுதியில் திருமால் துதியாகத் திருமாலின் அவதார நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறிப் போற்றுகிறார் (77-100). இதுவே முறையான விற்கவிதைப் பாடலின் தொடக்கமாகும்.

விற்கவிதைப் பாடலை முடிக்கும் போது நாட்டிற்கும், நகரத்திற்கும், கதை மாந்தர்களில் தலைமையானவர்களுக்கும், நிகழ்ச்சிக்குக் காரணமாயிருந்தவர்களுக் கும், ஊர்ப் பெரியோர்களுக்கும், பிறருக்கும், அவையோருக்கம் வாழ்த்துப் பாடுதல் ஒரு மரபாகும். இதனை 'வாழி பாடல்' என்பர். இப் பெருமாள் சுவாமி கதை வாழி பாடலுடன் நிறைவுறுகிறது. இதனாலேயே இது வில்லிசைக்காக இயற்றப்பெற்ற கதைப்பாடல் என்பது தெளிவாம்.

நடைக் கூறுகள்

ஏனைய இலக்கியப் பாடல்களுக்கும் விற்கவிதைப் பாடலுக்கும் நடையில் வேறுபாடு நிரம்ப உண்டு. விற்கவிதையில் சொற்செட்டு என்பது இல்லை. செய்திகளின் போக்கிற்கேற்பக் கூறியது கூறல் போலத் தோற்றமளிக்கும் சொற்க ளும் தொடர்களும் இதில் மிகுந்து காணப்படுகின்றன. இசைக்கு ஏற்பச் சாரியை முதலியவைகளைச் சேர்த்து வழங்குதலும் பரவலாகக் காணப்படுகிறது. ஓசையமை தியும் தாளக்கட்டும் இழையோட ஓசையழுத்தம் கருதி இனமான மெய்யொலி களை மிகுத்து வழங்கும் போக்கும் காணப்படுகிறது.

பெயர்களுடன் 'தன்' என்னும் சாரியை சேர்த்து வழங்குதலும் வேற்றுமையுருபுகளோடு 'தன்' என்னும் சாரியை சேர அமைதலுமாகிய நடை சந்த நிலை கருதி இந் நூலில் தழுவப்பட்டுள்ளது என்று கருத இடமுண்டு. காட்டாகச் சில வழக்குகளைக் காண்போம். ராவணன்தன் போர் (101), சீதைதன் (212), திருமால்தன் முன்னே (138) போல வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

உருபுகளுடன் தன் சாரியை சேர்ந்து வருதலைப் பல இடங்களிலும் காணலாம். புஞ்சொல்தனை (58), சிலைதனை (212), குன்றுதனை (429), களிறுதனை (546), மாமரந்தன்னையே (302), ஈசர்தன்னையும் (323), பச்சைமால் தன்னையே (629), உமைதன்னை (657), ஆழிதன்னை (341), தாடகைதன்னை (343), புற்பகந்தனவன் தன்னொடே (308), பூதந்தன்னுடனே (609), முரசுதனில் (109), சீரங்கந்தனிலே (255), பதிதனிலே (412), வனந்தனிலே (423), பதிதனில் (434), சோலைதனில் (456), திருவனந்தபுரந்தனிலே (649), திருவரங்கந்தன்னில் நின்று (660), காலந்தன்னில் (566), பதியது தன்னிலே (530), திருவாரூர்தன்னில் (527).

இவ்வாறே "தான்' என்னும் சாரியை அடுத்து வரும் ஆட்சிகளும் பலவாகும். சீரங்கந்தான் விட்டு (283, 421), அமிழ்தத்தில் தான் தோன்றி (453), பூதந்தான் நடக்க (609), உமையம்மைதான் கேட்டு (665), நடந்துதான் (297), கண்டுதான் (322), வந்த பொழுதேதான் (451), வரலாறுதனிலேதான் (496), கண்டபொழுதேதான் (498, 502) என்றாற் போல்வன எடுத்துக்காட்டுகளாம்.

"அது' என்னும் பகுதிப் பொருள் விகுதி சேர்ந்து வரும் சொற்களும் இந் நூலுள் பலவாகக் காண்கிறோம். பாதமது (48), கொடையது நெருங்க (512), நாடதுவுங் கண்டு (522, 524), மலைநாடதிலே (544, 661), திருவையாறது தனிலே (347), திருவாரூரதிலே (583), வருமாறது (256) என்றாற் போல்வன இத் தகையனவே.

தவமானது (227) என்றாற்போல 'ஆனது' என்றும், சோழ நாடான தேசம் (455) என்றாற்போல 'ஆன' என்றும் எழுவாயுடன் சேர்த்து வழங்குதலும் இசைநீட்சிக்குப் பயன்படும் பொருட்டேயாம்.

ஓசையழுத்தத்தின் பொருட்டு இனமான மெய்யொலிகளைச் சேர்த்து வழங்கும் பாங்கும் பல இடங்களில் உள்ளது. பின்வருவன மகர ஒற்று மிகுந்து காணப்படும் இடங்களாகும். இன்ம்பமுடனே (153), இன்ம்பமாக (178, 334), இன்ம்பமுள்ள (581), அன்ம்ப தாகவே (245), அன்ம்பதாய் (330), இன்ம்பமால் (543), இன்ம்பக்கோபாலர் (621). 'தூண்ங்கள்' எனக் ககரத்திற்கினமான ஙகர ஒற்று மிகுதியும் காணப்படுகிறது.

ஐகாரம் சேர்ந்த உயிர்மெய்யின் பின் யகர ஒற்றுச் சேர்ந்து வழங்குதலும் இவ்வகையான அழுத்தமுறை கருதிய ஆட்சியே என்னலாம். கைம்முறை (156, 163), வைய்குண்டப்பதம் (247, 430), மைய்வாய்த்த குழல் (440), மைய்க்கணுமை (548), மைய்த்துனரை (582), மைய்விழி சேரும் மடவார் (570), வைய்ப்பார் (385), வைய்த்தபூசை (424) போல்வருவன கருதத்தக்கன.

அடிகளின் இறுதிகள் ஒரே வகையான அமைப்புடன் வரும் நிலையும் ஒரு சிறப்புக் கூறு என்னலாம்.

வன்ன மாமரம் தென்னங் காவாம்
வரிசையுடயதோர் பூமரமாம்

என்பது தொடங்கி (457), 'தவனம் பொருந்திய யாறுகளாம்' (484) வரை 'ஆம்' என முடிவுறும் வகையில் வருதல் நோக்கத்தகும்.

இவ்வாறே அடிகளின் இறுதியில் எச்சங்கள் தொடர்ந்து வரும் நிலையில் உள்ள பகுதிகளும் சில உள. 492 ஆம் அடி முதற்கொண்டு, பாட, ஆட, எறிய, சூழ, எறிப்ப, சூழ, அசைய, நெருங்க என்னும் செயவென்னெச்சங்கள் இயைபுத் தொடையாய் வருமிடம் எடுத்துக்காட்டாம். சோழநாடு பற்றிய வருணனையில் 'நாடு' என்னும் சொல் அடிதோறும் தொடர்ந்து வருமாறு பாடுதல் நாடு என்பதன் முதன்மையைச் சுட்டும் அமைப்புப் போலத் தோன்றுகிறது (511-524).

'வெண்ணை' என்பது 'வெண்ணெய்' என்பதன் தவறான மாற்றுவடிவப் பேச்சு வழக்கே. இது போலவே 'வாவி' என்பதனை 'வாள்வி' என வழங்குதலும் (469, 518, 600) காணப்படுகிறது.

இங்ஙனமே 'பலவும்' என வரவேண்டிய சொல்லாட்சி 'பலதும்' எனவே பலவிடத்தும் வழங்கப்படுகிறது. இது போலவே பன்மைச் சொல்லுடன் ஒருமை சேர வருதலும் பலவிடங்களில் காண்கிறது.

இவையெல்லாம் இலக்கிய வழக்குக்கு மாறுபட்டுக் காணினும் மக்கள் உச்சரிக்கின்றபடியே ஆசிரியர் பல சொற்களை அமைத்துக் கொண்டுள்ளார் என்று கொள்ளலாம். இவ் வகை வடிவ மாற்றங்கள் ஏட்டில் உள்ளபடியே-பேச்சு வழக்கு மாற்ற வடிவிலேயே - ஆசிரியர் தந்துள்ளபடியே அமைக்கப்பட்டுள்ளன. இவ் வகை மாற்று வடிவங்கள் இசையமைதி கருதியும் மக்கள் நடையில் எளிதிற் புரிந்து கொள்வர் எனக் கருதியும் ஆசிரியர் அமைத்திருக்கலாம். நல்ல பல இலக்கியச் சொற்களைப் பாடலில் ஆளுகின்ற இவ்வாசிரியர் இலக்கிய மரபுக்கு மாறுபட்ட பேச்சு வழக்கு வடிவ மாற்றங்கள், திரிபுகளை மேற்கொண்டது இது மக்கள் இலக்கியம் என்னும் கருத்தினாலேயே எனத் துணியலாம்.

காவியப்பாங்கு

கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய காவியங்களில் பாயிரப் பகுதி முதற்கண் அமைந்திருத்தல் போல, இக் கதைப்பாடலிலும் முதலில் பாயிரம் உள்ளது. இதில் விநாயக வணக்கம், நூற்பெயர் இயம்பல், திருமால் திருவனந்த புரம் வந்த காலம், ஆசிரியர் இந் நூலியற்றத் தொடங்கிய காலம் பற்றிய செய்திகள் அடங்கிய பாடல்கள் முதலில் உள்ளன (1-5). இவற்றுள் 6-7 ஆம் செய்யுட்கள் இந் நூலைக் கற்போர்பெறும் பயன் எடுத்து இயம்புவன. இவை இரண்டும் கம்பராமாயணப் பாயிரப் பகுதியில் இடம் பெற்றிருப்பவையே. சில பாட வேறுபாடுகளுடன் இங்குத் தழுவப்பட்டுள்ளன. இறுதிச் செய்யுட்கள் இரண்டும் (8-9) திருவனந்தப் பெருமாளின் அருள் வேண்டியமைந்த துதிப்பாடல்களாகும்.

இப் பாயிரப் பகுதி நூலின் முதலில் ஏட்டெண் இன்றித் தனி ஏடாக உள்ளது. இப் பாயிரத்தின் முதல் இரண்டு பாடல்கள் மட்டும் மாற்றேட்டில் இறுதியிலுள்ள ஒரு தனி ஏட்டில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த ஏட்டை எழுதியவர் பாயிரப் பகுதியை எழுதத் தொடங்கி முற்றுவிக்காது விடுத்தனர் என்று கருத இடமுண்டு.

நூற்பகுதி தொடங்கும் ஏடு முதற்கொண்டு எண்ணிடப்பட்டிருக்கிறது. பாயிரம் நூற்குப் புறம்பானது என்னும் கருத்தில் தனி ஏட்டில் எழுதி முதலில் சேர்த்துள்ளார் என்று தெரிகிறது. நூற்பகுதியின் தொடக்கத்தில் தெய்வ வணக்கம், நூலாசிரியர் பற்றிய குறிப்பு ஆகியவை இடம்பெறுகின்றன. இதன்பின் அவையடக்கப் பகுதி உள்ளது. இதுவரையில் உள்ள பகுதி ஒருவகையில் நூலுக்குத் தோற்றுவாயாக உள்ளது என்னலாம். இதன் பின்னர்த் தெய்வங்களின் திருவருளை வேண்டி இக் கதைப் பொருளை ஆசிரியர் பாடத் தொடங்குகிறார்.

காவியத்தின் இயல்பு உரைக்கும் போது வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்பன முதலிற் சுட்டப் பெற வேண்டும் என்னும் மரபுக்கு ஒத்த வகையில் இம் முதற் பகுதி உள்ளது. தன்னேரில்லாத தலைவனைக் குறித்ததாகவும் காவியம் இருக்கவேண்டும் என்பது மற்றொரு மரபு. இக் கதைப் பாடலோ ஒப்பாரும் மிக்காரும் இலராய மாயவனைக் குறித்து அமைதலின் இஃது ஏற்புடைய தலைவ னைக் கொண்டுள்ளது என்பது தெளிவு. பாட்டுடைத் தலைவனாகிய பெருமாளின் தனிச்சிறப்பும் பெருமைகளும் நூல் முழுமையும் அங்கங்கே பேசப்பட்டுள்ளன. இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், நரசிங்காவதாரம் முதலிய அவதாரங்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய திருமால் பெருமை கூறும் நூல்களில் காணும் செய்திகள் பலவும் பெருமாளைத் துதிக்கும் முறையிலும் அவரை அறிமுகப்படுத்தும் நிலையிலும் அமைந்துள்ளன. பெருமாளின் துதிமாலைகள்போல் காணப்படும் பகுதிகளும் பலவாகும். திருவா னைக்காப் புராணம், திருவாரூர்ப் புராணம், திருவிளையாடற் புராணம், திருநெல்

வேலிப் புராணம், திருக்குற்றாலத் தலபுராணம், சுசீந்திரத் தலபுராணம் முதலிய மற்றபல தலபுராணங்களில் காணப்படும் செய்திகள் பல அவ்வத் தலங்கள் பற்றிக் கூறும் போது தொடர்புபடுத்தி ஆசிரியரால் எடுத்தாளப்பட்டுள்ளன. எனவே, இந் நூலில் பற்பல காவியங்களின் கருத்துகள் மிளிர்தல் காணலாம்.

மேலும், மலை, கடல், நாடு, வளநகர், பருவம், இருசுடர்த் தோற்றம், பூம்பொழில் நுகர்தல், காதல் நிகழ்ச்சிகள், அரசரின் மந்திராலோசனை முதலியன வாகப் பல செய்திகளும் காவியத்தில் இடம்பெறுதல் இயல்பு எனக் காவிய இலக்கணம் கூறும். இவை பற்றிய செய்திகள் இக் கதைப் பாடலிலும் இடையி டையே ஏற்ற இடங்களில் விரவிவருதல் காணலாம்

நாடு நகரச் சிறப்புகளை முக்கியமாகக் காவியங்கள் முதலில் அமைப்பது உண்டு. இக் கதைப் பாடல் திருவரங்கப் பெருமாளைப் பற்றியதாதலின் திருவரங் கம் பெரிய கோயில் பற்றியும் அங்கே சீரங்கராயன் பலரும் புடைசூழ்ந்து பணிசெய்ய இனிது வீற்றிருக்கும் காட்சியைத் தொடக்கத்தில் சித்திரிக்கிறார். இது பயண நூல் போன்ற அமைப்புடையதாதலின் திருமால் வருகின்ற வழிபற்றிக் கூறிவருகின்ற நிலையில் சோழ வளநாடு (513 - 524), மலைநாடு (1096 - 1106, 1218 - 1254), நாஞ்சி நாடு (1138 - 1166) ஆகியவைபற்றிய சிறப்பான பல செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். இவையெல்லாம் நாட்டு வருணனைப் பகுதிக ளாம்.

இவ்வாறே திருவானைக்கா (299-322), திருவையாறு (345-350), சீகாழி (351-416), உறையூர் (445-452), திருவாரூர் (525-583), சிதம்பரம் (641-683), மதுரை (734-782), திருக்குற்றாலம் (838-847), ஆழ்வார் திருநகரி (945-957), திருநெல்வேலி (978-1011), திருக்குறுங்குடி (1042-1077), சிவிந்தாபுரி (1167-1193) முதலிய ஊர்களின் சிறப்புகளும் இந் நூலில் பேசப்பட்டுள்ளன. இந் நகரங்கள் குறித்த செய்திகள் அடங்கிய பகுதிகளை நகரச் சிறப்பு உரைத்த பகுதிகளாகக் கொள்ளலாம்.

ஆறுகள் பற்றிய குறிப்புகளும் பல. காவிரி, வைகை, பொருநை, நாட்டாறு, பறளியாறு, வள்ளியாறு, கரும்பனையாறு முதலிய ஆறுகள் சுட்டப்பட்டுள்ளன. இவற்றுள் தாம்பிரபரணி என வழங்கும் பொருநை நதியின் போக்கும் வளங்களும் குறித்து அதன் தோற்றம் முதல் பல செய்திகளும் எடுத்து கூறப்பட்டுள்ளன (861-879). வள்ளியாறு பற்றி,

வேள்விமலையில் தலையை வைத்து
  வெண்பூமியிலே யுடலை வைத்து
ஆழி தனிலே கால்நீட்டி
  அருஞ்சென் னலிலே கைப்பரப்பி

நாளும் நாளும் புகழோங்கி
  நடந்த நதிகண்டு அகமகிழ்ந்து
வாளும் சிலையும் தரித்த பிரான்
  வள்ளியாறு தன்னில் வந்தார்

என உருவகமாகப் பாடியுள்ள இப் பகுதி சிறப்பானதொரு ஆற்று வருணனையே.

திருக்குற்றால மலை, பொதிகை மலை, குடமாடி மலை, வைகுண்ட பருப்பதம், மந்திரமலை, குறுங்குடி மலை, தாடகை மலை, வேள்வி மலை முதலிய மலைகளைப் பற்றிய குறிப்புகள் இந் நூலில் உள்ளன.

சிவிந்தாபுரி பற்றிய செய்தியில் குமரி அன்னை கடலானது நிலத்தைக் கொள்ளாமல் அலையமர்த்தி விளங்குவதாகக் குமரிக் கடலையும் குறிப்பிட்டுள்ள செய்தி கடல் பற்றிய ஒரு குறிப்பு ஆகும். நாஞ்சி நாட்டிற்குத் தென்னெல்லையாக வும் குமரிக் கடலை இவ்வாசிரியர் சுட்டியுள்ளார்.

சோலைக் காட்சிகள் அங்கங்கே வருணிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் பஞ்ச வன்னச் சோலை பற்றிய பகுதி பெரியதொரு சோலை வருணனையாகும் (457-486).

ஆழ்வார் திருநகரியிலே திருமாலைக் கண்ட மங்கையர் பற்றிக் குறிப்பிடு மிடத்து, அம் மங்கையரைக் கேசாதி பாதமாக உவமைகள் காட்டி வருணித்துள்ள அழகு சிறந்ததொரு மங்கையர் வருணனையாகும் (891-917). இது போன்றே திருவனந்தாவனத்தில் கடைமாது பற்றியும் வருணித்துள்ளார் (1345-1357).

ஆழ்வார் திருநகரியில் திருமாலைச் சூழ்ந்த மங்கையர் அவர்மேல் காதல் கொண்டு மன்மதனோ, சிவனோ, இந்திரனோ, சந்திரனோ என்று ஐயுற்றுத் தமக்குள் வினவுதலும், பின் நாராயணரே இவர் என உண்மையுணர்தலும் தெரிவிக்கப்பட்டுள்ளன. இப் பகுதி கம்பர் பாடிய உலாவியற் படலம் போன்றும் உலா, தூது, மஞ்சரி முதலிய நூல்களில் காணப்பெறும் எழு பருவ மங்கையர் காதலுறும் நிகழ்ச்சிகள் போலவும் உள்ளன (919-932).

சீகாழிப் பதிக்குத் திருமால் வந்தபோது அவரை வரவேற்க மக்கள் நகரை அலங்கரிக்கின்றனர். ஒருவரை வரவேற்க எவ்வாறெல்லாம் நகரை அலங்கரிப்பர் என்பதை இப் பகுதியில் காணலாம் (370-412). 43 அடிகளில் அமைந்த இந்த வருணனை இடைப்பிறவரல் போல் தோன்றினும் இவ்வாசிரியர் காவியப் பாங்கில் பற்பல செய்திகளைக் கூறும் நோக்கமுடையார் என்பதையே இது காட்டும். தசரதன் தன் பரிவாரங்களுடன் இராமனின் திருமணத்தை முன்னிட்டுச் செல்லுகின்ற வழியில் சந்திரசயிலப் படலம், வரைக் காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர்விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் எனச் சில படலங்களை

அமைத்துப் பின் மிதிலையில் அவர்களை வரவேற்கும் எதர்கோள் படலம் வைக்கின்ற பாங்கு நினைவு கூர்தற்குரியது.

இத் தகைய பல செய்திகள் இக் கதைப் பாடலில் கலந்து வருவதால் காவியக் கூறுகளையும் நாம் கண்டு மகிழலாம்.

நூலாசிரியர்

இந் நூலாசிரியரைப் பற்றிய குறிப்புகள் சில அவர்தம் வாய்மொழியால் புலனாகின்றன.

'அருவளரு மானபுகழ் வீரவளர் நாடன்,
அங்காத கங்காளி தந்தருள வந்தோன்,
திருவளரும் புயரூபன், அமுர்த மொழி வாகன்,
செந்தா மரைப்பதி சிறந்துவளர் செல்வன்
அருவளரும் குருவின் நெறி மறவாத வாகன்
அருதன் அருதகுட்டி இக்கதையைச் சொன்னேன்' *(51-56)*

எனவரும் பகுதி நூலின் தொடக்கத்தில் ஆசிரியர் தம்மை அறிமுகப் படுத்தும் பகுதியாகும். இவ்வாசிரியர் பிறந்த நாடு 'வீரவளர் நாடு' என்பது. இது எந்த நாட்டைக் குறிக்கும்? இப் பெயரில் தனி நாடு இருந்ததுண்டா? என்னும் வினாக்கள் எழுதல் இயல்பே.

இந் நூலாசிரியர் மலை நாட்டைக் குறிக்கும் இடங்களில்,
'சேரமன்னர் தெய்வ வீரமலை நாடு' *(1221)*
'வீரஞ்செய்து துரத்தும் வீரமலை நாடு' *(1226)*
'தெய்வ வீரமலை நாடு' *(1253)*

என்று குறிப்பிடுகின்றார். இவற்றிலிருந்து 'வீர வளர்நாடு' என்பது மலை நாடாகிய சேர நாட்டைக் குறிக்கும் என்று கொள்ளலாம். நாஞ்சில் நாட்டிற்குக் கிழக்கேயுள்ள பகுதியையும் சேர்த்து வங்கக்கடல் வரை உள்ள பகுதியை வீர வளநாடு எனக் குறிக்கும் வழக்கம் நாட்டுப் பாடல் சிலவற்றால் தெரியவருகிறது.

ஊரைக் குறிக்குமிடத்துச் செந்தாமரைப்பதி என்கிறார். இது கன்னியாகுமரிக்கு வடமேற்கில் உள்ள தாமரைக்குளம் என்னும் ஊராக இருக்கலாம். இவர்தம் தந்தையார் பெயர் கங்காளி என்பது. அருதகுட்டி என்பதே இவர் பெயர் என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது. பிச்சைக்குட்டி, சாத்தாங்குட்டி, முத்துக்குட்டி, அய் யாக்குட்டி, சுப்புக்குட்டி என்று இவ்வாறு குட்டி என்பது சேர்ந்து வரும் பெயர்கள் நாஞ்சில் நாட்டில் வழங்கப்பட்டு வருவதாகும். நாஞ்சில் நாட்டு வழக்குகள் பல இவர் தம் வாக்கில் இடம் பெற்றுள்ளன. எனவே இவர் மலை நாட்டின் பகுதியான

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்தவர் என்று கொள்ளலாம். இவர் தம் குருவினிடத்தில் பெரும்பக்தி பூண்டவர் என்பது 'அருவளரும் குருவின் நெறி மறவாத வாகன்' என்பதனால் புலப்படும்.

அவையடக்கப் பகுதியில் இப் புலவர் தமது எளிமையும் பணிவுடைமையும் தோன்ற,

'இக்கதையை நான் சிறிது புஞ்சொல்லினால் சொன்னேன்
எண்ணெழுத்தும் சீர்தளையும் இசைந்தோர்கள் பொறுமே' *(49-50)*
பொருளுரைகள் அறியுமந்தப் புலவோர்கள் முன்னே
புஞ்சொல்தனை அஞ்செல்லெனப் பாடியருள் பெறுமே' *(57-58)*

என்று தமது படைப்பினைப்பற்றிக் கூறிக்கொள்கின்றார். தமது கவிதை செந்தாமரை மலர் முன்னர்க் கொட்டிமலர் போலவும், சூரிய ஒளிமுன் மின்மினியின் ஒளி போலவும், மயிலாடுவதன் முன் கோழி ஆடுவது போலவும் பெருமழையின் முன் பனிபெய்வது போலவும் உள்ளது என்று கூறுவது மரபு நெறியில் இவர் உரைத்த அவையடக்கம் எனவே கொள்ளத்தகும்.

நூலை இப் புலவர் சீர்தளை சிறக்க, எதுகை மோனைநயம் பொதுள, இசைநலம் வாய்ப்பச் செய்துள்ளார் என்பதை இதனை வாசிப்பார் நன்குணர்வர். இராமாயணம், பாரதம், பாகவதம், புராணங்கள், பக்திப் பனுவல்கள் முதலியவற்றை இவர் நன்கு அறிந்தவர் என்பதை இவர்தம் நூல் தெளிவுறுத்துகிறது.

திருமால் திருக்கதையை இவர் பாடுகின்ற போதும் சிவகதைகளையும் தக்க இடங்களில் நிரம்பப் புகுத்தியுள்ளார். சிவனைப் போற்றும் துதிமாலை போன்ற பகுதிகள் சிலவும் நூலுள் இடம் பெறுகின்றன. இதனால் இவர் வைதிக சமயங்களாகிய சைவ-வைணவ சமயங்களைப் பேதமின்றி ஒன்று போல் போற்றும் இயல்புடையார் என்பது பெறப்படும்.

நூல் தோன்றிய காலம்

ஆசிரியர் இந் நூலை இயற்றத் தொடங்கிய காலம் கொல்லம் ஆண்டு 798 அதாவது கி.பி. 1623 ஆம் ஆண்டு என்பது அவர்தம் வாக்கினாலேயே வெளிப்படுகிறது.

'அல்லனைய திருமேனிக் கமலக் கண்ணன்
அனந்தமதி லமர்ந்த கதையை நல்கச்
சொல்லு கொல்ல மெழுநூற்றுத் தொண்ணூற்றெட்டில்
சிறந்த கும்ப மாதமதில், தெய்தி நாங்கில்,
நல்ல புகழ்ச் சுக்கிர வாரம் தன்னில்

நாளான மான்றலையில் நவின்ற காதல்
சொல்ல வல்ல புலவோர்கள் பெறுமு னகத்தோர்
துணையடியென் தலைமீதில் சூட்டினேனே' (21-28)

என்கிறார் ஆசிரியர். இதனால் கொல்லம் ஆண்டு 798 (கி.பி. 1623), மாசி மாதம், நான்காம் தேதி, வெள்ளிக் கிழமை, மிருகசீரிட நாளில் இக் கதையைப் பாடத் தொடங்கியுள்ளார் என்பது தெரியவரும். எனவே, இந் நூலாசிரியர் 17 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது தெளிவாம்.

இவர் தம்முடைய நூலில் சேரநாட்டை அப்பொழுது ஆதித்த மன்னர் என்பார் ஆண்டு வந்ததாகத் தெரிவித்துள்ளார்.

'திருவஞ்சி ஆதித்த மன்னன் செங்கோலின் நீதிகளும்
ஆறிலொன்று கடமை கொண்டு ஆண்டிருந்த சேர நாடு' (1100-1101)

'வஞ்சியாதித்த மன்னர் வாழுந் தெய்வ மலைநாடு
சிறந்த பல கலை நூல்கள் தெரியும் திருநாடு' (1221-1222)

என்று ஆதித்த மன்னரை நிகழ்காலத்தில் குறிப்பிடுகின்றார்.

மூலச் சுவடி

இப் பதிப்பிற்குப் பயன்பட்ட சுவடிகள் நான்கு. ஒன்று பழமை வாய்ந்தது, மற்றையவை பிற்பட்ட காலத்தவை. முதன்மையாகக் கொண்ட சுவடி 41.5 செ.மீ. நீளமும், 3 செ.மீ. அகலமும் உள்ளது. 37 இதழ்கள் இதில் உள்ளன. மேலேயுள்ள தனி ஓலையில்தான் 'பெருமாள் சுவாமி கதை' என்னும் நூற்பெயர் காணப்படு கிறது. தவிர, நூலின் தொடக்கத்திலோ முடிவிலோ நூற்பெயர் குறிக்கப்படவில்லை.

இதனை அடுத்துள்ள இதழில் பாயிரப் பகுதியாய் அமைந்த 9 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இந்த ஏட்டிற்கு எண் தரப்படவில்லை. பாயிரப் பகுதி நூற்குப் புறம்பாதல் கருதி எண்ணிடாது விடுத்தனர் என்று கருதலாம்.

இதன்பின் நூற்பகுதி தொடங்கும் இதழிலிருந்தே எண் தரப்பட்டுள்ளது. நூல் முதல் ஏட்டின் தலைப்பில் 'ஹரி ஓம் நன்றாகக் குருவே துணை' என்று எழுதப்பட்டுள்ளது. 33 இதழ்களில் நூல் முற்றுப் பெறுகிறது. 34-35 ஆம் இதழ்களில் ஆதி நாராயணனைக் குறித்த 20 கொச்சகப் பாவாலாகிய துதி மாலை அமைந்துள் ளது. 33 ஆம் ஏட்டில் வெற்றிடம் மிகுந்திருந்தும் அதைத் தொடர்ந்து எழுதாது, 34 ஆம் ஏட்டில் இத் துதிமாலையைத் தொடங்குகிறார். இது கதைப் பொருளுக்குப் புறம்பானதொரு தனி இணைப்பேயாகும். இதனையும் இவ்வாசிரியர் வாக்காகத்

தான் கொள்ளவேண்டும். ஆனால் இதன் நடையையும், போக்கையும் பார்க்கு மிடத்து நூலின் நடைக்கு வேறுபட்ட ஒன்றாகவே இது தோன்றுகிறது. மேலும், இப் பகுதி மாற்றேட்டிலோ பின் எழுதப்பெற்ற பிரதிகளிலோ இல்லை. எனவே, இப் பகுதியைப் பாடியவர் வேறு ஒருவராக இருத்தலும் கூடும். இப் பாடல்கள் 'கொச்சகம்' என்னும் தலைப்பில் குறிக்கப்பட்டுள்ளன. 20 பாடல்களில் 16 பாடல்கள் 'ஆதி நாராயணனே' என முடிவுறுகின்றன. 3 பாடல்கள், 'அரிராம கோவிந்தனே' என்றும் (11, 13, 16) ஒரு பாடல் 'நவக்கோடி! நாராயணனே' என்றும் (19) முடிவுறுகின்றன. பெரும்பான்மை முடிவினைக் கருதி, இத் துதிமாலைக்கு 'ஆதிநாராயணன் துதி' என்று இப்பொழுது பதிப்பாசிரியரால் பெயர் சூட்டப்பெற் றது.

இதழ்களில் இருபுறமும் எழுதப்பட்டுள்ளது. 3 பத்தி, 4 பத்தியாக அமைத்து எழுதியுள்ளார். பத்திக்கு 8 அல்லது 9 வரிகள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு வரியின் முடிவெழுத்தையும் சற்றுத் தள்ளிப் பத்தியிலுள்ள அடியின் முடிவெழுத்து கள் நேர் நேராக அமையும் வகையில் எழுதியுள்ள முறைமை காணலாம். இம் முறை பத்தியின் முடிவுப் பகுதியைக் காட்டுவதுடன் பத்தி அமைப்புத் தனிப்படத் தெரியுமாறும் உள்ளமை கருதி அமைந்த முறைமையாகலாம். அடிகளுக்கத் தனி எண் குறிப்பிடாத நிலையில் இம் முறை அடிகளை எண்ணியறியும் பயன்பாடு கருதியதாகவும் இருத்தல் கூடும்.

நூலின் பாயிரத்தில் கொல்லம் 798-ல் அதாவது கி.பி. 1623-ல் புலவர்களின் துணையடியைப் போற்றி நூலைத் தொடங்குவதாக ஒரு குறிப்பு உள்ளது. இந்தக் காலக் குறிப்பு இந் நூலாசிரியர் நூல் இயற்றத் தொடங்கிய காலத்தைச் சுட்டும். இதனை இச் சுவடி எழுதிய காலம் எனக் கொள்வதற்கு இல்லை. இச் சுவடியின் எழுத்து வடிவ அமைப்பில் பின்னால் நிகழ்ந்த வளர்ச்சி நிலை காணப்படுகிறது. முக்கியமாக நெடில் வேறுபாடு சுழியிட்டுச் சில இடங்களில் காணப்படுகிறது. சிறீராமர் (34), நீ (78), நீர் (79), பெருரூபம் (176), ஈளத்தரலி (429), அருரூப ரூபம் (529), திருவாரூர் (531, 537, 597) சேந்த (641), யீதெனவே (1065), முத்தீசர் (1355), முன்னீதி (1682) என்பவை நெடில் சுழியிட்டு எழுதப் பெற்ற இடங்களுள் சிலவாகும்.

சில எழுத்துகள் கூட்டெழுத்துகளாக க்க, ட்ட, த்த, ந்த முதலியவாக எழுதப்படுகின்றன. கூட்டெழுத்து முறை மலையாளச் சார்பால் விளைந்ததாதல் வேண்டும். இந் நூற்றாண்டின் தொடக்கத்தில் கூடக் கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்கள் கூட்டெழுத்தை நடைமுறையில் பயன்படுத்தி வந்ததுண்டு. எல்லாவற்றை யும் நோக்கும் போது இது 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப் பெற்ற சுவடியாயிருக்கலாம் என்று கொள்ளலாம்.

மாற்றுச் சுவடி

மாற்றுச் சுவடியாகக் கிட்டியுள்ள ஏடு 54 செ.மீ. நீளமும் 2.8 செ.மீ. அகலமும் கொண்டது. இதில் 37 இதழ்கள் உள்ளன. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது. முன்னேடு போலவே 3, 4 பத்தி அமைப்புடையது. பத்திக்கு ஆறுவரிகள் இடம்பெற்றுள்ளன.

> 'குருவே துணை' என்று முதல் ஏட்டின் தலைப்பில் சுட்டப்பட்டுள்ளது. ஈற்றில் 'பெருமாள் சுவாமி கதை எழுதி முடிந்தது. வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை. கலசமிறக்கிக் குடியிருப்பு உறை ப. உடையார் நாடார்'

என்று எழுதப்பட்டுள்ளது. இதனால் நூற் பெயரும் இந்தச் சுவடியை எழுதியவரின் ஊரும் பேரும் தெரியவருகின்றன. ஆனால் சுவடி எழுதி முடித்த காலம் பற்றிய குறிப்புக் காணப்படவில்லை.

முதல் மூல ஏட்டில் உள்ள பாயிரப் பகுதியில் வரும் முதல் இரண்டு பாடல்களை, 'ஸ்ரீராமஜெயம் கடவுள் துணை' என்று தலைப்பேட்டில் குறிப்பிட்டு எழுதத் தொடங்கியிருக்கிறார். முழுமையும் எழுதப்பெறவில்லை. இந்த ஏடு நூலின் இறுதியில் காணப்படுகிறது. முதல் மூல ஏட்டின் இணைப்பாக அமைந்த 'ஆதி நாராயணன் துதி' இந்தச் சுவடியில் இல்லை. எழுத்து முறையில் இது மிகவும் பிற்பட்டது. இது 19 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்கலாம்.

முதல் ஏட்டிற்கும் இதற்கும் வேறுபாடுகள் மிகுதி. முதல் மூல ஏட்டில் உள்ள அடிகள் சிற்சில இடங்களில் இதில் விடுபட்டுள்ளன. அதில் இல்லாத புதிய செய்தியுடன் கூடிய அடிகள் பல இடங்களில் மிகுந்து காணப்படுகின்றன. பாட வேறுபாட்டுப் பகுதியில் மேலே சுட்டிய இருநிலைகளும் சுட்டப்பட்டுள்ளன. சிதம்பரம் பற்றிய செய்தியில் ஆயிரங்கால் மண்டபம் முதலிய பல மண்டபங்கள் பற்றிய குறிப்பும் பதஞ்சலி வியாக்கிரபாதர் பூசித்தது, கணபதி, முருகன், வயிரவன், பிரமன், இந்திரன், நாரதர் முதலியோர் கூத்தப்பெருமானைப் போற்றி நிற்றல் குறிப்பும் உள்ளன. இப்படியாகப் பல செய்திகள் அடங்கிய 70 அடிகள் இந்த இடத்தில் மிகையாக உள்ளன.

முதல் ஏட்டில் வள்ளி நகரையடுத்துத் திருக்கிராமம், தோவாளை என்னும் ஊர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இந்த ஏட்டில் வள்ளியூரை அடுத்துப் பணகுடி, முப்பந்தரம் என்னும் இடங்களையும் குறிப்பிடுகிறார். இவை போல்வன பின்னால் ஏடு எழுதியோர் சேர்த்த பகுதிகளாயிருக்கலாம் என்று கருத இடமாகிறது.

இந் நூல் தோன்றிய காலந்தொட்டுப் பலர் சுவடிகளில் எழுதிப் படித்துப் பயன்படுத்தி வந்திருக்கலாம். இதனால் காலத்துக்குக் காலம் சேர்க்கைகளும் விடுபாடும் நேர்ந்திருக்கலாம்.

இந்த மாற்றேட்டில் காணும் மாறுபாடுகள் எல்லாம் பாட வேறுபாடு என்னும் பகுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. பேரளவில் முந்திய ஏட்டிலிருந்து பாடங்கள் பல வேறுபட்ட போதிலும் இதனால் விளைந்த நன்மையும் உண்டு. மூல ஏட்டில் விளங்காது கருகலாயிருந்த பல பகுதிகள் இதனால் விளக்கமுற்றன. முதல் ஏட்டில் தெளிவின்றிக் காணப்பட்ட சில பாடங்களுக்குப் பதிலாக இந்த ஏட்டிற் கண்ட பாடங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறு ஏற்றுக் கொண்ட பாடங்கள் இருதலைப் பிறைவளைவுக்குள் மூலப்பாடப் பகுதியில் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. விளக்கத்திற்காகப் பதிப்பாசிரியர் சேர்த்த எழுத்துகள் முதலியவை பகர வளைவுக்குள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.

மாற்றேட்டின் அடிச்சுவட்டில் மற்றொரு சுவடி

இச் சுவடியும் முந்திக் குறிப்பிட்டுள்ள இரு சுவடிகளைப்போல ஆசியவியல் ஆய்வு நிறுவனச் சுவடித் தொகுப்பில் உள்ளதேயாம். இச் சுவடி 49.5 செ.மீ. நீளமும் 3.2 செ.மீ. அகலமும் கொண்டது. இதில் 35 இதழ்கள் உள்ளன. இரு பக்கமும் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு பக்கமும் மூன்று பத்தியாக அமைத்து எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பத்தியிலும் எட்டு வரிகள் இடம் பெற்றுள்ளன.

இச் சுவடியின் இறுதியில் காணும் குறிப்புப் பின்வருமாறு:

> 1105-ம் ஆண்டு அல்ப்பசி மாசம் 17-ம் தேதி சொத்தவிளை ஊர் சுப்பிரமணிய நாடான் மகன் சனாதனன் நாடான் எழுதி முடித்தேன். பெருமாள் சுவாமி கதை. சொல் குத்தமிருக்கும். பொறுத்துக்கொள்ள வேணும் பெரியோர்களே. நன்றாக - குருவே துணை.

மேலே காணும் குறிப்புகளால் இச் சுவடி இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1930) எ்ழுதப்பெற்றது என்பது தெரியவரும்.

இதில் மூல ஏட்டின் முதலில் காணும் பாயிரப் பகுதியும் இறுதியில் இணைந்துள்ள ஆதிநாராயணன் துதியும் இல்லை. இது பெரும்பாலும் மாற்றேட்டின் அடிச்சுவட்டிலேயே செல்கிறது. என்றாலும் சிற்சில இடங்களில் பாட வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையும் பாடவேறுபாட்டுப் பகுதியில் சேர்த்துத் தரப்பட்டுள்ளன.

சார்புச் சுவடி

டாக்டர் ஆ. தசரதன் அவர்கள் (ஆசியவியல் ஆய்வு நிறுவனம்) 'ஸ்ரீ பற்ப நாபசுவாமி கதை' என்னும் சுவடி ஒன்று தந்தார்கள். இது 43 செ.மீ. நீளமும் 3.5 செ.மீ. அகலமும் கொண்டது. முன் சுவடிகள் போலவே இதுவும் பத்தி பத்தியாய் இருபக்கமும் எழுதப்பட்ட சுவடியாகும். இதில் பத்திக்கு 9-10 வரிகள் இடம்பெற்றுள்ளன. 35 இதழ்களையுடையது இச் சுவடி.

கதைப்பொருள் ஒப்புமையினால் பெருமாள் சுவாமி கதைக்கும் இதற்கும் நெருங்கிய தொடர்பிருக்கலாம் என்று கருதி இதனை ஆராய்ந்து பார்க்க முற்பட்டேன். முற்றும் பார்த்ததில் இதன் பெரும்பகுதியும் பெருமாள் சுவாமி கதைப் பாடலை ஒட்டியே செல்கின்றமை தெரியவந்தது. பாடவேறுபாடுகளும் பிழை பட்ட வடிவங்களும் விடுபாடும் சேர்க்கைகளும் இதில் மிகுந்து காணப்படுகின்றன. கதைப்பொருளில் ஒரு சில இடங்களில் வேறுபாடும் உண்டு. என்றாலும் இதனையும் பெருமாள் சுவாமி கதைத் தொடர்பான ஒரு சார்புச் சுவடியாகக் கொள்ளலாம்.

இச் சுவடியின் தொடக்கத்தில் 'பிள்ளையார் வட்டம்' என்னும் தலைப்பில் முதல் $4^1/_2$ ஏடுகள் (9 பக்கம்) அமைந்துள்ளன. இது பொதுவாக விற்கவிதை பாடும் புலவர்களால் தொடக்கத்தில் பாடப்படுகின்ற பொதுச் செய்தியாகும். இப் பகுதி தெய்வங்களைப் போற்றிப்பாடித் தமக்கு அருள்புரியுமாறு வேண்டுதலும் தமது குருபக்தியை வெளிப்படுத்திக் குருவினைப் போற்றுதலும் ஆக உள்ளது.

இந்தச் சுவடிக்குரியவர் தமது குருவைப் பற்றிக் கூறியுள்ள பகுதி வருமாறு:

குருவிருக்கின்ற ஆசனத்தில் கூட்டிய கால் நீட்டறியேன்
அருகிருந்து அவர் பாதம் அடி வணக்கம் செய்திடுவேன்
சொல்புவி எங்கும் பேரெடுத்த சுப்பிரமண்யப் புலவர்பாதம்
நெஞ்சொரு நாள் மறந்தாலும் நினைவு ஒரு போதும் மறப்பதில்லை;
அடிமுறைகள் திருத்தி வைத்த அண்ணாவிப் பொன்னையாப் புலவர் பாதம்
நெஞ்சொருகால் மறந்தாலும் நினைவு ஒரு போதும் மறப்பதில்லை.
செறிந்தடி முறைகள் திருத்தி வைத்த சிறுத்தண்டு பொன்னையாப் புலவர்
நெஞ்சொரு நாள் மறந்தாலும் நினைவு ஒரு போதும் மறப்பதில்லை;[பாதம்
குருவை வணங்காத நீசரெல்லாம் குருத்துரோகி இடம் நீறாமே
குருவை வணங்கியே நானடியேன் கொண்டே ளிக்கதை நெஞ்சகத்தில்.

இவ்வாறு விற்கவிதை பாடும் புலவர் பாடி உரிய கதையைத் தொடங்குவது பொது மரபு ஆகும். இப் பகுதி நூற்குப் புறம்பான ஒன்று.

இதன் பின்னர்க் கதை தொடக்கமாகிறது. இங்கே பெருமாள் சுவாமி கதைப் பாயிரத்தில் காணும் முதல் 5 பாடல்கள் பாட பேதங்களுடன் காணப்படுகின்றன. அடுத்து இதில் புதியதாக ஒரு பாடல் உள்ளது. அது வருமாறு;

வனந்தாம் சிறந்த ஸ்ரீரங்கம் விட்டு வழியே நடந்து திருமாலும்
அனந்தா புரமேவி யருளியிருந்தீர் ஸ்ரீ அன்பருக்கா
இருந்தார் தெரியாமல் சிறு பிள்ளை யாகி
இலுப்பையின் பேட்டில் போய்ப்புகுந்து
அனந்தாபுரம் மேவிய ஸ்ரீ பற்ப நாதா உன் அடைக்கலம் தானே.

பெருமாள் சுவாமி கதைப் பாயிரத்தில் காணும் நூற் பயன், திருவனந்தப் பெருமாள் அருள் வேண்டல் பாடல்கள் இதில் இல்லை.

இச் சுவடி அருதகுட்டி வழங்கிய பெருமாள் சுவாமி கதையைத் திருத்தி வெள்ளைக்கண் நாடார் எழுதிய சுவடி பார்த்து எழுதியதாகும். இதனை,

மருவளரும் மானபுகழ் வீரவளர் நாடன்
மாயவனார் தன் கதைக்கு அனுசரணை செய்தோன்;
திருவளரும் புயரூபன் அமுர்தமொழிப் பாகன்
செந்தாமரைப் பதி சிறந்து வளர் செல்வன்
அருள் வளரும் குருபாதம் மறவாத பாகன்
அருதா னருதகுட்டி இக்கதையைச் சொன்னோன்;
சீர்செறந்த திருமால் செறந்த இந்தக் கதையைத்
திரித்தி நன்றாய் எழுதி வைத்தார் தீரன் வெள்ளைக்கண் நாடார்;
தெரிந்திடவே எழுதி வைத்தார் சேர்த்து முப்பது விருத்தம்

என வரும் சுவடிப் பகுதி விளக்குகிறது. இதனை அருதகுட்டி சொன்னதாகவும் அது இந்த ஸ்ரீபற்பநாப சுவாமி கதைக்கு அனுசரணையாக அதாவது உதவியாக இருந்ததாகவும் இங்கே சுவடி எழுதியவர் தெரிவிக்கின்றார்.

இச் சுவடியில் ஸ்ரீ பற்பநாப சுவாமி கதை முடிந்த பின் இறுதியில் 'வாழி' என ஒரு பகுதியுள்ளது. அது வருமாறு;

அரிநெடுமால் வாழ்க வாழ்கவே
அயனிந் திரனும் வாழ்க வாழ்கவே
பரமன் பார்வதி வாழ்க வாழ்கவே
பாடிவைத் தோரும் வாழ்க வாழ்கவே
கோயில் வைத்தோரும் வாழ்க வாழ்கவே
கோயில் கட்டினோரும் வாழ்க வாழ்கவே

பந்தலிட்ட பேர் வாழ்க வாழ்கவே
பந்தியிட்ட பேர் வாழ்க வாழ்கவே
பாட்டுக் கேட்டோரும் வாழ்க வாழ்கவே
பயன் பிரித்தோரும் வாழ்க வாழ்கவே
குலவை யிட்டோரும் வாழ்க வாழ்கவே
கூடிநின்றோரும் வாழ்க வாழ்கவே
எழுதினோரும் வாழ்க வாழ்கவே
எல்லோரும் வாழ்க வாழ்கவே
நான் பாடும் கோயிலெல்லாம் நல்லா தழைத்து வாழ்க!
அறுகது போல் வேரூன்றி ஆல்போல் தழைத்து வாழ்க!

பெருமாள் சுவாமி கதையின் இறுதியிலுள்ள வாழி பாடல் நூலின் தொடர்ச்சியாக நூற் பொருளை ஒட்டியதாக அமைந்துள்ளமை காணத்தக்கது. சார்புச் சுவடியில் காணும் இந்த வாழி பொதுவாக விற்கவிதை பாடுவோர் நிகழ்ச்சி முடிவில் பாடப்பெறும் ஒரு மரபுவழி வாழ்த்தாகும்.

இச் சுவடி காலத்தால் மிக மிகப் பிந்தியது. மெய்யெழுத்துகள். இச் சுவடியில் புள்ளி வைத்து எழுதப்பட்டுள்ளன. குறில் நெடில் வேறுபாடுகளும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. கூட்டெழுத்துகள் இச் சுவடியில் இல்லவே இல்லை. எல்லாவற்றையும் நோக்கும் போது இது இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுதப் பெற்ற ஒரு சுவடி என்று துணியலாம்.

இணைப்புகள்

பெருமாள் சுவாமி கதைப்பாடலின் கதைத் தொடர்பு விளங்க ஏற்ற தலைப்புகள் இடையிடையே தரப்பட்டுள்ளன. பயன்பாடு கருதி அடிகளுக்கு எண் தரப்பட்டுள்ளது. இடையிடையே வரும் விருத்தப் பாடல்களுக்கும் தொடர் எண் இடப்பட்டுள்ளது. விருத்தங்கள் உட்பட நூல் முழுமையும் 1763 அடிகளில் நிறைவுறுகிறது. விருத்தப் பாடல்கள் அப் பெயராலும் பிறபகுதிகளில் சந்தம் மாறுபடும் இடங்கள் 'வேறு' என்னும் குறிப்பாலும் சுட்டப்பட்டுள்ளன.

மூலச் சுவடியுடன் மாற்றேட்டை ஒப்பிட்டுப் பாடபேதங்கள் அடிமுறையில் தொகுத்துக் காட்டப்பட்டுள்ளன. இப் பாட வேறுபாடுகள் அவற்றின் முன்பின் வரும் வேறுபடாத சொற்களுடன் சேர்த்துத் தரப்பட்டுள்ளன. அருஞ்சொற்கள் முதலியவற்றிற்கான குறிப்புரையும் தரப்பட்டுள்ளது.

நூல் முதலில் பெருமாள் சுவாமி கதைச்சுருக்கம் உரைநடையில் அமைத்துத் தரப்பட்டுள்ளது. இந் நூலின் கதைப் பொருளைத் தெளிவாகத் தெரிவதற்கு இது உதவும். திருவனந்தபுரம் திருக்கோயில் தொடர்பாக 'அனந்தசயன மாஹாத்மியம்'

என்னும் ஒரு சிறு வெளியீடும் எனக்குக் கிட்டியது. இதற்கும் பெருமாள் சுவாமி கதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் தனிப்படத் தெரிவிக்கப்பட்டுள்ளன. அனந்தசயன மாஹாத்மியத்திற் கூறுமாறு அதன் கதைச்சுருக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது.

நூலிறுதியில் சிறப்புப் பெயர், வழக்குச் சொல், அருஞ்சொல் ஆகியவை பற்றிய தனித்தனி அகராதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. நூலின் சொற்களைப் பற்றிய ஆய்வுக்கு இவ் அகராதிகள் பயன்படும்.

நன்றியுரை

பெருமாள் சுவாமி கதைப்பாடல் சுவடியைப் பதிப்பிக்கும் பணியை எனக்கு நல்கிய ஆசியவியல் ஆய்வு நிறுவன இயக்குநரும் தமிழ்த் துறைத் தலைவருமான டாக்டர் ஜான் சாமுவேல் அவர்களுக்கு முதற்கண் நன்றிபாராட்டும் கடப்பாடுடையேன். இந் நூலாய்வுத் தொடர்பாக கருத்துரைகள் அளித்த ஆசியவியல் ஆய்வு நிறுவன ஆய்வாளர் திரு.மு.கோ. இராமன் அவர்களுக்கும், தம்மிடமுள்ள பற்பநாப சுவாமி கதைச் சுவடியை ஆய்வுக்காக எனக்குத் தந்த டாக்டர் ஆ. தசரதன் அவர்களுக்கும் நன்றி.

நூற்பதிப்பு முறையில் அவ்வந் நூலின் தன்மைக்கேற்ப வெவ்வேறு அணுகு முறை அமைதல் இயல்பு. நாட்டுப் பாடல் வகையில் அமைந்த மேருமந்தர மாலை, சீவேந்திரர் சரிதம் என்னும் நூல்களை ஏற்கெனவே நான் பதிப்பித்துள்ள போதிலும் இந்தப் பெருமாள் சுவாமி கதைச் சுவடிப்பதிப்பினால் பல புதிய செய்திகளையும் பாடலின் அமைப்பு முறைகளையும் நான் நன்கு தெரிந்து கொள்ள வாய்ப்பாகியது. இப் பதிப்புப்பணி மேலும் செம்மையுற அன்பர்கள் தெரிவிக்கும் கருத்துரைகளை வரவேற்கிறேன். இப் பதிப்புப் பணி இனிது நிறைவேறத் திருவருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்கி அமைகின்றேன்.

மு. சண்முகம் பிள்ளை
தலைவர்-ஓலைச் சுவடித் துறை,
ஆசியவியல் ஆய்வு நிறுவனம்,
சென்னை 600 041.

'கவிமணி நிலையம்'
61, பாலகிருஷ்ண நாயக்கர் தெரு,
மேலை மாம்பலம்,
சென்னை 600 033.

பெருமாள்சுவாமி கதை

(கதைச் சுருக்கம்)

கெடும் இடர் ஆய எல்லாம், கேசவா! என்ன; நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்;
விடம் உடை அரவில் பள்ளி விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம் உடை வயல் அனந்தபுர நகர் புகுதும் இன்றே.

— சடகோபர் திருவாய்மொழி

திருவரங்கத்தில் பெருமாள் பள்ளிகொண்ட வரலாறு

ஆதியில் அரங்கநாதன் பிரமாவினால் பூசிக்கப்பெற்று வந்தார்; பின்னர், இக்ஷுவாகுக்குப் பிரமனால் வழங்கப் பெற்று, இராமபிரானது முன்னோர்களால் அயோத்தியில் வழிவழிப் பூசிக்கப்பட்டு வந்தார். இராவணவதம் முடிந்து, இராமன் அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்டான். அவ் விழாவில் சுக்கிரீவன், அனுமான், சாம்பவான், குகன் முதலியோரும் இலங்கை அரசனாக இராமனால் முடிசூட்டப் பெற்ற விபீஷணனும் கலந்து கொண்டனர். இராமபிரான் தமக்கு உதவியவர்களுக்கெல்லாம் பல வகையான பரிசுகளை வழங்கி விடைகொடுத்து அனுப்பினார்.

இக்ஷுவாகு குலதனமாகத் தம்மவர் பூசித்து வணங்கிவந்த அரங்க நாதனை விமானத்துடன் விபீஷணனுக்கு இராமர் அளித்தார். விபீஷணன் இலங்கைக்குத் திரும்பி வருங்காலத்துக் காவிரிக் கரையில் அரங்க விமானத்தை வைத்தனன். அப்பொழுது அங்குத் தவம் செய்துகொண்டிருந்த முனிவர்களும் தர்மவர்மா என்னும் சோழனும் வேண்டிக்கொண்டபடி அங்கே அரங்கநாதன் நிலையாகக் கோயில் கொண்டருளினார். அவ் விபீஷணனுக்காக இலங்கை இருக்கும் தென் திசை நோக்கி அவனுக்குக் காட்சிதரும் வகையில் பள்ளி கொண்டருளினார் அரங்கநாதப் பெருமாள்.

விரிந்த புகழ் இலங்கை வேந்தற்குத் தென்திசை
புரிந்து அருள் மலர்ந்தது ஓர் புண்டரீகமே'

(திருவரங்கக் கலம்பகம் 73: 18-19)

என்று பிள்ளைப் பெருமாளையங்கார் போற்றுகிறார். மேலும் அவர்,

'பண்டு இரவிகுலத்து அரசர் பணிந்த கோயில்;
பரிந்திலங்கைக் கோன் கொணர்ந்து பதித்த கோயில்'

(சீரங்க நாயகர் ஊசல் 30: 3-4)

என்றும் குறித்துள்ளார். அன்பன் விபீஷணனுக்காகவே பெருமாள் தென்திசை நோக்கிப் பள்ளி கொண்டார் என்பர்.

மண்ணகம் துயர் நீங்க, வானகம் தொழுது ஏத்த,
கண் அகன் சோணாட்டுக் காவிரிவாய்ப் புளினத்து,
பம்புகதிர் விசும்பு இரவிப் பசும்புரவி வழி விலங்கு
செம்பொன் மதில் ஏழ் உடுத்த திருவரங்கப் பெருங்கோயில்,
ஆணிப்பொன்-தகடு உரிஞ்சும் அணிக்கதவ நீள்வாசல்
மாணிக்க வெயில் பரப்பும் வயிரமணி விமானத்துள்
மின் இலங்கு தொடி வலய வியன் வலக்கை கீழ்க் கொடுத்து,
தென் இலங்கைத் திசை நோக்கித் திருநயனம் துயில்வோய் கேள்

(திருவரங்கக் கலம்பகம் 1, தரவு 2)

என்று திருவரங்கக் கலம்பகத்தில் பிள்ளைப் பெருமாளையங்கார் இச் செய்தியினைக் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளி கொண்ட அரங்கநாதன்மேல் பக்தி பூண்ட தொண்டரடிப் பொடியாழ்வார்,

குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை இலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவுள் எந்தை
அரவணைத் துயிலுமா கண்டு
உடல் எனக்கு உருகுமாலோ
என் செய்கேன் உலகத்தீரே (திருமாலை 19)

என்று பெருமாளின் பள்ளிகொண்ட திருக்கோலத்தில் ஆழங்காற்பட்டுப் பாடுகிறார்.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் விளங்கிய வைஷ்ணவ ஆசாரியரான வேதாந்த தேசிகர்,

'ஆராத அருளமுதம் பொதிந்த கோயில்;
அம்புயத்தோன் அயோத்தி மன்னற் களித்த கோயில்;
தோலாத தனிவீரன் தொழுத கோயில்;
துணையான வீடணற்குத் துணையாங் கோயில்;
சேராத பயனெல்லாம் சேர்க்கும் கோயில்;
செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்த கோயில்;
தீராத வினையனைத்தும் தீர்க்கும் கோயில்
திருவரங்க மெனத் திகழும் கோயில் தானே (ஸ்ரீ தேசிகப் பிரபந்தம்)

என்று திருவரங்கப் பெருங்கோயிலைப் போற்றியுள்ளார்.

திருவரங்கக் கோயிலின் வரலாற்றை இதிகாச - புராண காலந்தொட்டு 18 ஆம் நூற்றாண்டின் இறுதி வரையில் தொகுத்துக் கூறும் 'கோயிலொழுகு' என்னும் நூலின் தொடக்கத்தில் ஆதியில் பெருமாள் கோயில் கொண்ட வரலாறு பின் வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது;

''ஆதிப்ரஹ்மா ஸ்ரீரங்க விமானத்தை லபித்து ஸத்ய
லோகத்திலே அநேக நாள் ஆராதித்த வநந்தரம் அந்தத்
திவ்ய விமாநத்தை இக்ஷ்வாகு லபித்து, அயோத்தியா
பட்டணத்தில் நெடுங்காலம் திருவாராதநங் கண்டருளி,
தத்வம்பீராய் ஆராதித்து, சக்ரவர்த்தித் திருமகன், தம்முடைய
கிருபையினாலே ஸ்ரீரங்க விமாநத்தை ஸ்ரீ விபீஷ
ணனுக்குக் கொடுக்க, அவனும் அந்த விமாநத்தை
சிரஸா வஹித்துக் கொண்டு இரண்டு திருக்காவிரி நடுவிலே
ஸ்ரீ சந்த்ரபுஷ்கரணிக் கரையிலே கொண்டு வைத்து, அந்த
விமாநத்தைத் தர்மவர்மா லபித்துப் போர-
திருவாசலும், அமுதுமண்டபமும், கோயிலாழ்வாரைச்
சூழ்ந்த திருவெண்ணாழியும், திருவணுக்கன் திருவாசல்
திருமதிளும், திருநடை மாளிகை, அழகிய மணவாளன்
திருமண்டபம் முதலான பல திருமண்டபங்களும், பல
திருமதில்களும், பல கோபுரங்களும், சேனை முதலியார்
கோயிலும், விமாநமும், அதற்கு வட மேற்புறத்தில் இரண்
டாம் திருமதில் வடக்கு வாசலுக்கு மேல திருக்கோபுர
நயினாரும், திருக்கோபுரமும், சந்த்ரபுஷ்கரணிக்கரை
ஆஸ்தான மண்டபமும் கட்டி வைக்கையில் தர்மவர்மா
வின் கைங்கர்யம்.''

(கோயிலொழுகு, பக். 1-2)

இவ்வாறாகக் காலந்தோறும் பலர் செய்த கைங்கரியங்களும் கோயில் பூசை, விழா முதலிய நடைமுறைகளும் இந் நூலில் விவரிக்கப்பட்டுள்ளன. பெருமாள் சுவாமி கதைப்பாடலும்,

> போரங்க ராவணன் தன்போர் முகித்து,
> பொற்கொடிச்* சீதை சிறை மீண்ட நாளில்,
> சீரங்க மேவி யினிதிருந் தருளி,
> சிந்தையுட னேபூசை கொண்டிருந் தந்தாள் (101-104)

என்று பெருமாள் கோயில்கொண்ட நிகழ்ச்சியை முதலில் குறிப்பிடுகின்றது. பெருமாள் பள்ளிகொண்டருளும் பெரிய கோயிலின் சிறப்புகளையும், அங்கே சீரங்கநாதன் இனிதிருத்தலையும், நம்பெருமாளுக்கு நடக்கும் பூசை முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளையும் இக் கதைப்பாடலின் ஆசிரியர் அழகுற விவரித்துள் ளார் (105-139).

திருவரங்கப் பெருமாளும் தவமறையோனும்

திருவரங்கப் பெருமாளுக்கு மறையவர்களும் நம்பிமார்களும் முறை வைத்துப் பூசை செய்து வந்தனர். அவர்களுக்குள் பேத முண்டாகவே மறையவன் ஒருவன் செய்த பூசையை விலக்கிவிட்டனர். அம் மறையவன் தனக்கு நேர்ந்த தீங்கு குறித்து அரசனிடம் முறையிட்டான். அரசனோ முறையீட்டைச் சோதித்துப் பார்த்து நீதி வழங்காமல் ஒருதலைப்பட்சமாய் இருந்துவிட்டான். பூசையுரிமை இழந்த மறைய வன் மிகவும் வருத்தமுற்று ஆதரவின்றி இருந்தான் (140-165). அவன் வனத்திற்குச் சென்று மாயவனை நினைத்துத் தவஞ் செய்யத் தொடங்கினான். இம் மறையோ னின் போற்றுதலுக்கும் (171-196) வேண்டுதலுக்கும் (197-201) செவிசாய்த்துத் திருவரங்கப் பெருமாள் அவனுக்குக் காட்சி நல்கினார் (202-215).

மாயவனின் பாதத்தில் விழுந்து மறையோன் வணங்கித் தன் குறைகள் கூறி முறையிடுகிறான். தனக்கு உரித்தான முதற்பூசை உரிமையைப் பறித்துக் கொண்டு, தன்னைத் துன்புறுத்தி விரட்டிவிட்டமையை எடுத்துரைக்கின்றான். அதன் காரண மாகவே தான் தவம் புரிந்ததாயும், தனக்கு அடைக்கலம் தந்தருள வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறான் (216-242).

பெருமாள் மறையோனிடம் அஞ்சாதே என்று ஆறுதல் மொழி பகர்ந்து, அவனுக்கு வைகுண்ட பதவியும் அருள்வதாக உரைத்தார். ''நாம் சீரங்கப் பதியை விட்டுத் தென்பூமியில் திருவனந்தபுரம் செல்கிறோம். எம் பின்னால் நீயும் வா. வந்தால் திருவனந்தபுரத்தில் திருமுன் முதற்பூசை செய்யும உரிமையை உனக்குத் தருவோம்'' என்று அருளினார். பின் வனத்திலிருந்து சீரங்கப் பதிக்குப் பெருமாள் வந்தார். மறையவனும் அவரைப் பின்தொடர்ந்து வந்தனன் (243-256).

பெருமாள் சீரங்கம் விட்டுப் புறப்படுதல்

பெருமாள் சீரங்கம் விட்டுத் தாம் மறு பூமிக்குச் செல்வது குறித்து உலகிற்கு அறிவித்தார்; மன்னனுக்கும் செய்தி சொன்னார். சீரங்கத்தில் வழக்கம் போலப் பூசை நெறிதவறாமல் நடத்தி வருமாறு தானத்தார்க்கும் பணித்தார். தாம் தென்பூமிக் குச் செல்வதாகச் சீரங்கத்தார்க்கும் தெரிவித்தார். பெருமாள் சீரங்கம் விட்டுப் புறப்பட்டுச் சென்றாலும் அவர் தம் சான்னித்தியம் அங்கிருந்து வெளியேறிவிடு தில்லை. 'ஆதியஞ்சோதியுருவை அங்கு வைத்து இங்குத் தோன்றிய மாயன்' என ஆழ்வார் திருமால் அவதாரம் பற்றி அருளிச் செய்த வண்ணம் அவர்தம் சோதியுரு திருவரங்கத்திலும் நிலை பெற்றிருக்கும் என்பதாம். மறையவன் ஒருவன் பொருட் டாக அவர் திருவனந்தபுரம் செல்வது அவர் தம் அருள் விளையாட்டேயாம் (257-277).

திருவரங்கப் பெருமாள் சீரங்கத்தை விட்டுப் புறப்படுகிறார். தவமறையோன் அவரைப் பின்தொடர்ந்து செல்கிறான். பூதப் பிசாசுகள் அவரைச் சூழ்ந்து வருகின் றன. பூதம் ஒன்று அவருக்குக் குடைபிடித்துப் பின்னே வருகிறது. தெய்வக் கன்னிமார் கீதம் பாடிச் சூழவும் வருகின்றனர். வேதங்கள் ஒலிக்கின்றன. கேத்திர பாலனும் சங்கிலிப்பூதமும் அவர் பின்னே தொடர்ந்து வருகின்றனர். திருமால் தன் பாதம் நோக நடக்கலானார் (278-296).

திருவானைக்கா வருகை

முதலில் சீரங்கத்தை அடுத்துள்ள திருவானைக்காவிற்குப் பெருமாள் வருகின் றார். இத் தலம் தொடர்பான புராண நிகழ்ச்சிகளை நினைவுகூர்ந்து பெருமாள் இதனைப் புண்ணியத்தலம் என்று தொழுகின்றார். அங்கே முன்னாளில் சம்பு முனிவர் என்பவர் தவம் செய்து வந்தார். அம் முனிவரின் மேல் பட்டு உருவி வெண்ணாவல் மரம் வளர்ந்தது. அங்கே பொய்கையும் புஷ்கரணியும் காட்சி தந்தன. புற்பகந்தன், மாவெலி ஆகியோர் உருமாறி நற்பிறப்புப் பெற்றனர். சிவகணத்தைச் சேர்ந்த இருவர் சாபத்தால் ஆனையும் சிலந்தியுமாகப் பிறந்து திருவானைக்கா ஈசனைப் பூசித்தனர்; சிவபதமும் பெற்றனர். சிலந்தி மறுபிறப்பில் திருநீற்றுச் சோழனாகப் பிறந்தது. இச் சோழன் திருவானைக்காவில் மண்டபங்க ளும் மதில்களும் கட்டி வைத்தான். இராமாவதாரத்தில் இராமன் இங்கே லிங்கப் பிரதிட்டை செய்தார். இத்தகைய புராண வரலாறுகள் எல்லாம் பெருமாளின் மனக்கண்ணில் காட்சி தந்தன (298-322).

நெடுமால் திருவானைக்கா ஈசரைத் தொழவே, அவர் பெருமாள் சீரங்கத்திலி ருந்து வந்த காரணம் வினவுகிறார். தாம் தச்சணாபூமியில் திருவனந்தபுரம் செல்ல விருப்பது குறித்துப் பெருமாள் குறிப்பிடுகிறார்.

'புண்ணியோனே! புரமூன் றெரித்தவா!
ஆறு செஞ்சடை சூடிய அய்யனே!
வீறதாக விடைதந் தருள்' என

திருவானைக்கா ஈசரிடம் விடைபெற்று, மேலே பெருமாள் செல்லலானார் (323-334). அவருடன் தேவ கணங்களும் தெய்வப் பெரும்படையும் காளி கூளி கணங்களும் பூதப் பிசாசுகளும் சூழ்ந்து வரலாயின. பெருமாள் திருவையாறு சென்று அருவமாய் நின்ற இறைவனைப் போற்றிச் சீகாழிப் பதிக்குச் சென்று சேருகின்றார் (335-350).

சீகாழிப் பதியில் பெருமாள்

சீகாழிப் பதியில் மக்கள் உவகையுடன் மாயவரை வரவேற்கின்றனர். 'வந்தார் மாயவர் வந்தார்' என்று அவர்தம் பெருமைகளை-முக்கியமாகப் பாரதச் செய்திகளையும் பிற சிறப்புகளையும் எடுத்துக்கூறிப் போற்றுகின்றனர் (351-369). இப் பகுதி மாயவனின் புகழ் போற்றும் துதிமாலை போன்றதே.

சீகாழிப் பதி மக்கள் நகரைப் பலவாறு அலங்கரித்தமையை மிக விரிவாகக் கவிஞர் பாடுகிறார். ஒருவரை வரவேற்க எவ்வாறெல்லாம் நகரை அலங்கரிப்பர் என்பதை இப் பகுதியில் காணலாம் (370-412).

சீகாழி ஈசுரர் மாயவரை நோக்கி, அவர் புறப்பட்டு வந்த காரணம் ஏதோ என வினவ (417-422), பெருமாள் வேதியன் வரலாற்றைக் கூறி (423-430), அவனுடைய தவத்திற்கு அருள்புரிந்து அவன் பொருட்டுத் தாம் அனந்தபுரம் செல்ல வந்ததைத் தெரிவிக்கிறார். சிவனார் அன்று மாயவருக்குப் பூசை முதலிய சிறப்புகள் செய்கின்றார் (431-436).

உறையூர் வழியாகப் பயணம்

அடுத்த நாள் உதய காலத்தில் ஈசரிடம் விடை கொண்டு பெருமாள் புறப்படுகிறார். காவேரிக் கரை கடந்து, கடம்பாறும் விட்டு, சோழ நாட்டுப் பதிபல கண்டு, திருமகள் வந்து பிறந்த உறையூருக்கு வந்து சேருகின்றார் (437-450).

பஞ்சவன்னச் சோலைக் காட்சி

உறையூரை விட்டுப் பஞ்சவன்னச் சோலை என்னுமிடத்திற்குத் திருமால் எழுந்தருளுகிறார் (451-456). சோலையிலுள்ள மரஞ்செடி கொடிகள் முதலியன பற்றி,

வன்ன மாமரம் தென்னங்காவாம்
வரிசைக் குரியதோர் பூமரமாம்'

என்று இம் முறையில் 30 அடிகளில் விவரிக்கிறார் (457-486).

இதனைத் தொடர்ந்து சோலையில் மாயவர் வந்தபோது நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைச் சுவைபடப் பேசுகின்றார் கவிஞர். மலர்களினூடே பறந்து வண்டு இசை பாடல், மயிலினம் ஆடல், மந்தி குதித்தோடி விளையாடல், தேமாங்கனி யைப் பறித்துச் சில சிறுமந்திகள் எறிந்து விளையாடல், குரங்காடல், குயில் கூவுதல், மானினங்கள் துள்ளித் திரிதல் முதலியவற்றைக் குறிப்பிடுகிறார். வெயி லின் ஒளி சோலையினூடு புகுதல், மேகங்கள் சோலையின்மேல் வந்து படிதல், நத்தைகள் முத்துக்களைச் சொரிதல், கொத்துக் கொத்தான மலர்களையுடைய வஞ்சிக் கொடிகள் அசைதல், வாழைக் குலைகள் அழகுற அமைதல் என்று இன்னவற்றைச் சுட்டிக் காட்டுகிறார். ஆகவே இப் பகுதி ஒரு பூஞ்சோலை வருணனையாக அமைந்துள்ளமை காணலாம் (491-512).

சோழவளநாட்டு வருணனை

அடுத்துச் சோழவள நாட்டின் சிறப்பினைப் பேசுகின்றார் கவிஞர் (513-524). இந் நாட்டில் ஆறிலொரு பங்கு வரி வாங்கும் மன்னன் ஆராய்ச்சி மணி கட்டி ஆட்சி புரிகின்றானாம். இது உலகிற்கு நீதிகளை வழங்கிய மனு நீதிச் சோழன் வாழ்ந்த நாடு. சுந்தரமூர்த்தி நாயனாருக்காகச் சிவபெருமான் தூது சென்ற பெருமை யையுடையது. நெல்லுக்கு நித்தம் மழை பெய்து புரக்கின்றதாம். இந் நாட்டை நீதியுள்ள சோழ வளர் நாடு என்று போற்றுகிறார் கவிஞர். 457 ஆம் அடி முதலாக 524 ஆம் அடிவரையுள்ள பகுதிகள் சோலை வருணனையும் சோழ நாட்டு வளமுரைத்தலுமாய் அமைந்துள்ளன.

திருவாரூர்ப் பதிக்குத் திருமால் வருகை

மேலே குறித்த வண்ணம் சோலையும், பொய்கையும், ஆற்றங்கரையும் நெல் வயல்களும் நிறைந்த மருத மரமும் அமைந்த நிலப்பகுதியைக் கடந்து திருவாரூர்ப் பதிக்குத் திருமால் வருகிறார். வீதிவிடங்கப் பெருமானைப் பெருமாள் காணுகின் றார். வீதிவிடங்கர், 'மாலே! வந்த காரணம் என்ன' என்று கேட்கிறார். பெருமாள் மலை நாட்டுத் திருவனந்தாபுரிக்குச் செல்ல வேண்டும் என்று கூறுகிறார் (525-547).

உமைபாகர் பெருமாளை உவகையுடன் வரவேற்கிறார். அவருக்கு விருந்து அளித்து உபசரிக்கிறார். அவர் கண்டு மகிழ ஆடல் பாடல் நிகழ்த்தவும் செய்விக்கி றார். இங்கே சிறப்பாக மத்தளம் முதலிய இசைக் கருவிகள் ஒலித்தல், மடந்தைய ரின் ஆடல் பாடல், வேதங்கள் ஒலித்தல், பண்ணிசைத் தமிழ் ஓதுதல் முதலிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றார். மாயவருக்குச் சாத்து மாலை முதலிய பலவகை மாலைகளை அணிவித்துத் தூபதீபங் காட்டிச் சாத்துமுறையோடு அவருக்குச் சிறப்புச் செய்தமை விளக்கப்பட்டுள்ளது.

'ஈசனே! எம்பிரானே! எங்குமாய் நின்றோனே!' என்று தொடங்கிச் சிவனார் பெருமை போற்றி, அவரிடம் பெருமாள் விடைகொண்டு தெற்கு நோக்கிப் பயணமாயினர் (548-597). இங்கே சிவபெருமானைக் குறித்த ஒரு போற்றி மாலை இடம் பெறுகிறது (585-592).

தில்லைவனத்தில் இடையர் பதி

திருவாரூரை விட்டு நெடுமால் புறப்பட்டார். அவரைச் சூழ்ந்து கேத்திர பாலன், சங்கிலிப்பூதம் முதலியோர் வந்தனர். வடமொழி வேதகீதமும் தமிழ்க் கவிவாணர் பாடலும் ஒலித்தன. பெருமாளுக்குத் தில்லை வனம் தெரியலாயிற்று (598-617).

மாயவர் வழியிடையே முல்லைவனத்தில் இடையர்பதி குறுக்கிடுகிறது. இடையர் பாலும் குடமும் எதிரே வைத்துத் திருமாலைத் தொழுது நின்றனர். கோபாலரைக் கண்ட மாயன் அவர்களுக்கு அருள் புரிந்து மேலே நடக்கலானார் (618-635). இக் கதைப் பாடலில் மறையவனைத் தவிர்த்து மக்களைச் சந்தித்து உரையாடியதாக வரும் இடம் இஃது ஒன்றே. மற்றையவெல்லாம் தெய்வங்களின் சந்திப்புகளே.

தில்லைச் சிதம்பர நிகழ்ச்சிகள்

தில்லைப் பதியில் அரனார் திருவம்பலம் சேர்கிறார் பெருமாள். கூத்தப் பெருமான் மனமகிழ்ந்து, 'இவ்வளவு தூரம் வந்தது ஏனோ' என்று கேட்கிறார். அதற்குப் பெருமாள் திருவனந்தபுரம் போய்ப் பூசைகொள்ளப் போகிறோம் என்று விடையளிக்கிறார். அச் செய்தியைக் கூத்தப்பிரான் உமையம்மையாருக்கும் தெரிவிக்கிறார். உமையம்மை தமையன் திருமாலை நோக்கி, 'இருந்த பதிவிட்டு மறுபூமிக்குப் போகிறீரோ? குதலை மொழிச் சீதை எங்கே?' என வினவுகிறாள். அதற்கு அவர் உற்ற கணவனோடு உடையவளும் கூட வருவதாகச் சொல்லுகின்றார். அன்று அங்கே அரனாரின் அருகேயிருந்து பூசை கொண்டு, விடியலில் அவர் அங்கிருந்து புறப்படுகிறார் (636-683).

தில்லையை விட்டுத் திருமால் தெற்கு நோக்கி வருதல்

விடியலில் விடைகொண்டு வரும் திருமால் அடுத்துள்ள தில்லைக் கோவிந்த ராஜர் திருப்பதியும் கண்டு, கமலபாதம் நோகத் தென்திசை நோக்கி விரைந்து நடக்கலானார். இங்கே 'திருமால் துதிமாலை' ஒன்றைக் கவிஞர் கூறி (688-705) இத்தகு பெருமையுடையார் தெற்கு நோக்கி நடக்கலானார் என்கிறார். எப்பொழுதும் போலவே கேத்திரபாலன், மாகாளி கூட்டம், சங்கிலிப் பூதம், பூதங்கள்,

பேய்கள் பின்னே சேவித்து வர, வைகையாற்றை வந்து அடைகின்றார் பெருமாள். முதலில் திருவேடகப் பதிக்கு வந்து, பின் மதுரைப் பதிக்கு வருகிறார் (706-733).

மதுரை மாநகர்ப் பெருமை

திருவானைக்காவில் புராணப் பெருமைகளைக் கூறியது போலவே இங்கேயும் சொக்கநாதரின் திருவிளையாடல்களை நினைவுகூர்கிறார் கவிஞர். சொக்கனார் மணிவாசகருக்காக நரியைப் பரியாக்கி நடத்தி வந்த திருவீதியில் பெருமாள் வருகின்றாராம். இங்கே பாணபத்திரனுக்குப் பலகையிட்டது, பிட்டுக்கு மண் சுமந்தது, வளையல் விற்றது, படைக்கலம் பயிற்றுவோனின் அங்கம் வெட்டியது ஆகிய சொக்கநாதரின் திருவிளையாடல் செய்திகளைக் கவிஞர் குறித்துள்ளார். சொக்கநாதர் ஆலயத்தின் கோபுரங்கள், மண்டபங்கள், தூண்கள், திருவாயில்கள், திருச்சுற்று வீதிகள் முதலியவற்றைக் குறித்துப் பேசுகிறார். சொக்கநாதரை மாயவர் தரிசிக்கிறார் (734-771).

தங்கையாகிய அங்கயற்கண் அம்மையைப் பாசமுடன் பெருமாள் காண்கிறார். அவள், ''தெய்வ மாயனே! அண்ணனே! போந்தது ஏன்'' என்று கேட்கிறாள். மாயவனும் அவளுக்கு வந்த காரணம் கூறி, மதுரைப் பதிவிட்டுத் தெய்வ க்ணங்கள் சூழ்வரத் தென்பூமி நோக்கி வரலானார் (772-791). பிராமணன் பின் தொடரவும் கேத்திரபாலன் முதலியோரும் காளி கூளி வேதாள கணங்களும் வருதலைச் சீரங்கம் விட்டுப் புறப்பட்ட போது கூறியாங்கு விரிவாகவே புலவர் பேசுகிறார் (792-817).

திருக்குற்றாலத்துக்குத் திருமால் வருதல்

மதுரைப்பதி விட்ட மாயன் மானாமதுரை கடந்து, அவனியாபுரம் வந்து, பின் ஸ்ரீவில்லிபுத்தூரின் வளமுங் கண்டருளுகிறார். அங்கு வடபத்திர சாயியைக் கண்டு அகமகிழ்ந்து, மேலும் நடந்து திருக்குற்றாலத்துக்கு வருகின்றார். பூதங்கள் சேவிக்க, தெய்வ கன்னியர் குரவையிட, வெண்சாமரை வீசிவர வரிசையுடன் குற்றாலத்திற்கு வருகை தருதலைச் சிறப்பிக்கின்றார் கவிஞர் (818-837). திருக்குற்றாலத்தில் சங்கைநெடுவீதி, தமிழ் முழங்கும் மேடை முதலியவற்றைக் கண்டு, அரனாரின் ஆனந்தத் திருக்கூத்தும் தரிசித்து, அங்கு எழுந்தருளியுள்ள புற்றிடங் கொண்ட குற்றால நாதரையும் கண்டு, தென்பூமி நோக்கி, திருமால் செல்லலானார் (838-847).

கள்ளபிரான் பதியாகிய ஸ்ரீவைகுண்டம் செல்லுதல்

திருக்குற்றாலத்திலிருந்து புறப்பட்டு வந்த மாயன் ஆடுபூசை கொண்டிருந்த அழகர் பதியில் தங்கிப் பூசை கொண்டு, கதிரோன் உதயத்தில் புறப்பட்டு, ஸ்ரீவைகுண்டம் வந்து சேர்கின்றார். பொருநை நதியின் கரையில் உள்ளது இத்

திருப்பதி (848-860). இங்கே பொருநை நதியின் வளங்களை மாயவர் காண்பதாக அந் நதியைக் குறித்த ஒரு வருணனையைக் கவிஞர் வழங்குகின்றார் (861-879).

ஆழ்வார் திருநகரிக்கு எழுந்தருளுதல்

பொருநை நதியைக் கடந்து ஆழ்வார் திருநகரிக்கு மாயவர் எழுந்தருளி வருகிறார். அந் நகர்த் திருக்கோயில், மண்டபம், மாடகூடம், மதில், சுத்துகள், வீதிகள் கண்டு மாயவர் வருகிறார் (880-887). இங்கே மடவார் பலர் சூழ்ந்து மாயவரைக் காண்கின்றார்கள். இச் சந்தர்ப்பத்தில் மங்கையரின் உருவ வருணனை ஒன்றைக் கவிஞர் அழகுற அமைக்கின்றார் (888-918). மாயவரைக் கண்ட மங்கையர் காதலால் மனமுருகி, இவர் யாரோ என ஐயுற்று வினாவுதலும் பின் நாராயணரே எனத் தெளிதலுமாகிய செய்தி தெரிவிக்கின்றார் (919-932). இப் பகுதி உலா, தூது, மஞ்சரி போன்ற நூல்களில் உலாக் காணும் மங்கையர்பற்றிக் கூறும் இலக்கிய மரபு பற்றியதாகும். மன்மதனோ, இந்திரனோ, சிவனோ, கந்தனோ என்று வியந்து நயந்துரைக்கும் மங்கையரின் தெய்விகக் காதல் போற்றப்படுகிறது (919-944).

ஆழ்வார் திருநகரியின் பெருஞ்சிறப்பையும், சடகோபராகிய நம்மாழ்வார் புளிய மரப் பொந்தில் தியானத்தில் அமர்ந்திருக்கும் காட்சியையும், வேளாள குலத்தவராகிய ஆழ்வார் அட்டதிக்கும் புகழ அங்குப் பூசை கொண்டு இனிதிருக்கும் காட்சியையும் கவிஞர் போற்றுகிறார். இத் திருப்பதியைக் கண்டு பூசை கொண்டிருந்த மாயன் விடிவதன்முன் பூதப் படை முதலியன நெருங்கி வர அங்கிருந்து புறப்பட்டார் (945-970).

நெல்லைப் பதியை அடைதல்

ஆழ்வார் திருநகரியிலிருந்து புறப்பட்ட மாயன் நெல்லைப் பதியாகிய திருநெல்வேலிக்கு வந்து சேர்கின்றார். நீண்ட கோபுரம் கண்டு, நெல்லை நாதன் திருக்கோயிலைச் சார்கின்றார். இங்கே நெல்லை நாதரின் புகழைக் கவிஞர் பலவாறு போற்றுவது சிவ துதிமாலையாகும் (980-997). உமைபங்கரையும், திருக்கோபுரம், திருவிளக்கு மாளிகை முதலியவற்றையும் கண்டு, சித்திர மண்டபத்திற்கு மாயவர் வருகிறார். அரனார் அவரிடம் சீரங்கம் விட்டு வந்த செய்தி கேட்க, மாயவரும் தாம் வந்த நோக்கம் எடுத்துரைக்கின்றார். அரனாரும் மாயவரை இரும் இரும் என உபசரிக்கின்றார். சூரிய உதயத்தில் நெல்லை நாதனிடம் விடைகொண்டு மேலும் தம் பயணத்தை மாயவர் தொடர்கின்றார் (971-1015).

களந்தையன் பதி முதலியன கடந்து போதல்

நெல்லைப் பதியை விட்டு மறையோனும் பிற தேவகணங்களும் தொடரக் களந்தையன் பதிக்கு வருகிறார் மாயவன். களந்தைக் கருத்தரைக் கண்டு மேலே

செல்லுகின்றார். குடமாடி என்னும் மலை ஓரமாகச் சென்று வாணுமாமலை என்னும் நாங்குநேரியை அடைகின்றார். அங்கிருந்து மேற்கே நம்பி தேசமாகிய திருக்குறுங்குடி தோன்றவே அந் நகர் நோக்கிச் செல்லலானார் (1016-1041).

திருக்குறுங்குடிப் பெருமை

அப் பகுதியில் தென் பூமிக்கு இலக்காக விளங்கும் வைகுண்ட பருப்பதம், வளைந்து காணும் பெருமலை, அனுமான் இலங்கைக்குக் குதித்த மந்திரமலை, முதலியன காணப்பெறுகின்றன. முன்னாளில் மாவெலி வாழ்ந்த தலம்; மாயன் ஆநிரை மேய்த்த தலமும் இதுவே என்கிறார். மலை நம்பி, திருப்பாற்கடல் நம்பி, அழகிய நம்பி என்பார் கோயில் கொண்டருளும் தலம். மாவெலிபால் மண் வேண்டி மாயவன் குறளுருவமான வாமனனாய் வந்ததும் இத் தலத்தேயாம். இதனால் இத் தலம் 'குறுங்குடி' எனப் பெயர்பெற்றது என்பர். அங்குள்ள மாளிகை, கோபுரம், மண்டபம், நாட்டாறு, வாவிகள் முதலியவற்றைக் கண்டு மாயவன் அங்கு இனிதிருந்தார் (1042-1077).

கேத்திரபாலனை அங்கே நிறுத்துகை

அப்பொழுது மாயவன் கேத்திர பாலனை அழைத்து, இத் தலத்திலே நம்பிக்குப் பணிசெய்து கொண்டிரும் எனப் பணிக்கிறார். 'என்னை இடைவழியில் விட்டுப் போகிறீரே! உமக்குப் பணி செய்துகொண்டு உம்மருகே இருக்க வந்தேனே! என்னை விட்டு எங்கே போகிறீர்?' என்று தம் எண்ணத்தை வெளியிடுகிறான் கேத்திரபாலன் (1078-1086).

அதற்கு மாயன், ''திருவனந்தபுரத்திற்குச் செல்லுகிறோம்? மலை நாடு நீதியுள்ள நாடு என்று சுட்டு மிடத்து, மலை நாட்டு ஆதித்த மன்னனின் செங்கோலின் முறைமையும் மக்கள் நெறிமுறையில் வாழ்தலையும் குறிப்பிடு கிறார். ''அந்த நாட்டிற்கு நீ வந்தால் மனிதர்களை வதைப்பாய்; அதனைக் கண்டு நாட்டார் நம்மை நகைப்பார். ஆதலால் இந்தக் குறுங்குடிப் பதியிலேயே நில்லும்'' என்று மாயவர் சொல்லுகிறார். கேத்திரபாலனும் நல்லது என்று அப் பதியில் விளங்கும் நம்பியைச் சேவித்துக் கொண்டிருந்தான். மறையோனும் ஏனைய பூதகணம் முதலியனவும் சூழ்ந்து வர அங்கிருந்து மாயவர் புறப்படுகிறார்.

நாஞ்சில் நாட்டுக்கு வருகை

அங்கிருந்து நாஞ்சில் நாட்டிற்குப் பெருமாள் வருகிறார். வழியில் பாலைபுத் தூர், நெய்க்குன்றாமலை, நீலநெடுமலை, உப்புக்கண்டம் பொத்தை ஆகியவற்றைக் கடந்து வள்ளி நகர் வருகின்றார். அதன்பின் பொன்னி வாய்க்கால், தொட்டிச்சி குளம் விட்டுத் திருக்கிராமம் வருகிறார். பின், தோவாளையைக் கடந்து பூதப்

பாண்டியில் கோயில் கொண்டருளும் பூதநாதரை மாயவர் தொழுகின்றார் (1123-1137). இந்த இடத்தில் நாஞ்சி வளர் நாட்டின் சீரையும் சிறப்பையும் மாயவர் காணுகின்றார் என்று கூற வந்த கவிஞர், நாஞ்சி நாட்டின் வளச் சிறப்பும் மக்கள் மேம்பாடும் விளங்க உரைக்கின்றார். இப் பகுதி நாஞ்சில் நாட்டு வருணனை ஆகும் (1138-1166).

சுசீந்திரம் என வழங்கும் சிவிந்தாபுரிக்குச் செல்லுதல்

பூதநாதரைக் கண்டபின் மாயன் அடுத்துச் சிவிந்தாபுரிக்கு வந்து, அங்குத் திருக்கோயில் கொண்டருளும் தாணுமாலயனாரைக் காணுகிறார். திருமதிலும் உயர்ந்த கோபுரமும் கூடியதாய்ச் சிவிந்தாபுரித் திருக்கோயில் விளங்குகிறது. இது இந்திரன் வந்து பூசித்து நற்பேறு பெற்ற தலமாகும். இங்கே தேவதேவனாகிய சவுந்தரியமான தெய்வமாம் தாணுமாலயனாரைக் காணவே, அவர், 'மாயவரே! வடக்கிருந்து ஏன் இங்கே வந்தீர்' என்று வினவுகிறார். தென்பூமியிலே திருவனந்தா புரத்தில் சீராக இருக்க வந்ததாகத் தாம் வந்த நோக்கத்தை மாயவர் உரைக்கின்றார். அந் நாட்டின் தெற்கே கடலலை மோதியிருத்தலையும் வடபால் வேள்வி மலை விண்ணுற ஓங்கி உயர்ந்து நிற்றலையும் அரனார் குறிப்பிடுகின்றார். மேலும் கடற்கரையில் அலையை அமர்த்திக் கன்னித் தெய்வம் குமரித்தாய் தென்கடல் பூமியைக் கொள்ளாமல் காத்து நிற்றலையும் எடுத்துரைக்கிறார். அன்று இரவு நாரணர்க்குப் பூசை முதலியனவும் நடைபெறச் செய்கிறார் (1167-1195).

மேற்கு நோக்கி மாயவர் நடத்தல்

தாணுமாலயனாரிடம் மாயவன் விடை கொண்டு மேற்கு நோக்கி நடக்கலானார். தொடர்ந்து வந்த மறையோனும் அவர் பின்னால் சென்று கொண்டிருந்தான். சிவிந்தை விட்ட பெருமாள் இந்திரனது வெள்ளானை தன் கோட்டால் குத்திக் கொணர்ந்த கோட்டாறு எனப் பெயர் பெற்ற ஆற்றைக் கடக்கிறார். அதன்பின் பஞ்சவனக் காட்டைக் கடந்து வள்ளியாற்றுக்கு வருகின்றார். இங்கே வள்ளியாற்றைக் குறித்துக் கவிஞர் உருவகமாக வருணிக்கும் அழகு நோக்கத் தக்கது (1196-1216). வள்ளியாறு கடந்து வரும் மாயவனார், மலை நாட்டின் நீதி காண்கிறார். இங்கே மலை நாடு பற்றிய வருணனை அமைந்துள்ளது. மலை நாடு ஆதித்த மன்னரால் ஆளப்படும் நீதி நெறி கடவாத நாடு என்பதைக் குறுங்குடியில் கேத்திர பாலனிடம் மாயவன் எடுத்துரைத்ததாகப் பாடிய கவிஞர் இங்கே தம் கூற்றாக ஆதித்த மன்னர் சிறப்பும் நாட்டு வளமும் மக்கள் நலமும் குறித்துத் தம் நாட்டுப் பற்றுத் தோன்றப் பாடுகின்றார் (1217-1255).

பெருமாள் அனந்தவனம் அடைதல்

மலை நாட்டின் நீதியும் வளமும் கண்ட மாயன் இந்த மலை நாட்டிலிருந்து பூசை கொள்ளவேண்டும் என்னும் விருப்புடன் செல்கின்றார். மறையோனும் அவரைப் பின்தொடர்ந்து செல்லுகின்றான். திருவெட்டாறு, குழித்துறை, வீரசரம், பாறைச்சாலை, தவளை கரையாத குளம், உதியங்குளம், உத்தாண்மைக்கோடு, நெய்யாத்தங்கரை, கூட்டப்பனை, குறும்பனைச் சேரி, வெங்கானல்லூர், விழிஞம், நேமம், காட்டுரு ஆகியவற்றைக் கடந்து கரும்பனையாறு காணுகின்றார். அடுத்துச் சாலையம் பதி கடந்து திருவனந்தாவனத்தைப் பெருமாள் அடைகின்றார் (1256-1284).

திருவனந்தையில் பள்ளி கொண்டருளல்

பெருமாள் அனந்தவனத்தில் சிறு குழந்தை வடிவமாகிறார். குழந்தையின் உருவம், பேச்சு, அணிந்திருந்த கிங்கிணி, அரைஞாண் முதலியவற்றையெல்லாம் சுட்டி அக் குழந்தையை வருணிக்கிறார் கவிஞர் (1287-1302).

இத் தெய்வக் குழந்தையைக் கடைக்குலப் பெண்ணாகிய புலைச்சி ஒருத்தி காணுகிறாள். பெருமாளின் பின்னாகச் சீரங்கத்திலிருந்து தொடர்ந்து வந்த மறையவனும் அங்கு அவரைக் காணாது திகைத்தான். இலுப்பை மரப்பொந்தில் பெருமாள் வந்தாரே என்று அவன் தேடியும் காணாது மலைத்து நின்றான். அம் மறையவன் வனமெங்கும் ஓடியாடித் தேடுகிறான்; பெருமாள் புகழ் பேசித் துதிக்கிறான்; தாயிழந்த கன்று போல் தவித்து அழுது புலம்புகிறான். மறையவன் உற்ற உணர்ச்சிகளைக் கவிஞர் நன்கு சித்திரித்துள்ளார் (1317-1344).

அப்பொழுது கடைமாது மறையவனின் கண்ணுக்கு இலக்காகிறாள். கடைமாதின் உருவத்தையும் கவிஞர் சொல்லோவியமாகக் காட்டுகிறார் (1345-1357). அம் மாதிடம், ''இங்கொருவர் வந்தது கண்டீரோ' என மறையவன் கேட்கிறான். 'தளர்நடை யிட்டு வந்த பாலன் ஒருவன் இலுப்பையின் பொந்தில் நின்றான். அவன் மறைந்ததைக் காணவில்லை. இப் பாலனைத் தவிரப் பெரியவர்களாக எவரும் வரவில்லை' என்று அம் மாது தெரிவித்தாள் (1360-1372).

மறையவன் இலுப்பைப் பொந்தை அடைந்து, 'மாயவரே! எங்கே இருக்கின்றீர்? என்னை உடன் அழைத்து வந்து மாயஞ் செய்கின்றீரா?' என்று அரவணையில் பள்ளி கொள்ளும் மாயன் உருவைத் தியானிக்கிறான். அப்பொழுது பெருமாள் கிண்கிணிகள் ஒலிக்கத் திருநடனஞ் செய்கின்றார். திருநடனங்கண்ட மறையவன் அங்கேயே இருந்தான். பெருமாள் இலுப்பையின் பொந்தில் முடியைத் தெற்கே வைத்து வடக்கே பாதம் நீட்டிப் பள்ளி கொண்டருளினார். மறையவன் ஊரில்

எதிர்ப்பட்ட ஈழுவன் ஒருவனிடமிருந்து சிரட்டையில் நெருப்புக் கேட்டு வாங்கி பெருமாளுக்குத் தூபதீபம் செய்தான் (1373-1412).

பெருமாளுக்குக் கோயில் எடுத்தல்

பள்ளி கொண்ட பெருமாள் நாட்டை ஆளும் மன்னர் கனவில் காட்சி தருகின்றார். மன்னர் மந்திரிமார்க்குத் தாம் கண்ட கனவைத் தெரிவிக்கிறார். மறையவன் உருவில் ஆதிசேடனும் கருடனும் உடன்வரப் பெருமாள் காட்சி தந்து திருக்கோவில் வைத்துத் தர அறிவித்தார் என்பதை மன்னர் உரைக்கின்றார். மந்திரிமார் முதலியோரும் பெருமாள் அனந்தவன மீதில் பள்ளிகொண்டார் என்பதைக் கேட்டோம் என்றனர். அரசன் மந்திரி தந்திரி மார்களுடன் அனந்தவனம் வந்து பெருமாள் பள்ளி கொண்டிருப்பதைக் கண்டனன் (1413-1448).

பெருமாளுடன் கூடவே தொடர்ந்து வந்த மறையவனும் அங்கே இருந்தான். மறையவனிடம் கேட்க, அவன் பெருமாள் சீரங்கம் விட்டு வந்த வரலாற்றை உரைக்கிறான் (1449-1459).

பெருமாளின் வரலாறு கேட்ட மன்னர் தம்மைத் தேடி வந்த மாயவர்க்குக் கோவில் கட்ட வேண்டும் என்று தெரிவிக்கிறார். பேருருவமாகக் காட்சி தந்த பெருமாள் அவர்களுடைய வேண்டுதலுக்கு இசைந்து திருமேனியை அவர்கள் காணும் அளவுக்குச் சுருக்கிக் காட்சி தருகிறார் (1460-1491). மன்னர் முதலியோர் மாயோனைப் போற்றுகின்ற இப் பகுதி துதிமாலையாக உள்ளது (1478-1484).

பின்னர், திருக்கோவில் எடுக்கச் சிற்பியர்கள் அழைக்கப்படுகின்றனர். சிற்பி யர்களை அறிமுகப்படுத்தும் வகையில் அவர்தம் பல்வேறு வகையான சிற்பத் திறமைகளையும் அவர்தம் படைப்புகளையும் எடுத்துரைக்கின்றார் கவிஞர் (1494-1519). சிற்பியர் தம்மை அழைத்துவந்த பணிவிடை ஏது எனச் சேரகுல மன்னனைத் தொழுது கேட்கின்றனர். 'எழுதவொண்ணாத் திருமேனி ஈசருக்குக் கோவில் அமைக்க வேண்டும்; நீங்கள் மரங்கள், கற்கள் முதலியவற்றைக் கொண்டு வாருங்கள்' என்று பணிக்கிறார் மன்னர் (1520-1534).

சிற்பம் வல்ல தொழிலாளர் மன்னர் கட்டளைப்படியே காட்டிற்குச் சென்று ஏற்ற மரங்களை வெட்டியும் கற்களைப் பிளந்தும் வண்டிகளில் ஏற்றித் திருவனந்த புரத்தில் கொண்டுவந்து சேர்க்கின்றனர் (1532-1567). பின் திருப்பணி தொடங்கிக் கோயிலைக் கட்டத் தொடங்குகின்றனர். பலவேறு வகையான உருக்கள் அமைந்த தூண்களை உருவாக்குகின்றார்கள். அவற்றை நாட்டி, அவற்றின்மேல் உத்தரம் வைத்துப் பலகைகளைப் பரப்புகின்றனர். திருக்கோவில் அமைத்த வகையைக் கவிஞர் மிக விரிவாகப் பாடியுள்ளார். பெருமாள் பள்ளி கொண்டிருக்கும் கருவறைக்கு மூன்று வாயில்கள் அமைக்கின்றனர். தெற்கேயுள்ள வாசலைப் பெருமாளின் திருமுக மண்டலத்தைத் தரிசிக்க வைத்தனர். மத்தியிலுள்ள வாசல் திருமாலின் கொப்பூழுக்கு நேராக அமைந்தது. மற்றொரு வாசலை வடக்கே

திருப்பாதங்களைக் காணும் வகையில் வைத்தனர். பல்வேறு வகையான மண்டபங்கள், சுற்று மாளிகைகள், திருமதில்கள் முதலியனவெல்லாம் திறம்பட அமைத்து மன்னரைப் போற்றி நிற்கின்றனர். மன்னர் சிற்பியர்களுக்குத் தக்க பரிசில்களைத் தந்து வழியனுப்பி வைக்கிறார் (1568-1695).

திருக்கோவில் வழிபாடு

நல்ல நாளில் மறையோர்களை வரவழைத்து, ஓமம் வளர்த்துக் கும்பாபிஷேகம் செய்வித்தார் மன்னர். திருமாலுடன் வந்த மறையவன் சீரங்கத்தில் தாம் முதற் பூசை செய்துவந்த வரலாறு முதலியன கூறுகின்றான். இங்கும் அனந்தபுரப் பெருமாளுக்கு முதற் பூசை செய்யும் உரிமையை அவனுக்கு மன்னர் அளிக்கின்றார். திருமஞ்சனமெடுத்தல், கோயிலைத் துப்பரவு செய்தல், பெருமாளுக்கு அமுதாக்கல், மாலை கட்டுதல், விளக்கு வைத்தல் முதலான பணிகளைச் செய்துவரக் கோயிற் பணியாட்கள் பலர் நியமிக்கப்படுகின்றனர். திருநெடுமால் அனந்தபுரத்திலே பூசைகொண்டு நீடுழிகாலம் பூவுலகம் வாழ அருள் பாலித்துத் திருக்காட்சி தரலானார் (1696-1747).

இவ்வாறு பெருமாள் சுவாமி கதையைக் கூறி வந்த கவிஞர் இறுதியில் வாழி பாடலுடன் இக் கதைப்பாடலை நிறைவு செய்கின்றார். வாழிபாடல் என்பது விற்கவிதையின் முடிவில் நிகழும் நிகழ்ச்சியாகும். மன்னவர்க்கும் மற்றுமுள்ள மக்களுக்கும் வாழ்த்துக் கூறுகிறார் கவிஞர். மழை பொழிய வாழ்த்துகிறார். ‘இக் கதைப் பாடலை முறையாகப் படித்தவர், கூடியிருந்து கேட்டவர், கதைவிரித்துச் சொன்னோர், எழுதிப் படித்தோர்! எல்லோரும் நித்திய கலியாணமாக நீடூழி வாழ்க’ என்னும் வாழ்த்துடன் இக் கதைப்பாடல் நிறைவுறுகிறது (1748-1763).

நூலின் தொடக்கத்தில் திருவனந்தப் பெருமாள் துதியாக இரு பாடல்கள் அமைந்துள்ளமை போலக் கதை முடிவில் ஆதி நாராயணனைக் குறித்த ஒரு துதிமாலையை இருபது கொச்சகப் பாடல்களில் பாடியுள்ளார். இந்த ஆதி நாராயணன் துதிமாலை பெருமாளைப் பலவாறு துதித்துப் போற்றும் புகழ் மாலையாகும். இதனை ‘ஒருபா ஒருபது’ என்னும் பிரபந்தத்தை ஒப்ப ‘ஒருபா இருபது’ என்று கொள்ளலாம்.

துடைத்த கோவிந்தனாரே, உலகு, உயிர், தேவும் மற்றும்
படைத்த எம் பரம மூர்த்தி, பாம்பு - அணைப் பள்ளி கொண்டான்,
மடைத்தலை வாளை பாயும் வயல் அணி அனந்தபுரம்
கடைத்தலை சீய்க்கப் பெற்றால், கடுவினை களையலாமே.

கடுவினை களையலாகும், காமனைப் பயந்த காளை
இடவகை கொண்டது என்பர், எழில் அணி அனந்தபுரம்;
படமுடை அரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண
நடமினோ, நமர்கள் உள்ளீர்! — நாம் உமக்கு அறியச் சொன்னோம்

— சடகோபர் திருவாய்மொழி

அனந்தசயன மாஹாத்மியமும் பெருமாள் சுவாமி கதையும்

அனந்தசயனம் கொண்டருளும் பத்மநாப சுவாமி திருக்கோயிலின் பழம்பெரு வரலாறு பிரமாண்ட புராணத்தில் கோளவிஸ்தார ஆக்யானத்தில் முதல் பதினைந்து அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமனின் திருவுருவைக் கண்ணால் காண வேண்டும் என்று முன்னொரு காலத்தில் திவாகரர் என்னும் துளுவப் பிராமணர் தவஞ்செய்தனராம். இத் தவசிரேஷ்டருக்காக அனந்தங்காட்டில் பெருமாள் குழந் தையின் உருவில் காட்சி தந்து, இருப்பை மரத்தில் அனந்தசயனப் பெருமாள் நிலைகொண்டார் என்று சொல்லப்பட்டுள்ளது. இம் முனிவரே பள்ளி கொண்ட பெருமாளுக்கு ஆலயம் அமைத்துத் தமது இறுதிக்காலம் வரையில் மலர்களால் போற்றி செய்து வழிபட்டு வந்தாராம்.

இதற்கும் பெருமாள் சுவாமி கதைக்குமான ஒப்புமை அனந்தவனத்தில் பெருமாள் குழந்தை உருவில் தோன்றி இருப்பை மரத்தில் நிலை கொண்டார் என்பது ஒன்றே.

மாஹாத்மியத்தின்படி பள்ளிகொண்ட பெருமாள் துளு நாட்டிலிருந்து தவ முனிவர் திவாகரருக்காக அனந்தபுரம் வந்து கோயில் கொண்டார் என்பது பெறப்படுகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் இத் திருக்கோயிலில் துளுவப் பிராமணரே பூசை செய்யவேண்டும் என்றும், துறவிகளே பூக்களால் அருச்சிக்க வேண்டும் என்றும் நியதிகள் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டுவருவதைச் சான்று காட்டுகின்றனர்.

பெருமாள் சுவாமி கதையோ திருவரங்கப் பெருமாள் கோயில் பூசகரான மறையோன் ஒருவனுக்காக அன்ந்தபுரம் வந்து கோயில் கொண்டருளினார் என்ப தைத் தெரிவிக்கிறது. இதற்குப் புராண வரலாற்று ஆதாரம் உண்டா என்பது தெரியக்கூடவில்லை. இது வழிவழியாக வழங்கி வந்த ஒரு மரபுவழிக் கதையை ஆதாரமாகக் கொண்டது என்று கொள்ளலாம்.

அனந்தசயன மாஹாத்மியம்

திவாகரமுனிவர் வரலாறு

துளுவப் பிராமணராகிய திவாகரர் திருமாலின் பள்ளிகொண்ட திருக்கோலத்தைக் கண்ணால் தரிசிக்க வேண்டும்'என்று நெடுங்காலம் தவஞ்செய்து கொண்டிருந்தார். இவருடைய தவத்திற்கு மகிழ்ந்த திருமால் இவருக்கு அருள் புரிவதற்காக ஒரு குழந்தையின் வடிவில் இவர் முன் காட்சி தந்தருளினார்.

குழந்தையைக் கண்ட முனிவருக்கு அதனிடத்தில் அளவற்ற பற்றும் பாசமும் உண்டாயின. முனிவர் குழந்தையிடம் நீ யார் என்று வினவிய போது, அக் குழந்தை,

> ''என்னுடைய பெற்றோரைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. என்னை உம்முடைய மகனைப் போல் அன்பு பாராட்டினால் உமக்கு நன்மையுண்டாகும். ஆனால், என்னை நீர் எக்காரணம் கொண்டும் கோபித்தல் கூடாது. கோபித்தால் நான் உம்மைவிட்டுப் பிரிந்து சென்று விடுவேன்''

என்று விடையிறுத்ததாம். முனிவர் குழந்தையிடம் பெருவிருப்பங்கொண்டு போற்றி வந்தார். பூசை வேளையில் கூட அதனைப் பிரிந்திருக்க இயலாத நிலையில் முனிவர் இருந்தார்.

ஒரு சமயம் திவாகர முனிவர் சாளக்கிராமங்களை எடுத்து வைத்து அபிஷேகம் செய்யத் தொடங்கினார். அண்மையிலிருந்த அத் தெய்வக் குழந்தை சாளக்கிராமம் ஒன்றை எடுத்து வாய்க்குள் வைக்க முயன்றது. அதைக் கண்ட முனிவர் சற்றுச் சினங் கொண்டவராய்ச் சாளக்கிராமத்தைத் தொடலாகாது என்று கூறிச் சிறுவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டார். உடனே அக் குழந்தை முனிவரை நோக்கி, 'இனி என்னைக் காண வேண்டுமானால் அனந்தன் காட்டிற்கு வா' என்று கூறி மறைந்துவிட்டது.

அப்பொழுதுதான் முனிவருக்குக் குழந்தையுருவில் வந்து காட்சி தந்தவர் திருமாலே என்னும் எண்ணம் தோன்றியது. பெருமாள் மறைந்து விட்டது குறித்து முனிவர் பெருவருத்தம் கொண்டார். அக் குழந்தை தெரிவித்தபடி அனந்தன் காட்டை நோக்கித் திவாகரர் புறப்பட்டு வந்தார். வழியில் பல துன்பங்களை அனுபவித்து அனந்தன் காட்டிற்குத் திவாகர முனிவர் வந்து சேர்ந்தார். அங்கே இருப்பை மரத்தின் பொந்தில் ஓர் அழகிய குழந்தை நுழைவது போன்ற தோற்றத்தைக் கண்டு அதன் அருகே சென்றார். முனிவர் மரத்தை அடுத்ததும் அம் மரம் முறிந்து நிலத்தில் சாய்ந்தது. விழுந்து கிடக்கும் மரம் முனிவருக்கு அனந்த சயனப் பெருமாளின் திருவுருவமாகக் காட்சியளித்ததாம்.

பத்மநாப சுவாமி ஆலயம் அமைத்தல்

திவாகர முனிவர் அந்த இடத்தில் ஓர் ஆலயம் அமைக்கிறார்; இருப்பை மரத்தடியைக் கொண்டே தம் உளக்கண்ணிற் கண்டவண்ணம் பள்ளிகொண்ட பெருமாளின் திருவுருவம் அமைத்துப் பிரதிட்டை செய்து தமது இறுதிக்காலம் வரை பூசித்து வந்தார் என்று சொல்லப்படுகிறது. முனிவர் பிரதிட்டை செய்த காலம் கொல்லம் 225 (கி.பி. 1050) என்று அனந்தபுர மாஹாத்மியம் என்ற சிறு வெளியீடு தெரிவிக்கின்றது.

ஆலயம் காலந்தோறும் விரிவுபடுத்தப்பட்டு வந்திருக்கிறது. தைக்காடு பட்ட திரி என்னும் புகழ் பெற்ற சிற்பியைக் கொண்டு பெருமாளின் பெரிய திருவுரு அமைக்கப் பெற்றதாம். பன்னிரண்டாயிரம் சாளக்கிராமங்களை ஏற்கெனவே இருந்த திருவுருவின் மேல் வைத்து கடுசர்க்கரையால் அந்தச் சிற்பி சயனக் கோலத்தை அமைத்தாராம். இத் திருவுரு அமைந்தது கொல்லம் 906 (கி.பி. 1731) என மாஹாத்மிய நூல் குறிப்பிடுகிறது.

சுவாமி சன்னிதியில் தெற்கு வாயிலின் அருகில் உள்ள குழந்தையுருவைத் திருமுக தரிசனம்செய்வார் தொட்டுத் தலையில் ஒற்றிக் கொள்கின்றனர். இது பெருமாள் குழந்தை உருவிலேயே முனிவருக்குக் காட்சி தந்ததை நினைப்பூட்டு கிறது என்கின்றனர்.

அனுஷம் திருநாள் மார்த்தாண்ட வர்ம மகாராஜா கொல்லம் 920 (கி.பி. 1745) ஆம் ஆண்டு சித்திரை மாதப் பிறப்பன்று தமது நாட்டை ஸ்ரீபத்ம நாப சுவாமியின் திருவடிகளில் சமர்ப்பித்தார். மகாராஜா 'பத்மநாப சுவாமி தாசன்' என்ற நிலையில் நாட்டை ஆண்டு வந்தார். இது முதல் வந்த மன்னர்களும் பத்ம நாப சுவாமி தாசர்களாகவே நாட்டை ஆண்டு வந்தனர். மார்த்தாண்டவர்மருக்குப் பின் தர்மராஜா என்னும் சிறப்புப் பெயர் பூண்ட கார்த்திகைத் திருநாள் மகாராஜா ஆலயத்தில் பல திருப்பணிகள் செய்தார் என்பது வரலாறு.

அனந்த பத்ம நாப சுவாமி ஆலயத்தின் தனிச் சிறப்பு

அனந்த பத்மநாப சுவாமி ஆலயத்தின் பூஜா முறை பிற ஆலயங்களில் காண இயலாததான நாரத பூஜாவிதியைப் பின்பற்றி நடைபெறுவது ஒரு தனிச் சிறப்பு.

திருமாலை வடநாட்டில் இலக்குமி சமேதராக மட்டும் வழிபட்டு வருகின்ற னர். தென்னாட்டு ஆலயங்களில் பூமியையும் திருமாலின் தேவியாகக் கொண்டு வணங்கி வருகின்றனர்.

'தேவிமார் ஆவார் திருமகள் பூமி;
ஏவ, மற்று அமரர் ஆட் செய்வார்'

என்று சடகோபர் திருவாய்மொழியில் போற்றுகிறார். அனந்தசயன ஆலயத்தில் திருமகள் பூமி தேவியுடன் நீளாதேவியும் ஆகத் தேவியர் மூவர் வழிபடப் பெறுகின்றனர். ''சத்துவகுணம், ரஜோகுணம், தமோ குணம் என்னும் உருவத்தி லுள்ள மூன்று 'சத்தி'களும் இணைந்த முக்குணங்களோடு கூடிய மகாப் பிரகிருதி யுடன் சேர்ந்த 'புருஷன்' ஆகவே அனந்தசயனப் பெருமாள் கற்பனை செய்யப்பட் டுள்ளார் என்பதே இதன் பொருளாகும்'' என்று மாஹாத்மிய நூல் விளக்கம் தருகிறது.

அனந்தசயனப் பெருமாள் திருவுருவத்தில் மும்மூர்த்திகளும் காட்சி தருகின்ற னர். திருமால் ஆதிசேடனின் மேல் அறிதுயில் கொண்ட நிலையில் காட்சி தருகிறார். அவருடைய உந்தித் தாமரையில் பிரம்மா இருக்கிறார். அவர்தம் கவிந்த வலத் திருக்கரத்தின் கீழே சிவலிங்க உருவம் உள்ளது. பெருமாள் அழித்தற்கடவு ளான சிவனைப் பூசித்துக் கொண்டிருப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறாகப் பிரமா, விஷ்ணு, சிவன் மூவரும் ஓருருவில் உள்ளனர். சூரியன், சந்திரன், தேவர்கள், நாரதர் முதலிய முனிவர்கள் இறைவனை வழிபடும் நிலையில் இவர் தம் திருவுருவைச் சுற்றிலும் நின்ற கோலத்தில் உள்ளனர்.

THE DIVINE PILGRIMAGE

THE STORY OF PERUMĀḶ CUVĀMI

பெருமாள் சுவாமி கதை

பாயிரம்

விநாயகர் காப்பு

1. மருவணி துளசி மாலை மார்பனாங் (கமலக்) கண்ணன்,
கருநிற வண்ணன், சீதை கமலையாந் (திருவி னாதன்)
திருவனந் தன்னி லுற்ற செய்தியைச் செப்பச் செவ்வேள்
ஒருமருப் புடைய வேளை உமைமகன் காப்ப தாமே.

நூற்பொருள் இயம்பல்

2. சிவத்தினில் சத்தி தோன்றி, தெளிவுறு சத்தி (தென்ம்பால்)
உகந்தனா மகிழ்ந்து நின்ற உகந்தநல்ப் பதியில் வந்த
விபத்திர விட்டு ணுதான் வீறதாய் விளையாட் டெல்லாம்
நகர்தரு உலகந் தன்னில் நருளிடத் தியம்ப லுற்றேன்.

---

1. மரு - வாசனை.
2. கமலை - தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்குமி; திருவினாதன் - திருமகள் கணவன்.
3. திருவனம் - திருவனந்தபுரம்; செவ்வேள் - செந்நிறத்தலைவன்; செவ்வேளாகிய ஒரு மருப்புடைய வேள் என்க. விநாயகரும் செம்மேனி படைத்தவராதலின் செவ்வேள் எனப்பட்டார்.
4. உமை - உமாதேவியாகிய பார்வதி; உமைமகன் - உமா தேவியின் மூத்த பிள்ளையாராகிய விநாயகர்.
5. சிவமும் சத்தியும் ஒன்றினுள் ஒன்று தோன்றி இரண்டற நிற்கும் நிலை கூறப்பெறுகிறது.
'சிவன்சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங் குலகுயி ரெல்லா மீன்றும்'
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியு மன்றே.
என்பது சிவஞானசித்தியார் (சூ. 2:77).
6. உகந்த - உவந்த, மகிழ்ந்த.
7. விபத்திர - வேறுபட்ட வடிவு கொண்ட; அதாவது பல்வேறு உருவில் அவதரித்த; விட்டுணு - விஷ்ணு, திருமால்.
8. நகர்தருதல் - அசைந்து கொண்டிருத்தல், நருளிடத்து - கூடியுள்ள மக்கள் முன்னிலையில். இயம்பல் - சொல்லல்.

The Story of Perumāḷ Cuvāmi

Invocation

1-4. May the Fair Prince, the Prince with one trunk, Umai's[1] son
Be the Protector, aiding this narration of the account
Of the coming into Tiruvaṉam[2], of the Lotus-eyed Kaṇṇaṉ[3]
Wearing the *tuḷaci* garland, full of fragrance, on his chest,
The dark-hued one, the Lord of Sīta, the Lady of the lotus[4].

5-8. Viṣṇu having many incarnations, came into that good town
In which Cakti, of enlightening power,[5]
Descended of Śiva, stood pleasantly; Of all His playful acts of splendour,
I have taken (on myself) to speak of before the audience of this ever changing world.

---

1. Vināyaka, elephant-faced Remover of obstacles traditionally invoked first to aid successful completion of any venture.
2. Tiruvaṉam (literally, the sacred forest) is the shortened form of 'Tiruvaṉantapuram', (modern capital of Kerala State). The theme of the story is the imagined peregrinations of Viṣṇu (Tirumāl) as the Deity of the temple of Cīraṅkam (Srīraṅkam) travelling by foot with his minions to Tiruvaṉantapuram, the southern town in the holy land of Cēra kings, chosen by him for his residence. Visnu is spoken of in terms of his incarnations as Kriṣṇa (kaṇṇaṉ) and Rāma, as well as his personal features and ornaments.
3. One of the names of Viṣṇu (called Tirumāl) and referred to by many appellations pertaining to his incarnations.
4. Lakṣmi, the wife of Viṣṇu, regarded as dwelling on a lotus-seat.
5. Cakti the goddess Pārvati, one-half of Civaṉ and descended from Him. The good town may be taken as Tiruvaṉantapuram to which Viṣṇu is shown as travelling in this poem

வேறு

3. மகரங் கமட வராகன் நகர்பொற் குறளோன்
நிகரில்லா மன்னே நேருழவர் வாள(ா)யன் தன்னுடனே
மன்றுங் குதிரை மன்றுங் குருதை மன்றுங்
குருதை முகம் பேசும்.

திருமால் திருவனந்தபுரம் வந்த காலம்

வேறு

4. வலியபுகழ்ச் சேரமன்னர் திருநா டாண்ட
வளமைதனைக் கேளும், நீராய்ந்து கேளும்;
புலியுடனே புல்வாயு மொருதுறையில்
பொருந்தியே நீரருந்தும் புதுமை கண்டு,
கலியுகத்தில் ரண்டரையாம் வருள்சம் தன்னில்,
கருதலர்கள் சிங்கமென்னும் கரிய மால்தான்
குலியமுகத் தேவர்களும் ந(ர)ரும் போற்ற,
குன்றாமல் திருவனந்தம் குறித்த தன்றே.

---

9. மகரம் - மீன்; கமடம் - ஆமை; வராகன் - பன்றியுருவெடுத்தவன்; குறளோன் - வாமனன்.

10. நிகர் - ஒப்பு; மன் - இராமன்; ஏருழவர் - கலப்பை ஆயுதமுடைய பலராமர்; ஆயன் -இடைக்குலத்தவதரித்த கண்ணன்.

11. குதிரை - கற்கியவதாரம்; குதிரை என்பதைக் குருதை என்னும் நாட்டவர் வழக்குப்படி குருதை என்றார்.

12. குருதை முகம் பேசும் இது கற்கியவதாரத்தைக் குறிக்கும்.

13. சேர மன்னர் - சேரநாட்டை ஆளும் மன்னர்.

15. புல்வாய் - மான்.

17. கலியுகம் ரண்டரையாம் வருஷம் என்பது கலியுகம் 2500 ஆம் ஆண்டு.

18. கருதலர்கள் - பகைவர்கள். கருதலர்கள் சிங்கம் - பகைவர்களுக்குச் சிங்கம் போன்று அச்சத்தை விளைவிப்பவன்.

19. குலியம் - குலிசம்; குலியமுகத் தேவர்கள் - வச்சிராயுத்தையுடைய இந்திரன் முதலான தேவர்கள்; நரர் - மனிதர்.

20. திருவனந்தம் — திருவனந்தபுரம்; குறித்தது - நாடிவந்தது.

9-12. Fish,[6] tortoise, boar, golden dynamic dwarf,
Matchless king, great ploughman, the effulgent cowherd
Along with these incarnations the enduring Horse,[7]
The deathless Horse, the face of the everlasting Horse speaks.[8]

The Time of Tirumāl's arrival in Tiruvaṉantapuram

13-21. Hear, you hear, with penetrative attention,
Of the prosperity of the rule over their holy land
By the Cēra kings, of fame exceeding[9].
Seeing (in this land) the wonder of the tiger and the deer,
Drinking water from a single water-ghat in amity,
Even the dark Tirumāl, verily a (dreaded) Lion to those illdisposed to him,
Thought without hesitation of Tiruvaṉantam (as a place fit for his stay),
As thunderbolt-wielding celestials and men (of the world) paid obeisance (to him)
In the year two and a half of the era of Kali.[9a]

6. Matsya, Kūrma, Varāka, Vāmaṉa, Rāma, Balarāma and Kṛṣṇa incarnations of Viṣṇu are here mentioned.
7. Viṣṇu appeared as a Horse in his Kalki incarnation dissolving this earth.
8. The face of the everlasting Horse is Viṣṇu's Form in the Kalki-incarnation; the speaking of this face is the blessing and favour it confers on its devotees.
9. The Cēra king who from ancient times ruled the south-western part of the Tamil land (now known as Kerala with Malayalam as its language) were famous for their beneficent rule and religious fervour, and Lord Viṣṇu naturally chose their capital town Tiruvaṉantapuram for his alternative residence.
9a. This is Kaliyuga, 2500th year.

ஆசிரியர் நூல் இயற்றத் தொடங்கிய காலம்

5. அல்லனைய திருமேனிக் கமலக் கண்ணன்
அனந்தமதி லம(ர்)ந்த கதையை நல்கச்
சொல்லு கொல்ல மெழுநூற்றுத் தொண்ணூற் றெட்டில்,
சிறந்தகும்ப மாதமதில், தெய்தி நாங்கில்,
நல்ல புகழ்ச் சுக்கிர வாரந் தன்னில்,
நாளான மான்றலையில், நவின்ற காதல்
சொல்வல்ல புலவோர்கள் பெறுமு ணகத்தோர்
துணையடியென் தலைமீதில் சூட்டி னேனே.

---

21. அல் - இருள், கருமை; கமலக்கண்ணன் - தாமரை மலர் போன்ற கண்களையுடைய திருமால்.
22. அனந்தம் - அனந்தபுரம்.
23. கொல்லம் - கொல்லமாண்டு; கொல்லம் 798; அதாவது கி.பி. 1623.
24. கும்பமாதம் - மாசிமாதம்; நாங்கு - நான்கு.
25. சுக்கிரவாரம் - வெள்ளிக்கிழமை.
26. நாள் - நட்சத்திரம்; மான்றலை - மிருகசீரிடம். இந்தக் காலக் குறிப்பு இந்நூலாசிரியர் நூலை ஏட்டில் எழுதிய காலத்தைச் சுட்டும். இதனை இச் சுவடி பெயர்த்து எழுதிய காலம் எனக் கொள்வதற்கில்லை. ஏடு பெயர்த்து எழுதியோர் பற்றிய குறிப்பு எதுவும் இச் சுவடியில் இல்லை. இச் சுவடியின் எழுத்து வடிவ அமைப்பில் பின்னால் வந்த வளர்ச்சி நிலை தென்படுகிறது, நெடில் வேறுபாடு சில எழுத்துக்களில் காணப்படுகிறது; க்க, ட்ட, த்த, ந்த, முதலியவற்றைச் சுட்டும் கூட்டெழுத்து முறை மலையாளச்சார்பு கொண்டது. எல்லாவற்றையும் நோக்குமிடத்து இது 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுதப்பெற்ற சுவடியாயிருத்தல் கூடும் எனத் தோன்றுகிறது.
27. புலவர்க்கு வணக்கஞ்செலுத்துகிறார் இந்நூலாசிரியர்.
28. துணையடி - இரண்டு பாதங்கள்.

Date of composition of the work

22-28. In the familiar *Kollam* era year seven hundred and ninety eight,[10]
Month *Kumpam*[11] date the fourth, day *Cukkirava-vāram*[12] of good name, and asterism, *Māṉ-talai,*[13]
I wear on my head the pair of feet of poets of old,
For this narration of the story of the Lotus-eyed Kaṇṇaṉ
With dark night-like body, coming to stay in Aṉantam.

---

10. *Kollam* era is reckoned from 825 A.D. and its 798th year will be 1623 A.D.
11. *Kumpam* is the Tamil month of *Māci* (February-March).
12. Friday.
13. This is the Tamil equivalent of the name of the star *Mirukacīriṭam* meaning literally 'the stag-head'

நூற்பயன்

வேறு

6. நாடியே பொருள்கை கூடும்; ஞானமும் புகழு முண்டாம்;
வீடுசேர் வெளிய தாக்கும்; வேதியன் கமல நோக்கும்;
நீடிய (அ)ரக்கர் சேனை நீறுபட் டொழிய, வாகை
சூடிய சிலையில் ராமர் தோள்வலு கூறு வோர்க்கே.

7. வென்றிசே ரிலங்கை யானை வென்றுமால் சூரஞ் செய்து,
இன்றிலச் சிறீராமர் தானு மியலுட னுலகில் மெய்க்க,
ஒன்றினில் படிப்போர் தாமும், உரைத்திடக் கேள்ப்போர் தாமும்,
நன்றென்று சொல்வோர்க் கெல்லாம் நரகம்வந் தெய்திடாதே.

29-36. இதில் அடங்கிய இரு பாடல்களும் கம்பராமாயணப் பாயிரப் பகுதியில் வரும் மிகைச்செய்யுட்களைச் சார்ந்தவை. இவை சில பாட மாற்றங்களுடன் இங்கு எழுத்தாளப்பட்டுள்ளன. இவையிரண்டும் நூலினைக் கற்பார் பெறும் பயன்பற்றி உரைப்பன. கம்பராமாயணத்தில் காணும் பாடல்கள் வருமாறு:

நாடிய பொருள் கைகூடும்; ஞானமும் புகழும் உண்டாம்;
வீடியல் வழியது ஆக்கும்; வேரிஅம் கமலை நோக்கும்;
நீடிய அரக்கர் சேனை நீறுபட்டுஅழிய வாகை
சூடிய சிலை இராமன் தோள்வலி கூறு வோர்க்கே.

வென்றிசேர் இலங்கையானை வென்றமால் வீரம் ஓத
நின்றரா மாயணத்தில் நிகழ்ந்திடு கதைகள் தம்மில்
ஒன்றினைப் படித்தோர் தாமும், உரைத்திடக் கேட்போர் தாமும்,
நன்று இது என்றோர் தாமும் நரகமது எய்திடாரே.

29. கைகூடும் - கிட்டும்.

30. கமல நோக்கு - இலட்சுமி கடாட்சம்.

31. வாகை - போரில் வெற்றிகொண்டோர் சூடும் மாலை. வாகை சூடிய ராமர், சிலை ராமர் என்க. சிலை-வில்லாகிய கோதண்டம்.

32. வலு - வலிமை.

33. சூரஞ்செய்தல் - வலிமைகாட்டுதல்.

34. சிறீராமர் - ஸ்ரீராமர், சீராமர்.

Citation of benefits accruing from the work

29-32. [14]To those who speak of the might of the shoulders,
Of the bowman Irāmaṉ[15] who wore the *vākai* flower of victory
Powdering and destroying the demon-army,
The objects they seek will be realised; knowledge and fame will be theirs,
The heavenly open space[16] of liberation will be theirs; the Lady of the beautiful, fragrant lotus
Will cast on them her looks of favour.

33-36. Those who read or hear (the accounts) of Srī Rāmar
Who truly conquered the victorious One of Ilaṅkai,[17]
And those who say 'it is good'
The sufferings of *narakam*[18] will indeed not reach them.

14. This and the succeeding verse are taken from the Introductory portion of Kampaṉ's *Irāmāyaṇam*, with some verbal changes probably attributable to oral contexts.
15. The hero of the *Rāmāyaṇa* famed for his archery and considered an incarnation of Lord Tirumāl. This name in Tamil is written with an initial -*i*- as Irāmaṉ and without it also, as Rāmaṉ.
16. The phrase *Vīṭiyal veḷi* found here is a deviation from Kampaṉ's *vīṭiyal vaḻi* 'the way to liberation (moksam)'.
17. Rāvaṇa, the Rākṣasa king of Ilaṅkai (called Ceylon and Srīlaṅka).
18. A world to which sinners are sent to suffer, similar to hell in Christian mythology.

திருவனந்தப்பெருமாள் அருள் வேண்டல்

வேறு

8. அரும்பு மலரெடுத்து அனுதினமும் போற்றிசெய்து,
துரும்புபேர் லோகமெல்லாம் சூட்சமாய் நின்றோனே!
இரும்போதா னுன்மனது; இரங்காதோ என்னளவும்!
திரும்பிமுகம் பாருமய்யா, திருவனந்தப் பெருமாளே!

9. அங்க மணிந்த அரனுடைய மய்த்துனனாம்
எங்கெங்கும் ஓரடியாய் ஏகமாய் நின்றோனே!
பங்கப்பட ராவணனைப் பத்துமுடி பத்துமற
செங்கையினால் வாளிதொட்ட திருவனந்தப் பெருமாளே.

---

37. அரும்புமலர் •- தோன்றி வெளிப்பட்ட மலர், மொட்டு; அன்றலர்ந்த நாள்மலர் என்றும் கொள்ளலாம். அனுதினமும் - நாள்தோறும்; போற்றி செய்தல் - வணங்குதல்.

38. துரும்பிலும் தூணிலும் இருப்பவன் இறைவன்; நுண்ணிய பொருளிடத்தும் பெரிய பொருளிடத்தும் எங்கும் இறைவன் கலந்திருக்கிறான் என்பதாம். துரும்பு - சிறிய பொருள்; லோகம் - உலகம், பெரியபொருள். சூட்சமாய் - நுண்மையாய்; உள்பொருளாய்.

40. திருவனந்தப்பெருமாள் - திருவனந்தபுரத்தில் கோயில் கொண்டருளும் திருமால்.

41. அங்கம் - எலும்பு; அரன் - சிவன்; மய்த்துனன் - திருமாலின் தங்கை பார்வதியைச் சிவனார் மணந்ததனால் அவருக்குத் திருமால் மைத்துனமுறை யாகின்றார்.

42. ஏகமாய் - ஒன்றாய், முழுமையாய்.

43. பங்கப்பட - தோல்வியுற.

44. வாளி தொடுதல் - அம்பை விடுத்தல்.

Prayer for the grace of the God of Tiruvaṉantapuram

37-40. Oh one who stands in subtle form in all, from the littlest moving thing to the huge world!
(I) take the fresh blossoms everyday and worship you;
Is your heart a piece of iron ? will it not soften down to poor me?
Sir, turn your face and see! Oh Lord of Tiruvaṉantam!

41-44. Oh Brother of the Wife of Araṉ,[19] who wears bones (on his person)!
Oh Lord who stands with one step[20] filling every place in the world!
Oh Lord of Tiruvaṉantam who with his fair hands shot the arrow
Which, disgracing Rāvaṇaṉ, caused all his ten heads to fall!

19. One of the names of Śiva, famous for wearing bones on his body; His brother-in-law is regarded as Viṣṇu.
20. The step is that with which He is said to have measured the worlds in His incarnation as Tirivikkiramaṉ.

கதை

தெய்வ வணக்கம்

பொன்மடந்தை யுஞ்சிறக்க, பூமடந்தை வாழ்க!
(போர்மாது) வீரமகள், நாமாது பொலிய!
நன்மடந்தை மாதுறையும் நன்பனருள் நல்க!
நாயகன்குன் றாததந்தி பாதமது (போற்றி),
இக்கதையை நான்சிறிது புஞ்சொல்லினால் சொன்னேன்;
எண்ணெழுத்தும் சீர்தளையும் இசைந்தோர்கள் பொறுமே.

நூலாசிரியன்

அருவளரு மானபுகழ் வீரவளர் நாடன்,
அங்காத கங்காளி தந்தருள வந்தோன்,
திருவளரும் புயரூபன், அமுர்தமொழி வாகன்,
செந்தா மரைப்பதி சிறந்துவளர் செல்வன்,
அருவளரும் குருவின்நெறி மறவாத வாகன்,
அருதன் அருதகுட்டி இக்கதையைச் (சொன்னேன்).

---

45. பொன்மடந்தை - திருமகள்; பூமடந்தை - பூமாதேவி.
46. போர்மாது வீரமகள் - கொற்றவை; நாமாது - பிரமதேவன் நாக்கில் வீற்றிருக்கும் கலைமகள்.
47. மாதுறையும் நனபன் - உமாதேவியை இடப்பாகத்தே கொண்டுள்ள நன்மை செய்பவனாகிய சிவபெருமான்; நன்பன் - நன்மை செய்பவன்.
48. நாயகன் - தலைவன்; தந்தி - தந்தத்தையுடையவர், விநாயகர்; போற்றுதல் - வணங்குதல், துதித்தல்.
49. புஞ்சொல் - புன்சொல், சிறப்பில்லாத சொல்.
50. எண் - கணிதம்; எழுத்து - இலக்கணம்; சீர்தளை - இரண்டும் பாட்டின் முக்கிய உறுப்புகள்; இசைந்தோர்கள் - பொருந்தியவர்கள், வல்லவர்கள்; பொறும் - பொறுத்துக் கொள்வீர்களாக.
51. அரு - அருமையான பொருள்கள், வீரவளர்நாடு - வீரம் செழித்த நாடு அல்லது வீரர் வளர் நாடு; இந் நூலாசிரியர் பிறந்த நாடு.
52. அங்காத - குறைவில்லாத; கங்காளி - இந் நூலாசிரியரின் தந்தை பெயர்.
53. அமுர்தமொழி வாகன் - அமுர்தம் போன்ற இனிய பேச்சுடையோன்.
54. தாமரைப்பதி - தாமரை என்னும் பெயர்பெற்ற ஊர்; இது கன்னியாகுமரியை அடுத்து வடக்கிலுள்ள தாமரைக்குளம் என்னும் ஊராகலாம்.
56. அருதன் அருதகுட்டி - இந் நூலாசிரியரின் பெயர் - குட்டி என முடியும் பெயர் வழக்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வழங்கி வருவதாகும், உதாரணமாகச் சில: பிச்சைக்குட்டி, முத்துக்குட்டி, சாத்தாங்குட்டி, அய்யாக்குட்டி, பரமுக்குட்டி, செல்லக்குட்டி.

Obeisance to Deities

45-50. May the Lady of Gold[21] prosper! May the Lady of the Earth[22] prosper!
May the Lady of war,[23] and Heroism, and the Lady of speech[24] shine in glory!
May our Friendly one,[25] in whose breast the good Lady (Lakṣmi) lives, favour us with his mercy!
Obeisance to the Feet of the Tusked Lord[26] of undiminished greatness!
I have told this story with my small and demeaning words,
May those expert in verse-letter-count,[27] feet and feet-links[28] bear with me.

The Author

51-56. I, Arutaṉ Arutakuṭṭi the resident of the land of precious things, famed for its thriving heroism,
Who came (into the world) bestowed (on it) by the grace of Kaṅkāḷi, wanting not (in perfections);
A person in whose arms the goddess of prosperity flourishes, a person of nectar-sweet speech;
A noble man living worthily in the town of Centāmarai,
A man who never forgets the valued path of his guru,
(I) have told this story.

---

21. Lakshmi considered the presiding deity of riches; Consort of Tirumāl.
22. Mother Earth (Pūmi-tēvi) considered the Consort of Viṣnu along with Lakṣmi the Goddess of wealth.
23. The goddess of war and heroism is called Koṟṟavai, living in forests and patronising huntsmen and other martial folk.
24 Kalaimakaḷ (Sarasvati) the goddess of learning.
25. Tirumāl, (called by many names like Māl, Nāraṇaṉ, Māyaṉ, Irāmaṉ etc.) who is represented as bearing his consort Tiru (or Lakṣmi) on His chest.
26. The Elephant-god, Vināyaka
27. The count of letters(or syllables) prescribed for metrical lines and feet.
28. The characteristic combinations which verse-feet enter into, in different verse-forms like *Āciriyam, Veṇpā, Kalippā, Vañci* etc.

அவையடக்கம்

பொருளுரைக ளறியுமந்தப் புலவோர்கள் முன்னே
புஞ்சொல்தனை அஞ்சொலெனப் பாடியருள் பெறுமே.
மாதுற்ற செந்தமிழ் வல்லோர்கள் முன்னே
மதியில்லான் சொன்னசொல் எதுபோ லாச்சு?
ஆதித்தனைக் கண்டங் க(ல)ர்ந்தசெந்தா மரைமுன்
அடுக்கநின்ற கொட்டிமலர் தானுஞ்சரி யாமோ
சோதிபெருந் (தினவிளக்கின்) தன்னொளியைக் கண்டு,
துய்யவானில் மின்னினொளி தானுஞ்சரி யாமோ?
வெற்றிமயி லாடக்கண்டு, தன்மார்பில் தட்டி,
வீறாக வாரணம் மிதிப்பதொக்கும் மண்ணில்.
கற்றபுல வோர்கள்முன்னே கட்டுரைத்த கதையைக்
கல்லாத (புல்லன்) சொல்ல, நல்லோர்கள் பொறுமே.

---

57. பொருளுரை - சிறந்த பொருள் பொதிந்த நூல்கள்.
58. அஞ்சொல் - அழகிய சொல்; சிறந்த வாக்கு.
59. மாது - அழகு. செந்தமிழ் வல்லோர்கள் - செந்தமிழ்ப்புலவர்கள்.
60. மதி - அறிவு; மதியில்லான் - பேதை; ஆச்சு - ஆயிற்று, பேச்சு வழக்குத்திரிபு.
61. ஆதித்தன் - சூரியன்; அலர்ந்த - மலர்ந்த; செந்தாமரை - சிவந்த நிறமுள்ள தாமரைப்பூ.
62. அடுக்கநின்ற - சாரநின்ற; கொட்டிமலர் - கொட்டிப்பூ; கொட்டி - நீரில் வளரும் கொடி வகை; 'அக் குளத்தில் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ஒட்டியுறுவார் உறவு' என்பது வாக்குண்டாம் (17). சரி - சமம், ஒப்பு.
63. சோதி - ஒளி; தினவிளக்கு - சூரியன்.
64. துய்ய - தூய்மையான; வான் - ஆகாயம்; மின் - மின்னல்; இனி இதனை மின்மினி என்பதன் சுருக்கமாகக் கொண்டு ஒளிவீசும் பறவையாகிய மின்மினிப் பூச்சி என்றும் கொள்ளலாம்.
66. வாரணம் - கோழி, சேவற்கோழி; மிதிப்பது - ஆடுவது.

'கானமயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி

என்னும் வாக்குண்டாம் பாடலை (14) அடியொற்றியது.

67. கற்ற புலவோர்கள் முன்னே கட்டுரைத்த கதை - பெருமாள்சுவாமி கதை. இதனால் இக் கதை இவருக்கு முன்னாலும் புலவர் சிலர் வழங்கியுள்ளனர் என்பது புலனாம். எனவே இது முதனூலைச் சுட்டிய குறிப்பாம். கட்டுரைத்த - சொல்லிவந்த என்று கொண்டு புலவர்கள் பலர் வழிவழியாகச் சொல்லிவந்த வாய்மொழிக்கதையை இவர் இந்நூலாக யாத்தார் என்றும் கொள்ளலாம்.

Poet's Apologetic Preface

57-68. Let us get the favour of those poets who are familiar with strains of noble import,
Singing (our) lowly utterances as (if they are) beautiful ones.
The word of the person without intelligence, to what can it be likened,
When uttered before those well-versed in fine, faultless Tamil?
Can the (mean) *koṭṭi* flower which stands by the side
Of the fair lotus which blossoms, as it sees the sun, - equal it?
Can the lightning on the clear sky,
Equal the big effulgent Light of the day?
Verily good men will now get this story,
Which learned poets of old had narrated[29] on (this) earth
From a poet of no learning, even as the cock,
Seeing the victorious peacock dance,
Beats its chest and takes to vain paces.

---

29. The word *kaṭṭuraitta* in the text may suggest that this story of Perumāḷcuvāmi was current even before this author's time as a poetic composition; it is not clear if it was oral or written. The present 'unlearned' poet composed a version in imitation of the older ones.

விருத்தம்

1. *திருமால் கதையைப் பார்மீதில் செப்ப முடனே பாடுதற்கு,*
கருமா மேகம் உருவளர்ந்து, (கனக்க) மின்னி, இடியிடித்து,
பருமா வரையைத் தாண்டிமுகில் பாரேழ் பெருகப் (பெய்வதின்முன்),
ஒருமா நிலத்தை நனையாத உற்றபனிசென் (றெதிர்ப்ப தொப்பாம்.)

தெய்வங்களின் திருவருள் வேண்டல்

வேறு

திருமருவும் புயரூபன், அரியநெடு மாலோன்,
திருவனந் தாபுரி யம(ர்)ந்தகதை பாட,
அரியதிரு மாலயனும், வேணியர னாரும்,
ஆனைமுகத் தோனும்வந் தஞ்சலென் றருள்வாய்!
மருவனைய திருமாலே! வாலசர சோதி!
வந்து கதைக்குநீ அஞ்சலென் றருள்வாய்.
கரியதிரு மாலே, நீர் சீர்பற்ப நாதா!
கமலமகள் கொழுநனே! கரியநெடு மாலே!
இலகுபுய மார்பனே! இரணமுக தீரா!
எத்திசைக் கும்புகழ் கொண்டபெரு மாளே!
உலகு தனையோ ரடியா லளந்தோனே!

---

69. பார் - பூமி; செப்பமுடன் - செவ்வையாக, நன்றாக.
70. கருமா மேகம் - கருக்கொண்ட கரிய மேகம்; கனக்க - மிகுதியாக.
71. வரை - மலை; முகில் - மேகம்; பார்ஏழ் - ஏழ் உலகம்.
72. மா - நில அளவையைக் குறிக்கும் சொல்; சிறிய பரப்புள்ள பூமி.
73. திரு - திருமகள்; மருவும் - சேர்ந்துள்ள; புயரூபன் - தோள்வலி படைத்த அழகன்.
74. திருவனந்தாபுரி - திருவனந்தபுரம்; அமர்ந்தகதை - திருக்கோயில் கொண்ட வரலாறு.
75. அயன் - பிரமன்; வேணி - சடை; அரனார் - சிவபெருமான்.
76. ஆனைமுகத்தோன் - விநாயகன்; அஞ்சல் - அஞ்சாதே, பயப்படாதே.
77. மரு - மருக்கொழுந்து; திருமாலின் பச்சைமேனிக்கு உவமை; வால - வெண்ணிறம் வாய்ந்த; சரசோதி - சரஸ்வதி.
79. நீர் - நீர் வண்ணன்; கடலில் கண்வளர்; பற்பநாதன் - பற்பநாபன்; திருவனந்தபுரத் திருமால் திருநாமம்.
80. கமலமகள் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்; கொழுநன் - கணவன்; நெடுமால் - நீண்டு உயர்ந்த திருமேனியுடைய திருமால்.
81. இலகுதல் - விளங்குதல்; இரணமுகம் - போர்முனை; தீரன் - வலிமை மிக்கவன்.
83. உலகை ஓரடியால் அளந்தது திருவிக்கிரமாவதாரச் செய்தி.

Viruttam Verse-1[30]

69-72. The attempt to sing the story of Tirumāl in fitting terms on earth,
Resembles that of the dew, not able to moisten a little bit of land,[31]
Competing with the downpour of the big, dark cloud flooding the seven lands,[32]
As it crosses the great mountain, swells, thunders and flashes lightning.

Address to Deities for aid

73-83. To sing the story of Tirumāl, great in esteem and towering in stature,
Having a shape with shoulders where the goddess of all excellences[33] dwells,
May the esteemed Tirumāl, Ayan[34] Aran[35] of matted locks and the Elephant-faced One[36]
Come and favour us, saying: 'fear not',
Oh Tirumāl fragrant as the scented *maru* leaf!
Oh Caracuvati of white radiance!
Come and say 'fear not' for (undertaking this narration);
Oh dark Tirumāl! glorious Parpanātā! sleeping on the waters![37]
Oh Husband of the goddess of the arts! Oh dark, towering Māl!
Oh Lord of shining shoulder and chest! Oh Hero in battle!
Oh glorious God, having fame in every direction,
Oh Measurer of the world with one step![38]

30. Verses in *Viruttam* metre are kept distinct from the main narration in *akaval* metre. These have a measured song-quality, intended to punctuate the narration with pauses of emphasis, reflection, summation etc.
31. The word *mā* means a 'small measure of land'.
32. The word *pāreḷ* literally means 'seven earths' and loosely used for the 'seven islands' constituting the world, famous in Hindu cosmology.
33. Tiru (or Lakṣmi) the Consort of Tirumāl (Viṣṇu).
34. Piramaṉ (Brahma) the God of creation.
35. Civaṉ.
36. Vināyakaṉ. The goddess of learning, Piramaṉ's Wife Caracuvati is addressed in l.77.
37. The Tamil form of Padmanabhan (one of the Twelve Names of Viṣṇu) taken by the Deity of Tiruvaṉantapuram celebrated in this ballad. The adjective *nīr* may be taken to refer to His Sleeping pose on the Milky Ocean, called the *Vyūha* state.
38. Viṣṇu as *Ulakaḷantōṉ*, the Measurer of the worlds (Tirivikraman).

உன்கதைக்கு நீவந்து உதவியருள் செய்வாய்.
கண்ணனே! வெண்ணை தனையுமுண் டோனே!
காலிநிரை மேய்த்தோனே! கரியநிற வண்ணா!
பெண்ணாகி ஆணாகி நின்றபெரு மாளே!
பெருரூப மாகப் பிறந்துடை யோனே!
எண்ணாம லிரணியனை இருபிளவு செய்த
இரணமுக சிங்கமே! அமிர்த நாயகமே!
பண்ணாக இக்கதையைப் பாடவருள் தருவாய்.
பண்டுலகை யுண்டங் களந்தபெரு மாளே!
கஞ்சனை வஞ்சனை மலையடைத் தோனே!
கரியமுகில் வண்ணா! கமலமகள் கொழுநனே!
பஞ்சவர்க் கேயுதவிப் பாரதம் பொருத
பங்கையக் கண்ணனே! துங்கநெடு மாலே!
புள்ளினம் மாயக்கிழிச் சரவணை யம(ர்)ந்த
புகழான கெருடவா கனமீதி லேறி,
உலகுபுக ழாகவே கதையருளிச் செய்வாய்.
உள்ளமுற வேகதையை இசல்பாட அருள்வாய்.

---

85. வெண்ணை - வெண்ணெய்; பேச்சுவழக்கை ஒட்டி இதனை வெண்ணை என்றே ஆள்கின்றார் இவ்வாசிரியர்.

86. காலிநிரை - பசுக்கூட்டம்.

88. ரூபம் - உருவம், வடிவம்; பெருரூபமாகப் பிறந்துடையோன் - திருவிக்கிரமன்.

89. இரு பிளவுசெய்த - இரண்டாகப் பிளந்துபோட்ட.

90. இரணம் - பொன்; அமிர்தநாயகம் - தேவர்க்கு அமுதம் தந்த தலைவன்.

91. பண்-இசை; இக் கதைப்பாடல் வில்லிசைக்கு ஏற்பப் பாடப் பெற்றதாதலின் இசையுடன் பாட அருள் வேண்டுகிறார் கவிஞர்.

92. பண்டு - முன்பு; உலகங்களை எல்லாம் உண்டு காத்து மீளப் படைத்த வரலாற்றைச் சுட்டுகிறது.

93. கஞ்சன் - கம்சன்; கண்ணனின் தாய்மாமன்; வஞ்சனை மலையடைத்தல் - வஞ்சனையாகிய மலையைச் செயலிழக்கச் செய்தல்.

95. பஞ்சவர் - தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டவர் ஐவர்; பாரதம் - பாரதப்போர்.

96. பங்கையக்கண்ணன் - தாமரைக்கண்ணன், கமலாட்சன்; துங்கம் - பெருமை, வெற்றி.

97. புள்ளினம் - பறவை வகையில் ஒன்றான கொக்கு; கொக்கு உருவாய்க் கண்ணனைக் கொல்லவந்த பகன் என்னும் அசுரனைக் குறித்ததாகலாம். கொக்குவடிவில் வந்த பகன் வாய் கிழிப்புண்டு மடிந்தான்; கிழிச்சு - கிழித்து, பிளந்து; அரவணை - பாம்புப் படுக்கை.

100. இசல் - இசை; இப் பொருளில் இச் சொல் மேலும் சில இடங்களில் இக்கதைப் பாடலில் வந்துள்ளது.

84-91. Come and help for the narration of your own story,
Oh Kaṇṇaṉ! Oh Eater, too, of butter![39]
Oh Grazer of herds of cows! Oh dark-coloured beautiful one!
Oh master who became woman and man!
Oh Master taking on an expansive form!
Oh Lion of fighting who effortlessly cut Iraṇiyaṉ[40] into two pieces!
Oh Lord (of the distribution) of ambrosia[41],
Grant us your grace to sing this song as a musical piece.

92-100. Oh glorious Ari, who swallowed the world of old and also measured it (with one step)!
Oh one who overcame the mighty deceit of Kañcaṉ[42]
Oh beautiful person of dark cloud-complexion! Oh Husband of the Lady of the lotus!
Oh lotus-eyed One who specially helped the Five (Pāṇṭavas) and fought the Pāratam war!
Oh Māl towering high! tearing the (demon) birds to death[43], reclining on the serpent-bed and
Climbing the famous Karuṭaṉ (Eagle)-Vechile, graciously favour us
To sing your story, famous over (the extent of) the world;
Grant that the musical singing of your story may move hearers' hearts.

---

39. Kaṇṇaṉ as the Divine child, eating stolen butter and playing pranks, in the cowherd colony where he grew up.
40. The Rāksasa king Hiraṇya whom Tirumāl cut into two assuming the form of Narasimha, the Man-Lion.
41. Mōhini-incarnation of Viṣṇu in which he distributed the ambrosia got from churning of the Milky ocean to the celestials.
42. King Kañcaṉ (Kamsan) maternal uncle of Kṛṣṇa set wrestlers to finish the latter and these were artfully overpowered by the Divine Boy.
43. Demon in the form of a bird (like Bakāsura a demon in the shape of a stork) was torn in twos by its mouth by Kṛṣṇa as child.

திருமால் திருவரங்கத்தில் கோயில் கொண்டமை

போரங்க ராவணன் தன்போர் முகித்து,
பொற்கொடிச் சீதை சிறைமீண்ட நாளில்,
சீரங்க மேவி யினிதிருந் தருளி,
சிந்தையுட னேபூசை கொண்டிருந் தந்நாள் —
பூசையும் தெய்வார முங்கொண் டிருந்து,
புதுமையுட னேகீர்த்தி புகழ்வளரும் நாளில் —
வாச மீறு குழலார்கள் வந்துசே விக்க,
மல்லாரி சின்னம் பலதும் முழங்க,
முரசுதனில் கிடுபிடிகள் திடிம னதிர,
மொத்தியே தாளமெக் காளம் முழங்க,
திருமதிலும் ஒளிமுடியும் அருணமண் டகமும்
திருக்கோ புரமும் சிவாலையு மாக,
அருமைபெறு சிகரமும், மாடமா ளிகையும்,

---

101. போரங்கம் - போரரங்கம், யுத்தகளம்; முகித்து - முடித்து.
102. பொற்கொடி - அழகிய கொடி, கற்பக மரத்தைச் சுற்றிப் படரும் காமவல்லி; சிறைமீண்டநாள் - இலங்கைச் சிறையிலிருந்து விடுபட்ட நாள்.
103. இராவணவதம் முடித்து இராமன் அயோத்திக்குத் திரும்பி முடிசூட்டிக் கொண்ட போது, அவ் விழாவிற்கு வந்த விபீஷணனுக்கு இட்சுவாகு குலதனமாய்த் தம்மவர் பூசித்துவந்த அரங்க நாதனை இராமபிரான் அளித்தார். விபீஷணன் இலங்கை திரும்பி வரும்நாளில் அரங்கவிமானத்தைக் காவிரிக் கரையில் வைக்கவே பெருமாள் அங்கு நிலைத்துக் கோயில்கொண்டருளி, அவ் விபீஷணனுக்காகத் தென் திசை நோக்கிப் பள்ளிகொண்டார் என்பது புராணவரலாறு.
105. தெய்வாரம் - தெய்வத் துதிமாலை.
107. வாசம் - வாசனை; மீறுதல் - மிகுதல்; குழலார்கள் - கூந்தலையுடைய மகளிர்; சேவித்தல்- வணங்குதல்.
108. மல்லாரி - ஊதுகுழல் போன்றதொரு வாத்தியம்; சின்னம் - ஊதுகொம்பு; பலதும் - பலவும் என்னும் சொல் பேச்சில் பலதும் என மாறுகிறது. இச் சொல் இக் கதைப்பாடலில் மேலும் பல இடங்களில் இடம்பெறுதல் காணலாம்.
109. கிடுபிடி, திடிமன் - முரசுபோன்ற ஒருவகை மேளவாத்தியம்.
110. மொத்துதல் - மோதுதல்; ஒன்றுடன் ஒன்றைத் தாக்குதல்; தாளம் - கைத்தாளம்; எக்காளம் - ஊதுகொம்பு.
111. ஒளிமுடி - பிரகாசமான சிகரம்; மண்டகம் - மண்டபம், பேச்சுவழக்கு; அருணமண்டகம் - சூரியனை வழிபடுதற்குரிய மண்டபம், அருணன் - சூரியன், சூரிய ஒளி வந்து பரவும் மண்டபம் என்றும் கொள்ளலாம்.
112. கோபுரம் - கோயிலின் பெருவாயில்; சிவாலை - சுற்றாலை; பிராகாரம்.
113. சிகரம் - விமானம்; மாட மாளிகை - மாடங்களோடு கூடிய பெரிய கட்டடம்.

Tirumāl's Stay in Tiruvaraṅkam

101-113. In those days, when the fight with warring Rāvaṇa ended
And the golden Sīta[44] like a tender climbing plant, was delivered
From prison (the Lord)[45] reaching *Cīraṅkam*
Lived there with gracious sweetness,
Accepting thoughtfully the worship offered,
Accepting the worship and the songs of praise,
With His name and fame growing ever fresh;
Then before Him women of fragrant braids came to prostrate
In veneration; various horn-pipes like *mallāri* and *ciṉṉam,*
Blared; *kiṭu-piṭi and tiṭiman* drums beat;
Cymbals and the *ekkāḷam* horn sounded in accompaniment,
The Lord Māyaṉ stayed sweetly and benignly in those days, with the (temple's) glories
Of the sacred enclosure-wall, the bright crowning-summit, the pavillion of dawn-worship,[46]
The holy entrance-tower[47] and the circumambulating path,[48]
The precious shrine-top[49] and the storeyed mansion,[50]

---

44. *Sīta* Consort of Rāma. The greatly loved incarnation of Viṣṇu are identified with His Images in temples like Cīraṅkam (Srirangam), here celebrated in song.
45. The *tala-purāṇam* of Cīraṅkam says that Lord Araṅkanātar the presiding Deity, was originally worshipped by the ancestors of the royal dynasty of Rāma and gifted to Vipīṭaṇaṉ (brother of Rāvaṇa) who on his way to Ilaṅkai from Ayōtti left it at the island-centre now called Cīraṅkam, situated between two arms of the Kāvēri river.
46. *Aruṇa manṭakam* seems to be either a pillared-hall *(manṭapam)* for early morning worship, or situated to face the rising sun *(aruṇa)*.
47. The *gōpurams* (gateways with storeyed towers decorated with sculpture) of South Indian temples are lofty and artistic structures.
48. *Civālai,* same as *cuṟṟalai* the way around various shrines and the way around all of them left for circumambulation.
49. *Cikaram*: ornamented towers on tops of shrines called *vimānas.*.
50. There are various additional buildings, beside shrines in the temple-complex of Cīraṅkam, meant for subsidiary services like preparation of food, Veda-recitals, official transactions etc.

(அமரர்) சிறை யிடநின்ற மண்டப வாசலும்,
மேசிகர மானதொரு அர்த்தமண் டபமும்,
மேவுபுக ழானதொரு கோமமண் டபமும்,
வைய்சிகர மானதொரு வைய்த்தமண் டபமும்,
கேசிமதி யானதொரு கெர்ப்பமண் டபமும்,
கிருபையுட னேமாயன் இனிதிருந் தந்நாள் —

வேறு

கோடிநூ றாயிரம் திருவிளக் கெரிய,
குங்கும பரிமணச் சந்தணம் வீச,
சித்திர மாகவே நவரிகுழல் பாட,
தெய்வார்கள் சூழத் திருநாம மோத,
சீரங்க ராயன் இனிதிருந் தாரே!
அத்திரஞ் சேர்விழி மாதரிசை பாட,
அழகான மணி மண்டபத்திருந் தாரே!
பூமாலை வீசவே (நாமாலை) பாட,
புகழாக வேதெய்வ பூசைபணி மாற,
தெய்வார்கள் சூழத் திருநாம மோத,
சீரங்க ராயன் இனிதிருந் தாரே!

---

114. அமரர் - தேவர்; சிறையிட நின்ற - பக்கங்களில் வரிசையாக நின்ற; கூடி நின்ற எனலும் ஆம்.

115. அர்த்த மண்டபம் - கருவறையை அடுத்த மண்டபம்.

116. கோமம் - ஹோமம், வேள்வி; அக்கினி வழிபாடு.

117. வைய்சிகரம் - கூரிய வடிவுடைய மேல் முகடு; வைத்த மண்டபம் - மகா மண்டபம்; கோயிலில் அர்த்தமண்டபத்தை அடுத்துள்ள பெரிய மண்டபம்; அலங்கார மண்டபம்.

118. கேசிமதியானது - தலையானது; முதன்மையானது; கெர்ப்பமண்டபம் - கருப்பக்கிரகம், கருவறை.

121. குங்குமம் - செந்நிற வாசனைப்பொடி; பரிமணம் - பரிமளம், மிகுந்த வாசனை; சந்தணம் - சந்தனம்; சந்தனக்குழம்பு.

122. சித்திரம் - அழகு; நவரிகுழல் - ஊதுகுழல்வகை.

123. தெய்வார்கள் - தெய்வத்தொண்டு புரிபவர்கள், திருநாமம் - நாமாவளி, அருச்சனை நாமம்.

124. ராயன் - ராசன், தலைவன்.

125. அத்திரம் - அம்பு; சேர் - ஒத்த; விழி - கண்.

127. நாமாலை - நாவால் ஓதும் துதிப்பாமாலை; பெருமையுடைய பாமாலை.

128. பணிமாறுதல் - தொண்டு செய்தல்.

129-130. இவ்வடிகள் முன்னரும் 123-124 ஆம் அடிகளாக உள்ளன. இவை மகுடம் போன்ற ஓர் அணிப்பாகும். இவ்வாறே இக் கதைப்பாடலில் சிற்சில அடிகள் வெவ்வேறிடங்களில் மீண்டும் அமையக் காணலாம்.

114-119. The front of the large hall arresting the attention of even celestials,
The pillared hall next to the sanctum[51] rising high with its tower,
The-pillared hall of sacrificial ceremonies,[52] full of fame,
The admirable pillared hall[53] with a wonderful tower on it,
And the sanctum-hall of prime importance[54].

120-130. With a crore and hundred thousand lamps burning,
With red saffron and sandal spreading fine scents,
With the *navarikuḻal*-reed raising pleasant music,
With attendants of divinity surrounding and reciting His holy names,
The Lord of Cīraṅkam dwelt in glory!
With women of arrow-sharp eyes singing songs,
He dwelt in the gem-like hall,
With flower-garlands swinging, song-garlands praising,
With divine worship rites proceeding in the reputed manner,
With attendants of divinity surrounding and reciting His holy name,
The Lord of Cīraṅkam dwelt in glory![55]

---

51. The *artha-manṭapam* placed between the *sanctum and the large hōma-manṭapam* (in the next line) in which festival ceremonies are held.
52. The *hōma-maṇṭapam,* being enumerated separately, has to be taken as distinct from the next mentioned *vaitta-maṇṭapam.*
53. The *vaitta-manṭapam* may be taken as the big hall-*makāmantapam* in which hōmas (sacrifices) may also be performed in temples having no separate *hōma-manṭapam.*
54. The holy of holies, aptly called *Kerppa-maṇṭapam,* the hall housing the 'foetal content' of the temple.
55 Lines 129-130, are a song-refrain, repeating the earlier ll.123-124.

வேறு

இனிதாக வேமாயன் இனிதிருந் தந்நாள்-
இயலான மறையோர்கள் பூசித்து வரவே,
நனிவேதம் (நாலுமறை) வேதமுறை சூழ,
நகரான சீரங்க ராயன்மன மகிழ
மனமகிழ் ரெத்தினக் குடைகள் நெகிழ்த்த,
கனகநகர் ரெத்தினப் பூமாரி பொழிய
கங்கைகுல வங்குசத் தோர்கள் முறைசெய்ய,
செய்துபல பூசையும் திருமால்தன் முன்னே
சேவித்து வாற நேரந்தனி லேதான் —

---

132. இயலான - முறைமையான; உரிமையுள்ள.
133. நனி - மிக; வேதம் - வடமொழி வேதம்; நாலுமறை - நான்கு வேதம்; நான்கு ஆயிரமாய் அமைந்த திவ்யப்பிரபந்தம் என்றும் கொள்ளலாம்.
135. நெகிழ்த்தல் - விரித்தல்.
136. கனகநகர் - பொன்னகர்; தேவர்தலைவன் இந்திரன் இருக்கும் அமராவதி நகர்.
137. கங்கைகுல வங்குசத்தோர் - வேளாளமரபினர்; முறை - கோவிற்பணிவிடைகள்.
139. சேவித்தல் - வணங்கிவழிபடுதல்; வாற - வருகிற என்பதன் மரூஉ வடிவம்.

131-139. In those days when Māyaṉ dwelt in a fine manner in glory,
His usual Vedic-followers carried on their rites of His worship;
Descendants[56] of the Gaṅgai clan arranged it all,
Gladdening the heart of the Lord of the city of Cīraṅkam,
Surrounded by the Vedas - (the four Vedas) and the Vedic order,
With the pleasant unfolding of gem-set umbrellas (held above the deity),
And gems[57] falling in a shower (on the god) like flowers from the celestial golden city.
As they did many worships and continued to do obeisance
Before Tirumāl in those days—

56. The famous Gaṅgai-kula Veḷḷālar traditionally associated with temple management and building under the imperial Cōḻas and their successors in various areas.

57. A beautiful poetic conceit expressing the continuous gifts of valuables by the Veḷḷāḷar and other devotee patrons to the temple. The celestial city is Intiraṉ's capital town Amarāvati.

நம்பிமார் மாறுபட்டு மறையோனின் பூசையைத் தடுத்தல்

வேறு

வெய்யசில மறையவர்கள் முன்ம்பான நம்பிமார்
மெய்ப்பாக வேசிலர் தங்களில் முறிந்து,
இன்றே யென்முறை (என்றொரு) மறையோன்
இனிதாக வேபூசை செய்துவரும் நாளில்-
தள்ளுண்டு, ஒருகூறு பூசித்த மறையோன்
தாரரச ரோடுஅனி யாயம துரைத்தான்.
உள்ளுண்டு புறமுண்டு மாகிலு மன்னவர்கள்
ஒருவார மாகவே முறைசோதி யாமல்
மன்னவர்க ளினமுறை கேட்டவரு மில்லை;
வளமையா யினமுறை நடந்தது மில்லை,
கர்மமிது என்றுசொல்லி, ஒருகூறு நம்பி
கைம்முறை மாறி, இருந்தந்த நாளில்-

பூசை தவிர்ந்த மறையோனின் தளர்நிலை

இன்ம்பமுட னேயந்த ஆதிமறை யோனும் —
இருகூறு மொருகூற தாக நடத்தி,
முன்புமுறை யும்தவிர்த் தந்தமறை யோனும்-
(மூண்டகரு) மந்தான் நடந்துவரும் நாளில்,

---

140. நம்பிமார் - திருவரங்கக் கோவில் பூசகர்களில் ஒரு பகுதியார்.
141. முறிந்து - பிளவுபட்டு, மனம் வேறுபட்டு.
142. முறை - பூசைக்குரிய முறைநாள்.
144. தள்ளுண்ணுதல் - (நம்பிமாரால்) விலக்கப்படுதல்; வெளியேற்றப்படுதல்.
145. தாரரசர் - மாலையணிந்த மன்னர்; அனியாயம் - அநியாயம், முறைகேடு.
147. ஒருவாரமாக - ஒருபக்கமாக; முறை - முறையீடு; சோதியாமல் - விசாரித்து அறியாமல்.
148. இனமுறை - பூசைக்குரிய இனத்தவரின் உரிமை; இன்னம் முறை என்று கொண்டு இதுவரை நியாயம் விசாரித்தவர் இல்லை என்றும் கூறலாம்.
150. கர்மம் - பழவினை, ஊழ்வினை.
151. கைம்முறை - கைங்கரியம், இறைபணி; மாறி - கைம்மாறி.
152. ஆதிமறையோன் - முன்புதொட்டு இறைபணி புரிந்து வந்த அந்தணன்.
153. இருகூறு - மறையோன் பங்கும், நம்பிமார் பங்கும்.
154. தவிர்த்தந்த மறையோன் - விலக்கப்பெற்ற அந்த மறையோன்.

An official priest is denied his ritual duties

140-151. Some zealous Vedic and some eager 'nampi'[58] priests together
Engaged in worship, came to break off in bitterness,
In those days one Vedic priest did his (old allotted) duties well,
Saying "today is my turn" (on the days fixed); but the brahman
Was pushed away and left with only one part of his worship
And he complained to the king wearing royal wreaths, of injustice.
Till now[59] there has been no one among kings,
Who have not heard any complaint,
Whether of internal or external nature, otherwise than
In a partial manner, ignoring the hidden facts of the case,
Till now no enquiry has been conducted with fitting justice.
Saying that "this is my fate" the priest was living,
Relying on the one-part temple-service left to him
With the change of the system in those days.

The plight of the priest

152-155. That ancient Vedic-follower carried on with pleasure the services
Of both parts (he used to do) even in the (reduced) one part (he got);
In those days when that Vedic-follower, lost his old duties
And the diverted fate continued to prevail,

---

58 Vedic brahmans and nampi's (probably brahmans trained for worship) are here taken as two groups of the priestly attendants of the Lord at Cirankam

59. The ballad composer carries home his observation about injustice prevailing at courts by the repetition of the phrase *iṉa-muṟai (iṉṉam muṟai)* meaning 'even now, complaint or justice' in 1.148 and 149.

கைம்முறை நம்பிதான் செய்துவரும் நாளில் —
கண்டு சலித்து, மனமது பொறாமல்,
வெய்ய மனங்கள் புழுங்கி வெதும்பி,
மெத்தவே வேதியன் சித்தம் தளர்ந்து,
செய்யும்வகை யேதெனவே யுண்ணவிதி யற்றுத்
திசைமாறி மறையோன் கேள்வியற் றிருந்தான்.

விருத்தம்

2. முன்முறை நடத்தும் நம்பி, முறைமைகள் தவிர்க்கை யாலே,
கைம்முறை தானும் விட்டுக் கருமமே இழந்து போந்து,
(நன்முறை) மன்னா கேளாய், நாடனை மனசு நொந்து,
நின்முறைக் கேதுசெய் வேன்என் றெனமுறை தவிர்ந்து நின்றான்.

பூசை முறை இழந்த வேதியன் தவஞ்செய்தல்

வேறு

ஒழிந்த பூசை வேதியனும், உண்ணவிதி யில்லாமல்
வழிந்த சினத்துடனே மாயவன் தனைநினைந்து,
மாமறையோன் (தவவனத்தில்) வருந்தித் தவமிருந்தான்.
தாவமாக வேயிருந்து, தானமுறை யோதிமுகித்து,
தஞ்சமுந்தன் தாளெனவே தானமறை யோனும் வணங்கி —

---

157. பொறாமல் - தாங்காமல்.
158. புழுங்குதல் - கோபத்தால் குமைதல்; வெதும்புதல் - வருந்துதல்.
159. மெத்தவே - மிகவும்; வேதியன் - மறையோன்; சித்தம் - மனம்.
160. உண்ணவிதி - அனுபவிக்கும் முறைமை; உரிய முறைமை.
161. திசை - உரிய இடம்; கேள்வியற்று - முறைகேட்பார் எவருமில்லாமல்.
163. கருமம் - செயல்; போதருதல் - செல்லுதல், வருதல்.
165. எனமுறை - இனமுறை.
167. வழிந்த சினம் - தணிந்த கோபம்.
169. தாவமாக - தாபமாக, தாகமாக; விருப்புடன்; தானமுறை - ஸ்தானமுறை; கனஞ்சடையாக வேதம் ஓதுமுறை.
170. தஞ்சம் - அடைக்கலம்; தாள் - திருவடி; தானமறையோன் - ஸ்தான மறையோன், உரிமையுள்ள வேதியன்.

156-161. And the priest performed services according to the (new) order,
This brahman, realising (his lot), getting disgusted,
Not being able to bear (his lot) his mental powers dizzied[60] and dried —
Slowly the Vedic adherent's understanding getting loosened,
He remained not knowing what to do, and without means of food,
His way of life gone, with none to hear his tale.

Viruttam Verse-2

162-165. The priest with precedence of turn in ritual services,
Abandoning the practices on account of the failure of the settled order,
And losing his duties themselves, cried "Oh (good and just) king! hear"; saddened
By the king's (action) he stood, bereft of his just share,
Asking 'what can I do' for my just share?

The priest's penance and praise of Tirumāl

166-170. The brahman, having lost his worship rites and means of food,
Took to thoughts of Māyavaṉ, his anger subsiding;
The great Vedic adherent, grieving (in heart), took to penance (in the forest);
Full of ardour he completed Vedic chanting with accents prescribed;
"Your Feet are my refuge": so the local brahman prayed.

60. There are no exact English equivalents for the physical states suggested by the Tamil words *puḷuṅki* and *vetumpi*; the sentence breaks off as an anacaluthon.

தவமறையோன் திருமாலின் புகழ் போற்றுதல்

பூவனத்தை யோரடியி னாலளந்த புண்ணியனே!
பொங்கரவில் பள்ளிகொண்ட புகழான பச்சமாலே!
ஆச்சிமனை தனில்வளர்ந்த அச்சுதனே! பச்சமாலே!
ஆடரவி லேதுயின்று அன்ம்புவியை யாண்டோனே!
பேச்சிமுலை யுண்டோனே! பெரிய திருமாலே!
பெருரூப மாகநின்ற பெருங்கருணைக் கடலே!
இரணியன் மார்பத்தை யிருபிளவா கப்பிளந்து,
இன்ம்பமுள்ள சிங்கமாக இருந்தபெரு மாளே!
வாரமுள்ள ராவணனை வாய்த்தமுடி பத்தும்விழ,
வல்லசரந் தொடுத்த வருசைத் திருமாலே!
காலிமேய்த்து, வேயையூதி, கண்டவர்கொண் (டாடிடவே)
கஞ்சனை மலையடைத்த கரியநிற வண்ணனே!
வாலிமார் பைப்பிளந்து, மாமரமூ டுருவவெய்து,

---

171. பூவனம் - பூவுலகம்.
172. பள்ளிகொண்ட - படுத்த, துயில்கொண்ட; பச்சமால் - பச்சை நிறமுடைய திருமால்; பேச்சுநடையால் வந்த ஒலி மாற்றம்.
173. ஆச்சி - ஆய்ச்சி, இடைச்சி; அச்சுதன் - அழிவில்லாதவன், திருமால்.
174. ஆடரவு - படமெடுத்தாடும் இயல்புடைய பாம்பு; அன்ம்புவி - அம்புவி; ஓசையழுத்தம் கருதி னகர ஒற்று இடைமடுக்கப் பெற்றது. 178-ஆம் அடியில். 'இன்ம்பமுள்ள' என மகர ஒற்று இடைமடுக்கப் பெற்றது. 178-ஆம் அடியில் 'இன்ம்பமுள்ள' என மகர ஒற்று இடை மடுத்தலும் ஓசையழுத்தத்திற்காக. இத்தகு அமைப்பு மேலும் பல இடங்களில் வரக் காணலாம்.
175. பேச்சி - பூதனை என்னும் அரக்கி; முலையுண்டோன் - முலைப்பாலுடன் அவள் உயிரையும் போக்கியவன்.
176. பெருரூபம் - நீண்ட பெரிய திருவுருவம்; விசுவரூபம் - பகவற் கீதையில் அருச்சுனனுக்குக் கண்ணன் காட்டியது.
177. இரணியன் - இரணியாசுரன்; மார்பம் - மார்பு.
178. சிங்கம் - நரசிங்கம்.
179. வாரம் - வலிமை; ராவணன் - இலங்கையாண்ட அரக்கரின் அரசன்; முடி - தலை.
180. சரம் - அம்பு; வருசை - வரிசை, சிறப்பு, மேம்பாடு, 137 ஆம் அடியில் வங்கிசம், வங்குசம் என வருதல் போன்று இகரம் உகரமாய் ஒலிக்கிறது. இவ்வகை ஒலிமாற்றத்துடன் இச்சொற்களும் இவை போன்று பிறவும் இக் கதைப் பாடலில் வருதல் காண்க.
181. காலி - பசுக்கூட்டம்; வேய் - புல்லாங்குழல்.
182. மலையடைத்தல் - வலிமையை அழித்தல், தோல்வியுறச்செய்தல்; அடி 93-லும் இச் சொல் வந்துள்ளமை காண்க.
183. வாலி - கிட்கிந்தை ஆண்ட குரக்கரசன்; மாமரம் - பெரியமரம், மராமரம்; ஊடுருவுதல் உள்ளே துளைத்துச் செல்லுதல்.

171-183. Prostrating in obeisance (he addressed Tirumāl);
'Oh Holy one who out-measured the earth with one step!
Oh famous green-hued Māl sleeping on the swell-serpent,[61]
Oh Accutaṉ who grew in the Āyar maid's[62] house! Oh green-hued Māl!
Oh One sleeping on the dancing-serpent[63] and ruling over the fine earth!
Oh One who drank off the demoness's breast,[64] Oh great Tirumāl!
Oh great Ocean of mercy, who assumed the vast form (of the worlds)![65]
Oh great Ruler who clove Iraṇiaṉ's chest into two,
And remained a Lion of happy charm!
Oh distinguished Tirumāl who aimed the powerful arrow
Felling mighty Rāvaṇa with his ten heads!
Oh dark-complexioned Kaṇṇaṉ who, grazing cows and playing the reed-pipe
Vanquished Kañcaṉ, to the acclaim of spectators!
Oh sweet Tirumāl breaking Vāli's bosom, piercing the *marā* trees,

---

61. Viṣṇu's couch called Āti-Cēṭaṉ, see footnote 63 below.
62. Acōtai, Kriṣṇan's foster-mother.
63. This may be taken as a variant of *poṅkaravu* 'swell-serpent' in footnote 61 ante.
64. The episode of Pūtaṉai, a demoness who came to breast-feed the Divine child Kriṣṇa and got sucked out of her life.
65. Kṛṣṇa as the Teacher of Arjunan showed his all-embracing *vicuvarūpam* to the latter, described in *Pakavat-kītai* (Bhagavad-gīta).

வந்தரக்கன் (தூஷணனை) மடியச் (சரந்தொடுத்து,)
கலங்கி யரக்கர்விழ, கன(க்)கபடை நெருங்க,
கதிரோ னுதையமென்னும் கட்டான மாளியலும்
இலங்கை அழிவுசெய்து, இருகடலை யடைத்து,
எரிச்சரந் தொடுத்து ராச்சதரையும் வதைத்து,
இந்திர செயத்தையும் இலங்காபுரி யரக்கரையும்
இறக்கச் (சரந்தொடுத்த) இனிய திருமாலே!
மந்திர மலைகடந்து மருந்துமலை யெடுக்க
வன்னஅனு மானையேவி வரவழைத்த திருமாலே!
சந்திரரும் சூரியரும் தான்கடவா தேயிருக்க,
சந்தனப்பூங் காவனமும் தண்டரள மாளியலும்
வெந்துநீ றாகவிழ விரைந்தங் கெரிந்திடவே
மெய்ப்புட னுமானாலே உற்பனங்கள் செய்தோனே!

மறையோனின் வேண்டுகோள்

முன்முறையுண் டானபூசை முகித்து நடத்தவேணும்;
என்முறையும் பூசைகளும் இசைந்துபறித் துக்கொண்டார்;

---

184. தூஷணன் - வனத்தில் இராமனை எதிர்த்து மடிந்த ஓர் அரக்கன். கரன், திரிசரன் என்பார் இவனுடைய சகோதரர்களாவர்.

185. கனக்க படை - மிகுந்த சேனை; 70 ஆம் அடியில் கனக்க மின்னி என வருதல் காண்க.

186. கதிரோன் - சூரியன்; மாளியல் - மாளிகை, அரண்மனை, மாடமுள்ள பெரியவீடு, மாளியல் என்பது இக் கதைப்பாடலில் காணும் புதுவடிவு. இதுவும் பேச்சுவடிவமே. வேறு இடங்களிலும் இச் சொல் வருதல் காணலாம்.

187. இலங்கை - இராவணன் ஆண்ட தென்கடலில் உள்ள தீவு; இதன் தலைநகரின் பெயரும் இதுவே. இலங்கை அழிவு செய்து - இலங்கை நகரை அழித்து; இருகடல் - பெரியகடல்; கருங்கடல். கடலை அடைத்தது இராமன் இலங்கை செல்ல இட்ட சேதுத்திருவனையைக் குறிக்கும்.

188. எரிச்சரம் - தீயம்பு; ராச்சதர் - அரக்கர்.

189. இந்திர செயத்து - இந்திரசித்து; இராவணனின் மகன்; இவனுக்கு மேகநாதன் என்றும் ஒரு பெயருண்டு.

191. மந்திரமலை - மந்தரமலை, அஷ்டகுல பர்வதங்களில் ஒன்று, பாற்கடல் கடைய மத்தாகப் பயன்பட்ட மலை; மருந்துமலை - சஞ்சீவிபர்வதம்.

192. அனுமான் - சுக்கிரீவனின் மந்திரி; சுக்கிரீவன் இராமனைச் சரணடைந்தபின், அனுமான் இராமனுக்கு அணுக்கத்தொண்டனாயிருந்தவன்; ஏவுதல் - கட்டளையிட்டு அனுப்புதல்.

194. சந்தணம் - சந்தனம்; இதுவும் பேச்சில் வருமாற்றம்; பூங்காவனம் - பூஞ்சோலை; தண்டரளம் - குளிர்ந்த முத்து.

195. வெந்து நீறாக - எரிந்து சாம்பலாக.

196. உற்பனங்கள் - அழிவுகள்; உற்பாதங்கள் என்றும் கருதலாம்.

197. முன்முறையுண்டான பூசை - முற்படச் செய்கின்றபூசை; முதற்பூசை.

184-196. Aiming the arrow , killing Karaṉ and Tūsaṉaṉ with arrows,
Making the demons shake and fall, as (their) thick army came near,
Damming the big sea and destroying Ilaṅkai
With its well-built mansions[66] rising (splendorously) like the sunrise,
Shooting burning arrows, and killing the demons,
You made Intiracittu and the demons of Ilaṅkai city die (with your arrows)!
Oh Tirumāl who bade colourful Anumāṉ to go across Mantira-malai
And take herbs from the Maruntu-malai and come back!
Oh Lord, who caused devastation forsooth through Anumāṉ
To the sandal garden and the cool, pearl-inlaid mansions (of Ilaṅkai) which even the passage[67]
Of the moon and the sun affected not; catching hot fire,
They burned quickly and the ashes lay around!

The priest's petition

197-198. "The ritual worship offered according to the old system should be conducted;
They have seized on purpose my right and worships,

66. Ilaṅkai's mansions flash like gold and lightning as described i. Kampaṉ's *Rāmāyaṇam,* of which these lines carry a faint reminiscence.
67. The Moon and the Sun are stated in the *Rāmāyaṇam* story to be afraid of Rāvaṇa and to keep off his properties.

இதுகாரி யம்நமக்கு இசைந்து நடத்தவேணும்
உற்றமனத் தங்கடங்கள் உரைத்துப் பலதும்பேசி,
உண்மையுடன் மாயவரை உரைத்துப்பல காலும்நேர்ந்தான்.

பெருமாள் திருக்காட்சி நல்குதல்

வெற்றிமறை யோன்தவத்தில் விரைந்து நினைத்திடவே
விண்ணவர்கள் எண்ணும் பெருமாள் வேதியன்தவத் தில்வந்தார்.
பூதங்கள் குடையிடவே, பூண்டு தெய்வார் சேவிக்கவே,
பொங்குகடல் போலேதெய்வார் மங்கையர் குரவைபாட,
வேதங்க ளொலிமுழங்க, மெய்க்கன்னிமார் கீதம்பாட,
வேண்டுந்தெய் வார்கள் சூழ, விருது குறித்துவர,
சங்கொலி முழங்கிவர, தாரைவிரு தூதிவர,
சங்கையுடன் தெய்வார்கள் வெஞ்சாமரை வீசிவர,
திங்கள்செறி (நன்முகத்தில்) தெய்வக்கன்னி மார்கள் சூழ,
திருந்தவுல களந்தோன் பொருந்தும் தவத்தில் வந்தார்.

விருத்தம்

3\. சீதைதன் பங்கன், செங்கைச் சிலைதனை எடுத்த வீரன்,
வேதமும் தானாய் நின்று, வெண்ணைகள் திருடி யுண்டோன்,
பாதமும் வருந்த மண்ணைப் பரிவுட னளந்த மாயன்,
மாதவஞ் செய்து நின்ற மறையவன் தவத்தில் வந்தார்.

200\. தங்கடங்கள் - சங்கடங்கள்.

201\. நேர்தல் - வேண்டுதல்.

203\. விண்ணவர்கள் - தேவர்கள்.

204\. தெய்வார் - தெய்வத் தொண்டு செய்வார்; சேவித்தல் - வணங்குதல், தொண்டு செய்தல்.

205\. தெய்வார் மங்கையார் - தேவமகளிர்; பூண்டு - சூழ்ந்துகொண்டு; குரவை - குரவைப்பாட்டு.

206\. கீதம் - இன்னிசை.

207\. விருது - வெற்றிச்சின்னம்.

209\. வெஞ்சாமரை - வெண்சாமரை, கவரி.

210\. திங்கள் - சந்திரன்.

211\. உலகளந்தோன் - திருமால்.

212\. பங்கன் - கணவன், சிலை-வில்; சிலை என்பதனுடன் ஐ உருவு சேரும் போது சிலையை என்றாதல் இலக்கணமுறை; இடையே 'தன்' என ஒரு சாரியை பெற்றுச் 'சிலைதனை' என்று ஆகிறது. இவ்வாறு ஐ முதலிய உருபுகள் சேரும் நிலையில் தன் சாரியை சேர்த்து வழங்கும் முறை இக் கவிஞரிடம் காணப்படுகிறது. இதனையும் இசைகருதிஅமைத்த ஓர் அமைப்பாகவே கொள்ளல் வேண்டும்.

199-201. This work of worship should be conducted according to my desire",
Speaking (thus) of the many things afflicting his mind,
For long he prayed to Māyavar with sincerity.

The God's Coming

202-211. As the winning Vedic servitor in his penance meditated with eagerness,
The great God, contemplated by celestials, came to the brahman's penance-spot;
Spirit-attendants carried umbrellas; denizens of heaven, crowding together, bowed;
Women of celestial families raised the notes of the *kuravai* song,
Like the noise of the swelling sea, Vedic chanting went high,
Serving maidens sang songs; the retinue of praying celestials thronged,
Titles of glory of the Lord were announced as He came; sounding conches came with them;
The *tārai* horn instrument proclaiming his titles of glory came along;[68]
Heavenly attendants came fanning Him beautifully with white chowries[69]
Celestial maids with moon-like faces went, surrounding Him,
So, in fine form, the Outmeasurer of the world, came
Into (the place of) the worthy penance.

Viruttam Verse - 3

212-215. He who had Sīta as his one half, the hero who wielded the bow in his fair hand,
Who, himself stood as the Vēda, (yet) stole balls of butter and ate them;
Māyaṉ who measured the earth with solicitude, even as his feet ached,
He came to (the place of) the brahman doing great penance.

---

68. Titles of glory (called *virutus*) of the Lord are announced orally in an impressive manner and the horn instrument repeats them in its tunes.
69. Fans of hairy tails of Himalayan deer, called *Cāmaram*. The word *teyvār* may be taken to mean either 'celestials (of heaven)' or 'attendants of divinity' i.e. people doing services to the god.

மாயன் வினாதலும், மறையோன் தன் நிலைமை கூறலும்

வேறு

வந்தமாயவன் பதமீதினில் மறையோனவன் வணங்க,
'வரவேதினி நி(ன)வேதெ'ன மாயனுரை செய்ய
அந்தவேளையில் முனிமாதவன், 'அய்யோ! அரி' எனவே,
'ஆதிநூல் வழி முறையானது மனியாயமது செய்தான்;
உரைத்தான்முன் மறையோர் லோகமேழிலு முன்னே
உற்றதவம் புரியவே உயர்மா மறையோனும்,
பா(ர்)த்தானந்த தெய்வதானமும் பலநூல் வழிமுறையும்
பண்டுபண்டுள்ள காலகாலமும் பதிபூசையு முதலும்
முதலானதொர் காலகாலத்தில் முன்பூசையும் நடப்பும்
மூவராகிலு மேவராகிலும் முறைமாறுகள் (செய்யார்.)
தவமீதினில் மறையோர்சிலர் தனமேவெகு கனமாய்,
தவமானது நிதியேபல விதிவாகிய தல்லால்,
தானபூசையு மானவேதமும் தானேநடத் தாமல்
வெகுவானதோர் தவமீதினில் விதிகேடுகள் பலதாய்,
வெற்றியாகவே எற்றியேநம்மை மீண்டேபட அடித்து,
அகுதேதள்ளி முறைமாறிட அவர் பூசையும் பறித்து,
அய்யகோ! வெகு வெய்யவேதியன் அனியாயமே செய்தான்;

---

216. பதம் - பாதம், திருவடி.
217. ஏது - என்ன காரணம்; நினவு - நினைவு, எண்ணம்; வேண்டுதல்.
218. முனிமாதவன் - வனத்தில் தவமியற்றிய மறையவன்; மாதவன் - பெருந்தவமியற்றியோன்; அய்யோ - இரக்கக்குறிப்பு; அரி - திருமாலின் திருநாமங்களுள் ஒன்று.
219. ஆதிநூல் - வேதம்; அனியாயம் - அக்கிரமம், தவறான செய்கை.
220. லோகம் - உலகம்.
222. தெய்வதானம் - தெய்வம் வீற்றிருக்கும் திருக்கோவில்.
223. பண்டு - முன்பு, முற்காலம்; பதி - இறைவன்.
224. முன்பூசை - முதலிற் செய்யும் பூசை; நடப்பு - நடைமுறை.
225. மூவர் - பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகள்; ஏவராகிலும் - எவரானாலும்.
226. தனம் - செல்வம்; கனம் - பெருமை.
227. நிதி - செல்வம்; விதிவு - முறைபாடு,
228. தானபூசை - ஸ்தானபூசை, உரிமையான பூசை; மானம் - பெருமை.
229. வெகுவான - பலவான; விதிகேடுகள் - முறைகேடுகள்.
230. எற்றி - தள்ளி.
231. அகுதே - அகதி, கதியில்லாதவன்.
232. அய்யகோ - இரங்கல்மொழி; வேதியன் - வேதநெறிப் பிராமணன்.

The Meeting

216-232. The Vedic follower - He prostrated in veneration at the feet
Of Māyavaṉ who had come there and Māyaṉ asked:
"What reason for (your) coming (here)? what thought (moved you)?"
And the sage-performer of penance exclaimed "Ayyō! Ari!"[70]
And spoke: "A wrong has been done against the path (of behaviour)
Following the original work (of the Veda);
In the seven worlds, even the great Three Gods[71]
Will not make changes in the established order
Which enables the old Vedic-followers to pursue their penance,
Maintains the various blessed abodes of Divinity,
The procedures prescribed in many works,
The time-tables coming from old, old times
The worship of the Lord and other things,
And the first rites of specific occasions
And their regular conduct. In the matter of worship
Considered a penance, wealth has become weighty for some brahmans,
Worship-discipline has come to be verily money's many dictates.
Prescribed worship and honoured Vedic recitals not being conducted,

70. *ayyō* - exclamation of surprise *Ari* - Hari, Viṣṇu's name
71. Hindu Trinity of Brahma-Viṣṇu-Śiva.

செய்தார் செய்த வகைகண்டுள்ள தேசமன்னர்க் குரைத்தேன்.
திருந்தமுறை யனியாயமும் கேட்டோர்களு மில்லை;
பய்யரவினில் கனந்ததுயில் பச்சமாலே யுன்பாதம்
பரமேயெனக் கருள்வாய் எனப் பருமாமலை யடைந்தேன்;
அடைந்தேனுன தருளேயென அரியதவம் புரிந்தேன்
அமலாகல விமலா! உனக் கவயோம், உனக்கவயோம்!
கடைந்தேகட லமுதாக்கிய கண்ணா! உனக்கவயோம்!
கஞ்ச மாமலர்த் திருவானவர் கணவா! உனக்கவயோம்!
அவையோமுனக் கவையோமென அருமாமறை யோனும்
அடரச்சிலர் துடரச்சிலர் அனியாயம துரைத்தார்.

அஞ்சல் என்று நெடுமால் அருளிய உரை

சவையாகிய தேவர்சூழவே தனிவேதமும் நெடுமால்
தடுமாறிய மறையோனையும் அஞ்சலென் றருள்புரிந்து,
அருளேபுரிந் தன்ம்பதாகவே அருள்மா மறையோனும்
ஆனவாறுகள் வேதநீதியும் அருள்மாயவ (னுரைத்தார்.)
வரும்வாறுகள் தவமேபெறு வைய்குண்டபத மளித்தேன்.
வண்மைபூதல வாழ்வுமுத்தி வந்தாலெனப் புரிந்தே

---

233. தேசமன்னர் - நாட்டை ஆளும் மன்னர்.
235. பய்யர்வு - படத்தோடுகூடிய பாம்பு, ஆதிசேடன்; கனந்த துயில் - அறிதுயில்.
236. பரம் - பரம்பொருள்.
236-237. பருமாமலை அடைந்தேன் என முன்னடியை முடித்து, தொடர்ந்து அதையே அனுவதித்து 'அடைந்தேன் உனதருளே' எனத் தொடங்குதல் காணலாம். இவ்வாறு அந்தாதி போல அடிகளிடையே அமையும் இடங்கள் பலவாம். இம் முறை செய்தித்தொடர்பை நன்கு நினைவூட்டி மேற்சொல்லும் நிலையினைக் குறிக்கும். இத்தகு முறை வில்லிசையில் பாடப்பெறும் விற்கதை அமைப்பின் ஓர் அங்கமாகும்.
238. அமலன் - மலமற்றவன்; விமலன் - தூயோன்; அவயோம் - அபயோம், அடைக்கலம்.
239. கடல் - பாற்கடல்.
240. கஞ்சமாமலர் - தாமரையாகிய அழகிய மலர்; திருவானவர் - இலக்குமியைப் பெற்றவர்.
242. அடர - நெருங்கித் துன்புறுத்த; துடர - தொடர, தொடர்ச்சியாக.
243. சவை - சபை, கூட்டம்; தனி - ஒப்பற்ற.
244. தடுமாறிய - நிலையிற் கலங்கிய; அஞ்சல் - அஞ்சாதே.
246. ஆனவாறு - நடந்தவிதம்; வேதநீதி - வேதம் குறிப்பிடும் நெறி முறை.
247. வரும்வாறுகள் - இனிவரும் நிலைகள்; வைய்குண்டபதம் - வைகுந்தத்திலே நித்திய சூரிகளாய் இருக்கும்பேறு, முத்திப்பேறு.
248. வண்மை - வளப்பம்; பூதலவாழ்வு - உலக வாழ்வு; புரிந்து - விரும்பி.

232-242. Many breaches of injunctions in respected austerities being made
We[72] were forced to leave, successfully made to go
And helplessly pushed out; they seized my duties of worship and changed the turns;
Alas! that hostile Vedic follower[73] did sheer injustice (to me);
Knowing the way the offender committed the deed,
I spoke to the king of the land; but there were none
Who properly enquired into (a complaint of) injustice.
"Oh tender-hued Māl slumbering deep on the hooded serpent!
Oh Supreme One! grant me your feet",
So saying, I went to the great large-shaped mountain,
And did hard penance so that I obtained your grace,
Oh faultless, pure one! your refuge, your refuge, we are.
Oh Kaṇṇā, who churned the ocean and made ambrosia;
We are your refuge!
Oh Lord, dear as her eye to Tiru[74]
The goddess of the great lotus flower, your refuge we are[75]."
In this way the follower of the great and precious Veda spoke
Of injustice caused by some confronting him,
And some pursuing (enmity) against him.

The Lord's words of protection

243-248. The towering[76] Māl (came) surrounded by His council
Of celestials and the matchless Veda; on the agitated brahman,
He bestowed His favour saying "fear not".
Bestowing his grace[77] with kindness on the good, great brahman
Beneficent Māyavaṉ spoke of the way of things and Vedic order:
"In (your) future states, I have granted you the place

---

72. The speaker uses the honorific plural.
73. *veyya-vētiyaṉ* in the text refers to priest in the group opposed to the brahman, active in his wrong-doing; the latter forgets his impersonal narration in recalling this enemy—a lively conversational touch.
74. Ilakkumi (Lakṣmi).
75. The alternation between honorific plural *(apayōm)* and the usual singular form (*purintēn,* 238) is a typical conversational feature.
76. Netumāl. The form Māl for Tirumāl (Viṣṇu) is of frequent occurrence, and Neṭu-Māl, emphasising His stature occurs as a variant of moderate frequency.
77. *aruḷē purintu* (end of 1.244) is repeated as *aruḷē purintu* (beginning of 1.245) a characteristic device of oral balladry. Similar repetitions may be noticed throughout.

புரிந்தே சீரங்கமா பதிவிட்டே மறுபூமியில்
போறோம்பிற கேவாவெனப் புகழ்மாயவ னுரைத்தார்.
(திரிந்தேசில) தென்பூமியில் போகவேணுமிப் பொருட்டால்;
சென்றால்திரு வனந்தாபுரி திருமுன்ம்பது வுனக்கே.
உனக்கேமுன்பு தருவோம்பதி உறைந்தாலென அருளி,
உற்றமாயவ ருரைத்தேஉயர் மறையோனையு மனுப்பி,
வனத்தேநின்று பதியானதொர் வளர்சீரங்கந் தனிலே
வந்தான், மறை தவமேசெய்து வருமாறது தனிலே.

திருவரங்கப் பெருமாள் தெச்சணபூமிக்கு எழுந்தருளல்

தனிமாதவன் பதிவந்திட, தவமாம் நெடுமாலும்
தானபூசையும் மானவேதமும் தானேகொள் ளாமல்
இனிநாமொரு மறுபூமியில் போகவேணுமென் றிசைந்து,
இலங்குதிரு நெடுமா லவனியறிவித் தாராம்.

விருத்தம்

4. அறிவுட னிருந்த மாயன், அரங்கர்கோன், (அமரநாதன்)
வெறிவுடன் மறையோர் தங்கள் வேத்திமை செய்து தம்மால்
முறிவுடன் வேறு கூறாய் முறைமைகள் தவிர்க்கை யாலே
செறிவுடன் சீரங்கம் விட்டு, தெச்சணா பூமியில் போந்தார்.

---

249. சீரங்கம் - திருவரங்கம்; மறுபூமி - வேற்றுநிலம்.
250. போறோம் - போகிறோம் என்பதன் உருமாற்றம்; பிறகே வா - பின்னாகத் தொடர்ந்து வா.
251. போகவேணும் - போகவேண்டும்; வேணும் - பேச்சுவழக்கு; இப்பொருட்டால் - இதன் நிமித்தமாக.
252. திருவனந்தாபுரி - திருவனந்தபுரம்; திருமுன்ம்பு - சந்நிதிமுன் முதலிடம்.
256. வருமாறதுதனில் - வரும்வழியில்.
257. மாதவன் - தவமறையோன்.
258. தானபூசையும் மானவேதமும் தானேநடத்தாமல் என 228 ஆம் அடியிலும் வருதல் காண்க.
259. நாம் - இது மறையோனையும் உளப்படுத்தி மாயவன் கூறியதாம்; இசைந்து - ஒருப்பட்டு.
260. அவனி - உலகு, இங்கு உலகத்தவரைச் சுட்டும்.
262. வெறிவுடன் - வெறித்தனமாய், மூர்க்கத்தனமாய்; வேத்திமை - வேற்றுமை.
263. முறிவு - பிரிவு; தவிர்க்கை - கைவிடுகை, மாற்றுகை.
264. செறிவு - உறவு; செறிவுடன் - உறவான, சொந்தமான; தெச்சணாபூமி - திருவரங்கத்திற்குத் தெற்கேயுள்ள நிலம்.

249-256 Of Vaikuṇṭam earned by penance, when you (come),
With longing (to me), finishing your rich earthly life.
Willingly leaving the town of Cīraṅkam we are (now) going
To another piece of earth. "Follow me" so famed Māyaṉ said.
"For this we have to go wandering over some southern areas,
If we go, (our) holy Presence[78] at Tiruvaṉantāpuri, to you,
To you first we will grant our Presence if we stay at. the town".
Well-loved Māyavaṉ spoke thus and sent away
The high Vedic follower; from the jungle
He came into the flourishing town known as Cīraṅkam
Along the path in which the Veda
Followed him, doing penance (for His favour).

The God of Tiruvaraṅkam (Cīraṅkam) goes to the Southern area

257-260.Matchless Mātavaṉ[79] entering his town-Neṭumāl, the embodiment of penances
And thinking "Hereafter we should go to another place,
Without ourselves accepting the local worships and honoured Vedic recitals",
Made his thought known to the world, the towering Māl with the effulgent Tiru.

Viruttam Verse - 4

261-264. Māyaṉ who remains ever awake, the Lord of Araṅkam (the Lord of celestials)
Determinedly left Cīraṅkam and went to the Southern land,
As the Vedic priests with ill-feeling, broke apart
And split in different groups, abandoned the established order.

78. *tirumuṉpu*: literally the 'sacred front-position'. here, the right of worship of His figure standing before Him. This is repeated as *muṉpu* in the next line.
79. A name of Viṣṇu literally 'the Consort of Lakṣmi. This sentence leaves off in the middle.

வேறு

தெச்சணா பூமி தன்னிலே போகவே
தேச மெங்குந் திருமுறை யாகியே
பக்கு வஞ்சில மன்னர்க் கருளியே,
'பண்டுபண் டுள்ள காரியஞ் செய்ய,
செப்ப மானதொர் சீரங்கம் தன்னிலே
செய்யும் பூசையுந் தானழி யாமலே
எப்போதும் போலே நீங்கள் இருமெ'ன்ன
ஏன்று தானத் தார்க்கு மருள்செய்து —
'மண்ணில் நீதி மலைநாடு தன்னிலே
மாய வன்பதி தானங்கு வேறில்லை;
புண்ணி யதலம் தென்பூமி நாட்டிலே
போறோம் போறோம், அனந்தா புரத்திலே'
என்று சீரங்கத் தார்க்கு மருள்செய்து —

பெருமாள் சீரங்கம்விட்டுத் திருவானைக்கா அடைதல்

இன்பமாகத் தவமறை யோனையும்,
'நன்று நன்றுநீ என்பிறகே வந்தால்,
நாட்டி லான திருமுன்ம் புனக்கெ'ன்ன,

---

266. திருமுறையாகி - அறிவிப்பாகி, தெரியப்படுத்தி.
267. பக்குவம் - ஏற்றமுறை.
268. பண்டு பண்டுள்ள காரியம் - முற்கால முதல் வழிவழியாக வரும் நடப்பு.
269. செப்பமான - சீர்மையான, அழகான.
270. அழியாமல் - கெடாமல்.
271. எப்போதும் போல - எப்பொழுதும் நடக்கும் முறைமைபோல.
272. ஏன்று - இசைந்து; தானத்தார் - தானிகர், கோயிற்காரியங்களைக் கண்காணிக்கும் அலுவலர். எப்போதும் போல நீங்கள் இரும் என்று அருளியது தாமும் எப்போதும் போலவே அங்கு அருள்புரிந்து விளங்குவார் என்பதாம். 'ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்குத் தோன்றிய மாயன்' எனத் திருமாலின் அவதாரம்பற்றி ஆழ்வார் யருளியது போல அவர்தம் சோதியுரு திருவரங்கத்திலுமிருக்கும் என்பதாம்.
273. மண்ணில் - பூமியிலே; மலைநாடு - மலைகளை அரணாகக் கொண்ட சேரநாடு.
274. மாயவன் பதி - திருமால் திருப்பதி.
276. போறோம் - போகிறோம்.
279. பிறகே - பின்னால்.
280. திருமுன்ம்பு - சந்நிதி கைங்கரியம்.

265-277. All over the land the sacred news spread
That (the Lord) was to go to the southern region;
He granted understanding to some chiefs (of his purpose);
He graciously told the local worshippers (of Cīrankam);
"To perform the old, old rites
And to keep without cessation the worship being done,
You dwell as ever in Cīraṅkam, matchless and perfect.
On the earth, in Malaināṭu, there is no other town
Of Māyavaṉ, following the just law,
Except Aṉantāpuram, the holy place
Of the southern land; We go (there); We go there"
So, having told the people of Cīraṅkam —

The Lord's march, leaving Cīraṅkam

278-280. He spoke sweetly to the Vedic follower,
Who had done penance: "If you follow me,
It will be good, good indeed; My holy Presence

கன்றுந் தாயுங் கடையாலும் போலவே
கான மாமறை யோனையுங் கூட்டியே —
மன்றில் நல்லதோர் சீரங்கந் தான்விட்டு,
வண்மை யானகுல பூதஞ் சூழவே
பூத பூதங் கொடைகள் விரித்திட,
பொன்னின் மாதர் கவரிகள் வீசிட,
நாத வேதங்கள் கீத மொலித்திட,
நல்ல தெய்வ கன்னியர் சூழ்ந்திட,
கோத்திர மான பூதப் பிசாசுடன்
கோடி பூதங்கள் கைவிரித் தாடிட,
கேத்திர பாலன் தானும் பின்னேவர,
கெம்பிக் கெம்பிச் சிலபூத மாடிட,
அங்கி லங்கிய பூத மொலித்திட
ஆன தெய்வார்க ளாதியே செ(ய்)யென,
சங்கிலிப் பூதந் தானும் பின்னேவர,
தவமா னபெரும் பூதங்கைய் கொட்ட,
செங்கண் மால்பதம் நோக நடந்துதான்,
(திருவானைக்) காவிலே வந்தனர்.

திருவானைக்காவில் திருமால் கண்ட காட்சிகள்

வந்து தானுந் (திருவானக்) காவிலே
வாச மாமுனி பூசித்த தானத்தை

---

281. தாய் - தாய்ப்பசு; கடையால் - பால்கறக்கும் மூங்கிற் குழாய்க்கலம், கன்றும் தாயும் கடையாலும் பிரியாது ஒன்றுடன் ஒன்று கூடியிருப்பது போல மறையோனையும் உடனழைத்துச் சென்றார் பெருமாள். இந்த உவமைத் தொடர் ஒரு நாட்டுப் பழமொழியாகும்.
282. கான மாமறையோன் - காட்டில் தவம் புரிந்த வேதியன்.
283. மன்றில் - மண்ணில், உலகில்.
284. வண்மை - வளப்பம்; குலபூதம் - கூட்டமான பூதங்கள்.
285. கொடை - குடை; பேச்சுவழக்கு.
286. பொன்னின்மாதர் - இலக்குமி போன்ற மகளிர்; கவரி - வெண்சாமரை.
289. கோத்திரம் - கூட்டம்.
291. கேத்திரபாலன் - க்ஷேத்திரபாலன், திருக்கோயிலைக் காக்கும் தேவதை.
292. கெம்பிக்கெம்பி - குதித்துக்குதித்து.
294. தெய்வார்களாதி - தெய்வங்களின் முதல் தெய்வம்.
298. திருவானைக்கா - சீரங்கத்தையடுத்துக் கீழ்பாலுள்ள சிவத்திருத்தலம்.
300. முனி - சம்புமுனிவர்.

281-298. As it gets formed in the land[80] (of my travel)
Will be yours". And taking the brahman,
Noted for his Vedic singing, along with Him
As (the cowherd) takes calf and cow and milking-vessel
He left[81] Cīraṅkam, a good and unique place of the world.
As strong, noble goblins[82] went around him,
As goblins and goblins held unfolded umbrellas
As golden women waved chowry-fans,
As the tuneful Vedas sounded their notes,
As beautiful divine ladies thronged-
As goblins in crores danced, spreading their hands
Along with the (huge) goblin spirit of his clan[83]
As the attendant deity guarding His abode came behind,
As some goblins danced along jumping and jumping
And the goblins resident there (on the way) made noise
As the old attendants of the God (in His train)
Said "Oh Primeval One, show us grace"
As the Caṅkilippūtam came behind,
And the big goblin of penances clapped its hands,
The red-eyed Māl walked along, afflicting His feet
And came into Tiruvāṉaikkā[83a].

The Lord witnessing the sacred spots of Tiruvāṉaikkā[83]

299-300. Coming into Tiruvāṉaikkā (the Lord saw)
The place where the famed great sage worshipped (Civaṉ)

---

80. The worship of the Lord when He assumes a stationary Image form.

81. The text invariably uses conjunctive participles like continuing the action almost interminably *viṭṭu, viriṭṭiṭa, vīcita* etc. These are made into separate sentences when they become unwieldy in the translation.

82. *Kulapūtam:* Different types of goblins are enumerated of which this appears to be a well-born native group.

83. The poet envisages a goblin-spirit *(pūtappicācu)* presumably big in size as *pūtams* are supposed to be, attached to the permanent service of the Lord and taking his *kōttiram (gōtra)* lineage. Thus we have multitudes of servitor *pūtams* with *kula-pūtams* (l.284), *kōttirapūtappicācu* (289), *kṣētra-pālaṉ* (291) who may be a spirit-deity, *caṅkilippūtam* (296) and an additional *tavamāṉa perumpūtam* (big goblin doing penance 296). There is also a *kuraṭpūtam* (338) added to this list later. We may assume that *pūtam* (translated as goblin here) is different from *picācu* (or *pēy*) understood as spirits and ghosts etc. in general.

83a. A Caiva holy spot, *talam,* close to Cīraṅkam.

பண்ணான வேதி முனிவன்மேல்
பட்டுருவிய மாமரந் தன்னையே
வெண்ணாவ லாக வள(ர்)ந்ததும்,
வேத மாமுனி பூசித் திருந்ததும்,
புண்ட ரீக மாகிய பொய்கையும்,
பொற்கருணி யென்றேபதி யானதும்,
ஆண்ட தெய்வார் வந்து தொழுததும்,
ஆன புற்பகந் தன்னவன் தன்னோடே
மாவெலி வாணன் மாறிப் பிறந்ததும்,
வன்ன நவ்வல் பதியது தன்னிலே

301-302. பண் - இசை; வேதி - வேதம் வல்லவன்; முனிவன் மேல்பட்டுருவிய மாமரம் - சம்புமுனிவர் சிவமூர்த்தி அமுது செய்த நாவற்பழக்கொட்டையை உண்ண முனிவரின் வயிற்றிலிருந்து சம்புமரம் உண்டாயிற்று. முனிவர் அந்த மரத்தடியில் சிவமூர்த்தியை எழுந்தருளியிருக்க வேண்டினர் என்பர்.

303. நாவல் - நாவல் மரம், சம்புமரம்.

305. புண்டரீகம் - தாமரை.

306. பொற்கருணி - புஷ்கரிணி; கோயிலைச் சார்ந்த திருக்குளம்.

307. தெய்வார் - தெய்வங்கள்.

308. புற்பகந்தன் - புட்பதந்தன். இவனும் மாலியவான் என்னும் மற்றொருவனும் சிவகணத்தலைவராயிருந்தனர். இவர்கள் தம்முள் மாறுபட்டுப் பகைத்துச் சாபமிட்டுச் சிலந்தியும் யானையுமாகப் பிறந்து திருவானைக்காவில் வழிபட்டனர். சிலந்தியாய்ப் பிறந்த புட்பதந்தன் மறுபிறப்பில் சோழ அரசனாகப் பிறந்து திருப்பணி பல செய்தான் என்பது புராணவரலாறு.

309. மாவெலி - மகாபலி; திருமாலால் ஒடுக்கப்பட்ட ஓர் அசுரன். இவன் எலியாயிருந்து சிவாலயத்தின் விளக்கைத் தூண்டிச் சக்கரவர்த்தியாயினன் என்பர். மாவெலிவாணன் - மகாபலியின் மரபில் வந்தவன்.

310. வன்னம் - அழகு; நவ்வல் - நாவல்; நவ்வல்பதி - நாவல் மரத்தால் சிறப்புற்ற தலம்; சம்புகேசுவரம் எனப்படும் திருவானைக்கா.

311. ஆளி - யாளி; யானையாளி என்பர். இங்கே ஆனையைக் குறித்தது. ஆனையும் சிலந்தியும் பூசித்ததலம் திருவானைக்கா.

312. ஆவலுடன் - விருப்பத்தோடு.

313. அரன் - சிவன்; அரன்பதம் - சிவலோகம்.

314. பண்டு - முன்பு; கயிலாசம் - கயிலாயமலை; ஆனை சிலந்தியாக வந்தவர் இருவரும் முறையே மாலியவான், புட்பதந்தன் என்னும் இருவரும் பண்டுபோல் சிவகணத்தைச் சேர்ந்தனர்.

315. சிலந்தியாயிருந்து வழிபட்ட புட்பதந்தன் சோழவமிசத்தில் திருநீற்றுச் சோழனாகப் பிறந்து திருப்பணி செய்தவன்.

301-310. And the great tree which implanted itself
In this sage of Vedic singing, and
Grew up into a white *nāval* tree[84]
Which the great Vedic sage himself remained worshipping.
(He saw) the pond full of lotuses,
And the pond itself giving rise to the town settlement,
And humble worshippers coming and bowing,
And Puṭpakantaṉ and Māvalivāṇaṉ taking changed births,[85]
And the elephant[86] and the many-threaded spider[87] worshipping
With ardour in the colourful place (of the *nāval* tree)

---

84. The legend of the place *(talapurāṇam)* says that a sage called Campu ate a *nāval* (Campu) fruit and its seed sprang as a *nāval*-tree from his abdomen. The holy man requested Lord Śiva to dwell in the shade of that tree, and he worshipped Him.
85. Puṭpakantaṉ (along with Māliyavāṉ not mentioned here) were attendants of Lord Śiva's retinue and quarrelling between themselves, became a spider and an elephant near the *campu*-tree and worshipped Śiva. The former became the Cōḷa king, Karikālaṉ in his next birth. Māvalivāṇaṉ, an Asura, is said to have been a rat responsible for keeping a lamp burning in a Śiva temple;
as a reward for this meritorious act he became an emperor in his next birth; he was descended of the line of a king called Māvali, suppressed by Lord Viṣṇu as Vāmaṇa-Tirivikrama.
86. Māliyavāṉ, Śiva's attendant cursed to be an elephant as stated in foot note 85.
87. Puṭpakantaṉ, another of Śiva's attendants, as a spider later born as Karikālaṉ, as stated in foot note 85.

ஆளி யும்பல நூலுஞ் சிலந்தியும்
ஆவ லுடனவர் பூசித் தங்ஙனே
பயிலான அரன்பதம் (பெற்றதும்,)
பண்டுபோல் கயிலாசஞ் சேர்ந்ததும்,
திருநீற்றுச் சோழன் பிறந்ததும்
திருமாமதில் மண்டபங் கண்டதும்,
வருமாறனே யீச னருள்செய்ய
வதைத்த பிரமா விடாமலே
இராமாவ தாரந் தன்னிலே
(லிங்கப்) பிரதட்டை செய்ததும்,
பூரண கெதியுமுன் மனுமுறை
புண்ணி யதல மீதென்று கண்டுதான்—

திருவானைக்கா அண்ணலிடம் திருமால் விடைபெறல்

(திருவானைக்) காவீசர் தன்னையும்
சென்றுமால், நெடுமால் தொழுதங்ஙனே,
வருமாறென' ஈச னருள்செய்ய,
வந்தோம் நாம் தெச்சணா பூமியில்;
போறோம் போறோம், அனந்தா புரத்திலே;
புண்ணியோனே! புரமூன் றெரித்தவா!
ஆறு செஞ்சடை சூடிய அய்யனே!
அத்த னே! நல்ல முத்தனே! அன்பதாய்
வீற தாக விடைதந் தருளெ'ன,
வேணி நாதனைப் போற்றிநின் றார் மாயன்.
ஏறி லேறும் பரனாரு மப்போதே
இன்ப மாக விடையுங் கொடுத்தனர்.

---

316. திருநீற்றுச் சோழன் திருவானைக் காவில் திருமதில், மணி மண்டபம் கட்டியவனாவான்.
317. மாறன் - மாற்றான், பகைவன்.
318. பிரமா விடாமல் - பிரம கத்தி நீங்காமல்.
320. லிங்கப்பிரதட்டை - சிவலிங்கஸ்தாபனம்.
325. வருமாறு - வந்தகாரணம்.
328. புரமூன்று - திரிபுரம், முப்புரம்.
329. ஆறு - கங்கைநதி.
330. அத்தன் - தந்தை; முத்தன் - முத்திப் பேற்றைத் தருபவன்.
331. வீறதாக - வெற்றியாக.
332. வேணிநாதன் - சடாபாரத்தையுடைய சிவன்.
333. ஏறு - இடபம், எருது; பரனார் - பரம்பொருளானவர்.
334. விடைகொடுத்தல் - அனுமதிகொடுத்தல், வழியனுப்புதல்.

311-322. And gaining sweet Araṉ's Feet[88].
To live in Kailācam, as they did before.
(And he saw) Tiru-nīṟṟu-c-cōḻaṉ[89] taking birth (in Tiruvāṉaikkā)
And building the sacred encircling wall and *mantapam,*
And (Māyaṉ) in his incarnation as Rāma installing a Liṅkam,
As in spite of the favour of Śiva, Piramar's torment
(For Rāvaṇa's killing) did not leave him,[90]
And then sin fully going, and Maṉu's system prevailing.
Seeing all these; saying 'this is a hallowed place'[91]

Māl meeting Civaṉ of Tiruvāṉaikkā and leaving

323-334. [92]Māl, Neṭumāl, went to Civaṉ of Tiruvāṉaikkā
And made obeisance to Him and Civaṉ
Graciously said 'welcome'; (Māl said:)
"We have come into the southern land;
And we go, we go, to Aṉantāpuram;
Oh Lord of the accumulated merit of good deeds!
The person who put to fire the three forts (of Asuras)!
Oh Master wearing the (Gaṅga) river in your red locks!
Oh beautiful one! Oh good Master of liberation!
Graciously grant leave decorously and with love"
So saying, Māyaṉ stood praising
Civaṉ of matted locks; and the conqueror of Tripura[93]
Who rides the bull, thereupon
Gave him leave with pleasure.

---

88. Araṉ is Haran, a name of Lord Śiva; Kailācam is His Abode.
89. The Cōḻa king who was a spider (and originally Civaṉ's attendant) is reputed as the builder of temple structures at Tiruvāṉaikkā. The construction of the sentence is loose, cramming a succession of things in to it.
90. Rāma's killing of the demon Rāvaṇa, reputed to be a Vedic brahman, is said to be a sin not forgiven by Piramaṉ, the patron-god of the Veda.
91. Lines 299-322 form one sentence manipulated by conjunctive participles and the action of 'seeing' of which the earlier lines are objects, comes only in 1.322. This endlessly loose string of enumerations suits oral singing with its drawls.
92. The stylistic repetition of the same name of Viṣṇu - a unitary word with a compounded alternant adding a nuance to the earlier one - is a typical feature of oral narration.
93. Civaṉ's many names recalling his exploits and excellences are used for stylistic variation, like those of Tirumāl.

மாயன் திருவையாற்று வழியே சீகாழி அடைதல்

வேறு

வென்றி மாயன் விடைகொண்டு போகவே-
மிக்க தெய்வார்கள் சேவித்துப் பின்வர,
கூண்ட சேனைத் தெய்வப் பெரும்படை
குஞ்சப் பாவைகள் வீசக் குறட்பூதம்
காளி கூளி கணங்களும் சேவிக்க,
காளமா பூதம் கைக்கொட்டிப் பின்வர,—
ஆழி தன்னை அடைத்த பெருமாள்தான்
அன்ம்புவி யையோர் அடியா லளந்தவர்
தாடகை தன்னை மாளச் சரந்தொட்டோன்
சக்க ராயுதந் தன்னை யெடுத்தமால்—
கூண்டமா பூதம் சேவித்துப் பின்வர,
கொற்ற மானதிரு வையாறு தன்னிலே—

---

335. விடைகொள்ளுதல் - செல்ல அனுமதி பெறுதல்.
337. கூண்ட - திரண்ட, கூட்டமான.
338. குஞ்சப்பாவை - குஞ்சங்களோடு கூடிய பாவட்டா; குறட்பூதம் - குட்டைவடிவும் பருத்தவுடலும் கொண்ட ஒரு தேவகணம்.
339. காளி - துர்க்கை; கூளி - காளிக்கு ஏவல் செய்யும் பேய்.
340. காளமாபூதம் - கரிய பெரிய பூதம்.
341. ஆழி - கடல்; கடலை அடைத்தது இராமாவதாரத்தில் இலங்கை செல்லக் கடலில் அணை கட்டியது.
342. அன்ம்புவி - அம்புவி; அம் - அழகு; புவி - பூமி; உலகை ஓரடியால் திருமால் அளந்தது திருவிக்கிரமாவதார நிகழ்ச்சி.
343. தாடகை - விசுவாமித்திரரின் யாகத்தை அழிக்கவந்த அரக்கி; மாள - இறக்க; தாடகையை இராமன் கொன்று விசுவாமித்திரரின் வேள்வியைக் காத்தார்.
344. சக்கராயுதம் - திருமாலின் ஐம்படைகளுள் (சங்கு, சக்கரம், வில், வாள், கதை) ஒன்று, கிருஷ்ணாவதாரத்தில் பாரதப்போரிலே 14 ஆம் நாளில் கண்ணன் தன் சக்கரத்தால் சூரியனை மறைத்தார்.
345. சேவித்தல் - வணங்குதல், தொண்டுசெய்தல்.
346. கொற்றம் - வெற்றி; திருவையாறு - காவிரிக்கரையில் தஞ்சாவூரின் வடக்கேயுள்ள சிவதலம்.

Reaching Cīrkāḻi passing Tiruvaiyāṟu on the way

335-346. Victorious Māyaṉ, taking leave, went -
With His saluting priests following Him,
And the big army of celestial beings
Fanning Him with hairy tufts (of chowries).
With the dwarf goblin[94] and Kāḷi[95] and bands of spirits saluting,
And the dark, big goblin following, clapping its hands,
The Lord who dammed the deep,[96]
Who measured the beautiful earth with his foot, and
Who shot the arrow by which Tāṭakai got killed,
Māl who wields the Cakkara[97] weapon,
With multitudinous goblins coming behind with salutations,
(Came) into Tiruvaiyāṟu, the place of winning excellence.

94. The dwarf goblin *(kuṟatpūtam)* newly introduced here has an identity, separate from that of Kāḷi and her retinue of spirits called *kūḷi-kaṇam.*

95. Koṟṟavai or Turkkai is the fierce goddess ruling over battle-fields and conferring victories on men; she has a train of spirits called *kūḷi* who feast on carcases of battle-fields and dance in joy, as seen in Tamil *paraṇi* poems.

96. Built the bridge to Ilaṅkai for the fight against Rāvaṇa and rescue of Cītai.

97. Discus-Wheel.

விருத்தம்

5. திருவையா றதனிலே வந்து, தெய்வமா முனிவர் போற்ற,
அருவமாய் நின்ற மாயன் அடியிணை கண்டு போற்றி,
மருவணி துளசி மாலை மாயவன், சீதை நாதன்,
தெருவைக ளிசைகள் பாடும் சியாளியன் பதியில் வந்தார்.

மாயவர் வருகையை மக்கள் போற்றல்

வேறு

வந்தார் மாயவர், வந்தா ரென்பார்;
வன்னத் தெருக்களை யலங்கரிப்பார்;
செந்தா மரைமாது லெட்சுமிபாகன்,
தெய்வப் பெருமாளும் வந்தா ரென்பார்;
குந்தா தேவிதன் மக்க ளாலே
கொடிய (நூற்றுவர்) தன்னை வென்று,
கன்னன் தனையங்கே சூறை கொண்டு,
கடிய படைவல் லோரைச் செயித்து,
சென்னல் விளைகின்ற குருநாட்டைச்
சிறந்த பஞ்சவர்க் காக்கி வைய்த்து,

---

348. அருவம் - உருவமற்ற தன்மை; மாயன் - அற்புதங்களைச் செய்யும் சிவபெருமான்; மாயச்செயல் புரிவதால் சிவனுக்கும் இப் பெயர் பொருந்தும். அடியிணை - இரண்டு பாதங்கள்.

349. மரு - வாசனை; மாயவன் - கரியன், திருமால்.

350. தெருவைகள் - பெண்கள். தெரிவை என்பது எதுகை நோக்கித் தெருவை எனப்பட்டது. இந் நூலாசிரியர் காலத்து உச்சரிப்பும் ஆம். சியாளியன்பதி - சீகாழி என்னும் தலம்.

352. வன்னம் - வண்ணம், அழகு. இந் நூலில் வன்னம் என்னும் சொல்லாட்சியே மிகுதி.

353. மாது - பெண். பாகன் என்பது வாகன் என்றிருக்கலாம். வாகன் - மார்பையுடையவன்; லெட்சுமிபாகன் - திருவாழ்மார்பன்.

355. குந்தாதேவி - குந்திதேவி; குந்தாதேவிதன் மக்கள் - பஞ்ச பாண்டவர்.

356. நூற்றுவர் - துரியோதனன் முதலிய நூறு சகோதரர்களாகிய கௌரவர்.

357. கன்னன் - அங்க நாட்டு மன்னன்; துரியோதனனின் உயிர் நண்பன்; கொடையில் சிறந்தோன்; அங்கே - என்றது பாரதப்போரில், சூறைகொள்ளுதல் - அழித்தல்.

358. கடியபடை - வலிமையுள்ள சேனை, பெரும்படை.

359. சென்னல் - செந்நெல் என்பதன் மரூஉ வடிவம்; குருநாடு - அத்தினபுரம்; குரு ஆண்டதால் இப் பெயர் பெற்றது.

360. பஞ்சவர் - தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்னும் பாண்டவர் ஐவர்.

Viruttam Verse-5

347-350. Coming into Tiruvaiyāṟu as the divine sages bowed to Him,
Māyavaṉ wearing the fragrant *tuḷaci* wreath
The Lord of Cītai, saw and bowed at the two feet
Of Māyaṉ[98] who stood without human form (as Liṅkam)
And went onward to the town of Ciyāḷi[99] having singing women.

People welcome Māyavaṉ at Cīyaḷi

351-360. They say: Māyavar is come, come indeed,[100]
They decorate the beautiful streets;
They say: 'The Lord having Leṭcumi[101]
The Lady of the lotus, as a part of Himself,
The Divine Ruler-god has come'.
They say: "Māyavar[102] has come.
Who put down the (cruel) hundred
Through the off-spring of Kunti[103]
And deprived Kaṉṉaṉ[104] of his life
And conquered the expert warriors gathered in battle
And made the Kuru land yielding red rice plants
The property of the noble Five (Pāṇṭavar);

98. Civaṉ is also called Māyaṉ 'the wonder-worker' here; Interestingly Māyavaṉ (Viṣṇu) is mentioned here as meeting another Māyaṉ in the shape of Civaṉ.

99. Colloquial form of the name Cīrkāḻi.

100. Change to the historic present tense; This line is repeated below (as l.369), such repetitions being characteristic of oral art as expressions of jubilation, mnemonics etc.

101. Colloquial form of Laksmi.

102. The word-*Māyavar* - in l.364 has to be construed as the subject.

103. The cruel hundred Kaurava brothers were put down the five Pāṇḍavas, sons of Kunti with the help of Kṛṣṇa.

104. Karṇaṉ, famed for archery, who was conquered by Arjunan with the help of Kṛṣṇa as his charioteer. The form Kaṉṉaṉ shows assimilation of *ṟṉ* to *ṉṉ*.

துன்னுந் துரோணா சாரியையும்
துய்யல் சிறீவீட்டி மைந்தனையும்
வன்னப் பெரும்படை மன்னரையும்
வதைத்த மாயவர் வந்தா ரென்பார்;
தீரன் திருமால் வந்தா ரென்பார்;
சிலைவல்ல மாயவர் வந்தா ரென்பார்;
வீரன் திருமால் வந்தா ரென்பார்;
வேத நாயகன் வந்தா ரென்பார்;
வந்தார் மாயவர், வந்தா ரென்பார்.

சீகாழிப்பதியை மக்கள் அலங்கரித்தல்

வருசை யுடையதொர் வேதியரும்
கொந்தார் குழல்சேருங் கன்னியரும்
கொடிசே ரிடைநல்ல மாதர்களும்
(சீராய்ப்) பதிகளை யலங்கரித்து,
தெய்வ பூசைகள் பணிமாற,
காரார் குழல் நல்ல மாதுநல்லார்
கனக வீதிக ளலங்கரிப்பார்
கும்பக் குடம்வைப்பார் வீதியெங்கும்;
கோலப் பரிமளம் வீசிடுவார்;
வம்பு குடிகொண்ட தனமடவார்
மாயவர் வாற தெருக்கள் தோறும்

---

361. துரோணாசாரி - பாண்டவ கௌரவர்களுக்கு வில்வித்தை கற்பித்த ஆசிரியன்.
362. துய்யல் - தூய்மை; சிறீ - ஸ்ரீ; வீட்டிமைந்தன் - வீடுமன், பீஷ்மர்.
363. வதைத்தல் - வருத்திக் கொல்லுதல்.
365. தீரன் - வலியோன்.
366. சிலை - வில்; சிலை வல்ல - விற்போரில் வல்ல.
368. வேதநாயகன் - வேதங்களை அருளிச்செய்த தலைவன்; வேதங்களால் சிறப்பிக்கப்பெறும் தலைவன்.
371. கொந்து - கொத்து, பூங்கொத்து; குழல் - கூந்தல்.
372. கொடி சேரிடை - கொடிக்கு ஒப்பான இடுப்பு.
375. காரார்குழல் - மேகம் போன்ற கருமை நிறைந்த கூந்தல்; மாது - பெண்.
376. கனகவீதி - பெரிய தெரு.
377. கும்பக்குடம் - நூல் சுற்றி மந்திரத்தால் சுத்திசெய்து தானியக் குவியலின் மேல் வைக்கும் குடம்; கும்பகலசம்.
378. கோலம் - அழகு; பரிமளம் - வாசனைப்பொடி.
379. வம்பு - முலைக்கச்சை; தனம் - முலை.

361-369. (Māyaṉ) who also killed the great Turōṇācāri[105]
And the pure blessed Vīṭumaṉ[106]
And the kings of the big colourful army,
He has come" they say.
'The brave warrior Tirumāl has come', they say.
They say: "Māyavar, expert in archery, has come";
They say: "The intrepid hero Tirumāl has come";
They say: "The Lord of the Vedas has come";
They say: "Māyavar is come, come indeed".

Festive decoration in Cīrkāḻi

370-380. The brahmans having presents of honour with them,
The maidens with bunches of flowers in their braids,
The good women with waists like creeping plants,
Decorate places excellently
And do worship to gods;
Women with fine dark braids
Beautify the golden streets
And place holy water-pots all over the streets[107]
And scatter good scented powder all around;
Women with breasts ever under thick covers,

105. The preceptor who taught archery to the royal princes.
106. Bhīṣma, the revered grandfather of the Pāṇḍavas and the Kauravas.
107. The water-pots, usually of brass or other metal, have threads tied over them, and are sanctified by *mantras;* this line is repeated *verbatim* below, (385).

வீதித் தெருவெல்லாம் தூத்திடுவார்;
மிக்க திருவாசல் மொழுகிடுவார்;
சோதி நவமணித் தோரணங்கள்
சுற்றுத் தெருவெல்லாம் நிரைத்திடுவார்.
கும்பக் குடம்வைப்பார் வீதியெங்கும்;
கோலத் திருமதி லெழுதிடுவார்;
செம்பொன் மணிமாட வீதியெல்லாம்
தெருக்கள் தெருக்களை யலங்கரிப்பார்;
செந்தா மரைமலர் நிரைத்திடுவார்,
திருமால் வருகின்ற வீதியெல்லாம்.

கொந்தார் குழலாள் பூசணங்கள்
கோலப் பரிமள மளித்திடுவார்;
கதலி குலையோடே நாட்டிடுவார்;
கமுகின் பாளைகள் நிரைத்திடுவார்;
மதன்சிலை வேளை யீன்றமாயன்
வாற வாற தெருக்களெல்லாம்
பதனம் பதனம், பதன மென்பார்;
பச்சைப் பழுக்காய் நிரைத்திடுவார்.

நித்தலும் பச்சை நிரைத்திடுவார்,
நீல விழிசேருங் கன்னியர்கள்.

---

381. தூத்திடுதல் - தரையில் குப்பைகளை அகற்றிச் சுத்தி செய்தல்.
382. மொழுகுதல் - மெழுகுதல், சாணநீரால் பூசுதல்.
383. சோதி - ஒளி; நவமணி - ஒன்பது வகையான இரத்தினம்; தோரணம் - அலங்காரத்தொங்கல்.
384. நிரைத்தல் - வரிசையாகக் கட்டுதல்.
385. இந்த அடியைப் போலவே 377ஆம் அடியும் உள்ளது. 351, 369ஆம் அடிகளும் மகுடம் போல் ஒத்துள்ளமை காணலாம். இவ்வாறு வருமிடங்கள் இந்நூலுள் மேலும் பல. இத்தகு அமைப்புகள் நிகழ்ச்சியின் முதன்மையைச் சுட்டுவதாகலாம்.
386. எழுதிடுதல் - அலங்கரித்தல்.
391. பூசணங்கள் - ஆபரணங்கள்.
392. பரிமளம் - வாசனைப்பண்டம்; சந்தனம் முதலியன.
393. கதலி - வாழை.
394. கமுகின் பாளை - கமுகின் மலர்ந்த பூவோடு கூடிய பாளை.
395. மதன் - மன்மதன்; இவன் திருமாலின் புதல்வன்; ஈன்ற - பெற்ற.
396. வாற - வருகிற; பேச்சில் காணும் சிதைவு வடிவம்.
397. பதனம் - கவனம், பத்திரம்.
398. பழுக்காய் - பழுக்கின்ற பக்குவத்தில் உள்ள கமுகின்குலை.
399. நித்தலும் - தினமும்; பச்சை - பச்சைஇலைத் தோரணங்கள், மாவிலைத் தோரணம் போன்றவை.

381-400. Sweep clean all the streets through which
Māyavar would go along;
They wipe[108] the important doorways;
They hang rows of festoons
Of nine classes of radiant gems
In all the streets going round the town.
They place sacred water-pots everywhere in the streets.
They beautify the fine town-walls
And the glittering golden streets, all with fine storeyed houses;
Streets and streets they decorate;
They place rows of red lotus flowers
In all the streets through which Tirumāl is to come;
Women with bunches of flowers in their braids,
Give ornaments and fragrant things (to aid decoration);
All streets where Māyan̲, who brought into being
Matan̲,[109] the prince of the flower-bow, has to pass,
They decorate with plantain-trunks full of fruits,
They tie up rows of arecanut fronds:
They raise the noise: 'Watch out, watch out, watch out!'
They fill the streets with rows of green fresh fruits,
The maidens with dark-lidded eyes arrange
Festoons of green colours constantly.

108. Wiping with cowdung diluted in water is believed to purify floors of houses and specially door-fronts, opening on streets.

109. Man̲matan̲, the god of love, pictured as aiming flower-arrows to evoke love among men and women, is regarded as an offspring of Viṣṇu.

கொத்தோ டேமலர் குவித்திடுவார்,
கொந்தார் குழலார் சந்தோசமாய்.
சித்திர வன்னத் தனமடவார்
தெருக்கள் தோறு மலங்கரிப்பார்.
(முத்து நகைசேர்) மங்கையர்கள்
முன்னும் பின்னும் சேவிக்கவே,
காமக் கயலை விழித்திடுவார்;
கதிரோ னுதையங் காட்டிடுவார்;
சரணம் சரணம் சரணமென்பார்;
தாமக்குழலை விரித்திடுவார்;
செந்தேன் மொழிசேர் மாதுநல்லார்
தெருக்கள் தோறு மலங்கரிப்பார்.

திருமால் ஈசுரர் சந்திப்பும் உரையாடலும்

சியாளி யன்பதி தனிலே வந்து
திருமா லழகிய பெருமாளும்
மாயப் பெருமா ளீசுரரை
வந்து கண்டார், மாயவனார்.

'காயாம் பூநல் மேனியோனே!
கண்ணனே! வெண்ணை உண்ட மாலே!
பேச்சி முலைப்பாலை யுண்டோனே!
புறப்பட் டிங்கேநீர் போந்த தென்ன?
சீரங்கந்தான் விட்டுப் போந்த
செய்தி யேதோ, திருமாலே!

---

401 கொத்தோடே மலர் - பூங்கொத்துக்கள்.
405. முத்துநகை - முத்துப்போன்ற பற்கள்.
407. காமக்கயல் - ஆசையை மூட்டும் கயல் போன்ற கண்கள்.
408. கதிரோன் - சூரியன்; உதையம் - உதயம், எழுச்சி.
409. சரணம் - அடைக்கலம்.
410. தாமம் - பூமாலை; தாமக்குழல் - பூமாலை சூடிய கூந்தல்.
415. மாயப்பெருமாள் - அற்புதங்கள் செய்வோர்; ஈசுரர் - சிவனார்.
417. காயாம்பூ - காசாம்பூ, நீலவண்ணமுடையது.
419. பேச்சி - பேய்வடிவில் வந்த பூதனை.
420. போந்ததென்ன - வந்த காரணம் யாதோ.

401-412. Women with clusters of flowers on their braids, gladly
Heap flowers in clusters (for beautifying the town);
Women of beautiful complexions, modest and swanlike
Beautify each street (with many things).
Women with pearl-like teeth open
Their lovely fish-like eyes to have a glimpse,
Of the front and of the back (of Māyavar's form);
They display the brilliance of sunrise (in their looks)
They declare: '(We are) your refuge, Your refuge'.
Their braids bedecked with flowers loosen and fall;
The good women of sweet, honeyed speech
Beautify each street (with many things).

Meeting of Tirumāl and Civaṉ

413-422. Tirumāl, the beautiful Ruler-God,[110] coming into the town
Of Ciyāḷi, went and saw the great
And inscrutable Īcurar;[111] - the revered Māyavar spoke:
"Oh one of good form like the *kāyāmpū*[112] flower!
Oh Kaṇṇan! Oh Māl who ate butter![113]
Oh one who drank off the breast-milk of the ogress![114]
How have you started forth and come here?
Oh Tirumāl! What can be the matter
About your leaving Cīraṅkam itself?" (Tirumāl said):

---

110. *Perumāḷ* literally means 'great master or ruler'.
111. In *māyapperumā-Īcurar,* Iśvara or Śiva is also called a *māyapperumāṉ,* a phrase usually used to exalt Viṣṇu only. The word *Māya* means 'defying understanding', 'wonderful' etc. in this context. One Māyavar (Viṣṇu) meets another Māyavar (Śiva) as in lines 348-9. and 554.
112. This flower, blue like the cloud, is usually cited to suggest the blue-dark complexion of Tirumāl.
113. The reference is to stories of Kṛṣṇa's child-hood when he is said to have stolen and eaten butter from cowherd homes and delighted folk by his pranks.
114. Allusion to the incident of the ogress Pūtaṉai who came to breast-feed child Kṛṣṇa and was suckled to death.

'வாரங்க மாய வேதியர்கள்
வைய்த்த பூசை மாறிடவே,
ஒருவர்க் கொருவ ரொவ்வாமல்
ஒத்த பூசை பறித்துக் கொண்டார்.
மருவு மறையோன் வனந்தனிலே
வந்து தவத்தில் நமை நினைந்தார்.
வனத்தில் வேதியன் தவத்தைக் கண்டு,
வைய்குண்டப்பதந் தான் கொடுத்தோம்.
அனந்தா புரத்திலே போக வந்தோம்;
அருளே புரிவாய்! என வுரைத்தார்.

நன்று நன்றென மனதில்க் கொண்டு
நாதன் திருப்பதி தனிலிருத்தி,
அன்று பூசையும் மாயவர்க்கு
ஆன சிவனா ரருள்கொடுத்து—

மாயன் விடைகொண்டு உறையூருக்கு வருதல்

வென்றி யுதையம் வந்தபோதே
மேவி ஈசனை விடையுங் கொண்டு,
குன்று தனையன் றெடுத்த மாயன்
குளுந்த காவேரி யாறும் விட்டு,
காவேரிக் கரை கடந்து
கமலக்கடம் பாறும் விட்டு
பூவேரி பொழிந்திடவே
புதுமை வளர்கின்ற சோழ நாட்டில்
தெய்வப் பதிகள் பலதுங் கண்டு,

---

423. வாரங்கம் - ஓரங்கம், ஒருதலைச்சார்பு

425. ஒவ்வாமல் - பொருந்தாமல்.

430. வைய்குண்டப்பதம் - முத்திநிலை.

437. வென்றி - வெற்றி; உதையம் - உதயம், சூரியனின் எழுச்சி.

440. குளுந்த - குளிர்ந்த, பேச்சுநடை.

442. கடம்பாறு - காவிரிக்குத் தென்பால் ஓடும் ஓர் ஆறு.

443. வேரி - தேன்.

445. பலதும் - பலவும் என்பது இலக்கணமுறை; இது பேச்சு நடை.

423-436. "As the worship arrangement fixed by brahmans
Became one-sided, one person not agreeing with another,
They seized (from a priest) his proper worship duties;
The devoted holy man went into the forest,
And meditated on me in penance;
Seeing the brahman's penance in the forest
We granted him residence in Vaikuṇṭam.[115]
Going to Anantāpuram, we came here (on our way).
Bestow on us your favour".
Lord (Civaṉ), thinking 'well, well'[116]
Made Him stay in the sacred town
And graciously arranged
For worship of Māyavar on that day.

Tirumāl takes leave and goes to Uṟaiyūr

437-445. Soon as the winning sunlight came, bestirring Himself,
Māyaṉ who lifted the hill the other day,[117]
Took leave of Īcaṉ (Śiva);
Leaving the cool Kāvēri river,
Going beyond its banks,
Leaving the lotus-filled Kaṭampāṟu,
And viewing the many places of divine residence
In the Cōḻa land where
Honey pours plentifully from flowers and
Fresh fertility goes on growing,

115. Lord Viṣṇu's Abode, whose residents have no rebirth.

116. The *naṉṟu, naṉṟu:* 'good, good' implies a strong recognition of an auspicious event, the arrival of Viṣṇu.

117. Allusion to Kṛṣṇa's lifting with his little finger the Kōvarttaṉam hill to protect Kōkulam from destruction by rain caused by angry Intiraṉ (Indra).

திருமா லழகிய பெருமாளும்,
மைய்வாய்த் தகுழல் மாதேவி
வந்து பிறந்ததோ ருறையூரில்,
சித்தி ரப்பதி யிதுவெனவே
சென்று திருமால் நகைத்தருளி,
உத்தி ரமான உறையூரும்
உகந்து திருமால் தான்கடந்து

பஞ்சவனச் சோலைக்குத் திருமால் எழுந்தருளல்

விருத்தம்

6. *அமிழ்தத்தில் தான்தோன்றி அரசாள வென்றுதித்த*
தமிழறிவாட் டியிருந்த தலங்கடந்தங் கப்பொழுதே
சோழநா டானதேசம் சொல்லத்துலையா திவ்வளமை;
பாளை கமழ மாலை வீசும் பஞ்சவனச்சோலை தனில்வந்தார்.

வேறு

வன்ன மாமரம் தென்னங் காவாம்,
வரிசைக் குரியதோர் பூமரமாம்;
கன்ன லுடனே கதலிகளாம்,
கமல வாள்வியாம் பூங்காவாம்;

---

446. 414 ஆம் அடியும் இவ்வாறே உள்ளது.
447. மை - கருமை; மாதேவி - திருமகள்.
448. திருமகள் உறையூரில் வந்து பிறந்து உறையூர் நாச்சியார் என்று பெயர் பெற்றாள். சோழன் பெண்ணாகத் தோன்றிய இவள் பெரிய பெருமாளை மணந்தாள்.
449. சித்திரம் - அழகு.
450. நகைத்தருள்தல் - மகிழ்தல்.
451. உத்திரம் - உத்தரம்; உத்தரத் திருவிழா, உறையூரில் பங்குனி உத்தரத் திருவிழா பழம்பெருமை வாய்ந்தது. 'உறந்தை ஆங்கண்.... பங்குனி முயக்கம்' என அகநானூறு (137: 5 - 9) சுட்டுகிறது.
453. அமிழ்தம் - அமிர்தம், பாற்கடல்.
454. தமிழறிவாட்டியிருந்த தலம் - திருமகள் உறையூர் நாச்சியாராக வந்து அவதரித்த ஊர், உறையூர்.
455. சொல்லத்துலையாது - சொல்லி முடியாது; வளமை - வளப்பம், செழுமை; துலையாது தொலையாது என்பதன் திரிபு வடிவம்.
456. பஞ்சவனச்சோலை - உறையூருக்கும் திருவாரூருக்கும் இடைப்பட்ட ஓர் இடம்.
457. மாமரம் - பெரியமரம்; தென்னங்கா - தென்னைமரச் சோலை.
459. கன்னல் - கரும்பு; கதலி - வாழை.
460. கமலவாள்வி - தாமரைத்தடாகம்; வாவி என்பது இக் கதைப்பாட்டில் எல்லாவிடத்தும் 'வாள்வி' என்றே உள்ளது. இதுவும் பேச்சு நடையே.

446-452. Tirumāl, the beautiful God-Ruler,
Came to inimitable Uṟaiyūr, where
The great damsel with dark braid[118]
Came to be born, observing 'this is a wonderful town'.
Tirumāl felt happy and pleased
With Uṟaiyūr, famed for its Uttiram[119] festival;
Tirumāl then passed beyond the town -

Tirumāl reaches Pañca-vaṉaccōlai[120]

Viruttam Verse - 6

453-456. Beyond the place where the Lady of Tamil poesy
Appeared with ambrosia,[121] born specially to rule,
(Lies) the Cōḻa land and its fertility
Does not admit to be told in words.
Into the Pañca-vaṉa-c-cōlai (of this land)
He came as the evening air spread the scent of palm fronds.

457-460. (In this Pañcavaṉac-cōlai are:)
Beautiful large trees in coconut gardens,
Flower-bearing trees in rows,
Sugarcanes with plantains,
Lotus-tanks, and flower-gardens,

---

118. The allusion is to the story of Lakṣmi the Consort of Viṣṇu, incarnating herself as the Daughter of the Cōḻa king at Uṟaiyūr, and getting known as Uṟaiyūr Nācciyār. Like the famous Āṇṭāḷ, one of the twelve Āḻvārs, Uṟaiyūr Nācciyār would wed none but the Lord Himself. A temple to her with her Lord of Cīraṅkam erected by the Cōḻa king, stands at Uṟaiyūr.

119. Festival held in the month of *Paṅkuṉi* (March) on the day of the *Uttiram* asterism, in honour of Lakṣmi. This festival is referred to in very ancient Tamil literature: *Akanāṉūṟu* (137: 5-9): *Iṟaiyaṉār-Akapporuḷ*, commentary to sūtra 16.

120. This may be taken as the proper name of a grove, meaning the five-coloured grove (taking *vaṉa* as vaṇṇa).

121. Lakṣmi arose from the Milky ocean after ambrosia came out of it. She came as the Daughter of the King of Uṟaiyūr, to be celebrated in Tamil poetry.

ஆசணியா மத்திகளாம்,
அரசு செண்பக மாமரமாம்;
வீசும்பூங் காமரமாம்,
வீரப்பிலா வாசனியாம்;
புன்னை நிணலாம் பூமரமாம்,
பொங்கு சமுத்திரம் போலொலியாம்
வர்ன்ன வர்ன்னச் சோலைகளாம்,
வாள்விக் கரையாம் ஆறுகளாம்;
சென்னல் விளையுந் திருநிலமாம்;
திருமா துறையுஞ் சோலைகளாம்;
மின்னு மாதளை, மாமரமாம்;
மிக்க நாரத்துக் குழிவிஞ்சியாம்;
கோங்கு, நாங்குகள், தெங்குகளாம்;
குளுந்த மல்லிசெந் தாழைகளாம்;
தேன்மர மமுர்தகனி மாமரமாம்,
சிவனா ருறையும்திரு வாத்திகளாம்;
சூரிய காந்தநல் பூங்காவாம்,
சுகமான நந்தியா வட்டத் தோப்பாம்;
ஈழத் தரலி, வெள்ளரலி,
இயல்மா துறையும் செவ் வரலிக்ளாம்;

---

461. ஆசணி - ஆசினி மரம்; அத்தி - அத்தி மரம்.
467. அரசு - அரசமரம்; செண்பகம் - சண்பகமரம்.
464. பிலா - பலாமரம்; ஆசனி - ஆசனிப்பலா.
465. புன்னை - புன்னைமரம்; நிணல் - நிழல்; பேச்சுநடை.
466. சமுத்திரம் - கடல்.
467. வர்ன்னம் - வர்ணம்; நிறம், அழகு.
468. வாள்வி - வாவி, தடாகம், குளம்.
469. சென்னல் - செந்நெல்; பேச்சுநடை.
470. திருமாது - திருமகள்.
471. மாதளை - மாதுளை.
472. குழிவிஞ்சி - கொழிஞ்சி.
473. கோங்கு, நாங்கு - மரவகை; தெங்கு - தென்னை.
474. மல்லி - மல்லிகை.
476. ஆத்தி - ஆத்திமரம்; இதன் மலரைச் சூடியமையால் சிவனாருக்கு 'ஆத்திசூடி' என்பதும் ஒரு பெயர்.
477. சூரியகாந்தம் - சூரியகாந்தி.
479. அரலி - அரலிச்செடி.

461-480. Ācaṉi jack trees and fig-trees,
Big *aracu*[122] and *ceṇpaka*[123] trees;
Trees in wind-blown gardens,
Doughty jack and ācaṉi-jack trees,
Shady *puṉṉai* trees; trees in full blossom,
All with a swaying sound like the swelling ocean,
Groves of colours and colours,
Artificial lakes and rivers,
Rich land where rice-plants mature,
Little woods where the Goddess of plenty[123] dwells,
Shining pomegranate, and mango trees,
Excellent *nārattai, kuḻiviñci* trees
Kōṅku, nāṅku and *teṅku,*[124] trees,
Cool jasmine and red *tāḻai*[125] plants,
Honey-trees, and ambrosial-fruited mango-trees.
Holy *atti* trees in which Lord Civaṉ resides,
Good flower-gardens of sun-flower plants,
A pleasurable grove of *nantiyāvaṭṭai* trees,
Araḷi flowers of Īḻam,[126] and white *araḷi* flowers,
Red *araḷi* flowers - where the Dynamic[127] Lady lives,

---

122. The common *pīpal* tree, called also *acuvattam.*
123. The *campaka* tree known for its fragrant flowers. The phrase māmaram in the line may be taken either as 'big trees' or 'mango trees'.
123. Lakṣmi.
124. *teṅku* is another name for *teṉṉai* coconut tree; the other two *kōṅku* and *nāṅku* are varieties mentioned in old poems.
125. Screw-pine.
126. The form *araḷi* is found here for the more common *araḷi.* Īḻam (Tamil part of modern Srī Laṅka) seems to have had its variety of *araḷi* flower-bearing bush-plants.
127. The goddess of beauty and excellence, Lakṣmi, is meant here.

கரும்பதிலே முத்திருக்கும்
கமுகு வர்ன்னச் சோலைகளாம்;
தாமரைவாழ் சமுத்திரமாம்;
தவனம் பொருந்திய யாறுகளாம்
வாளை பாயக் காளை துள்ள,
வர்ன்ன வண்டுகள் கலந்தெழும்ப—

விருத்தம்

7. வாள்விழிச் சீதை பங்கன், வண்டம ரிலங்கை சுட்டோன்,
சூழவே விரலை யூன்றித் தூண்டுமா முனியை வென்றோன்,
சேழமா யுறைந்தி ருந்த சீரங்கம் விட்டுப் போந்து,
சோழன நாடுதன்னில் துய்யபூங் காவில் வந்தார்.

சோலையில் மாயவரைக் கண்டபோது நிகழ்ந்தவை

வேறு

பூங்காவில் மாயவர் வந்தபொழு தேதான்
புன்னைமல ரன்னைமலர் வண்டிசைகள் பாட,
பாங்கான மயிலின மாடிவிளை யாட,
பண்ணான இசைவண்டு பாடிமலர் சொரிய,

மந்தி யோடிக் குதித்தேவிளை யாட,
மாயவரைக் கண்டவர லாறுதனி லேதான்.
குந்தியே கருமந்தி கைய்கொட்டி யாட,
கோலமுடன் மாயவரைக் கண்டபொழு தேதான்.

---

484. தவனம் - விருப்பம், நீர்.
485. வாளை - வாளைமீன்; காளை - எருது.
488. விரலை ஊன்றித் தூண்டுமாமுனி - தன் விரலை நீட்டிப் பதித்துப் பிறரை அழிக்கும் வரம் பெற்ற ஒரு முனிவன்; பஸ்மாசுரன்.
489. சேழமா - உரிமையுடையதாக; போந்து - வந்து.
490. சோழனநாடு - சோழனது நாடு, சோழநாடு; துய்ய - தூய்மையான, அழகிய.
495. மந்தி - பெண்குரங்கு, குரங்கு; இதில் கருமந்தி (497) செம்மந்தி (499) என்னும் வகைகளும் உண்டு.
498. கோலம் - அழகு.

481-486. Groves of beautiful arecanut palms
And sugarcanes with pearls inside,
Sea-like tanks 'with lotuses flourishing',
And rivers filled with water;
As fish bounce, bulls jump
And colourful bees go up in groups —

Viruttam Verse - 7

487-490. The God having Cītai with winning eyes, as his half,
Who burnt down Ilaṅkai in which battle raged,
Who conquered the anchorite with death-dealing[128] fingers
He left Cīraṅkam in which he lived with lordly ownership[129]
And came into the grove of pure beauty in the land of the Cōḻaṉ.

The Jubilation of Nature on seeing Tirumāl

491-498. At the very time Māyavar came into the grove,
Bees in *puṉṉai* and similar flowers sang their music;
Fine peacocks danced and played;
The bee sang musical *paṇs*[130] and flowers bloomed;
The female monkey ran about and played,
At the very time it happened to see Māyavar.
The dark, female monkey sitting, clapped and played
At the very time it happened to see Māyavar.

---

128. Probably Bhasmācura, an *acura* who had obtained a boon to kill anyone he touched, was killed.

129. The word *cēḻamāy* is a colloquial form of *cēṣamāy*, *cēṣaṉ* being technically used in Vaiṣṇava religious works to signify absolute overlordship of Viṣṇu over the *cēṣi*, the dependent things of the world.

130. *Paṇs* are units in Tamil music like rāgas in the Karnatic music system.

செம்மந்தி யோடியே தேன்மாவின் கனியை
சிறுமந் தியைக்குறித் தங்கே யெறிய,
கும்மந்திர மாகவே பலகுரங் காட,
கோலமுடன் மாயவரைக் கண்டபொழு தேதான்.

கருமந்தி கைக்கொட்ட (வண்டுஇசை) பாட,
கானமயில் பீலிவிரித் தாடிவர வேதான்;
மயிலாடக் குயில்கூவ, மானினங்கள் சூழ,
வஞ்சியிடைத் தெய்வகன்னி மாதர் (புடை) சூழ,
வெயிலான ஒளிசோலை வெண்ங்கதி ரெறிப்ப,
மேகங்கள் சோலை மேல்வந்து தாவ,
நத்தினங் கோடேறி முத்தினஞ் சொரிய,
நாகமொடு தாழைமல ரானது சொரிய,
கொத்துமலர் வஞ்சிக் கொடிகள் நின்றசைய,
கோலமுடன் வாழைக் கொலையது நெருங்க—

சோழ வளர்நாட்டு வழியே திருமால் திருவாரூர்ப்பதி அடைதல்

ஆறிலொரு கூறு கடமைகொண்ட மன்னன்
அசையாத மணிகெட்டுஞ் சோழவளர் நாடு;
கூறிலொன் றாகப் பிரிந்தவளர் நாடு;
குன்றாத சோழவளர் நாடதுநன் னாடு,
மண்ணுக்குள் நீதி கண்டபுகழ் மன்னன்

---

499. மாவின்கனி - மாம்பழம்.
500. சிறுமந்தி - சிறுகுரங்கு, குரங்குக்குட்டி.
501. கும்மந்திரம் - கூட்டம், திரள்.
504. கானமயில் - காட்டில் உறையும் மயில்; பீலி - தோகை.
505. மானினம் - மான்கூட்டம்.
506. வஞ்சி - வஞ்சிக்கொடி; புடை - பக்கம், சுற்றிலும்.
507. வெண்ங்கதிர் - சூரியன்; எறிப்ப - கிரணங்களை வீச.
509. நத்தினம் - சங்குக்கூட்டம்; கோடு - நீர்க்கரை.
510. நாகம் - சுரபுன்னை.
512. வாழைக்கொலை - வாழைக்குலை, பேச்சுநடை.
513. கூறு - பங்கு; கடமை - வரி.
514. அசையாத மணி - ஆராய்ச்சி மணி; முறை வேண்டுவோர் அசைக்கும்படி அரண்மனை வாயிலிற் கட்டப்படும் மணி. நாட்டில் குறையே இல்லாமையால், முறை வேண்டி அசைக்கும் நிலை இன்மையால் சோழன் வாசல்மணி அசையாதமணி ஆயிற்று.
515. கூறு - நாட்டுப் பகுதி, கூற்றம்.
517. மண் - பூமி; நீதிகண்ட புகழ் மன்னன் - மனுச்சோழன்.

499-512. The red female monkey running, threw honeyed mango fruit
Towards the child-monkey; many monkeys
Danced with a confused jingle,[131]
At the very time they saw Māyavar decked in beauty.
As the black female monkey clapped its hands and sang wild,
As the jungle pea-fowl spread its feathers and danced around,
As peafowl danced, cuckoos cooed and animal-groups crowded round,
As divine maids with creeper-like waists thronged round,
As the hot-rays of brilliant sunlight burned the groves,
As the clouds leaped, moving over the grove,
As multitudes of oysters climbed water-banks
And left, showering groups of pearls (on them),
As *nākam* and *tāḻai* flowers lay in abundance,
As *vañci* creepers bearing flower-clusters stood swaying,
As bunches of plantain fruits beautifully clustered together[132]

Tirumāl reaches Tiruvārūr through the prosperous Cōḻa land

513-517. Viewing the prosperous Cōḻa land in which the king took one part out of six, as tax,
And tied the bell (on his palace-gate) ensuring unswerving justice[133]
The prosperous Cōḻa land, the good land whose fertility never diminished,
The prosperous Cōḻa land, honoured with the glory
Of the famous king who dealt out justice, unique on earth[134]

---

131. *Kummantiram:* an obscure term, probably of the author's regional dialect, an analogical formation from *kummal* having a collective sense.

132. True to oral narration, the balanced sentences of descriptive details in this passage are not tied up together and left to the participating audience to be understood implicitly.

133. The word *acaiyātamani* (literally unshaking bell) may be taken as bell never shaking for want of a caller with complaints required to ring the bell for availing the king's adjudication of justice. Or it may be considered with an elipsis as *(nīti) acaiyāta-maṇi,* a bell which renders impartial justice as interpreted here. The story of Maṉu-nītic-cōḻaṉ speaks of his rendering justice to an aggrieved cow which rang this bell when its calf was run over by the chariot of the Crown-prince, by causing the latter, his own son to be run over by the chariot. This is alluded to in works like *Cilappatikāram;* it is also recalled here in l.517 below.

134. See footnote 133 above.

(வரிசையுள்ள) சோழவளர் நாடதுவுங் கண்டு—
பண்ணுக் கிசைந்துநல் பாவலர்க் காக
பரம னொருதூது நடந்தவளர்நாடு;
சொல்லுக்கு மேலான சோழவளர் நாடு;
சுகமான தெய்வவளர் நாடதுவும் கண்டு—
நெல்லுக்கு வெகுவானம் நித்தம்வளர் நாடு;
நீதியுள்ள சோழவளர் நாடதுவுங் கண்டு—

பூங்கா வனமும் (புதுமலர்ச்) சோலையும்
பொய்கையும் ஆற்றங் கரையுங் கடந்து,
பாங்கான செஞ்சாலி மருதுங் கடந்து,
பங்கைய வாள்வியுங் கண்டு மகிழ்ந்து,
அருரூப ரூபமாய் நின்றபர (நாதன்)
ஆகமுற வேபூசை கொண்டிருந் தருளும்
திருவாரூர்ப் பதியது தன்னிலே
திசையான நெடுமாலு மினிதிருந்தார்.

விருத்தம்

7. வந்தார் மாயன் திருநாட்டில், வளமை கண்டு மனமகிழ்ந்து,
செந்தா ருறையுஞ் சோலைகளும் செந்நெல் விளையும் வயல்தடமும்
நந்தா வனமும் பூங்காவும் நாடும் நகருங் கண்டருளி,
சிந்தா மணிவாழ் பொன்னுலகம் போலே திருவாரூர் புகுந்தார்.

---

519. பண் - பண்ணோடுகூடிய பாடல்; தேவாரப்பாடல்; பாவலர் - புலவர்; இங்கே சுந்தரமூர்த்தி சுவாமிகள்.
520. பரமன் - சிவபெருமான்; தூது நடந்தது - சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்காக இறைவன் திருவாரூரில் பரவைநாச்சியார் இல்லத்திற்குத் தூதுவனாகச் சென்றது.
521. சொல் - நெல்.
523. வானம் - மழை.
526. பொய்கை - இயற்கையில் உண்டான நீர்நிலை.
527. சாலி - நெல்; மருது - மருதமரம்.
528. பங்கையவாள்வி - தாமரைக்குளம்.
529. அருரூபம் - உருவமற்றநிலை.
530. ஆகமுறவேபூசை - ஆகம முறையில் செய்யப்பெறும் பூசை.
532. திசை - திக்கு, திசையான - திக்கெலாம் நிறைந்த; எங்கும் நிறைந்த.
534. செந்தாருறையும் - செந்தரு உறையும்; தரு - மரம்; செம்மையாக வளர்ந்த பலவகை மரங்கள்.
535. நந்தாவனம் - நந்தவனம், பூந்தோட்டம்; பூங்கா - பூஞ்சோலை.
536. சிந்தாமணி - விரும்பியார்க்கு விரும்பியதைத் தரும் தேவலோகத்திலுள்ள ஓர் இரத்தினம்; பொன்னுலகம் - தேவலோகம்.

518-532. Viewing the prosperous land in which the Supreme One walked on an errand
For the good poet's sake, pleased by strains of song;[135]
The prosperous Cōḻa land, beyond description in words,
The comfortable land where divinity flourishes —
Viewing the land having plentiful rains for rice plants without fail,
The prosperous Cōḻa land where justice flourishes,[136]
And passing beautiful woods and fresh sandy groves
And tanks and river-banks and good, red-rice fields
And *marutam* trees and lotus tanks -
Seeing these and getting happy, the divine Neṭumāl[137]
Came to stay in the town of Tiruvārūr
Where the High Master[138] stands in abstract and concrete forms
Graciously accepting the worship touching his heart.[139]

Viruttam Verse - 7

533-536. Māyaṉ came into the sacred land, feeling glad at its fertility,
Graciously viewing groves with luscious fruit-clusters
And field-areas with red rice growing and pleasure-gardens
And flower-groves and country and town,
And entered Tiruvārūr, like the golden world of the Cintāmaṇi jewel.[140]

135. Allusion to the story of the *Tēvāram*, saint-singer Cuntaramūrtti-nāyaṉār for whose sake Śiva went on an errand to pacify the anger of his wife Paravai-nācciyār in Tiruvārūr.

136. The sentence is loosely structured as conjunctive verbal participles lengthen it without regard to cohesive statement.

137. Neṭumāl meaning 'Towering Tirumāl' is a reference to Viṣṇu's colossal form as Tirivikramaṉ, measuring the worlds with his two steps.

138. The High Master (Paranātar) is Śiva here, whose *Liṅka*-form is said to be abstract-concrete *(aruvauruvam)*.

139. The word *ākamuṟavē* may also be taken as *ākamam-uṟavē* meaning according to the *Āgamas*.

140. *Cintāmaṇi* the jewel which fulfils the wish of its possessor, found in the celestial world.

வீதிவிடங்கர் மாலிடம் வந்த காரணம் வினவல்

வேறு

திருவா ரூர்ப்பதியில் சென்றுநெடு மாலவரும்—
மருவளரும் முமைபாகர் மகாதேவர் தம்பிரானார்
பாதியுடல் கொண்டருளும் பச்சையுமை பங்கோனை
(வீதிவிடங்கர்தம்மை) விரைந்துபெரு மாளுங் (கண்டார்)
கண்டபோதே ஈசுரனார் கண்ணரை வரவருளி,
'கொண்டலே! குலமாலே! குறுகவந்த காரணமென்?
(என்றரனார் தாமருள,) இன்ம்பமால் ஏதுரைப்பார்:

திருமாலின் பதிலுரை

'மன்றுதனில் வீரதெய்வ ஆனைமலை நாடதிலே
சென்றுதிரு வனந்தாபுரத்தில் சிவனேபோ யிருக்கவேணும்'
கன்றுதனைக் கால்வாரிக் கனியெறிந்த பெருமாள் சொல்ல,
'தெச்சணாப் பூமியிலே செல்லவேணு' மென்று சொல்ல—

உமைபாகரின் உவப்புரையும் விருந்தும்

மைய்க்கணுமை பாகர் தானு மகிழ்ந்து திருமனது,
'நன்றுநன்று பெருமாளே! நாட்டை யளந்தமாலே!
மன்றுதனில் பூசையுண்டு வாழ்ந்திருவு' மென்று சொல்லி,
நன்றியுட னிருவுமென்று நாரணரையும் வினவி,
மைய்த்துனரைக் கொண்டாடி, மாயவன் தனையருளி,
கொந்தலரும் பூங்குழலார் கூண்டுஇசை பாடிடவே

---

538. தம்பிரானார் - தலைவர்.
539. பாதியுடல் - சிவபெருமானின் திருவுருவின் இடப்பாக வுரு; பச்சையுமை - பசுமை நிறம் படைத்த உமாதேவி; பங்கோன் - இடப்பாகத்தில் கொண்டோன்.
540. வீதிவிடங்கர் - திருவாரூரில் கோயில்கொண்ட உற்சவ மூர்த்தியாகிய சிவபெருமான்.
452. கொண்டலே - மேகநிறத்தோனே!; குறுகவந்த காரணம் - அணுகி வந்த காரணம்.
544. மன்றுதனில் - பூவுலகில்.
546. கன்றினால் விளங்கனியை எறிந்தது கிஷ்ணாவதார நிகழ்ச்சி; கனி - விளாம்பழம்.
548. மைய்க்கண் - கரியகண்.
549. நாட்டையளந்தது - திருவிக்கிரமாவதாரத்தில் திருமால் தன் ஓரடியால் உலகை அளந்த செய்தி.
550. மன்று - பொதுவிடம், கோவில்.
552. மைத்துனர் - இங்கே திருமால்; திருமாலின் தங்கை பார்வதியைச் சிவன் மணந்து கொண்டதால் சிவனாருக்குத் திருமால் மைத்துன முறையினராவர்.
553. கொந்தலரும் - கொத்தாக மலரும்; கூண்டு - கூடி, திரண்டு.

The god of Tiruvārur and Tirumāl converse

537-547. The towering Māyavar, He went into the town of Tiruvārūr;
The God-Ruler speedily met Makātēvar, the Lord of devotees
The Sharer of one-half of His person with tender Umai, Vītiviṭaṅkar;
The moment they met, Īcuraṉ graciously said 'Welcome'
And Araṉ[141] deigned to ask: 'Oh cloud-like One! great Māl!
What reason made you reach here?' So Araṉ graciously saying,
Sweet Māl[142] said: Oh Civaṉ! I have to go to Tiruvaṉantāpuram
In the divine and heroic land of the earth, the mountain land of elephants,"
So said the Lord who, throwing up the calf by its legs, destroyed the fruit-tree,[143]
So said He: "Into the southern region I have to go."

Civaṉ's reception and entertainment of Tirumāl

548-453. The God with the dark-eyed Umai as his half, glad in heart, said:
"Oh Perumāḷ! It is all right, Oh Māl who measured the earth!
Stay in the temple, partaking of worship offerings";
And asked (the guest) Nāraṇar[144] to be happy.
He celebrated (the praises) of his brother-in-law,[145] doing favours to him;
As women with blooming flower-clusters in their braids sang together,

141. Name of Śiva, used for variety along with Vītiviṭaṅkaṉ the name of the Tiruvārūr deity (1.540)
142. *Ēturaippār:* 'What (he) would say' is a phrasal filler-formula in folk poetry, a rhetorical device of narration pauses.
143. Allusion to Child Kṛṣṇa's artful killing of two demons assuming the shapes of a calf and a fruit-tree, sent to do away with Him.
144. Nārāyaṇar, one of the specially revered names of Viṣṇu.
145. Viṣṇu's sister Umai is the wife of Śiva in Purāṇic lore.

மைத்துனரு மினிதிருந்தார், மாயவர்கொண் டாடிடவே.
இருந்தந்த மாயனுக்கு விருந்தளித்தா ரரனாரும்;
பருந்தேறு மாயவரும் பாவித்தங்கே தானிருந்தார்.

சோழநீதி நல்வளமை சொல்லிப்பெரு மாளுரைத்து,
நாளும்நாளுங் கீர்த்தியுள்ள நல்லதிருவா ரூரெனவே
வாசுவாசு (துங்கமேனி) மாயவரை யினிதிருத்தி,
பசுவா யுருத்தரித்த பரனே யெனப் புகுந்து,
மாயவர்வந் தாரெனவே மகிழ்ந்து பரனாரும்
நேயமுள்ள ஆடல்பாடல் நித்தலு மருள்புரிந்து,-
மத்தாளம் முரசுகொம்பு வன்னமுள்ள நாகசரம்,
சித்திர மடந்தையர்கள் சேவித்து நடமதாட,—
வர்ன்ன மாலை கட்டிடுவார், வாசமாலை வீசிடுவார்;
பண்ணுந்தமி ழோதிடுவார்; பணிமாறுங் காலந்தன்னில்;
கின்னரங்கள் பாடிடுவார்; கீதவிதம் பாடிடுவார்;
இன்னிசைகள் மிகவுரைப்பார்; இசைகள்மிகப் பாடிடுவார்;
தெய்வகன்னி பாடிவர, சிலகன்னிமா ராடிவர,
மைவிழிசே ரும்மடவார் வாச்சியங்கள் பாடிடுவார்.

---

554. மாயவர் - சிவபிரானார். 415 ஆம் அடியில் 'மாயப்பெருமாள்' என வந்துள்ளது.
556. பருந்து - கருடன்; பாவித்து - தங்கி, விரும்பி.
557. சோழ நீதி - மனுச் சோழனின் நீதி. பசுவின் இறந்த கன்றிற்காக அது மடியக்காரணமாயிருந்த தன் மகனுக்கே கொலைத் தண்டனை விதித்து நீதி செலுத்திய மனுச் சோழன் ஆண்ட ஊர் திருவாரூர். பெருமாள் - சிவன்.
558. நாளும் நாளும் - எந்நாளும், எக்காலத்திலும்; கீர்த்தி - புகழ்.
559. வாசு - கடவுள், திருமால்; துங்கம் - விளக்கம், ஒளி.
560. பசுவாய் உருத்தரித்தது - மனுச்சோழனின் நீதி நேர்மையை உலகிற்கு உணர்த்த இறைவன் பசுவாகிக் கன்றுடன் வந்து, அக்கன்று இறக்க நீதி கேட்ட வரலாறு கருதத்தக்கது. 'ஈசன் பசுவாகி ஏமனொரு கன்றாகி.. ஆரூர் வீதிவந்தாரம்மானை' எனவரும் அம்மானைப் பாடலின் குறிப்பு ஒப்புக்காணத் தகும்.
561. பரனார் - சிவனார்.
562. நேசமுள்ள - விருப்பமான; நித்தலும் - நாள்தோறும்.
563. மத்தாளம் - மத்தளம்; முரசு - பேரிகை; கொம்பு - ஊது கொம்பு.
564. சித்திரம் - அழகு.
565. வர்ன்னம் - வர்ணம், நிறம்.
566. பண்ணுந்தமிழ் - பண்ணிசையுடன் கூடிய தேவாரப் பதிகங்கள்; பணிமாறுங் காலம் தொண்டுசெய் காலம்; வணங்கும்பொழுது.
567. கின்னரம் - ஒருவகையாழ்; கீதவிதம் - இசைப் பாட்டு வகை.
568. இசைகள் - புகழ்கள்.
569. தெய்வகன்னி - தேவமாதர்.
570. மைவிழி - மைதீட்டிய கண்; வாச்சியம் - வாத்தியம்.

554-570. The brother-in-law stayed with pleasure, as the wonder-worker[146] acclaimed (his presence)
To Māyavar who remained there, Araṉ gave a feast;
The eagle-riding Māyavar too willingly remained there.
Perumāḷ[147] spoke of the good, flourishing justice[148] of the Coḷas
And of fine Tiruvārūr having fame day by day
And made Māyavar dear as Vācu-Vācu[149] (of towering body) stay pleasurably.
(Māyavar) stayed addressing Śiva "Oh-Transcendent
One who took the form of the cow!"[150]
Supreme Civaṉ also rejoicing that Māyavar had come,
Favoured Him with entertaining song and dance each day;
Drum, trumpet, blow-horn, and colourful pipe (sounded);
Beautiful women, saluting, danced;
Beautiful festoons are[151] tied; scented flower-garlands are thrown;
Sacred Tamil verses set to music are recited, as duties of worship change;
They play *kiṉṉara*[152] songs; they sing song-varieties;
They utter[153] many sweet concords of sounds; they sing many pieces of music.

146. Māyavar (meaning wonder-worker) is here used for Śiva, (See foot note 111).
147. Perumāḷ (Great-ruler) is here used for Śiva.
148. The allusion here is to the story of Maṉu-nīti-c-cōḻaṉ, already made in ll.517, 524.
149. Vācu-Vācu A repetitive expression denoting Tirumāl. The words *tuṅka mēṉi* from added in brackets and taken from another manuscript of the work give an alternative Tamil equivalent.
150. This story relates again to the Maṉunīti-c-cōḻaṉ (vide 148).
151. Change of tense for liveliness of narration.
152. Class of celestial beings.
153. The utterances may be of the texts and the 'pieces of music' *(icaikaḷ)* may be of tunes.

வேதங்கள் முழங்கிடவே, மெய்க்கன்னிமார் பாடிடவே,
பூதமவர் கண்டிருந்த புதுமைகண்டங் கப்பொழுதே
சாலதீவ தூபமுள்ள சாத்துமுறை யோடுசெய்து,
பலதீபமும் (விளங்க) பட்சமால் தனையிருத்தி,
சாத்துமாலை, ஏத்துமாலை, சத்திரப்பூ வடமாலை,
கோர்த்தபூ வடமாலை, கோடியாம் வனமாலை,
பூமாலை, பொன்மாலை, பொன்னரிய மாலைசாத்தி,
நாமாலை வேதமோத, நல்லதீவ தூபங்காட்டி,
வெற்றியுடன் மாயவரும் விமலன் திருவாரூரில்
கற்றயாடல் பாடல்கண்டு கண்ணரு மினிதிருந்தார்.

ஈசரைப் பெருமாள் கொண்டாடி, அவரிடம் விடைபெறல்

இருந்து ஒருபொழுது, ஈசரைக்கண் டாதரித்து,
விருந்துபெரு மாளெனவே விண்ணவர் கொண் டாடிடவே,
அன்றிரவு அவதரித்து, ஆனதிருவா ரூரதிலே
வென்றியுட னரனாரை வினவி அடிதொழுது,—
'ஈசனே! எம்பிரானே! எங்குமாய் நின்றோனே!

---

572. பூதமவர் - பஞ்சபூத வடிவான திருமால்.
573. சால - மிக; தீவதூபம் - விளக்கும் நறுமணப் புகையும்; சாத்துமுறை - திவ்யப்பிரபந்த பாசுரங்கள் சிலவற்றைத் தனியே ஓதுகை.
574. தீபம் - விளக்கு; பட்சமால் - பிரியமுள்ள திருமால்; பச்சைமால் என்பதன் உருமாற்றமாகவும் கொள்ளலாம்.
575. சாத்துமாலை - திருமேனியில் அணிவித்தற்குரிய மாலை; ஏத்து மாலை - மேலே தொங்கவிடப் படும் மாலை; வடமாலை - வடம் போலே நீண்ட தொங்கல்மாலை.
576. கோர்த்தல் - கோத்தல்; ஒன்றுடன் ஒன்று சேர்த்துப் பிணைத்தல்; வனமாலை - பல வண்ணப்பூக்களும் தழையும் கலந்து கட்டப்பெற்ற மாலை, துளசிமாலை.
577. பொன்மாலை - பொன்னாலாகிய ஆபரணங்கள்; பொன்னரியமாலை - கழுத்தணிவகை.
578. நாமாலை - நாமமாலை; வேதம் - தமிழ் வேதமாகிய திவ்யப் பிரபந்தம்; தீவ தூபம் - விளக்கும் நறும்புகையும்.
579. விமலன் - மலமற்றவன், தூயோன், சிவன்.
581. ஆதரித்தல் - உபசாரவார்த்தை கூறல், விரும்புதல்.
582. விண்ணவர் - தேவர்.
583. அவதரித்து - தங்கி.
584. வென்றி - வெற்றி; வினவி - உசாவி, விசாரித்து.
585. ஈசன் இறைவன்; பிரான் - தலைவன்.

571-580. Vedic chants rose and beautiful maids sang,
And wonderful things seen by goblin attendants[154] were arranged;
And recitals[155] with much (waving of) lights and incense
Took place then itself and dear Māl was made to stay,
With many lamps being lighted (in his honour).
Garland for wearing, garland hanging from above,[156]
Cattirappū-strung garland, garland of flowers knit together
Garland of very fresh *tuḷaci* leaves, garland of varied flowers,
Garland of gold, garland of golden neck ornaments
These were put (on Tirumāl); Vedic recitation took place
Of His names strung as[157] in a garland and fine light.
And incense were waved before Him in His honour.
Māyavaṉ saw with pride in Tiruvārūr of the spotless One[158]
Expert dance and song; Kaṇṇaṉ[159] stayed (there) with pleasure.

Māyavaṉ takes leave of Śiva of Tiruvārūr

581-585. Staying there for a time, seeing Īcaṉ and
Paying respects to Him, (Lord Viṣṇu)
Stayed that night in that place called Tiruvārūr,
As the celestials celebrated his praise as the fresh God-Ruler;
He becomingly enquired of Araṉ's well-being
And saluting at His feet, (said):

154. The attendants of Viṣṇu seem to have been separately entertained.
155. *Cāttumuṟai:* Each stretch of recital (and dance) may be rounded up with a pause in which spectators and performers wave lights and burn incense before the Deity chanting prescribed concluding and other hymns from *Tivviyap-Pirapantam* (collection of songs of Āḻvārs).
156. ll.575-578. A beautiful list of garlands adding to sound-harmony but difficult to translate.
157. The names recited serially are a figurative garland of names adding to the 8 *mālais* enumerated earlier.
158. *Vimalaṉ* here refers to Civaṉ of Tiruvārūr.
159. A name for Viṣṇu, used to avoid repetition of Māyavaṉ.

வேசமுட னேயாறு சமையாக இருந்தோனே!
அஞ்செழுத்துக் கேயுதவும் அம்பரனே! அய்ங்கரனே!
அன்ம்பதின்மே லொன்றாக நின்ற அரும்பொருளே!
இன்ம்பமுள்ள மூலப்பொரு ளாயிருந்த இறையோனே!
எண்ணுக்கு மெழுத்துக்கும் அடங்காத இறையவரே!
பண்ணுக்கு மிசைக்குமெட்டாப் பரனே, பரனெனவே!'—

என்றுதிரு மாலவரும் ஈசனையும் போற்றிக்கொண்டு,
வென்றியுட னரனாரை விரைந்துவிடை யுங்கொண்டு
தருவான செங்கரத்தான் தண்மையுள்ள பெருமாளும்
கருவாக வேயுதித்த கதிரோ னுதயத்திலே
குருவே சரணமென்று குன்றாமல் மனதில் கொண்டு,
திருவாரூர் தன்னில் நின்று தெற்கே நோக்கி னார்பெருமாள்.

மாயன் தில்லைவனம் காணல்

விருத்தம்

8\. நோக்கினார், தெக்கணத்தே — நுண்ணிடைச் சீதை பங்கன்,
தாக்கினா ரரக்கர் கோவைத் தலைதடு மாறி நூறி,
காக்குமாய்ப் புவியை யாண்டோன் கண்ணனார் வெண்ணை யுண்டோன்,
வாக்கினால் கணங்கள் பூதம் வடதிசை தன்னில் நின்றே.

586\. வேசமுடன் - வெவ்வேறுபட்ட வடிவுடன்; **சமையம்** = சமயம், மதம்; ஆறுசமயம்: சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், **கௌமாரம்**.

587\. அஞ்செழுத்து - பஞ்சாட்சரம்; நமசிவாய என்பது. அம்பரன் - ஆகாய வடிவினன்; அய்ங்கரன்- ஐந்து கைகளையுடையவன்.

588\. அன்ம்பதின்மேலொன்று - ஐம்பத்தொன்று; 51 அட்சரங்கள்; இது சமஸ்கிருத அட்சர மாலையைக் குறிக்கும்.

589\. மூலப்பொருள் - முதற்பொருள்.

590\. அடங்காத - உட்படாத.

591\. பரன் - மேலோன்.

594\. தரு - கற்பகமரம்; தருவான செங்கரத்தான் - கற்பகமரத்தைப் போல வேண்டியார்க்கு வேண்டுவன ஈபவன்; தண்மை - குளுமை, கருணை.

595\. கரு - தோற்றம்; கதிரோனுதயம் - விடியற்காலம்.

596\. சரணம் - அடைக்கலம்.

598\. தெக்கணம் - தெற்கு, தென்னாடு.

599\. அரக்கர்கோ - அரக்கர்தலைவனாகிய இராவணன்; தலைதடுமாறுதல் - கீழ்மேலாகப் புரளச் செய்தல்; நூறி - கொன்று.

586-596. "Oh Lord! My Master! One who stands everywhere!
One who puts on the guise of the six faiths![160]
Oh Lord of the Sky, who harkens
To the call of your Five Letters![161]
Oh Five-handed One![162] Oh precious object standing
As the one, over and above the fifty letters[163]
Oh lord who was the beneficent Primal object!
Oh Lord defying containment in arts of counting or description[164]
Oh High one, above the reach of melody[165] and music!"
So He, Tirumāl, praising Īcaṉ
Speedily took leave in a fitting manner, of Araṉ.
The God-Ruler, sweet and liberal-handed like the Tree[166]

Thought within his mind unhesitatingly that
'The Guru alone is the Refuge,[167] even as
The sun with his rays rose like a being in the womb;
Standing in Tiruvārūr the God-ruler looked south.

Māyavar sights Tillaivaṉam and goes thither

Viruttam Verse-8

598-601. He looked towards the south - One who has Śita as his half,
One who, attacking the king of demons, upturning his head,
And breaking it to pieces, protected and ruled the earth,
The great Kaṇṇaṉ, the butter-eater, standing beautifully
In the northern direction with His retinue and (big) goblin.

---

160. The six faiths as usually understood are: *Caivam, Vainavam, Cāktam*(Sakti), *Cauram* (Cūriyaṉ-sun), *Kaṇapattiyam* (Kaṇapati), *Kaumāram* (Kumaraṉ or Murukaṉ).
161. The *ainteluttu, 'Ōm Namacivāya'*, the *mantiram* granting Śiva's favour to the devotee.
162. Lord Śiva.
163. Fifty letters of Sanskrit.
164. *eṇ* and *eḻuttu* are literally glossed here, and may be taken to refer in a general sense to sciences and literature. Knowledgeable scholars hold that *eṇ* and *eḻuttu* in contexts of old poetry really mean grammar *(ilakkaṇam)* viewed as measurement and literature *(ilakkiyam)* viewed as free writing.
165. *Paṇ* is the melody-based constituent structural pattern while [illegible] is the over-all music.
166. The wish-fulfilling tree in the celestial world called *kaṟpaka-taru*.
167. This is a slogan uttered by Caiva disciples praising and bowing to *gurus*: the oral poet invests Viṣṇu with Caiva characteristics.

வேறு

நின்று திருவா ரூரும்விட்டு
நீல நெடுமால் புறப்படுவார்,
குன்றுதனை யன்று குடைவிரித்த
கொற்ற மாயவன் வாறபோதே —
வென்றி யுடையதொர் கேத்திரபாலன்
வீராதி வீரன் முன்வரவே,
நன்றி யுடையதொர் சங்கிலிப்பூதம்
நாக பூதந் தன்னுடனே
காளமா பூதந் தானடக்க,
காற்று மழையுந்தான் கலந்ததென்ன.
பாளை சிறந்ததொர் சோலையிட்டு
பச்சை மாலவர் வாறபோதே —
வல்ல வடநூல் சிறந்திடவே
வன்னக் கவிவாணர் பாடிடவே
தில்லை வனமது தெரியக்கண்டார்,
செம்பொன் மணிமுடி மாயவனார்.

இடையர் பதியில் மாயன் அவர்களுக்கு அருள்தல்

காலி நிரையாய் மேய்த்தடைத்த
கரிய மாயவர் வாறபோது —
வில்லை முறித்தந்தப் பெண்ணைக்கொண்ட
வெற்றி மாயவர் வாறபோது —
முல்லை வனத்தி லிடையர்பதி

---

604. குன்று - கோவர்த்தன மலை; இந்திரன் பெருமழை பெய்விக்க அதனின்று ஆயரையும் ஆக்களையும் காப்பாற்றக் கோவர்த்தனமலையைக் குடையாக உயர்த்திப் பிடித்தான் கண்ணன்.
605. கொற்றம் - வெற்றி.
606. வென்றி - வெற்றி.
610. காளமாபூதம் - கரியநிறமுடைய பெரும்பூதம்.
614. வடநூல் - வடமொழி மறைநூல்.
615. கவிவாணர் - புலவர்.
617. செம்பொன் மணிமுடி - மணிபதித்த பொற் கிரீடம்.
618. காலிநிரை - பசுக்கூட்டம்.
620. வில்லைமுறித்துப் பெண்ணைக்கொண்டது - சனகன் வைத்த சிவதனுசை ஒடித்து இராமன் சீதாதேவியை மணந்து கொண்டது.
622. முல்லைவனம் - முல்லைநிலம்; இடையர்பதி - இடையர் வாழும் ஊர்.

602-617. Having stood there, the blue-complexioned,
Towering Māl, leaves Tiruvārūr and starts.[168]
As the victorious Māyavaṉ who held the hill[169] high up,
As an umbrella, came along, the conquering
Guardian deity[170] of His residence, warrior of warriors
Came before Him, and the grateful goblin Caṅkilippūtam[171]
Along with *Nākapūtam*[172] and *kāḷamāpūtam*[173] too walked(before).
As tender-complexioned Māl came along,
Passing a grove abounding in palm-foliage,
Looking like wind and cloud in conjunction,
Māyavaṉār, with the precious crown of brilliant gold,
Saw clearly the place of Tillaivaṉam[174]
As Northern Vedic texts chanted (His praises) excellently,
And colourful groups of poets sang (their songs).

Māyavaṉ receives worship at a cowherd settlement on the way

618-623. When the dark-complexioned Māyavar, who grazed cattle-herds
And put them in pens,[175] came along—
When the conquering Māyavar, who broke the bow
And took the girl (to wife)[176] came along—
Worthy Māyavaṉār came speedily
Into the settlement of cowherds in the forest region

168. Change of tense frequently resorted to by the poet for liveliness.
169. The Kōvarttaṉam hill held up by Kriṣṇa as a boy.
170. Each sacred earthly residence (ksētra) of Viṣṇu may have a fixed guardian deity. This deity is shown as moving with the retinue and *pūtams,* here imaginatively created for the God of Cīraṅkam.
171. *Caṅkilippūtam* is already mentioned in l.295.
172. *Nākamāpūtam* a new big *pūtam* introduced into the narration here.
173. *Kāḷamāpūtam* already mentioned in l. 340.
174. This place-name of the modern town called Citamparam, literally means 'the wood of *tillai* trees'.
175. Viṣṇu's incarnation as Kriṣṇa the cowherd-boy.
176. The breaking of the bow and winning Cītai in the Rāma-story. There is an anacaluthon as the sentences are broken off abruptly.

முடுகவந் தாரே மாயவனார்.
இடையர் பதிகண்டு குறுகிவர,
இன்ம்பக் கோபால ரப்பொழுதே —
கடையால் குடமு மணைகயிறும்
கையில் தடிகளும் வைத்துநின்றார்.
பாலுங் குடமு மெதிரேவைத்து
பச்சைமால் தன்னைத் தொழுது நின்றார்.
கோலுங்குடமும் வைத்து நின்று
கோபால ரைக்கண்டு மனமகிழ்ந்து,
நன்று நன்றெனக் கையம (ர்) த்தி,
நகைத்தங் கவர்க்கு நன்மைசொல்லி,
இன்று நீங்கள் நில்லுமென்ன
இடையர்க் கருள்கொடுத் தார்பெருமாள்.

திருமால் சிதம்பரம் வந்துசேர்தல்

மடையில் வாளை குதிபாயவே
மன்னுஞ் சிதம்பரம் தெரியக்கண்டார்.
தில்லை வனம்போலே தெரியுதென்று
தெய்வப் பெருமாள் மனமகிழ்ந்து,
(அல்லல்) தவிர்த்தென்னை ஆண்டுகொண்ட
(அரனார்) திருவம் பலமெனவே —

---

623. முடுக - விரைய.
625. கோபாலர் - பசுக்களைக் காப்பவராகிய கண்ணன்.
626. கடையால் - பால் கறக்கும் குடுவை; அணைகயிறு - கறவைமாட்டின் கால்களைத் தளையும் கயிறு.
627. தடிகள் - கைத்தடிகள்; மரக்கொம்புகள்.
632. கையமர்த்தல் - கையைக் கவிழ்த்து அருள்புரிதல்.
633. நகைத்தல் - மகிழ்தல்.
636. வாளை - வாளைமீன்.
637. சிதம்பரம் - தில்லைப்பதி. 'மடையில் வாளை குதிபாயவே மன்னுஞ் சிதம்பரம்' என்னும் தொடர், 'மடையில்வாளை' எனத்தொடங்கும் தேவாரப்பாடலை நினைவூட்டும்.

    மடையில் வாளை பாய மாதரார்
    குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
    சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
    உடையுங் கொண்ட உருவம் என்கொலோ (தேவா, 1: 123: 1)

638. தில்லைவனம் - தில்லை மரங்கள் நிறைந்த காடு.
640. அல்லல் - துன்பம்.
641. திருவம்பலம் - கூத்தப் பெருமான் எழுந்தருளியுள்ள பொன்னம்பலம்.

624-635. As seeing the cowherd settlement, He came near,
The good cowherds then and there stood
With milking-vessel, pots, cow-ropes
And sticks in their hands.
They placed their milk and pots in front,
Prostrated before the tender-complexioned Māl and stood up.
Seeing the cowherds standing with their sticks and pots
And feeling pleased, the God-Ruler raised His hand,
And smiled, saying: 'well done, well done'; advising them
He said: "You may stay back today"
And favoured them with His grace.

Reaching Citamparam

636-641. He sighted Citamparam of lasting name
As fish in (watered) fields leaped about[177]
The Great Divine[178] Ruler, feeling happy
That it seemed like Tillaivaṉam, said: "This is
Tiruvampalam[179] of revered Araṉ
Who relieved my distress and made me His own".

---

177. A reminiscence of Campantar *Tēvāram* 1.239 (23-1).
178. Perumāl with the addition of *tivya* (divine) has the meaning of 'Great Divine Ruler'.
179. Name of the Central Shrine with attached pavilion of Śiva's temple at Citamparam.

தில்லைப் பெருமான் வினாவும் திருமாலின் விடையும்

அத்தன் மனமும் மிக மகிழ்ந்து
அரிய திருமாலைத் தான்வினவி,
புத்தி களித்து மாயவரைப்
புகழ்ந்தங் கருளியே ஏதுசொல்வார்:
'இத்தூரம் நீர் போந்த தேதோ?
இலங்கு திருமாலே!' எனவுரைத்தார் —

'சேந்த தெய்வ பூமியிலே
திருவ னந்தா புரந்தனிலே
போயங் கிருந்து பூசை கொள்ளப்
போறோம் நாம் புண்ணியரே!' —
என்று திருமால் செப்பிடவே
இறையோ னும்மன மகிழ்ந்து,
வென்றி மால்செய்த விண்ணப்பத்தை
மிகவும் சிவனார் கேட்டிருந்து,
வன்ன மாயவன் சொன்னபோதே
மங்கை யுமைதன்னைத் தானோக்கி,
'உண்ணா முலையேநீ கேட்டிலையோ,
உன்தமை யன்வந்த காரியத்தை?
திருவ ரங்கம் தன்னில் நின்று
தெய்வ மலைநா டதிலே,
அரவணைபோல்ச் சிறந்த பள்ளி,
அனந்தா புரத்தில் போகவந்தார்.'

---

642. அத்தன் - இறைவன், சிவபெருமான்.
645. ஏது - என்ன.
646. தூரம் - நீண்டவழி; ஏதோ - என்ன காரணமோ.
648. சேந்த - செப்பமான.
652. செப்பிட - சொல்ல.
653. இறையோன் - சிவன்.
654. விண்ணப்பம் - அறிவிப்பு.
658. உண்ணாமுலை - உமையம்மைக்கு ஒரு பெயர்; திருவண்ணாமலையில் விளங்கும் இறைவி 'உண்ணாமுலை உமையாள்' என்று போற்றப்படுகிறாள்.
659. தமையன் - அண்ணனாகிய பெருமாள். காரியம் - செயல், நோக்கம்.

The conversation between Civaṉ and Tirumāl

642-663. Master Civaṉ[180] feeling very glad in heart,
Spoke words of welcome to Precious Tirumāl;
Rejoicing in thought, He graciously praises[181]
Māyavar and says: "Oh luminous Tirumāl!
What is this, your coming so far here?"
"We go to Tiruvaṉantāpuram, situate
In an excellent, divine region,
And staying there, will receive worship,
Oh Holy one!" So Tirumāl said,
And the Lord (Civaṉ) felt glad.
The statement[182] made by triumphant Māl
The great Civaṉ heard with attention;
Even as the beautiful Māyavaṉ spoke,
He looked at the lady Umai (and said):
Oh lady of unsuckled breasts,[183]
Have you heard the purpose
For which your elder brother has come?
From Tiruvaraṅkam He has come
To go to Anantāpuram,
An excellent resting-place like (His) serpent-couch,
In the divine land of the mountains".

---

180. *Attaṉ* meaning (Master, Lord, Father etc.) is an old word used in *Tiruvācakam* (51:1.4) for Civaṉ and *Tiruvāymoḻi* II. 3.2. for Viṣṇu.
181. Change to a habitual future-present phrasal *ētu-colvar,* a formula of reporting speech.
182. The word *viṇṇappam* means a petition as well as a statement respectfully made before a superior or an equal person.
183. *Uṇṇāmulai (here used for Umai.,) is the name of goddess Pārvati, Civaṉ's consort at Tiruvaṇṇāmalai*

உமையம்மையின் உரையாடல்

மருவ ணிந்த குழலுடைய
மங்கை யுமையம்மை தான்கேட்டு,
அருமை யுள்ள தமையனென்று
அன்பாக வேவினவி,
'இருந்த பதிவிட்டு மறுபூமியில்
ஏகிய(தே)தோ, அண்ணே நீர்?
திருந்தாத மதலை மொழிச்
சீதைநங்கை எங்கே?' என்றார்.
'உற்ற கணவன் போறபோது
உடையவளுங் கூட' வென்றார்.
வெற்றி யுமையம்மை தான்வினவ,
மேக வண்ணரும் மிகமகிழ்ந்து,
அன்றங் கரனார் தன்னருகே
ஆன நெடுமாலும் பூசைகொண்டு, —
குன்றில் கதிரோ னுதயத்திலே
கோல நெடுமால் விடையுங் கொண்டு,
தில்லைக் கோவிந்தர் பதியில் சென்று
திருமால் தன்னுட பதியுங் கண்டு,
கல்லைப் பெண்ணாய் நடத்திவைத்தோர்,
கடுக நடந்தார், திசை நோக்கியே.

---

666. தமயைன் - மூத்தோன், அண்ணன்;
668. மறுபூமி - வேற்றுநிலம்.
670. திருந்தாத மதலை மொழி - திருத்தமில்லாத மழலைச் சொல்.
673. உடையவள் - மனைவி.
678. குன்று - உதயகிரி; கதிரோன் உதயம் - சூரியனின் தோற்றம்.
679. கோலம் - அழகு.
680. தில்லைக்கோவிந்தர்பதி - தில்லைச்சிதம்பரம் திருக்கோயிலில் திருச்சித்திரகூடத்தில் பெருமாள் பள்ளிகொண்டு காட்சி தரும் திருக்கோயில்.
682. கல்லைப்பெண்ணாய் நடத்திவைத்தோர் - இராமன், இராமாவதாரத்தில் கோதம முனிவன் சாபத்தால் கல்லாய்க் கிடந்த அகலிகையின் சாபம் நீக்கி முன்னையுருக்கொடுத்த நிகழ்ச்சியைச் சுட்டும்.
683. கடுக - விரைவாய்.

Umai's enquiry; Tirumāl leaves Tillai

664-683. The lady Umai with the fragrant *maru*[184] leaves in her braid,
She heard (Civaṉ's words) and knowing (the guest)
To be her dear elder brother,[185] she lovingly
Asked: "Oh you elder brother, what is this,
Your leaving the place where you remained
And your coming to another land?
Where is the lady Cītai,[186]
With her unformed child-like accents?
He said: 'When the dear husband goes,
The wife belonging to him too (goes)"[187]
As winning Umai enquired of him thus,
The cloud-coloured One[188] felt very happy.
The famous Towering Māl that day
Accepted worship staying near the great Araṉ.
When the sun rose over hill of the morning
The beautiful Towering Māl took leave,
And went to the temple of Tillai-Kōvintar,[189]
And Tirumāl saw His own Abode (there).
The God, who had made a stone walk as[190] a woman,
Walked quickly, looking in the direction (of his travel).

---

184. A plant known for its leaves with a pleasant scent.
185. Viṣṇu's traditional relationship with Śiva's wife in legendary lore.
186. Citai-the Consort of Rāma, Viṣṇu's incarnation, is spoken of as one with the Consort of Viṣṇu, the Deity of Cīrankam going south.
187. Though these words are attributed to the God of Cīraṅkam, the author of the work has not depicted the Consort of the God as accompanying Him in his travels in this work.
188. Viṣṇu famous for blue complexion like the cloud.
189. This is the Viṣṇu temple situated in the Tillai temple-complex. One would have expected the God of Cīraṅkam to have visited His counterpart Tillai-Kōvintarājar much earlier and specially welcomed there.
190. Allusion to the incident in the *Rāmāyaṇam* in which Akalikai the offending wife of the sage Gautama, turned to stone, resumes her human form at the touch of Rāmaṉ's feet.

தில்லையை விட்டுத் திருமால் தெற்கு நோக்கி நடத்தல்

விருத்தம்

9. நடம்புரி தில்லை நாதர் நாயகர் பதியுங்கண்டு,
குடந்தையி லாய னானோன் கொற்றமா பூமி நோக்கி,
வடந்தனில் துயின்ற மாயன், வரிசிலை யெடுத்த கோமான்,
கடந்தனன் பாதம் நோக, கமலமாங் கண்ணன்தானே.

வேறு

கண்ண னேபுவி காவல னானமால்,
காவ லாகப் பெரும் பூதஞ் சேவிக்க —
பண்ணை யூதிநிரை மேய்த்த பச்சமால்,
பள்ளி கொண்ட பெருமாளுந் தானவர்,
அச்ச மற்ற அழகான பச்சைமால்,
ஆய னாக அமர்ந்திருந் தார்மாயன்;
இச்சை யாகவே பெண்கள் துகில்கொண்டு
ஏறிக் கொண்டார் உசந்த மரத்திலே;
சுற்றி யெங்கும் வள(ர்) ந்த மருதையே
துய்ய மண்ணிலே வீழ மிதித்தவர்;
புற்றி லாடரவி(ன்) பொற்படந் தன்னிலே
புவிக்கு மேலே திருநடஞ் செய்தவர்;
சக்க ரத்தால் கதிரவன் தன்னையே

---

685. குடந்தை - கும்பகோணம் என வழங்கும் ஊர்.
686. வடம் - ஆலிலை; வரிசிலை - கட்டமைந்தவில்.
690. பண்ணையூதி - குழலால் இசையெழுப்பி; நிரை - ஆனிரை.
691. பள்ளிகொண்ட பெருமாள் - அறிதுயில் கொண்டு கிடக்கும் திருமால்.
693. ஆயன் - இடையன்.
694. இச்சை - விருப்பம்; துகில் - ஆடை, புடவை.
695. உசந்த - உயர்ந்த.
696. மருது - மருதமரம்.
697. துய்ய - தூய்மையான, மருதை மடிய மண்ணில் மிதித்தது கண்ணன் இளமையில் நிகழ்த்திய செயல்களுள் ஒன்று.
698. ஆடரவம் - ஆடும் பாம்பு, காளியன்.
699. நடஞ்செய்தவர் - கண்ணன் காளியன் என்னும் பாம்பின் தலைமேல் மிதித்து நின்று நடனமாடிய செய்தி.
700. சக்கரம் - சக்கராயுதம்; கதிரவன் - சூரியன்.

Tirumāl walks south

Viruttam Verse-9

684-687. Māyaṉ who slept on the Banyan-leaf,[191] the king who wielded the strong bow[192]
Kaṇṇaṉ with lotus-eyes, having seen the places of the Dancing Master of Tillai,
And of Lord (Visṇu)[193] walked with His feet paining, towards Kuṭantai,[194] the great spot,
Where the God who was a cowherd,[195] made his appearance.

688-700. The tender-complexioned Māl, who played music[195]
And grazed cattle and slept[196] (on ocean),
The beautiful tender-complexioned Māl without fear,
Māyaṉ who took on the form of a cowherd and
Wishfully took hold of women's clothes
And climbed up on a high tree,
A *marutu*- tree which spread (its branches) around,
And put his foot on it, pushing it down the good earth[197]
He was the person who performed the holy dance[198] on the golden hood
Of the dancing serpent of the hole,[199] seen above the earth,
The person who with his *cakkara* weapon pushed even the sun,

---

191. Allusion to Viṣṇu sleeping on the banyan-leaf as a child at the time of *praḷaya* (dissolution of the worlds).
192. In the incarnation of Rama.
193. The words *Tillai-nātar* and *Nāyakar* in the text are used for Civaṉ (as Naṭarājar) and Viṣṇu (as Kōvintarājar) respectively.
194. Modern Kumpakōṇam.
195. Lord Viṣṇu as a cowherd (Kōpāla), in his incarnation as Kaṇṇaṉ.
196. Viṣṇu is usually depicted in his favourite sleeping-pose on the Milky Ocean. His sleep is a 'knowing slumber' *(arituyil)*, and He is called Paḷḷikoṇṭāṉ, one lying down.
197. Allusion to Kaṇṇaṉ (the young Krṣṇa) climbing a high tree and pushing its branches low in to the Yamuna river to oblige cowherd women. This is referred to in *Akanāṉūṟu* (59) one of the very early Tamil classics.
198. The dance of Kaṇṇaṉ on the serpent Kāḷiyaṉ, called *Kāḷiyamarttaṉam,* one of His famous exploits as a child in the cowherd-colony.
199. *Puṟṟil.* The serpent associated with a hole.

தள்ளி யங்கே ஒளித்து மறைத்தவர்;
பக்குவ மான பெண்வடி வாகியே
பண்டு தேவர்க் கமுர்தம் பகுந்தவர்;
தில்லை கண்டுநடஞ் (சேவித் தங்ஙனே)
தெக்கே நோக்கி நடந்தார் பெருமாளும்.

வடநாடு விட்டுப் பெருமாள் வைகையாற்றிற்கு வருதல்

வல்ல சாரி வடநாடு தான்விட்டு,
வைய்கை யாறுதனை நோக்கியே மாயன் —
பாண்டி நாடும் வளங்களும் போயென
பண்டு பூமிதனை யளந்த மாயன் —
ஆற்றை அணைகெட்ட அன்றுதான்
ஆனதொர் பாண்டியன் கய்யினால்
மாற்றா லடியுண்ட வள்ளலார்
மண்ஞ்சு மந்ததொர் வைய்கையில் தானவர்,
ஏற்றம் பெரியதொர் மாயவன் —
இசைந்த தோர்நல்ல கேத்திர பாலனும்,
கூற்ற மெனவே (கூளி) கணங்களும்,
கொல்ல வல்லதோர் மாகாளி கூட்டமும்,
தாவ மானதோர் சங்கிலிப் பூதமும்,

---

701. சூரியனைச் சக்கரத்தால் மறைத்தது பாரதப்போரில் 14 - ஆம் நாள் நிகழ்ந்த செய்தி. சயத்திரதனைக் கொல்வதற்காகக் கண்ணன் சூரியனை மறைத்துப்பின் வெளிப்படச் செய்து அருச்சுனனுக்கு உதவினார். அருச்சுனன் தன் வஞ்சினப்படி சயந்திரதன் தலையைக் கொய்து, சிமந்த பஞ்சக மடுவில் தவம் செய்து கொண்டிருந்த அவனுடைய தந்தையின் கைகளில் போய் விழச் செய்தான்.
702. பெண்வடிவாகியது - மோகினி அவதாரம்.
703. பண்டு - முன்பு; பகுந்தவர் - பகிர்ந்தவர்; பிரித்து அளித்தவர், பரிமாறியவர்.
707. வைய்கை - வைகை; ஐகார முதல்மொழிச் சொற்களுடன் யகர ஒற்றுச்சேர்த்து ஓசையை மேலும் மென்மையுறச் செய்யும் வகையில் இவ்வாசிரியரின் பாடல்களில் வருதல் குறிப்பிடத்தக்கதொன்று.
710. ஆற்றை அணைகட்டியது - வைகையாறு பெருக்கெடுத்தபோது அரிமர்த்தன பாண்டியன் வைகைக்குக் கரைகட்டச் செய்தான்.
711. பாண்டியன் - பாண்டிய மன்னன்; அரிமர்த்தன பாண்டியன்.
712. மாற்றால் - பிரம்பினால்; வளாறினால்; வள்ளலார் - சிவபெருமான்.
713. மண் சுமந்தது - வந்தி என்னும் பிட்டு வாணிச்சியின் அன்பினை வெளிப்படுத்த அவளுக்குக் கூலியாளாகச் சிவன் பிட்டுக்கு மண் சுமந்தார்.
714. ஏற்றம் - உயர்வு, புகழ்; மாயவன் - திருமால்.
716. கூற்றம் - யமன்; கூளிகணங்கள் - பூதபிசாசக் கூட்டங்கள்.
717. காளி - துர்க்கை
718. தாவம் - துடிப்பு.

701-705. And secreted and concealed him then and there[200],
And the person who took the shape of a worthy woman[201]
And distributed ambrosia to the gods once,
Saw Tillai and bowed to the Dancing Form[202]
And then the God-Ruler walked in the southern direction.

Reaching the Vaikai river

706-718. Leaving the excellent tour of the northern area
And the Pāṇṭiyaṉ land and its wealthy resources
Māyaṉ, the Māyaṉ who once out-measured the earth,
Looked towards the Vaikai river,
The Vaikai in which the Lord of generosity[204]
Was beaten the other day by a cane[205]
Held in the Pāṇṭiyaṉ's hand as He carried loads of sand,[206]
As the fitting Guardian deity,
The attendant groups (of goblins) like very Death,
The great Kāḷi's train, skilled in killing,
The active *Caṅkili* - goblin,
And the leading, big goblin-sprites

---

200. Kaṇṇaṉ's hiding the Sun with his *Cakkara-āyutam* (Discus-weapon) took place on the 14th day of the *Makāpāratam* war; this was done to oblige the Pāṇṭavar to kill Cayattirataṉ.
201. Allusion to the story of Viṣṇu's assuming the shape of a beautiful woman called Mōhini to mislead the evil celestials *(Rākṣasar)* and distribute ambrosia *(amirtam)* to the good celestials *(Tēvar)*.
202. Viṣṇu is depicted as having bowed to Naṭarājar - Civaṉ's Dancing form, obviously reflecting the poet's own admiration for the former.
203. Viṣṇu's over-all exploit of measuring the worlds.
204. *Vaḷḷalār*: 'munificent-giver', used here for Śiva.
205. One of the 64 sacred legends of Maturai, narrated in *Tiruviḷaiyāṭaṟpurāṇam*, says that Arimarttaṉa Pāṇṭiyaṉ happened to beat Śiva with his cane when He appeared as a labourer to assist an old woman (allotted a share of piling up the sand in the work of building a wall on the Vaikai) and failed to complete the work he took up.
206. Śiva is said to have carried sand-loads as He engaged Himself as a labourer, under a helpless old woman, a rice-pudding-seller *(piṭṭuvāṇicci)*, out of compassion for her.

தலையா னபெரும் பூதப் பேய்களும்,
மாலவர் தன்னைச் சேவித்துப் பின்வர —
வைய்கை யாற்றிலே வந்தார் பெருமாளும்.

ஏடகப்பதி கண்டு மாயன் மதுரைக்கு வருதல்

(சாத்திர புத்திரர் சம்மந்த ரானவர்),
(சம்மந்தப்) பெருமாள் கய்யி (லேடுதான்)
ஏற்றம் பெரியதோர் ஆற்றிலே
ஏடு வோடி யெதிர்முன் னேறிய
ஏட கப்பதி தன்னையும் கண்டுதான்
இன்ம்ப மாயன் மதிரைப் பதிபுக்கு —
நாடும் சிறப்பும் வளமையும்
நல்ல மதிரைப்பதி கண்டுதான்
அத்த னழகிய சொக்கனார்
(அன்று) மண் சுமந்த வைய்கை யாற்றையும்
புத்தி களித்துறக் கண்டுதான்
பொன்னின் மாயன் வந்தார் மதுரைக்கே.

மதுரையில் மாயவன் கண்ட காட்சிகள்

மதிரைப் பதியும் வளமையும் —
மங்கைபங்க ரழகிய சொக்கனார்,
குருதை தெருவில் நடத்தியே
கோலவீதித் தெருவிலே வந்துதான்,

---

720. சேவித்தல் - வணங்கி வழிபடுதல்.
723. சம்மந்தப்பெருமாள் - திருஞானசம்பந்தர்.
725. ஏடு ஓடி முன்னேறியது - திருஞானசம்பந்தர் சமணர்களுடன் நிகழ்த்திய வாதப்போரில் தேவாரப்பாடல் எழுதிய ஏட்டை வைகைப் பெருக்கில் இட அந்த ஏடு ஆற்றின் பெருக்கை எதிர்த்து ஓடி ஓரிடத்தில் ஒதுங்கியது. அதனால் அப் பகுதிக்குத் திருவேடகம் என்பது பெயராயிற்று.
726. ஏடகப்பதி - திருவேடகம்.
727. மதிரைப்பதி - மதுரைமாநகர்.
730. சொக்கனார் - சொக்கலிங்கப் பெருமான்; மதுரையில் கோயில் கொண்டருளும் இறைவனின் திருநாமம்.
733. பொன்னின்மாயன் - திருமகள் கணவனாகிய திருமால்.
734. மதிரை - மதுரை; பேச்சு வழக்கு.
735. மங்கைபங்கர் - உமாதேவியை இடப்பாகத்தே கொண்டவர்.
736. குருதை - குதிரை, பேச்சுவழக்கு உருமாற்றம்; சிவபெருமான் நரியைப் பரியாக்கி மதுரை வீதிகளில் கொண்டுவந்து அரிமர்த்தன பாண்டியனிடம் ஒப்படைத்தது.
737. கோலம் - அழகு.

719-721. Followed Māyaṉ, saluting Him.
Māyaṉ, whose glory is great,[207]
The God-Ruler came to the Vaikai river.

Reaching Maturai

722-733. Sweet Māyaṉ saw the town of Ēṭakam,[208]
In which a palm-leaf in the hand of the great[209] Campantar
(Campantar, the Son of the scriptures)[210]
The palm-leaf ran against (the flood) forward
In the river whose glory is great.
And he (then) entered Maturai city
Seeing the land-spread, the excellence and the opulence
Of beautiful Maturai city, and seeing to His heart's pleasure
The Vaikai river in which the other day
The God-father, Cokkaṉār[211] carried (baskets of) sand,
Māyaṉ, beauteous as gold, came to Maturai itself.

In Maturai

734-737. (Seeing) Maturai city and its prosperity
The sacred sports, which the beautiful Cokkaṉār,
The Sharer of His form with the Lady, played,
Coming into the gay, high streets,
Conducting horses in the streets—[212]

---

207. 1.714 contains the subject clause and has to be taken with 1.720 below to get the syntax of the passage right.
208. A place on the bank of the Vaikai river marking the spot where a contest between the Jainas and Campantar the Caiva saint, took place and palm-leaves with relevant sacred writings of the two parties were set afloat on the Vaikai-flood with the condition that the palm-leaf which escaped sinking and swam against the water-current would give victory to the champions on its side. Campantar's palm-leaf went against the current at the place called Ēṭakam and he won.
209. Example of sentence interruption — anacaluthon.
210. One of Civaṉ's names as the Deity of Maturai.
211. 'Sharer of His form with the Lady' — half male, half female *(Arttanārīcuvarar)* in 1.735
212. These miracles, narrated in *Tiruviḷaiyāṭaṟpurāṇam*, pertain to Śiva's turning foxes into horses and leading them to the Pāṇṭiyaṉ king's palace, through the streets of Maturai to save the saint Māṇikkavācakar from punishment.

அன்று அழகிய சொக்கனார்
ஆன திருவிளை யாட்டெல்லாம்
முன்றில் நடந்து பெருமாளும்
முத்திலங் கும்வடச் சாரலில் வந்தனர்.
பண்ம்ப தாக அழகிய சொக்கனார்
பாண னுக்குப் பலகைக ளிட்டதும்,
பெண்ணின் நல்லதோர் பிட்டு வாணிச்சிக்கு
பித்த னாய்வந்து கூடை யெடுத்ததும்,
வண்டமிழ் தமிழ்ச் சீரிய சொக்கனார்
வணிகர்க்கு வளைகூறி விற்றதும்,
தண்டு பணிக்கனை வெல்லவே
தகடப்பரிசை யெடுத்ததும்,
செம்மை யான திருவிளை யாட்டுகள்
தேசத்தி லேபெருங் கீர்த்தி யானதும்,
உண்மை யாகவே மாயவன் கண்டுதான்
ஒக்கவே சொல்ல 'எண்ணத் துலையாது —

---

739. திருவிளையாட்டு - மதுரைச் சொக்கநாதப்பெருமான் நிகழ்த்திய 64 திருவிளையாடல்கள் திருவிளையாடற்புராணத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

740. முன்றில் - முற்றம்.

741. வடச்சாரல் - வடபக்கம்.

742. பண்ம்பதாக - பண்பதாக. 'இன்ம்பம்' என னகர ஒற்றுடன் 'ம்' வந்தாற்போன்று இங்கு ணகரஒற்று அடுத்தும் வருகிறது.

743. பாணன் - பாணபத்திரன் என்ற இசைவாணன். மழை மிகப் பெய்த நள்ளிரவில், 'இருந்து பாடு' எனப் பாணற்குப் பலகை ஆசனம் இறைவன் அருளினார். பரஞ்சோதி திருவிளையாடல் 43-வது பலகையிட்ட படலத்தில் இவ் வரலாறு உள்ளது.

744. பிட்டுவாணிச்சி - பிட்டு விற்று வாழ்ந்த சிவபக்தியில் மேம்பட்ட வந்தி என்பவள்.

745. பித்தனாய் - பித்தனைப்போல. கூடையெடுத்தது - கூடையெடுத்து மண் சுமந்தது, பரஞ்சோதி திருவிளையாடலில் 61 ஆவது மண் சுமந்த படலத்தில் இவ் வரலாறு விரிவாகக் காணலாம்.

747. பரஞ்சோதி திருவிளையாடல் 32-ஆவதான வளையல் விற்றபடலம் இவ்வரலாற்றை நன்கு விளக்குகிறது.

748. தண்டுதல் - நெறிதவறிச் செல்லுகை; பணிக்கன் - படைக்கலம் பயிற்றுவிப்போன்.

749. தகடப் பரிசை - தகடாக அமைந்த கேடயம், பரஞ்சோதி திருவிளையாடல் 27 ஆவதான 'அங்கம் வெட்டின படலம்' என்பதில் வரும் வரலாறு 748-749ஆம் அடிகளில் சுட்டப்பட்டுள்ளன.

753. ஒக்கவே சொல்ல - முழுவதும் பொருந்தச்சொல்ல; துலையாது-அளவிட இயலாது.

738-753. The God-Ruler (recalled), walking along housefronts,
And came into the region with pearls shining.
Truly Māyavaṉ visioned[213] (the famous event of legend),
Beautiful Cokkaṉār nobly giving a seat to Pāṇaṉ[214],
Coming as a crazy person to carry the baskets (of sand),
For the good woman, the rice-pudding seller[215],
Offering and selling bangles to merchants[216]
By the great Cokkaṉār of native Tamil,
And of the fertile Tamil land[217],
And (His) wielding the iron-shield armour
To put down the misbehaving teacher of swordsmanship[218]
And the great fame in the land of these noble sacred sports;
No speech or thought can fully deal with them[219].

---

213. *Māyavaṉ kaṇṭutāṉ* (l.752) has to be taken up earlier for prose order.

214. Pāṇapattiraṉ, a singer was given a plank to sit on and sing, on a midnight of heavy rains, by Cokkaṉār *(Tiruviḷaiyāṭal-purāṇam, 43)*.

215. The incident of the rice-pudding seller, (called Vanti) already referred to in l.713, *(Tiruviḷaiyāṭaṟpurāṇam, 61)*.

216. Cokkaṉār is said to have put bangles on the wrists of women of the *vaiciya* (merchant) class (who fell in love with him) and relieved their curse (Ibid. 32).

217. *vaṇṭamiḻ tamiḻc-cīriya Cokka-van tamiḻ* may be taken as the rich Tamil land and Tamil, as mature Tamil speech. They also admit of interchange of meanings between themselves.

218. A lecherous teacher of sword-fights who misbehaved with his own guru's wife was punished with death in a personal combat in which Śiva dressed as the *guru*, fought with the wrong-doer (Ibid. 27).

219. The sacred sports *(Tiruviḷaiyāṭṭukaḷ)*, 64 in number, are celebrated in 3 *purāṇams* on Maturai—two versions entitled *Tiruviḷaiyāṭaṟpurāṇam* and one called *Cuntarapāṇṭiyam*.

சொக்கநாதரை மாயவன் தெரிசித்தல்

செய்ய பாதங்கள் நோக நடந்துதான்
செம்பொன் மாடத் தெருவீதி தன்னிலே —
துள்ளும் விடையேறும் நாதனார்
சொக்கர் மாபதி யான தலத்திலே —
வள்ளல் பெருமா ளரங்கனார்
வந்தாரே சொக்கர் மாபதி தன்னிலே.
நித்த லும்புரி கோபுர வாசலும்,
நீதி யானதொர் மண்டப வாசலும்,
கொத்து மாமணி மண்டபங்களும்,
கோலக் கொடிமர வீதியும்,
செம்பொன் மாமணி மண்டப வாசலும்,
செல்வமுந் திருமுத்த வீதியும்,
அல்லே செறிகுழல் (மாதர்கள்)
ஆடரங்கும், அணிமணித் தூண்ங்களும்,
அக்கரவும் பிறையு மணிந்தவர்
ஆலைய மாகும்பர நாதர்
சொக்க நாதரைத் தெரிசித்து மாயன்,
துங்க நெடுமால், மாயவன் தானவர் —

---

755. மாடத்தெரு - கோவிலைச் சுற்றிலும் அமைந்துள்ள தெருக்கள்.
757. சொக்கர்மாபதி - சொக்கலிங்கப் பெருமான் வீற்றிருந்தருளும் மதுரை மூதூர்.
758. அரங்கனார் - திருவரங்கப் பெருமாள்.
759. சொக்கர்மாபதி - சொக்கலிங்கப் பெருமான் திகழும் திருக்கோயில்.
760. நித்தலும் - தினமும்.
763. கொடிமரவீதி - கொடிமரம் நிற்கும் வெளிச்சுற்று.
765. முத்தம் - முற்றம், வெளியிடம்.
766. அல் - இருள்.
767. ஆடரங்கு - நடனசாலை.
768. அக்கரவும் - அக்கும் அரவும்; எலும்பும் பாம்பும்; பிறை - பிறைச் சந்திரன்.
769. ஆலையம் - ஆலயம்; தங்குமிடம். ஆலையமாகும் - உயிர்கள் எல்லாம் சென்று ஒடுங்கும் இடமாகும்.

Meeting Cokkar

754-771. Walking with His soft feet paining,
On the main street, beautiful like reddish gold,
In the great city of Cokkar, the Master
Who rides the vaulting bull (as His Mount),
The Munificent God-Ruler[220] the great Araṅkaṉ[221]
Came indeed into the great town of Cokkar.
The temple of Cokkaṉātar, the Wearer of the bone-garland
And the serpent and the crescent moon, has towered entrances[222]
Always charming people everyday,
And (there are) well-made *maṇṭapa* entrances,
And fortifications and big, fine *maṇṭapas,*
And the outer street with the beautiful flag-staff
And the gateway of the great, fine *maṇṭapam* like red-gold
And sacred, pearl-like streets for walking
And dance-arenas of women with tresses
Dense with the darkness of the night itself,
And excellent ornamental pillars,
Māyaṉ, the High Towering Māl, saw
The High Master, Cokkaṉātar;
Māyavaṉ, He[223]

220. *Vaḷḷaṟ-perumāṉār:* This phrase here used for Viṣṇu, has also been used for praise of Śiva earlier.
221. Lord of Ciraṅkam.
222. *Kōpura-vācal:* 'entrances with towers' may be taken as a singular usage with a plural sense as well.
223. A sentence beginning, abruptly broken off in the style of oral art.

அங்கயற்கண் அம்மை மாயவன் வருகைபற்றிக் கேட்டல்

பங்கையச் செபத்து முகத்தினாள்
பாத மாமலர் கோகன நாயகி,
அங்கயற் கண்ணுமை யம்மை தன்னை
ஆன மாயவன் பாசமுடன் கண்டு —
தங்கை யாகிய செங்கயற் கண்ணினாள்
சங்கை மாயனைக் கண்டங் கருள்செய்து,
'செங்கண் மாயவ னாகிய மாயனே!
தெய்வ மாயனே! அண்ணனே! போந்தது'
என்று நாயகி தானு மருள்புரிய,
இன்ம்ப மாகிய மாயனுங் கண்டுதான் —

மதுராபுரி விட்டு மாயன் பெயர்தல்

வென்றி யாகிய மாயனு மங்கனே
வீற தாக மதுரா புரிவிட்டு,
நேய மாகிய மாயனுந் தானுமே
நீதி யாகவே தெய்வார்கள் சூழவே,
(தேச) மானதொர் தென்பூமி நோக்கியே
தெய்வ மாயன் பிறப்பட்டு வந்தார்.

---

772. பங்கையச்செபம் - தாமரை மலர் போன்ற சிவப்பு; செபத்து-சிவத்து,
773. கோகனம் - கோகனகம், செந்தாமரை.
774. அங்கயற்கண்ணுமை - மீனாட்சியம்மை.
775. பாசம் - பெருவிருப்பு, பற்று.
776. கயற்கண்ணி - மீனாட்சி
777. சங்கைமாயன் - சங்கு தரித்த திருமால்.
779. உமாதேவியின் தமையன் திருமால். ஆதலின் அண்ணனே என்று விளித்தாள்; போந்தது பெயர்ந்து வந்தது; திருவரங்கம் விட்டு வந்தது.
782. வென்றி - வெற்றி.
783. வீறு - பெருமை, அழகு, வெற்றி; மதுராபுரி - மதுரை நகர்.
784. நேயம் - அன்பு.
785. நீதி - முறைமை, தெய்வார்கள் - தெய்வத்தன்மையுடைய பூதங்கள் முதலியன.
787. பிறப்பட்டு - புறப்பட்டு, பேச்சுநடை.

Meeting Umai

772-781. The great Māyavaṉ saw with love[224]
The Lady whose face had the reddishness of the lotus,
The Lady whose great flowery feet were red lotus-like,
Umai with beautiful, fish-like eyes.
The red fish-eyed lady, sister (to Māl)
Seeing Māyavaṉ having the conch in his hand,
She gracefully said: 'Oh Māyaṉ,
Who is red-eyed Māyavaṉ[225] (wonder-worker)!
Elder brother! Your coming (is great)!
So the lady spoke with love
And sweet Māyaṉ having greeted her—

Leaving Maturai

782-787. Victorious Māyaṉ then
Left Maturai in state,
With His servitors regularly surrounding Him
And the kindly Māyaṉ - He,
The Divine Māyaṉ, started and marched
Towards the country that is unique,
The southern region.

224. The subject in l.775.
225. Though the two words, Māyaṉ and Māyavaṉ are used in this poem in free variation, in this context Māyavaṉ 'the performer of wonders with red eyes' is distinguished from Māyaṉ, the usual name, and the two related to the same God.

விருத்தம்

10. *பிட்டது சுட்ட மங்கை பெண்கொடிக் கன்பு செய்தோன்*
மட்டணி சொக்கர் தம்மை மாயவர் வந்து கண்டு,
அட்டதிக் கென்னு மாயன், அரவணை யம(ர்)ந்த செல்வன்,
திட்டென மதுரை விட்டு, தெச்சணா பூமியில் போந்தார்.

மானாமதுரை அவனியாபுரம் வழியாய்த் திருமால் செல்லுதல்

வேறு

மதிரை தனைவிட்டு மாயவனார்
மானார் மதுரையுந் தான்கடந்து —
பிதிரின் வழிவந்த பிராமணனும்
பெரிய திருமாலும் முன்வரவே —
சதிரத்துடன் தொண்ணூறு சங்கிலியும்
தாண்டுங் கேத்திர பாலனோடே
அதிருங் குரல்வல்ல கூளிகணம்,
ஆன மாகாளி கூட்டங்களும்
காளைமா பூதம் வேதாளமும்
கபால மேந்தும் பெரும்பூதமாம்!
பாளை கமழ்கின்ற பூங்காவிட்டுப்
படரு மவனியா புரத்தில் வந்தார் —

---

788. பிட்டதுசுட்டமங்கை - வந்தியம்மாள்.
789. மட்டு - தேன்பொருந்திய மலர்.
790. அட்டதிக்கு - எட்டுத்திசை; 'திசையான நெடுமால்' என 532ஆம் அடியில் குறிப்பிடுவது ஒப்புக்காணத்தக்கது. அரவணை - ஆதி சேடனாகிய பாம்புப் படுக்கை.
791. திட்டென - விரைவாக.
793. மானார்மதுரை - மதுரைக்குக் கிழக்கேயுள்ள மானாமதுரை.
794. பிதிர் - தந்தை; இங்கே படைப்புக் கடவுளான பிரமன்; பிதிரின் வழிவந்த - பிரம தேவனின் கால்வழியில் வந்த. 'பிரமவழிமறை யோரும்' என இந்நூலுள் (1103) வருவதும் நோக்கத்தகும்.
795. பெரிய திருமால் - பெரிய பெருமாள்.
796. சதிரம் - ஆற்றல்; சங்கிலி - சங்கிலிப்பூதம். சங்கிலிப்பூதம் பற்றிய குறிப்பு முன்னரும் (295-ஆம் அடி) உள்ளது.
798. அதிருங்குரல் - பிறரை நடுங்கச் செய்யும் குரல்.
800. காளைமாபூதம் - காளமாபூதம், கரிய பெரும்பூதம்; வேதாளம் - பேய்.
801. கபாலம் - மண்டையோடு.
802. பாளை - கமுகம்பாளை.
803. அவனியாபுரம் - மானாமதுரைக்கும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கும் இடையில் உள்ள ஓர் ஊர்.

Viruttam Verse-10

788-791. Māyavar, after coming and seeing Cokkar wearing honeyed flowers,
Who showed His love for the spreading[226] tender plant-like damsel baking rice-pudding,
Māyavaṉ, Himself the eight directions, the Recliner on the serpent-couch,
Left Maturai quickly and went into the southern land.

On the way south of Maturai

792-803. The great Māyavaṉ leaving Maturai, and passing Māṉā-maturai,[227]
The brahman, of priestly fore-fathers,[228] and the great Tirumāl
Went on along with the Guardian deity of His abode
Who ably jumps even over land of ninety *caṅkilis,*[229]
Goblin-groups capable of resounding noise,
Retinues of the powerful, great Kāḷi,
The big, dark goblin[230] and the demon goblin
And the huge goblin holding a skull!
They came into spacious Avaṉiyāpuram,
Leaving the flowery groves, fragrant with palm shoots.
The marvellous God-Ruler, having come

226. See footnote 206.
227. Obviously Māṉāmaturai, south-east of Maturai.
228. Reference to the Vedic priest who performed penance and was asked by Tirumāl to go over to Tiruvaṉantapuram with Him.
229. A square Caṅkili is equal to 484 sq. yds; 10 sq. *caṅkili's* make an acre.
230. The Kālamāpūtam mentioned earlier in l. 611. as distinct from nākapūtam. The goblins could assume shapes they wanted.

அவனி யாபுரந் தனிலே
அதிசயப் பெருமாளும் தான்வரவே
கவனம் நடத்திய புவனமிட்டு
காளமா பூதந் தன்னுடனே,
உடனாக வந்த மறையோனும்,
உலகு தொழநின்ற மாயவரும்,
நடவர் பெருவழி வழியாகவே
நல்ல பெருமாளும் நடந்தருளி,
அல்லின் வடிவு கொண்டருளும்
ஆன பெருமாள், அரும் பெருமாள்,
நல்ல பெருமாள் நகர்ப் பெருமாள்,
நாமப் பெருமாள், நலப்பெருமாள்,
வெல்லும் பெருமாள் மாற்றலரை,
வீரப் பெருமாள் தானடந்தார்.

பெருமாள் சீவலபுத்தூரைக் கண்டு, மேலும் நடத்தல்

நடந்தார் சீவல புத்தூர் தன்னில்,
நகரும் வளமுங் கண்டருளி,
வடந்தா னணிக்கவே துயின்ற மாயன்
வருவார் சீவல புத்தூரிலே —
புத்தூர் கண்டங் ககமகிழ்ந்து,
பொன்னின் பெருமாள் தானடந்து,
தத்தி மந்தி குதிபாயவே
சந்தை வெளிவிட்டுத் தானடந்தார்.

---

806. கவனம் - வேகம்; புவனம் - பூமி.
810. நடவர் பெருவழி - நடந்து செல்வோர்க்குரிய பெரிய பாதை.
814. நகர் - கோயில்.
815. நாமம் - பெருமை, புகழ்.
816. மாற்றலர் - பகைவர்.
818. சீவலபுத்தூர் - ஸ்ரீவில்லிபுத்தூர்.
820. வடம் - ஆலிலை; அணிக்க - பொருந்த, அழகுற; வடந்தானணிக்கவே துயின்ற மாயன் - வடபத்திரசாயி; ஆலிலையில் பள்ளிகொண்ட பெருமாள்; ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் திருமால் திருநாமம்.
824. தத்தி - துள்ளி; மந்தி - குரங்கு; குதிபாய - குதிக்க.

804-817. Into Avaṉiyāpuram, walked fast,
Leaving the area, with the big dark goblin
And the Vedic follower accompanying Him;
Māyavar, adored by the world, the Excellent Perumāḷ[231]
Graciously walked
Along the highway of all walkers,
Powerful Perumāḷ who has deigned to take on
The dark night's form,[232] Precious Perumāḷ,
Good Perumāḷ, Temple-dweller Perumāḷ,
Famous Perumāḷ, Benevolent Perumāḷ
Enemy-conquering Perumāḷ,
Heroic Perumāḷ[233] himself walked along.

Beyond Cīvalaputtūr to Tirukkuṟṟālam

818-825. He walked into Cīvalaputtūr;
Graciously seeing the town and its plenty;
He comes[234] into Cīvalaputtūr,
Where Māyaṉ[235] slept beautifully on the banyan-leaf.
Seeing Puttūr[236] and feeling glad in heart,
The golden Perumāḷ - as He went along,
He left a lane-space
For the female monkey to hop and jump about.

---

231. Perumāḷ elsewhere taken as 'God-Ruler', is here retained to show the beautiful repetitive use of this magic word of praise the poet indulges in.
232 Reference to the dark-complexion associated with Tirumāl.
233. The artful repetition of the appellation 'Perumāḷ' with varying adjectives is meant to give satisfaction to devotional fervour as the ballad is sung with the music of the bow. It is also a literary device of lively oral narration.
234. Historic present tense. Modern Srīvilliputtūr is the place here mentioned. Refrain-like repetitions of *naṭantār* and *varuvār*.
235. The Deity of the temple at Srīvilliputtūr is called Vaṭa-patracāyī (the Recliner on the Banyan-leaf), Viṣṇu in the form of a Child lying and playing on the Banyan-leaf after swallowing the world at the time of the Deluge *(pralaya)*.
236. Shortened form of Cīvalaputtūr.

திருக்குற்றாலத்திற்குத் திருமால் வருதல்

வேறு

முத்தின் பெருமாள் தானடக்க, முத்துபூதம் சேவிக்கவே
பத்துநூறு பூதம்வர, பச்சமாலவர் முன்னடக்க,
முன்னடந்தார் நாராயணர், முத்துபூதம் பின்வரவே.
வன்னத் தெய்வ கன்னியர்கள் வந்துநின்று குரவையிட,
குரவையொலி மொகுமொகென, குஞ்சரங்கள் பணிமாற,
விரகுதெய்வார் பலர்சூழ, வீரநெடுமால் தான்வரவே —

சங்குடனே சக்கரந்தான் தரித்தபிரான் முன்வரவே,
கங்காள பலபூதம் கார்வண்ணரைச் சேவிக்கவே,
சேவித்துப் பூதம்வர, திருமாலும் வழிநடந்து,
பாவித்து மாயவரும் பார்மீதி லேநடந்தார்.
மருக்குத்த உமைபாகர் மாறியாடும் பெருமாளும்
திருக்குத்தா லத்தில் வந்தார், திருமாலு மப்பொழுதே —

திருக்குற்றாலக் காட்சிகள் காணல்

சங்கைநெடு வீதிகளும், தமிழ்முழங்கும் மேடைகளும்,
வேதாவு முருத்திரரும் வீறுடனே நயந்திருக்கும்
பாதாள வாசல்களும், பைம்பொன்மணி மண்டபமும்,

---

827. பத்துநூறு - ஆயிரம்.

829. வன்னம் - அழகு, குரவையிடல் - பெண்கள் வாயினால் எழுப்பும் மங்கல ஒலி.

830. மொகுமொகென - ஒலிக்குறிப்பு; குஞ்சரங்கள் - யானைகள்; பணிமாறுதல் - தொண்டுசெய்தல்.

831. விரகு - சாமர்த்தியம், உற்சாகம்.

834. கங்காளம் - எலும்புக்கூடு; கங்காள பூதம் - எலும்புமாலை அணிந்த பூதம்.

835. பாவித்து - நினைந்து; தாம் செல்லும் நோக்கத்தை எண்ணி, 'சிந்தையுற்று மாயவனார்' எனப் பின்னும் (847) வருதல் காண்க.

836. மருக்குத்த - மருங்குற்ற; உடல் மருங்கில் சேர்ந்த; மாறியாடும் பெருமாள் - கூத்தப்பெருமான்.

837. திருக்குத்தாலம் - திருக்குற்றாலம், பேச்சுவழக்கு மாற்றம்.

838. சங்கைநெடுவீதி - சங்கநெடுவீதி; புலவர் சங்கமிருந்த பெரிய தெரு, 'குற்றாலநாதர் சங்கநெடுவீதிதனிலே' என்றும் (8), 'வருசங்க வீதிதனில் வசந்தபூங்கோதை' என்றும் (14) குற்றாலக் குறவஞ்சி இவ் வீதியைப் பல இடங்களில் சுட்டுகிறது. குறவஞ்சிநூலின் உரையில் 'நீண்ட சங்க வடிவமாகச் செய்யப்பட்ட தெரு' என்று விளக்கம் காணப்படுகிறது. ஆயின், 'தமிழ்முழங்கும் மேடைகளும்' என அடுத்து வருதலின் முற்கூறிய சங்கம் புலவர் சங்கமே எனத் துணியலாம்.

839. வேதா - பிரமன்; உருத்திரர் - உருத்திரகணத்தார்; வீறு - சிறப்பு; நயந்திருத்தல் - விரும்பியிருத்தல்.

840. பாதாள வாசல் - நிலவறைவாசல்; பைம்பொன் - பசும்பொன்; சிறந்த பொன்.

826-837. As the Lord of pearls[237] walked and the pearl-goblin bowed,
And ten hundred goblins followed,
He, green-complexioned Māl went forward.
Nārāyaṇar[238] walked in front, the pearl-goblin coming behind.
Beautiful, celestial damsels coming there, uttered *kuravai*[239] notes,
And the *kuravai* notes rose aloud with a *mogu mogu* sound;
Elephants (on the way) venerated the Lord with their service;
Many eager priestly attendants stood around,
As the towering hero Māl went on;
The Lord wearing the Discus with the Conch went on
And many goblins of Śiva bent in salutation
Before cloud-coloured Māl; as the goblins
Followed doing obeisance to Him, Tirumāl walked the way;
Māyavar mindfully walked over the land.
The Lord,[240] having Umai near-by, as His half,
And who dances with Her, changing positions,
Also came into Tirukkuṟṟālam. Then Tirumāl too[241]

At Tirukkuṟṟālam

837-840. Long streets with poet's *caṅkams*[242] and platforms for resounding Tamil speeches,
Doorways opening below and capturing the fancy of Piramaṉ and Uruttiraṉ[243] with pride,
Beautiful golden *maṇṭapams* reaching the clouds,

---

237. Viṣṇu is naturally the Lord of the pearls of Pāṇṭiyaṉ's land, famous for this wealth. The 'pearl-goblin' is a new introduction by the poet in this context.
238. One of the choice names of Viṣṇu suggesting His supreme protectorship of the devotee.
239. *kuravai:* auspicious noise raised as a sign of welcome, happiness etc. by women on notable occasions.
240. Perumāḷ is here used for Śiva.
241. Sentence begun and left unpursued.
242. *Kuṟṟālak-kuṟavañci* a poem describing Kuṟṟālam, speaks of *caṅka-vīti* (8 and 14) and it has been taken as 'street formed in the shape of a *caṅkam* (conch)'. But the sense of an 'academy' fits in with this context as this reference is succeeded by celebration of Tamil and plat-forms from which Tamil speeches resounded.
243. Brahma and Rudra (Śiva).
244. Red-coloured powder used for temple worship.

குங்குமஞ்சேர் வீதிகளும், குறும்பில்லா நெடுந்தெருவும்,
அரசர்பலர் மனமகிழ ஆனந்தத் திருக்கூத்தும்,
முரசதிரும் மண்டபமும், முக்கோடி தேவர்களும்
பத்தியுள்ளோர் தான்புகழும் பரமானந்த (நாதன்),
புத்திலே யுறைந்திருந்த புத்திடங்கொண் டார்தனையும்
வந்துகண்டு மாயவனார், வண்மையுட னாசரித்து,
சிந்தையுற்று மாயவனார் தென்பூமி தனைநோக்கி —

அழகர்பதிக்கு மாயவர் வருதல்

கடுநடையாக நடந்து, கன்ம்மபூமி தனிலே
ஆடுபூசை சமைந்திருந்த அழகர்பதி தன்னில் வந்தார்.
அழகருட திருநாமம் ஆனபுகழ் மெத்தவுண்டே!
புளகிதமா அழகர்பதி பொன்னாடு (போலிலங்க),
திருமதிலும் ஒளிமுடியும் சென்றுகண்டார் மாயவனார்.
மருவணியு மண்டபமும் மாயவனார் கண்டருளி,
கொண்டலெனு மேனியனார், குருந்தேறு மாயவனார்,
கண்டழகர் திருப்பதியில் கார்வண்ணனா ரவதரித்து

---

841. குறும்பில்லா நெடுந்தெரு - குறும்பலா நெடுத்தெரு; குறும்பலா திருக்குற்றாலத்தின் தலவிருட்சம்.

842. திருக்கூத்து - இங்கே கூத்தப் பெருமான் நடமிடுமிடம் சித்திரசபை எனப்படும்.

843. முக்கோடி - மூன்றுகோடி. முப்பத்து முக்கோடி தேவர்கள் என்பதே பெருவழக்கு, அதனையே இங்குச் சுருக்கிக் கூறினார் போலும்.

845. புத்து - புற்று, புத்திடங்கொண்டார் - புற்றிலே சுயம்புவாய்த்தோன்றிய சிவலிங்கத் திருமேனி.

846. ஆசரித்தல் - ஒழுங்குமுறைப்படி செய்தல், வணங்குதல் முதலியன.

848. கடுநடை - விரைவு நடை; கன்ம்மபூமி - கருமபூமி.

849. அழகர்பதி - குற்றாலத்திற்கும் திருநெல்வேலிக்கும் இடையில் உள்ள ஓர் தலம். வீரகேரளம் புதுருக்குத் தென்கிழக்கேயும் ஆலங்குளத்திற்கு வடமேற்கேயும் உள்ள மலை மேல் உள்ள திருப்பதி. அத்தியூத்துக்கு அண்மையில் உள்ளது. இதனை இப்போது இராமர் திருப்பதி என அழைப்பர்.

850. மெத்தவுண்டு - மிகவும் உண்டு; பல என்றபடி.

851. பொன்னாடு - தேவலோகம்.

852. ஒளிமுடி - பிரகாசமான விமானத்தின் சிகரம்.

853. மருவணியும் மண்டபம் - பூமாலை முதலியன சுவாமிக்குச் சாத்தி அலங்கரிக்கும் அலங்கார மண்டபம்.

854. கொண்டல் - மேகம்; குருந்து - குருந்தமரம்.

855. அவதரித்து - தோன்றி.

841-849. Streets strewn with *kum-kum* powder, the long street with the short jack tree,[245]
The holy Dance of joy[246] gladdening the hearts of kings
The *maṇṭapam* astir with the notes of the drum,
And the Most High Lord of bliss, whom three crores
Of gods and those with devotion celebrate with praises,
And the deity 'Liver-in-the earth-hole'[247]
Who took the hole for his residence—
Māyavar came and saw and followed in rich measure
The customs (of obeisance). Taking thought,
The great Māyavan̲, then looking towards the southern land,
Walked with quick steps, and in this land of appointed duties,[248]
Came into the town of Al̲akar, active with good-worship.

At the towns of Al̲akar and Kaḷḷappirān̲

850-855. The fame of the holy name of Al̲akar is much indeed! As Al̲akar's
Town shone in splendour exciting the onlooker like the golden world,
The great Māyavan̲ went and saw the holy enclosing wall
And gleaming crown of the temple-tower;[249] the great Māyavan̲
Graciously beheld the *maṇṭapam* adorned with fragrant *maru* shoots,
The God with His person like a cloud,

245. *kur̲um-palā* 'the short jack' is the holy tree associated as a symbol *(talavirutcam)* with the temple of Kur̲r̲ālam.
246. The dance of Śiva as Naṭarājar in the temple called *Cittiracapai* in Kur̲r̲ālam is here alluded to.
247. The *Liṅka* form of Śiva at Kur̲r̲ālam is a self-manifestation *(cuyampu)* on an earth-hole (pur̲r̲u). The Most High Lord of bliss in the previous line is Śiva in his *āṉanta tāṇṭavam.*
248. *Karma-pūmi,* as India has been named in its old scriptures, meaning 'the land where each does his allotted duties' which have been stated as six in the old lexicon *Tivākaram:* agriculture, industry, painting and allied arts, trade, teaching, and architecture. (Mu. Irākavaiyaṅkār, *Ārāyccittokuti,* (1984), chapter 10, p.145-6).
249. This refers to the top of *vimāṉams* on shrines which glitter in sunlight.

புண்டரிகக் கண்ணனவர் பூசைகொண்டங் கினிதிருந்தார்.

கள்ளப்பிரான் பதிக்குக் கண்ணனவர் வருதல்

கண்டவர்கொண் டாடிடவே கதிரோ னுதித்தெழவே,
பாராளு மாயவனார் பள்ளிகொண்டார் தான்வரவே,
காராரு மாயவனார் கள்ளப்பிரான் பதியில் வந்தார்,
கெருடவா கனமுடையோன் கீர்த்தியுள்ள பெருமாளும்.

பொருநைநதியின் போக்கும் வளமும் கண்டருள்தல்

தருவுடைய பொதுமிமலை தனிலிருக்கு மகத்தியனார்
கயிலாசந் தனிலிருந்து கையுடனே கொண்டுவந்த
அயிலாரும் விழிமடைந்தை ஆனகெங்கை யானவள்தான்,
கமண்டலத்தில் வந்தகெங்கை, கனவரைமே லேயிருந்து
தமண்டம்விட்டு மடமடெனத் தண்பொருந்த மெனக்கடந்து,

---

856. புண்டரிகக் கண்ணனவர் - தாமரைக்கண்ணன்
857. கதிரோன் - சூரியன்
858. பள்ளிகொண்டார் - திருவரங்கப் பெருமாள்.
859. கார் - மேகம்; கள்ளப்பிரான்பதி - ஸ்ரீவைகுண்டம், இங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலுக்குக் கள்ளப்பிரான் என்பது திருநாமம்.
860. கெருடவாகனம் - கருடஊர்தி.
861. தரு - மரம்; பொதுமிமலை - பொதிகை மலை; அகத்தியனார் தமிழ்ச் சங்கம் இருந்த இடமாதலின் இப் பெயர் பெற்றது போலும், மாற்றேடு 'பொதிகைமலை' என்றே பாடம் குறித்துள்ளது. பொதியில் என்பதும் பழம்பெயர். அகத்தியனார் - அகத்திய முனிவர்; பொதிகைமலை-அகத்தியர் வீற்றிருக்கும் மலை.
'தென் தமிழ் நாட்டு அகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்
என்றும்அவன் உறைவிடமாம்; ஆதலினால்
அம்மலையை இறைஞ்சி ஏகி...
நெடுவரையும் கடலும் காண்டிர்' எனக் கம்பர் போற்றுகிறார். (கிட்கிந்தா, நாடவிட்ட. 31).
862. கயிலாசம் - கயிலாசமலை; அகத்தியர் கயிலாய மலையிலிருந்து பொதிகை மலைக்கு வந்து தங்கினார் என்பது புராண வரலாறு.
863. அயில் - வேல்; கெங்கை - கங்கைநதி.
864. கமண்டலம் - முனிவர் நீர் எடுத்துவரும் கலம். கமண்டலத்தில் வந்த கெங்கை - அகத்தியர் கமண்டலத்தில் எடுத்துவந்த கங்கைநீர்; கனவரை - பெரியமலை.
865. தமண்டம்விட்டு - முழக்கஞ்செய்து; மடமடென - ஆற்று நீர் விரைந்தோடும் போது எழும் ஒலிக்குறிப்பு; தண் - குளிர்ச்சி; பொருந்தமெனக் கடந்து - பொருந்தம் என்று உலகு போற்ற மலையை விட்டு இறங்கி. பொருந்தம் - தாம்பிரபருணி நதிக்குரிய பெயர். மற்றும் பொருநல், பொருநை என்னும் பெயர்களும் இதற்கு உண்டு.

856-860. Māyavaṉār who climbs the *kuruntam*[250] tree,
Seeing (the sights of) the holy town of Aḻakar,
The cloud-complexioned One stayed
He-the lotus-eyed, stayed there, sweetly accepting worship.
As onlookers celebrated His praises and the sun rising, went up,
The Ruler of the earth, the great Māyavaṉ, the Sleeper[251]
The cloud-like Māyavaṉ, the possessor of the Karuṭaṉ mount[252]
Came into the town of Kaḷḷappirāṉ[253]

Seeing the Poruṉai river

861-865. Akattiyaṉār, resident on the Potumi[254] mountain with many trees,
Brought the lady with lance-like eyes, Keṅkai[255];
She, Keṅkai who came in the water-vessel (of the sage),
Making a loud noise[256] from the top of the solid mountain,
Runs down with a rapid sound as the cool *poruntam.*[257]

---

250. Allusion to Kṛṣṇa's climbing - a tree on the bank of the Yamuna river and playing a trick on cowherd women.
251. Paḷḷikoṇṭāṉ literally means 'one who lies down' and here refers to the Deity of Cīraṅkam in the posture of sleep.
252. The Holy Eagle named Karuṭaṉ is Viṣṇu's *vākaṉam* (riding vehicle).
253. Kaḷḷappirāṉ is the name of Viṣṇu as the Deity of the temple at Srīvaikuṇṭam in the Tirunelveli region.
254. The poet's colloquial form of the literary *Potikai,* found in another manuscript of the work. Potiyil is the commoner form; its fame as Akattiyar's abode is seen in *Kampa-rāmāyaṇam* IV, *Nāṭavitta paṭalam,* 31.
255. Gaṅgai, the (river) taken as a lady with eyes like lances, (a stock simile used as an attribute of wc ıen).
256. *taman.ım;* loud noise. A rare usage, (etymology uncertain) for water falling from the big mountain.
257. The archaic form of Poruṉai, (Tāmpiraparaṇi river) used several times in the text.

பூலோகம் வாழவென்ன, புவனமெங்கும் நெல்விளைய,
நரவுலகந் தான்வாழ, நல்லகா லணைபலதும்
தண்டரள வாள்விகளும் தண்பொருந்த மெனச்சரிந்து,
முண்டகஞ்சேர் திருக்குளமாம், முத்தாறாம், வாள்விகளாம்,
காவினங்கள் பூமலர்கள் கமுகினங்கள் குலைவிரிய
மாவினங்கள் துளிரலைய, மயிலினங்க ளாடல்செய்ய,
செம்பொன்னின் திருச்சாலி திகழ்வரம்பில் குலைசரிய,
நம்புமலர் வெஞ்ஞாலி நல்வரம்பில் குலைசரிய,
மடையில்நின்ற சினவாளை மண்டிவயல் தனில்குதிக்க,
(கடைச்சியர்கள்) குலவையிட, கன்னல்நின்று கலகலென,
(நாத்தினமும் போத்தினமும்), நல்லசென்னல் விளைகதிரும்,
(பார்த்த பார்த்த) திசைகள்தொறும் பைம்பொன்னின் நாடிதென்ன
தெய்வலோகச் சிறப்பிதென்னத் திருமால்கண் டகமகிழ்ந்து,
இவ்வுலகில் தண்பொருந்த இயல்வெல்லாம் கண்டருளி —

---

866. புவனம் - பூமிப்பரப்பு.
867. நரவுலகம் - மனிதர் வாழும் பூவுலகம். கால் - கால்வாய்; ஆற்றிலிருந்து பிரியும் ஓடை; அணை - அணைக்கட்டு; பலதும் - பலவும்.
868. தரளம் - முத்து; தண்பொருந்தமெனச் சரிந்து - 865 ஆம்அடியில் 'தண் பொருந்தம் எனக் கடந்து' என வந்துள்ளது; சரிந்து - பாய்ந்தோடி.
869. முண்டகம் - தாமரை; முத்தாறு - முத்துகள் விளையும் சிற்றாறுகள்.
870. காவினங்கள் - சோலைகள்; காவினங்கள் பூமலர்கள் விரிய, கமுகினங்கள் குலை விரிய என்று விரிய என்னும் வினையெச்சத்தைக் கூட்டுக.
871. மாவினங்கள் - மாமரக்கூட்டங்கள்; துளிர் - தளிர்.
872. சாலி - நெற்கதிர்; குலை - கதிர்க்குலை; சரிய - சாய்ந்து கிடக்க.
873. நம்பு - விருப்பம்; வெஞ்ஞாலி - வெஞ்சாலி; ஒருவகை நெற்கதிர்.
874. மடை - நீர் பாயும் தூம்பு; மண்டி - நெருங்கி; வாளை - வாளைமீன்.
875. கடைச்சியர் - உழத்திப் பெண்கள்; குலவை - குரவை; மகளிர் நாவால் குழறியிடும் மகிழ்ச்சியொலி; கன்னல் - கரும்பு.
876. நாத்தினம் - நாற்றுவகைகள்; போத்தினம் - இளங்கிளைகள்; சென்னல் - செந்நெல்.
877. பொன்னின்நாடு - பொன்னுலகம் எனப்படும் தேவலோகம்.
878. அகம் - மனம்.

866-879. So that the world of the earth may prosper
And rice may grow over all the earth's extent
And the world of men may progress,
She flows as the cool, refreshing Poruṉai,
With many good canals and dams, and cool pearl-like tanks.
There are sacred tanks with lotuses,
Pearl-bearing rivers and ponds; groves bearing fine flowers;
Palm-tree groups spreading out fruit-clusters;
Mango-tree groups shaking shoots; pea-fowl groups dancing;
And blessed *cāli* rice plants, like red gold,
Having grain-stalks leaning on bright field-boundaries,
As the hope-infusing red-cāli rice plants
Having grain-stalks leaning on the good-field boundaries,
The intrepid fish (well-fed) in the water-channel,
Growing in excess, jump in to the (nearby)field,
(Peasant women) raise *kuravai*[258] notes; the standing
Sugar-cane, sways with a *Kala-kala* noise;[259]
Groups of seedlings and groups of tender branches
Stalks of good, red rice, (lie plentifully)
In every direction; Tirumāl saw (everything)
Saying 'this is the land of fresh gold; here is the
Glory of the divine[260] world. Feeling glad in heart,
(He) graciously saw all the features
Of the land of the cool Poruṉai.

258. as a sign of auspiciousness and merriment.
259. This onomatopoeic word imitates the noise of the wind against the sugar-cane.
260. The poet's excitement with the richness of the riverine areas of Poruṉai is conveyed in the picture of plenty he builds up.

ஆழ்வார் திருநகரிக்குத் திருமால் எழுந்தருளல்

நல்லதென்று நகைபுரிந்து, நடந்துதிரு மாயவரும்,
அல்லனைய மேனியுள்ளார் ஆழ்வாரைக் காணவென்ன,
தண்பொருந்த ஆறும்விட்டுத் தானடைந்து பெருமாளும்
மின்பொருந்து முடியுடைய மெய்யான மண்டபத்தே —

விருத்தம்

11. மண்டப மாட கூடம் வாசல்பெரு மதிலுஞ் சுத்தும்
அண்டமா முனிவர் போற்றும் அருநெடு வீதிகண்டு,
எண்டிசை யளந்த மாயன், இலங்கையை அழித்த வீரன்,
வண்டணி சீரங் கத்தார் மைந்தனார் பதியில் வந்தார்.

மாயவனைக் கண்ட மடவாரின் உருவ வருணனை

வேறு

வந்தார் திருநகரியில்; வன்ன மாயவன் தான்வரவே,
அந்தம்புக ழாழ்வார் அவ்வீதி தன்னில் கண்ட மடவார்கள் —
மடவார் புடைசூழ, இன்ப மாயனைக் கண்டு மயல்வெகுவாய்,
குடம்போ விளமுலையார் கோலமானதோர் பாத்திர கூத்தியர்கள்,
பாத்திர மங்கைநல்லார் பச்சை மால்தனை வீதியில் கண்டளவே -
மாத்திர நேரத்திலே மங்கைமட வார்மிகச் சூழ்ந்து,

---

880. நகைபுரிதல் - விரும்புதல்.
881. ஆழ்வார் - ஆழ்வார்களுள் முதன்மையானவராகப் போற்றப்பெறும் சடகோபராகிய நம்மாழ்வார்.
882. பொருந்த ஆறு - தாம்பிரபருணி.
883. மின் பொருந்து முடி - மின்னலை வெளிப்படுத்தும் மேகம் வந்து தங்கும் சிகரம், அன்றி ஒளி படைத்த சிகரம் என்றும் கொள்ளலாம்; மின் - ஒளி.
884. சுத்து - சுற்று; பிராகாரம்.
885. அண்ட மாமுனிவர் - நெருக்கமாகத் திரண்ட பெரிய தவசிகள்.
886. எண்டிசை - எட்டுத்திக்குகளாய்ப் பரந்த உலகம்.
887. மைந்தனார் - தலைவனார்.
888. திருநகரி - ஆழ்வார் திருநகரி என வழங்கும் திருக்குருகூர்.
889. அந்தம் - அழகு.
890. புடை - பக்கம்; மயல் - மையல்; காதலுணர்வு; வெகுவாய் - மிகுதியாய்.
891. கோலம் - அழகு; பாத்திரம் - நாடகத்தில் வேடம் பூண்டு நடிப்போர்; கூத்தியர் - நடனமாதர்.
892. பாத்திரமங்கை - நடிப்பில் வல்லவள்.
893. மாத்திரநேரம் - மாத்திரைப் பொழுது, கணநேரம்; மங்கை மடவார் - மங்கைப் பருவமுடைய பெண்கள்.

Reaching Āḻvār-Tirunakari

880-883. The holy Māyavar walked smiling and saying 'it is fine', (at the sights seen);
Thinking of seeing the Āḻvār,[261] the Lord, dark-hued as night,
Left the cool Porunai river behind and walked on,
(Reaching) the noble *maṇṭapam* with its lightning-touched crown—

Viruttam Verse-11

884-887. Māyaṉ who measured the eight directions, the Warrior-hero who destroyed Ilaṅkai,
The Lord of Cīraṅkam with (the garland of) bee-beautified flowers,
Seeing the maṇṭapams, mansions, halls, gate-ways, big outer walls
And circular paths came into the town of His great Son (the Āḻvār).

Infatuation of women at Āḻvār-Tirunakari

888-893. He came into the holy town; as the beautiful Māyaṉ came,
The women who saw Him in the street of the fine and famous Āḻvār (town)—[262]
Seeing the blissful Māyaṉ surrounded by women, infatuation increased—[263]
The beautiful women given to dancing with tender breasts like pots,
The good, capable women, as soon as they saw
The fresh fair-complexioned Māl in the street,

---

261. Nammāḻvār or Caṭakōpar, the chief of the twelve Āḻvār saints, born at Kurukūr (now called Āḻvār Tirunakari after him) is referred to by the generic term Āḻvār also.
262. Sentence broken off in the middle.
263. This sentence is also left loose.

சூழ்ந்த கலையுடையும், இன்பத் தோகை மயிலின் நடையழகும்,
கட்டான கன்னியர்கள் இருகண்ணில் காந்தையும், காதழகும்,
பட்டாடை வாழைதனைப் பழித்த குறங்கு மாவலுகும்;
அல்குஇடை யசைய, ஆன மணிக்கால் சுத்தசைய,
வல்ல துடியெனவே வைத்த இடையும், திருவயிறும்
திருமார்பின் கீழ்உதித்த சித்தெறும்பி னொழுக்கா மெனவே
ஒருசீ ரடுத்த தென்னா ரோமத் தொழுங்கு மிடையழகும்,
அழகா (இருதனமும்), ஆன சிலம்புநல் பாடகமும்,
புளகீத வாடைகளும், பொன்னுந் திருஞாணும், பொற்கலனும்,
கலங்கா நடையுடையும், கன்னிஇருகை வீச்சழகும்,
அலங்கார வாள்வி தன்னில் அமைந்திருந்த தாமரை முகமும்,
குருவேல முருக்கிதழ்போல் மூரல், முறுவலு முத்தெனவே,
பகர்ந்தே சிறந்திருந்த பலகோர்வையு மிஞ்சொல் மொழியழகும்,
மொழியுங் குமிழ் மலர்போல் மூக்கின் சிவப்பும், குறுவேர்ப்பும்,
வேலைப் பழித்திருந்த விழியும், இருவிழி மையழகும்,
கோல இருபுருவம், கொஞ்சும் சிலகாம வில்லெனவே;
வில்லே சிறந்த நுதல், மேகஞ் சிறந்த குழலழகும்,

---

894. கலையுடை - சேலையுடை; இன்பத்தோகை - கண்ணுக்கு இன்பம் செய்யும் அழகிய இறகு. அன்னநடை என்பது போல மயிலின் நடையும் பெண்கள் நடைக்கு ஒப்பாம்.

895. கட்டான - கட்டுமுட்டான, வளப்பமான; காந்தை - ஒளி.

896. வாழை - வாழைமரம்; வாழைமரத்தின் மரப்பகுதி அடிபருத்து நுனி சுருங்கிக்காணும் நிலை; பழித்தல் - ஒவ்வாது என இழித்தல்; குறங்கு - துடை;. ஆவலுகும் - விருப்பம் கொள்ளச் செய்யும்.

897. அல்குஇடை - சுருங்கிய இடுப்பு; மணி - அழகு; கால் சுத்து - காலைச் சுற்றியுள்ள ஆடை.

898. துடி - உடுக்கை; இடை - அரைப்பகுதி; இடுப்பு.

899. சித்தெறும்பு - சிற்றெறும்பு; ஒழுக்கு - செல்லுகை; எறும்பு செல் வரிசை ஒழுங்கு.

900. ரோமத்தொழுங்கு - மயிர்வரிசை; இதற்குச் சிற்றெறும்பின் ஒழுக்கு ஒப்பு.

901. தனம் - முலை; சிலம்பு, பாடகம் - காலணிவகைகள்.

902. புளகீதம் - புளகிதம், பெருமகிழ்ச்சி; திருஞாண் - திருநாண். மங்கலவணி; பொற்கலன் பொன்னாபரணம்.

903. கலங்கா - மாறுபாடில்லாத; நடையுடை - நடக்கும் போக்கும் ஆடையமைப்பும்.

905. குரு - நிறம், முருக்கிதழ் - முள்முருங்கைப்பூவின் செவ்விதழ்; மூரல் - உதடு, புன்சிரிப்பு; முறுவல் - பல்.

906. கோர்வை - கோவை; ஆபரணக்கொத்து; இஞ்சொல் - இன்சொல்; மொழி - பேச்சு.

907. குமிழ் - குமிழமலர்; மூக்கிற்கு உவமை; வேர்ப்பு - வேர்வை.

908. வேல் - வேலாயுதம்; கண்ணுக்கு உவமை; விழி - கண்.

909. காமவில் - மன்மதனின் வில்; புருவத்துக்கு உவமை.

910. வில் - நெற்றிக்கு உவமை; நுதல் - நெற்றி; குழல் - கூந்தல்.

894-910. In the twinkling of an eye the innocent women crowded around[264]
The sarees clothed round their persons; the beauty of their gait
Like that of the feathered peacock, the brilliance in the two eyes
Of these well-shaped women, the loveliness of their ears, their silken robes,
And their thighs putting plantain - stems to shame, exhibit love;
The lean the waist oscillates.
The cloth rounding the fine legs shakes.
The waist made like the powerful drum, the good abdomen,
The uniform line-mark of hair, appearing below the chest
And going (down) resembling the orderly progress of ants moving,
The two beautiful breasts, the notable anklet and the good foot-ornament,
Exciting clothes, beautiful golden waist-string, gold ornaments,
Steady gait and dress, lovely sway of two maiden hands,
The face like lotus placed in an ornamental pool,
The teeth like the red petal of the thorny *muruṅkai*
Flower worthy of being called pearls,
Many jewel-clusters with established high values; of
The beauty of the sweet utterances and the speech itself
And the redness of the nose like the round-shaped flower,
The little drops of perspiration, the eyes disgracing the lance,
The beauty of the collyrium in the two eyes,
The two lovely brows like the blessed bows of the Love-god,[265]
The excellent forehead, the bow itself; the beautiful braid, the cloud itself

265. The sugar-cane bow of Maṉmataṉ is a stock simile for the bowshaped brows.

264. The Syntax of the original with the verbal participle *cūḻntu* l.893 has a conversational looseness which persists in the subsequent lines also. From l.898 to 913 there is an accumulation of appositional phrases left loose without linkage by a verb or verbal participle.

குழலு மதிமணமும், கொஞ்சு நடையும், தனமசைய
இளகா திருதனமும், சித்திரயெல் அரம்பய்ய ரிவர்களென்ன.
இவர்க ளரம்பையென்ன, தெய்வேந்திர னென்னத் திருமாலும்—
கவரும் விழிச்சுழியும், கன்னிக் கரும்பின் கழுத்தழகும்,
கரும்பைப் பழித்த சொல்லார் கஞ்சமுகம் நல்ல மங்கையர்கள்
சுரும்பாடும் பூங்குழலார் வன்னத் தோகை மயிலென்னத் தான்கூண்டு-
மயில்போலே வல்லியர்கள் வஞ்சிக் கொடியென்னு மாதுநல்லார்
குயில்போலே (மொழியனையாள்) கருங்கோதையர் மாயனைக் கண்டனவே-

மங்கையர் காதலால் மனமுருகி, வியந்து உரையாடுதல்

மாயோனை வீதியிலே சித்திர மங்கையர் கண்டு மனமுருவ,
ஆசைவிழிவலையார் இனியாரோ இவரென் றறியாமல்,
மல்லே சிறந்தபுகழ்ச் சித்திர மதனோ! கருணை வடிவேலோ!
(கல்லால்) கவணெறிந்த கந்தனோ! செந்தி லமர்ந்தவனோ!
திருச்செந்தில் வேலனென்றால், திருக்கரத்தில் வேலொன்று தோன்றாதோ?
இந்திரன், தோகையரே! இவரோ அமராபதி (வேந்தர்!)
அமராபதி வேந்த (ரென்றால்), அயிராணி யெங்கே?
வெள்ளானையெங்கே?

---

911. கொஞ்சுநடை - மெல்லநடக்கின்ற நடை.
912. சித்திரம் - அழகு; எல் - ஒளி; அரம்பையர் - தேவலோகத்து நடனமாதர்.
913. இவர்கள் என்றது மங்கையர்களை; தெய்வேந்திரன் - தேவர்களின் தலைவனான இந்திரன்.
914. விழி - கண். கன்னிக்கரும்பு - இளங்கரும்பு
915. பழித்த - ஒத்த; கஞ்சமுகம் - தாமரை போன்ற முகம்.
916. சுரும்பு - வண்டு; கூண்டு - கூடி, திரண்டு.
917. வல்லியர்கள் - பெண்கள்; மயில் - மங்கையர் சாயலுக்கும் நடைக்கும் உவமை.
918. குயில்மொழி - குயிலோசை போன்ற மொழி; மங்கையர்களின் பேச்சுக்கு உவமை.
919. சித்திரம் - அழகு; மனமுருவ - மனமுருக, மனம் நெகிழ.
920. ஆசைவிழி - விருப்பமூட்டும் கண்கள்; விழிவலையார் - கண்ணாகிய வலையையுடையவர்.
921. மல் - வலிமை; மதன் - மன்மதன்; வடிவேல் - வேலனாகிய முருகன்.
922. கவண் - கல் எறிவதற்குரிய கருவி; கந்தன் - முருகன்; செந்தில் - திருச்செந்தூர்.
924. அமராபதி - இந்திரனின் தலைநகரம்; அமராபதி வேந்தர் - அமராபதிவாழ் தேவர்க்கு அரசர்.
925. அயிராணி - இந்திராணி; இந்திரனின் மனைவி; வெள்ளானை - இந்திரனின் வாகனமாகிய வெண்ணிறம் வாய்ந்த ஐராவதம் என்னும் யானை.

911-918. The hair and its excessive fragrance, the charming gait,
The two breasts drooping not, though they shake with walking,
These women like bright and beautiful heavenly dance-maids,
These (were) like heavenly dancers, and Tirumāl like Tēvēntiraṉ,[266]
—He saw them with the attractive whirl of their eyes
And the grace of their necks like fresh sugar-cane stalk
And their lotus-face with speech disgracing the sugar-cane (in sweetness),
And their braids bedecked with bee-haunted flowers,
Good women gathered like colourful[267] feathered peafowl.
Peacock-like women, themselves tender creeping plants,
Good women, verily the *vañci* creeper plant itself,
Women with *kuyil*-like[268] speech, dark-tressed women, on seeing Māyaṉ[269]

The Women's eager questionings

919-925. The comely ladies, seeing Māyōṉ in the street, melted in their hearts,
These having love-filled eyes with glances like nets,
(Questioned) not knowing who this personage was:
Is he the picturesque Maṉmataṉ, famed for his excellent might?
Is he the merciful, shapely Lancer?[270]
Is he Kantaṉ[271] who shot stones from his forked instrument?
Is he the one resident in Centil?[272]

---

266. Lord of heaven - the king of the *Tēvar* (celestials).
267. Rich diction with over-use of metaphors and similes.
268. A bird with musical notes, called the Indian Cuckoo.
269. Sentence broken off in the middle.
270. *vaṭivēl*-means 'the shapely lance' and here by metonymy, refers to the Possessor of the lance, Murukaṉ the god of youthful beauty and prowess.
271. Another name for Murukaṉ.
272. Tiruccentūr the temple by the seashore dedicated to Murukaṉ (Kantaṉ), at the place where he killed the demon Cūrapatumaṉ.

குமரன் தனைப்பயந்த கொடுங்கூற்றை யுதைத்தவ ரென்பாரும்,
கூற்றை யுதைத்தவர் கோல மழுமானும் தோன்றாதோ?
நீற்றை யணிந்தவனாய் நெத்தியில் கண்ணொன்றும் தோன்றாதோ?
தோன்றாதோ மங்கையரே! நீர் சொல்லீ ராரென்று துடியிடையீர்!
என்றந்த மாதுநல்லார் இன்ம்ப முரைத்தந்த நேரத்திலே—
ஓரான மங்கைநல்லார் பலவுண்மை யறிந்ததொரு தோழி
நாராயண ரிவர்காண், நானறிந் தேனடி நன்னுதலே!

மங்கையரின் ஆதங்க உரையும் செயலும்

வேறு

நண்ணு மதன்சரம் நங்கைமார்முலை மீதினில் பட்டுருவி,
பண்ணான மங்கையர்கள், ‘பாரானோ இன்ம்பந் தாரானோ!
இன்ம்பத் தனம்நெருங்கக் கையிறுக விசையவே புல்கானோ!
அன்ம்பொன் திருமார்பில் பூவரிய (தொடைதனைத்) தாரானோ!
தாராரும் மாயவரைச் சந்தோச மாய்க்கண்டு கன்னியர்கள்,
பாரானோ! என்று சொல்லிப் பாவித்து நிற்பார்கள், பய்ந்தொடிமார்.
பய்ய நடப்பாரும், பார விழிவலை வீசிடுவார்;
கையிலச் சுருள்கோதிக் காம சரத்தை விடுவாராம்.

---

926. குமரன் - முருகன்; பயந்த - பெற்ற, தந்த; கூற்று - யமன்; கூற்றையுதைத்தவர் - சிவபெருமான்.
927. மழுமான் - சிவபெருமான் திருக்கரத்தில் ஏந்தியுள்ள மழு ஆயுதமும் மானும்.
928. நீறு - திருநீறு; நெத்தி - நெற்றி; நெற்றியில் கண் - நெற்றியில் உள்ள நெருப்புக்கண்.
929. ஆர் - யார்.
930. இன்ம்பம் உரைத்தல் - உவகையுரையாடல்.
931. ஓரான மங்கை - நினைவாற்றல் பெற்ற பெண்.
932. மன்மதன், முருகன், இந்திரன், சிவன் இவர்களில் யாருமல்லர்; இவர் நாராயணரே; அதாவது திருமாலே என்று துணிகின்றாள்.
933. நண்ணுதல் - பொருந்துதல்; மதன்சரம் - மன்மதன் விடும் அம்பு; மார் - மார்பு; உருவுதல் - ஊடுருவுதல்; உள்ளே துளைந்து செல்லுதல்.
934. பண்ணான - அலங்காரம் செய்துள்ள; இசை போன்ற மொழி படைத்த எனலும் ஆம்.
935. புல்குதல் - தழுவுதல்.
936. தொடை - பூமாலை.
937. தார் -மாலை.
938. பாவித்து - எண்ணி; பாவனைசெய்து; பய்ந்தொடிமார் - பசிய வளையல்களை அணிந்த பெண்கள்.
939. பய்ய - மெல்ல; பதனமாக; பாரவிழி - பெரியகண்; விழிவலை - கண்ணாகிய வலை.
940. சுருள் - தலைமயிர்; காமசரம் - மன்மதனின் அம்பு.

926-932. If he is the dancer-god resident at Tiruccentil,
Will not a lance appear in his holy hands?
Oh ladies like peahens! Is he Intiraṉ, the King of Amarāpati?[273]
If he is the King of Amarāpati, where is Ayirāṇi the Queen?
Where is the white Elephant?[274] Some say that He is the Lord
Who begot Kumaraṉ[275] and kicked the cruel Death-god;
If he is indeed the Lord who kicked the Death-god, will not
The ornate axe and deer (held in his hands) appear to our sight? Will he not
Be one wearing holy ashes and will not an eye appear on his forehead?
Oh women, will these not appear? Oh women
Slender-waisted like the little drum, you tell us who he is.
When the good ladies spoke thus and more that time-
A good lady, knowledgable in many things (exclaimed):
'He is Nārāyaṇar Himself; I know, Oh woman of fine forehead!'.

Their love-passion

933-940. Maṉmataṉ's all-reaching arrow hitting and piercing the women's breasts,
The musical-voiced damsels say: Won't he look (at us)? Won't he give us pleasure?
Won't he embrace us tightly with hands, pressing our blissful breasts as we wish?
Won't he give us the precious garland of flowers worn on His sacred, golden chest?
The maidens, gladly seeing the great Māyavaṉ beautified with flower-garlands,
Stand fancying him, saying; 'Wont he look at us?'
The slow-walking, bright-braceleted women, too, cast their heavy nets of glances;
Stroking their curved locks by their hands, they let loose their love-arrows (of glances).

---

273. The capital of the Tēvar, the good celestials.
274. Intiraṉ's official mount called *Ayirāvatam.*
275. Lord Śiva's son was Murukaṉ, also called Kumaraṉ. Śiva appeared before His devotee Mārkkaṇṭēyaṉ in answer to the latter's prayers and kicked the Death-god who had come to take him away.

விருத்தம்

12. காமனோ! அமரர் வேந்தோ! கடம்புரி வேலன் தானோ!
நாமமே சிறந்த சோதி நம்பனோ! — மங்கை மார்கள்
மாமணம் சிறந்து நின்ற மாயவன் தன்னைக் கண்டு,
(வாமமே) மின்னுஞ் செம்பொன் மங்கையர் மகிழ்ந்து நின்றார்.

ஆழ்வாரைப் பூசை கண்டு மாயன் திருநகரியில் இருத்தல்

வேறு

மங்கையர்கள் வெண்ங்குரவை பாடிவிளை யாட,
புகழ்ந்தேமுன் செட்டியார் பெற்ற குமாரன்
புளியம் பொந்தில் புகுந்தபதி தன்னை
பதியான விட்டுணுவின் திருவுருவ மெனவே
பாரரசர் பூசித் திருந்தபதி காணும்
மதியான மாயவன் பதியிதுவே யென்னா
வைத்தவணி கன்பிள்ளை மாயவ னாகி,
செட்டிச்சி பிள்ளையது மாயவ னாகி,
திருப்பூசை கொண்டங் கினிதிருந் (தாரே.)
அட்டதிக் கும்புக ழாழ்வா ரெனவே,
அரசர் மனமகிழ வெகுபூசை கொண்டு,

---

941. கடம்புரி வேலன் - கடம்பமாலை தரித்த முருகன்.
942. நாமம் - புகழ்; சோதிநம்பன் - ஒளிமயமான சிவன்.
944. வாமம் - அழகு; ஒளி; மின்னும் - பிரகாசிக்கும், வெளிப்படும்.
945. வெண்ங்குரவை - வெங்குரவை; விரும்பத்தகுந்த குரவைப்பாடல்.
946. செட்டியார் - சடகோபரின் தந்தையைக் குறிக்கிறது; தந்தையார் பெயர் - காரி; வேளாள மரபினர்.
947. சடகோபர் திருநகரியில் உள்ள புளியம்பொந்தில் யோகநிலையில் இருந்தார் என்பர். பதி- ஊர்.
948. விட்டுணு - விஷ்ணு, திருமால்.
949. பாரரசர் - உலகிலுள்ள மன்னர்கள்.
950. மதி - அறிவு.
951. மாயவனாதல் - நித்தியசூரிகளாய்த் திருமாலைச் சார்ந்திருத்தல். வணிகன் - செட்டி, சடகோபரின் தந்தை காரியார்.
952. செட்டிச்சி - சடகோபரின் தாய் உடையநங்கையார்.
954. அட்டதிக்கு - எட்டுத்திசை; ஆழ்வார் - பகவத் குணங்களில் ஆழ்ந்த நம்மாழ்வார்.
955. வெகுபூசை - மிகுந்தபூசை; பல்பூசை.

Viruttam Verse-12

941-944. Is he Kāmaṉ?[276] Is he the king of the heavenly denizens?[277]
Is he indeed the Lancer wearing the *kaṭampu*[278] garland?
Is he our greatly famed effulgent support?[279]
Seeing Māyavaṉ, standing with surpassing great fragrance,
The fresh golden ladies flashing beauty, stood in happiness.

Māyaṉ's stay at Āḻvār-Tiruṉakari

945-955. The town in which of old, the son of a Ceṭṭiyār[280]
Entered into the hollow of a tamarind tree,
While women sang the pleasing *kuravai* and danced,
The kings of the earth have indeed praised
And worshipped this town as the sacred form of Lord Viṣṇu
And considered it as the town of Māyavaṉ of supreme mind;
The Son of the famous merchant became
An incarnation of Māyavaṉ[281] Himself,
The son of the Ceṭṭi-lady, equated with Māyavaṉ Himself,
Accepted holy worship (of devotees) and stayed gracefully there.
The mighty Māyaṉ[282] saw with pleasure
The Āḻvār, praised in the eight directions,
Accepting rich worship, gladdening the hearts of kings;

---

276. The god of love called also Maṉmataṉ (l. 933).
277. Intiraṉ or Tēvēntiraṉ, called also king of Amarāpati (Foot note 273).
278. Murukaṉ called also Kumaraṉ, Kantaṉ elsewhere besides Vēlaṉ here. His favourite garland is stated to be of *kaṭampu* flowers.
279. *Nampaṉ* here is of rare occurrence as a name of Civan meaning 'Our Trust or Support'.
280. It is not known how the term Ceṭṭiyār — and *Vaṇikaṉ, Vaiciyaṉ* etc. indicating the merchant community — is here brought in by the ballad-singer. It may be an error or a deviation for elevating the caste of Caṭakōpaṉ (popularly called Nammāḻvār) born to a Veḷḷaḷa chief called *Kāri,* of Āḻvār-Tirunakari).
281. Nammāḻvār, the son of a *Vaṇikaṉ* here, is regarded as sharing the glory of Viṣṇu Himself; The worship of the 'Son of the Merchant' as God is dominant in his birth-place known after him as Āḻvār-Tirunakari.
282. *Kattāṇi Māyaṉ,* p.956, one of the many oral dialectal usages strewn about in this narrative.

கட்டாணி மாயவன் கண்டு மகிழ்ந்து,
கருணையுடன் (முன்னும் திருப்பதி) தன்னில்—
வந்தொரு (மாயவன் கண்டு) மகிழ்ந்து,
மண்டபத் துள்வீத் திருக்கின்ற நாளில்-
சிந்தையுறு (மறையவரும்) வேத பூசகரும்
திருமுறை யாலே பூசை முகித்து,
சீரான மாதுசேர் மாயவன் தானும்
திருந்தவே பூசை கொண்டங் கிருந்தார்.

நெடுமால் திருநகரியை விட்டு நெல்லைப் பதிக்கு வருதல்

பேரான நெடுமாலும் விடிவதின் முன்னே
புறப்பட்டுப் பூதப் படைகள் நெருங்க,
பூதங்கள் சூழவே கீதங்கள் பாட,
புண்டரிக மாயவர் வாறபொழு தேதான்—
காத தூர மெனக்கண்டு மாயன்
கமலபதம் நோகவே தானும் நடந்து,
வல்லபடி யேயந்த மாயவன் தானும்—
வாகான தெய்வார்கள் சூழ வரவே,
நெல்லைநா தன்பதி யிதுவெனவே ஏன்று
நீண்டதிருக் கோபுரம் கண்டுநின் றாரே.

---

956. கட்டாணி - வலியோன்.
957. முன்னும் - விரும்பும்.
959. வீத்திருத்தல் - வீற்றிருத்தல்; சிறப்புடன் அமர்ந்திருத்தல்.
961. திருமுறையால் - ஆகமங்களில் கூறிய பூசாமுறைகளின்படி; முகித்து - முடித்து; நிறைவு செய்து.
962. சீரானமாது - இலக்குமி.
964. விடிவதன்முன் - பொழுது புலருமுன்.
966. கீதங்கள் - இசைப்பாடல்கள்.
967. புண்டரிகம் - தாமரை; உந்தித் தாமரை.
968. காததூரம் - ஏழரை நாழிகைவழி; பத்துமைல்.
969. கமலபதம் - தாமரை போன்ற பாதம்; நோக - வருந்த,
970. வல்லபடி - இயன்றவண்ணம்.
971. வாகான - ஆற்றல் பெற்ற.
972. நெல்லை - திருநெல்வேலி; ஏன்று - எதிர்கொண்டு.

956-963. And graciously staying in the holy town.
In the days in which Māyaṉ coming there, seeing (the place)
And feeling glad, stayed in the *maṇṭapam*
The impressive Veda-followers and Vedic priests
Performed their worships according to scripture prescriptions;[283]
And Māyavar with His Excellent Consort, remained there,
Accepting the faultlessly offered worships.

Reaching Nellai Town

964-973. The famous Towering Māl started before daybreak
With his train, men on foot walking close,
Attendant goblins singing songs around.
When the lotus-eyed Māyavar was going —
Māyaṉ, seeing that it was a distance of a *kātam*[284]
Walked with his lotus feet paining;
As Māyavaṉ in proper manner came
With His fine divine attendants surrounding Him, He saw
The tall, sacred tower (of Nellai) and stood, saying
'This is the town of the Lord of Nellai.[285]

283. Procedures of worship and contemplation prescribed in the Vedas and Ākamas.
284. A distance of 10 miles which would take 7½ *nāḻikai's* to cover, (2½ *nāḻikais* being equal to an hour)
285. A short form of Tirunelvēli, a temple-town and head-quarters of a modern district of the same name.

விருத்தம்

13. நின்றனன் கருணை (வேந்தன்), நெடுஞ்சரந் தொடுத்த வீரன்,
(குன்றையன் றெடுத்த) மாயன், குரங்கினைச் சேனை கண்டோன்,
வென்றிசே ரிலங்கையானை விரவுறு தலைய றுத்தோன்,
மன்றினில் நெல்லை நாட்டில், மாயவன் வந்து நின்றார்.

நெல்லைநாதரைத் திருமால் காணுதல்

வேறு

நித்தரத்தன் பதியெனவே மெத்தமன மகிழ்ந்து,
நின்றமா யவன்புகழ்ந்து நெல்லைவனங் கண்டு,
மன்றுதனில் நின்று நடமாடு மாயோன்,
மானிடத்தில் வைய்த்த வள்ளல், தேனையிடம் வைத்தோன்,
(சங்கரன் மடந்தை பாகன்) எங்குமாய் நின்றோன்,
சண்டனை யுதைத்து (மதன்) தனை யெரித்த கோமான்,
கங்காளி யோடே கூடி வாதாடு மீசன்,
கண்டங் கறுத்தோன், பிரமன்தலை யறுத்தோன்,

---

975. குன்று - கோவர்த்தனமலை; குரங்கினைச் சேனை கண்டோன் - குரங்கினைப் படையாகக் கொண்டது இராமாவதாரச் செய்தி.
976. வென்றி - வெற்றி; இலங்கையான் - இலங்கை அதிபதியான இராவணன்.
977. மன்றினில் - மண்ணில், உலகில் என்றபடி.
978. நித்தரத்தன் - என்றும் அழியாது நிலைத்திருப்பவராகிய இறைவன்; சிவன்; மெத்த - மிகவும்.
979. நெல்லைவனம் - திருநெல்வேலி.
980. மன்று - சபை; அம்பலம்; நடமாடும் மாயோன் - நடனம் புரியும் சிவன்.
981. மானிடத்தில் - மானை இடக்கரத்தில்; தேனை - தேன்போல் இனிய உமையை.
982. சங்கரன் - நலம் செய்பவன்; மடந்தை - பெண்; மடந்தை பாகன் - உமைபாகன்.
983. சண்டன் - யமன்; மதன் - மன்மதன்; கோமான் - தலைவன்.
984. கங்காளி - மாகாளி; காளியோடே வாதாடு மீசன் - நடனமாடுவது குறித்துக் காளியுடன் சிவன் வாதாடியது திருவாலங்காட்டு நிகழ்ச்சியாகும். வாதாடிக் காளியோடு ஆடிய கூத்தப்பெருமான் இங்கு ஊர்த்துவ தாண்டவத்தில் காட்சியளிக்கிறார்.
985. கண்டம் - கழுத்து; விடமுண்ட கண்டமாதலின் கறுப்புநிற மாயிற்று; பிரமன் தலை அறுத்தது - செருக்குக் கொண்ட ஐந்தலையுடன் கூடிய பிரமனின் ஒரு தலையை அறுத்து அவனை நான்முகனாகச் செய்தார் சிவன்.

Viruttam Verse - 13

974-977. The merciful Lord stood; the Warrior-hero who shot-the long-piercing arrow,[286]
Māyan who the other day lifted up the hill,[287]
The One who formed his army with monkey-groups
The One who cut the many heads of the victorious resident[288] of Ilankai -
Māyavan came and stood in the open in the Nellai land.

Seeing Nellai and its Lord

978-985. Feeling very glad in heart that it was the town
Of the Eternal one[289] Māyan who stood there, praised it
And had a view of Nellai and its jungle environs.[290]
He beheld (Civan) -
The Māyōn[291] who stands and dances in the dance-arena,
The Lord who holds the deer in his left hand;
The One who keeps the honey-sweet (Umai) on his left side,
Cankaran, Woman[292]-sharer one who stands everywhere,
The Prince who kicked Cantan[293] and burnt down Matan[294]
One who engaged in a dance-contest with[295] Kankāli (Kāli)
One with darkened throat,[296] One who plucked Piraman's head,

---

286. As Rama in the fight in Ilankai.
287. As Krṣna, lifting of the Kōvarttanam hill.
288. As Rama with the monkey army in the battle with Rāvaṇa.
289. An appellation of praise of Śiva.
290. Nellai-vanam in the text suggests the jungly area-spread of the town with its temples. cf. *Tillaivanam* for *Tillai* (a famous holy town of Śiva in South Arcot district).
291. Māyōn is here Śiva, reversing usual meanings. The syntax is a string of participle nouns going with the verbal participle *kanṭu* (l. 994).
292. *Matantai-pākan* (Artta-nāricuvarar): Śiva is represented as a figure right-half male and left-half female.
293. Death-god.
294. Manmatan, Love-god.
295. Śiva is said to have put down Kāli who lived at Tiruvālankāṭu in a dance-contest and taken her to His service.
296. Śiva's exploit of eating the accumulated poison arising from the churning of the Milky Ocean by the celestials and keeping it in his neck, is said to have darkened it;. He is therefore also called 'Nīlakanṭan', 'the dark-throated One'.

உண்ணா முலையொரு பங்கில் தரித்தோன்,
ஊருமர வத்தைமுடி தன்னில் பதித்தோன்,
அண்ணா (மலையனென்ன வெகுபூசை) கொண்டோன்,
ஆலவிட முண்டோன், அமரர்தொழ நின்றோன்,
நெல்லுக்கு வேலியாய் நின்றபர நாதன்
நேரிழையைப் பாகம் வைத்த நித்தியகலி யாணன்,
வல்லுக் கிசைந்ததன மாதங்கி யான
வடிவுடைய மங்கையுமை பங்கரையும் கண்டு—
செல்லும்பொழு தேமாயன் திருக்கோபுரமும்
திருவிளக்கு மாளியலுஞ் சீராகக் கண்டு—
அல்லனைய மேனியுள்ளோன், 'அரகரா!' வென்னா
அரனே பரனெனவே ஆயனும் வணங்கி,
நெல்லைப் பதிதனிலே சித்திர மண்டபத்தே
நித்தலும் நிரைத்தமணிப் பொற்பதி புகுந்து—

---

986. உண்ணாமுலை - உமையமைக்குரிய ஒருதிருநாமம்; பங்கு - பகுதி, பக்கம்.
987. அரவம் - பாம்பு; முடி - தலை; பதித்தோன் - அணிந்தவன்.
989. ஆலவிடம் - ஆலகாலவிஷம்; அமரர் - தேவர்.
990. நெல்லுக்கு வேலியாய் நின்றது திருநெல்வேலித்தல வரலாற்றுள் ஒன்று, அன்பர் காயவைத்த நெல்லை மழையில் நனையாது இறைவன் காப்பாற்றிய புராணச் செய்தி.
991. நேரிழை - பெண்; உமை; நித்திய கலியாணன் - என்றும் மகிழ்ச்சியாயிருப்பவள்.
992. வல் - சூதாடுகருவி; மாதங்கி - காளி.
993. வடிவு - அழகு; உமைபங்கர் - உமாதேவியை இடப்பக்கத்தே கொண்ட சிவபெருமான்.
995. மாளியல் - மாளிகை.
996. அரகரா - சிவனைநோக்கிய விளிப்பெயர்; அரோகரா என்றும் சொல்லுவர்.
997. அரன் - சிவன்; பரன் - மேலான தெய்வம்; ஆயன் - இடைக்குலத்து வளர்ந்த கண்ணனான திருமால்.
999. நித்தலும் - தினமும்; மணி - ஆலயமணி; பொற்பதி - அழகிய கோவில்.

986-999. One bearing the Lady of[297] unsucked breasts as his one part,
One having the creeping serpent in the braid on his head
One who has great fame as the Dweller on Aṇṇāmalai[298]
One who took the *āla*[299] poison, one who stood worshipped by gods,
Great Master who stood as a fence for rice-grains[300]
A daily fresh groom having the Lady of fine ornaments as His half
The partner with beautiful Umai, the Lady
Who is also Mātaṅki (Kāḷi) who agreed to a contest with[301] him.
As Māyaṉ was going, having seen the Lord with Umai, He saw
The holy tower, and the sacred light and houses in their dignity;
He of the body, dark like[302] night, said 'Arakarā;[303] The Lord
Who had incarnated as a Cowherd, bowed, saying 'Araṉ is supreme'
And entered the temple-precincts of Nellai, with the beautiful *maṇṭapam*
And the golden shrine having heaps of ornaments each day.

297. The lady here is the goddess of the temple at Tiruvaṇṇāmalai, called Uṇṇāmulai.
298. The temple of the hill at Tiruvaṇṇāmalai.
299. *Ālakālam*(Hālahala) is the name of the deadly poison emerging from the churning of the Milky Ocean. Śiva drank it and his neck became blue with the poison.
300. One of the legends of the *tala-purāṇam* recounting the great happenings of the holy place Tirunelveli. Lord Śiva protected the store of rice-grains of the place from being damaged by rain, standing as a fence, hence the place-name.
301. See footnote (295).
302. Tirumāl is said to dark (or blue) like the cloud and the night.
303. This is compound of two words; Araṉ! Araṉ! (Hara! hara!) - two addresses to Śiva known as Hara or Haran.

நெல்லைநாதரின் வினாவும் நெடுமாலின் விடையும்

செல்லவே அரனாரும், திருமாலைக் கண்டு,
செம்பொன்திரு வாய்மலர்ந்து திருவருளிச் செய்தார்.
'செம்பொன்முடி மாயவரே திருமாலே யென்ன
சீரங்கந் தன்னைவிட்டு வந்தவா றேதோ?'
விந்தைசெறி மாயவரும் அரனாரை வணங்கி,
விரவினுடன் வந்ததந்தச் செய்தியது செப்ப—
அந்தமுறும் வடிவுடை யானவுமை யம்மை
ஆனபுகழ் மாயவரை அன்பாக வினவி,
'இருமிருநீர், மாயவரே!' என்றேயருள் புரிந்தார்.
இன்பமுள்ள மாயவனார் அன்றவ தரித்து,
கருவுருவ மேனியனார் காசினியை யுண்டோன்,
கதிரோ னுதையத்திலே விடைகொண்டு போனார்.

நெல்லைப்பதிவிட்டு மாயவனார் தென்பூமி நோக்கி நடத்தல்

வல்லபடி மாயவனார் நெல்லைப்பதிவிட்டு,
(வாகுடனே) தென்பூமி யானபடி போக,
வல்லனைய திண்புசத்தான் மாயவன்பின் வந்த
மறையோனும் பின்வரவே, அஞ்சலில் நடந்தார்.

1004. விந்தை - வித்தை; மாயங்கள்; செறிதல் - மிகுந்திருத்தல்.
1005. விரவினுடன் - விவேகத்துடன்; உற்சாகத்துடன்; செப்புதல் - சொல்லுதல்.
1006. அந்தம் - அழகு; வடிவுடையான - திருமேனிபடைத்த.
1008. இரும் - தங்கியிரும்.
1009. அவதரித்தல் - தோன்றுதல், தங்குதல்.
1010. காசினி - பூமி.
1012. வல்லபடி - இயன்றபடி; ஏற்கெனவே திட்டமிட்டபடி.
1013. வாகுடன் - ஒழுங்காக, நேராக.
1014. வல் - மலைக்குவடு.
1015. அஞ்சலில் - வேகமாக.

The Deities converse

1000-1015. The great Araṉ saw Tirumāl's coming
And opening his holy lips of pure gold, graciously said:
'Oh Māyavar of the fresh, golden crown, Oh Tirumāl!
What is the matter of your leaving Cīraṅkam and coming (here)?
Māyavar, worker of wonders, bowed to the great Araṉ
And as he speedily explained the matter of his coming,
The Lady Umai, possessed of beautiful form,
Lovingly enquired of the well-being of the famous Māyavar,
And graciously said: "Oh Māyavar, stay (here), stay (here)".
Māyavar of sweet disposition, stayed there that day.
At the rise of the Sun, the Lord with a dark shape,
Who swallowed the earth (at its deluge)
Took leave (of Nellai's lord) and left.
As the great Māyavaṉ, leaving Nellai,
Went to the southern region in stately form,
The brahman accompanying Māyavaṉ of mighty, firm shoulders
Came behind Him, and He walked fast.

களந்தையன் பதிக்கு மாயவரின் வருகை

விருத்தம்

14. மறையோ னும்பின்போக, மகாநெல்லை கடந்து, மாயோன்
உறைதயி ருண்ட வள்ளல், உள்பொரு ளாகி நின்றோன்,
முறைமுறை நடந்து, வல்ல முன்னிலங் கடந்து (போந்து),
கறைமிடத் தண்ணல் வாழும் களந்தையன் பதியில் வந்தார்.

வேறு

களந்தைக் கருத்தரையும், கலியுகத்தில் மெய்யரையும்
வளர்ந்த திருமேனி மாயவரும் மறையவரும்,
சங்கையுள்ள கேத்திரபாலன் தன்னுடனே சங்கிலியும்,
குங்குமஞ் சிறந்த பொய்கை குளுந்தமரச் சோலைகளும்,
செங்கைநெடு மாயவரும் திருந்தப் பொருந்திமனம்
குடமாடி யென்னுமலை கொடிபிடித்தான் தன்னுடனே
அடவாக வேயிருந்த அந்தமலை வாரத்திலே—
பூங்காவும், தேனமரும் பொய்கை மலர்ச் சோலைகளும்,
பாங்கான வன்னமுலைப் பாவையர்கள் குரவையிட,
நீங்காத சோலைகளும், நித்தமலர் வாள்விகளும்,
கொத்தலரும் செண்பகமும், குங்குமப்பூ வாள்விகளும்,
இத்தையெல்லாம் கண்டருளி, இந்நாடுநன் னாடெனவே
சித்தமுடன் திருமாலும் திருவான மலைநோக்கி—

1019. கறைமிடறு - கரிய கழுத்து; கறைமிடத்தண்ணல் - சிவபெருமான்; களந்தையன் - களந்தையில் உள்ள சிவபெருமான்.

1020. களந்தை - திருநெல்வேலிக்குத் தென்மேற்கில் அமைந்த ஓர் ஊர்; களக்காடு என இப்பொழுது வழங்கும் ஊராக இருக்கலாம்; கருத்தர் - தலைவர்.

1021. திருமேனி -.அழகியவடிவம்.

1022. சங்கையுள்ள - சங்கினைக்கையில் கொண்டுள்ள; சங்கிலி - சங்கிலிப் பூதம்.

1023. குங்குமம் - குங்குமச்செடி.

1025. குடமாடி - களந்தையை அடுத்துள்ளமலை; கொடிபிடித்தான் - இது மற்றொரு மலை.

1026. அடவாக - அடைவாக, சேர்வாக, வழியிடையே; மலைவாரம் - மலைப்பக்கம்.

1027. பொய்கை - வற்றாத நீருடைய இயற்கையான நீர்நிலை.

1028. பாங்கான - தகுதிபடைத்த, பொருத்தமான; பாவையர்கள் - பெண்கள்.

1029. நீங்காத சோலைகள் - இடைவெளியின்றி ஒன்றுடன் ஒன்று நெருக்கமான சோலைகள்; மலர்வாள்வி - பூந்தடாகம்.

1031. இத்தையெல்லாம் - இவற்றையெல்லாம்.

1032. சித்தம் - எண்ணம், விருப்பம்; திருவானமலை - அழகிய வானமாமலை; நாங்குநேரி என வழங்கும் திருப்பதி.

Journey through Kaḷantai and Vāṉamāmalai

Viruttam Verse-14

With the brahman following, going beyond the great Nellai,
Māyaṉ, who ate the good curd, who stood as (life's) inner principle
Walked in orderly manner, crossed and went over areas spread out before Him,
And came to the town of Kaḷantai where the Lord with the stain on his neck[304] resides.

1016-1032. Māyavar with his form of (outreaching) growth, the brahman,
The beautiful guardian deity and the *Caṅkili* goblin
Had their mind perfectly focussed
On the True Lord in the *kali*-age, the Creator[305] in Kaḷantai.
At the foot-region of the hill named kuṭamāṭi
Merging with the hill koṭipiṭittāṉ.
Kum-kum powdered[306] ponds and groves of *Kurunta* trees,[307]
There were beautiful woods, ponds of honeyed waters,
Flowery groves, groves which never cease,
As fitting women of beautiful breasts raise *kuravai* sounds,
Tanks of daily blooming flowers; clusters
Of blooming *Ceṉpakam* flower-trees and tanks
Fragrant with saffron,—graciously seeing all these and saying
'This land is a fine land' Tirumāl with pleasure
Turned towards the Mountain which is[308] sacred.
Leaving the Holy Kaḷantai where righteous rule prevailed,
The Lord of the Lady of the lotus[309] came into Nākaṉār-town[310]

---

304. See footnote 299.
305. Lord Śiva as the deity of the town, hailed as the saviour in the *kali* age, the fourth age of Hindu cosmogony, when evil dominates life.
306. Powder used in worship getting dissolved in tanks.
307. The name of *Māyavar* (Viṣṇu) is repeated in line 1024 as *Ceṅkaineṭu Māyavarum* as the person who saw the ponds and groves. This pleonastic use of Māyavar (probably for oral effect) has been omitted in the translation.
308. The *Kuṭamāṭi* hill referred to above. The names of the hill appearing to be reminiscent of Kṛṣṇa (known in Tamil literature as *'Kuṭamāṭi'* (dancer with pots).
309. Viṣṇu, here the Perumāḷcuvāmi.
310. *Nākaṉār-pati* and *Nākaṉār-cēri* are variants of another (and probably modern) name of Vāṉamāmalai as *Nāṅku-nēri*. *Nākaṉār* is used here to refer to the Deity (Tirumāl) of Vāṉamāmalai.

திருமால் நாகனார்பதியில் வாணுமாமலை காணுதல்

செங்கோலின் முறைநடக்கும் திருக்களந்தை தன்னைவிட்டு—
நங்கைமலர் மாதுபுசன் நாகனார் பதியில் வந்தார்.
நாகனார் சேரியென்றும் நற்றமிழ்சேர் மாயவனார்
(வாகான) வாணுமாலை மாமலையில் வந்துகண்டு—

வாணுமாமலை கடந்து குறுங்குடிக்குத் திருமால் செல்லுதல்

அந்நேரம் மாயவரும் அப்பதிகண் டவதரித்து,
வன்னமுள்ள மாயவரும் வாணுமா மலைகடந்து—
அந்தமலர் மாயவனார் அந்நேர மேநடந்து,
சிங்கார நம்பிதேசம் (தெரியுகாண்) மேற்கேயென்று,
குன்றாத மண்ணளந்தோன் குறுங்குடிபோ யெனக்குறுகி—

திருக்குறுங்குடியின் சிறப்புகள்

கன்றாலே கனியெறிந்த கரியமுகில் வண்ணனாரும்,
(செய்குந்த) மாகநின்ற தெச்சணா (புவிக்கிலக்காய்)
வைய்குண்ட பருப்பதமும், வளைந்ததிரு மாமலையும்,
உருவாக வேயனுமான் ஒருமரத் திலங்கையிலே
(மருமாது) லெட்சிமியை வைத்தசிறை காணவென்னா
குருவே சரணமென்று குதித்தனுமான் பாய்ந்தமலை,
திருமா மருப்புமலை தென்பாகத் தேயிருக்க,
மன்றுதனில் வல்லமலை வளைத்தங்கே பலதிருக்க,
குன்றுகள் நெருங்குமலை குடமாடி தன்னடியில்

1034. மலர்மாது - திருமகள்; நாகனார் -வானமாமலை எம்பெருமானார்; நாகனார்பதி - நாங்குநேரி, மாற்றேட்டில் 'நாங்கானாசேரி' என்றே காணப்படுகிறது.

1036. வாணுமாலை - வானமாமலை; வானமாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமம்.

1038. வாணுமாமலை - வானமாமலை, நாங்குநேரி.

1040. சிங்காரம் - அழகு; நம்பிதேசம் - நம்பி என்னும் நாமமுடைய திருமால் திருப்பதி; திருக்குறுங்குடி.

1041. குறுங்குடி - திருக்குறுங்குடி; இன்றைய பேச்சு வழக்கில் திருக்கணங்குடி என்பர். குறுகுதல் - அடைதல், சேர்தல்.

1043. குந்தம் - குன்றம்; இலக்கு - அறிகுறி; எல்லை.

1045. ஒருமரம் - ஒப்பற்ற அசோகமரம்.

1046. மருமாது லெட்சிமி - திருமகள் அவதாரமான சீதை.

1047. சரணம் - புகலிடம், அடைக்கலம்; அனுமான் பாய்ந்த மலை - மகேந்திரகிரி.

1048. திருமா மருப்பு மலை - அழகிய பெரிய தந்தம் போன்ற மலை.

1050. குடமாடி - குடக்கூத்தாடிய திருமால்.

1033-1041. And the great Māyavaṉ with whom good Tamil dwells, coming and seeing
The Beautiful Vāṇumāl[311] in the place Māmalai[312] called also Nākaṉārcēri,[313]
Seeing that town that time and after pausing there,
Beautiful Māyavar went beyond Vāṉamāmalai; at that same time
Māyavaṉār of shining beauty walked on
Saying: 'In the west appears the beautiful residence,
Kuṟuṅkuṭi, of the Lord who measured the earth in full;
Let us go there'. Reaching the place —

At Kuṟuṅkuṭi

1042-1050. The dark cloud-complexioned One, who hit the tree-fruit[314]
With the calf— He saw Kuṟuṅkuṭi, and mountains standing as the land-mark
Of the wealthy[315] southern land - the Vaikuṇṭa-mountain,
The great holy curving mountain,
The mountain from which Anumaṉ leaped
Saying "My Master is my Refuge" to find out
The prison house in which the Lady of fragrance[316]
Leṭcumi was kept in Ilaṅkai under a tree.
And the great, sacred *maruppu*[317] mount in the farther southern part,
They were many other mounts with open spaces in curving shapes.
In this holy place, at the foot of Kuṭamāṭi with clustering hills,

311. The poet seems to have coined this name *adhoc* for the deity of Vāṉamāmalai, devising a pleasing verbal jungle.
312. The split form of Vāṉa-mā-malai.
313. The sentence has no finite verb and operates on conjunctive participles-coming and seeing.
314. Kaṇṇaṉ's exploit as a boy—killing a demon coming in the form of a calf by seizing it with his hands and throwing it like a wooden stick against a tree (a shape assumed by another demon) bringing it down with its fruit. This sentence breaks off in the middle.
315. *cey-kuntam: kuntam* is stated one of the nine treasures of Lord Kubera.
316. Cītai (Irāmaṉ's consort) considered the incarnation of Lakṣmi (consort of Tirumāl).
317. *Tirumāmaruppu-malai:* This identifiable with the hill known as *Maruttuvā malai* near Sucīntiram

மன்றுதனில் முன்னாளில் மாவெலியா (ரிருந்ததலம்)
அன்றுநெடு மாயவரும் அரனைப்பூ சித்ததலம்
குன்றுக ளட(ர்)ந்ததலம், குணங்கள் சிறந்ததலம்,
வசுதேவன் தன்னருளால் வள(ர்)ந்த திருமாயன்
மெய்யாக மாயனிரை மேய்த்த வரியதலம்,

மலைநம்பி தானிருக்க, மற்றுமொரு நம்பி யென்னா
சிலைநம்பி யாகவந்த திருப்பால்க்கடல் நம்பியையும்,
புளகிதமா மாயன் பூங்கா வனந்தனிலே
அழகிய நம்பியென்றும் இருந்த (வ)ரியதலம்,
மண்ணளக்க வெண்ணையுண்டோன் மற்றுமொரு மாவெலிபால்
தண்மையுட னேகுறுகிச் சதித்தங்கே நின்றதலம்,
மருக்குறுந் திருமார்பன் வன்னமுள்ள மாவெலிபால்
திருக்குற ளுருவமாக நின்றதொரு தெய்வதலம்,
குறுங்குடி தன்னைக்கண்டு, கொண்டல்நிற வண்ணனாரும்-
உறுங்குடி யீதெனவே உற்றநம்பி பதியெனவே

1051. மாவெலியார் - மகாபலி. மகாபலியிடம் குறுகியவடிவில் திருமால் சென்று மூன்றடி மண் பெற்று, பின் திருவிக்கிரமனாக வளர்ந்த தம் திருவடிகளில் ஒன்றை அவனுடைய தலையில் வைத்து அவனை அடக்கிய தலம். இதனால் இத் தலத்திற்கு 'வாமனக்ஷேத்திரம் என்று பெயராயிற்று: குறுங்குடி என்பதும் இதுபற்றியேயாம்.

1052. குணங்கள் - நன்மைகள்.

1054. வசுதேவன் - கண்ணனின் தந்தை.

1055. நிரை - பசுக்கூட்டம்.

1056. மலைநம்பி - மலையில் எழுந்தருளியிருக்கும் பெருமாள்.

1057. இங்கே வைஷ்ணவநம்பி, மலைமேல் நம்பி, நின்றநம்பி, இருந்த நம்பி, கிடந்த நம்பி, திருப்பாற்கடல் நம்பி எனப் பல சந்நிதிகள் உண்டு.

1058. புளகிதமா - புளகாங்கிதமாக, உரோமம் சிலிர்க்க.

1059. அழகிய நம்பி - திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் சுவாமி திருநாமம்.

1061. சதித்தல் - வஞ்சித்தல்.

1062. மருக்குறும் - மறு அல்லது மயிர்ச்சுழியையுடைய; மறுவை ஸ்ரீவத்ஸம் என்பர்.

1063. குறளுருவம் - வாமன மூர்த்தி.

1064. கொண்டல் - மேகம்.

1065. உறுங்குடி - சேரும்பதி, தங்குமிடம்.

1051-1063. In former days,[318] Māvali remained in an open space.
It is the place in which great Māyavaṉ worshipped Araṉ that day;
The place studded with hills, the place with excelling features;
The rare, sacred place where the holy Māyaṉ grew up
By the love of Vācutēvaṉ, and (where) Māyaṉ
In fact[319] grazed cattle (as the boy Kṛṣṇa);
Māyaṉ came to the rare sacred place.
While there was a Nampi on the hill,[320] at the place,
There was another Nampi of the sacred milky ocean
Who had come on earth as the Lord of the Bow,[321]
It is the rare sacred place in which Māyaṉ stayed
As Aḻakiya Nampi[322] exciting beauty
In the fine garden (of the temple);
The rare sacred place in which the Butter-Eater[323] intending
To measure the earth, approached Māvali in pleasing manner
And stood, plotting against him;
And the fine divine place in which the Lord with *Tiru*[324]
In his breast and the mole enhancing its beauty,[325]
Stood in holy dwarfish form before the colourful Māvali[326]

1064-1065. Seeing Kuṟuṅkuṭi, the cloud-hued Lord said:
'This is the fitting residence, the town of our Nampi;

---

318. The demon-king Makābali whose overbearing rule was put down in Viṣṇu's incarnations as Vāmaṉaṉ (Dwarf) and Trivikramaṉ (threefold victor).
319. The dearly loved mythology of the association of Māyaṉ (as Kṛṣṇa) with Kuṟuṅkuṭi is the basis of this flight of devotional fancy.
320. Reference to a hill-temple of Nampi (Viṣṇu's name).
321. The incarnation of Rāma with bow in his hand is here considered to have come to rest as *Tiruppāṟkaṭal-Nampi*-the Vyūha form of Viṣṇu.
322. Aḻakiya-nampi meaning Beautiful Lord' is another captivating image in the temple of Kuṟuṅkuṭi. Probably this Aḻakiya-nampi is a reference to the Vaiṣṇava-nampi image of whose spell Nammāḻvār has spoken in ecstatic terms. (*Tiruvāymoḻi,* 5.5)
323. Speaking of Māyaṉ as Kṛṣṇa, identifying all Viṣṇu-incarnations as of one Lord.
324. *Tiru-mārpaṉ:* Tiru (Lakṣmi) resides in the chest of Viṣṇu. *Tiru* can also be taken in the general sense of 'sacred'.
325. The mole - *maru* - is called *srīvatsa.*
326. The Makāpali story, repeated in earlier lines as well, is specially associated with Kuṟuṅkuṭi as its *talapurāṇam.* Viṣṇu is said to have put down Makāpali the demon-king by getting a boon of three feet land from him; measuring the earth and heaven with his two feet, He put his third foot on the head of the demon himself and sent him to the lower world. The place is called *Vāmaṉa-kṣētra* recalling this story.

அன்ம்புவியில் கீர்த்தியுள்ள அழகிய நம்பிபதி—
உம்பர்தொழு மாயவனார் உற்றகேத்திர பாலனோடே
நம்பிவந்த மறையோனும் நற்சங்கிலி மாபூதம்
வம்பணிந்த பூந்துளசி மாலைமாயன் வந்தபோது—

இங்கிருந்த நம்பியாரு மெதிரேசென்று தான்வினவி,
சங்கையுள்ள மாயவனார் சன்னதியில் வந்திருந்தார்.
செம்பொன்மணி மாளிகையும், திருக்கொடி மாமரமும்,
நம்புமலர்ச் சோலைகளும், நாட்டாறும், வாள்விகளும்,
அருணமணிக் கோபுரமும், அன்ம்பொன் மண்டபமும்,
திருமதிலும் சுத்துகளும், செங்கமல வாள்விகளும்,
கண்டு மகிழ்ந்து மாயன், காசினி யளந்த கோமான்,
தண்டமிழ்சேர் மாயவரும் தானங்கவ தரித்திருந்தார்.

கேத்திரபாலனுக்குத் திருமால் இட்ட கட்டளை

இருந்துதலங் கண்டபோதே இசைநெடுமால் ஏதோசொல்வார்.
பருந்தேறு மாயவனார் பாவித்தங்கே தானிருந்து,
'வாராய்நீ கேத்திரபாலா! வந்தசங்கிலிப் பூதமுடன்
சீராக நம்பிதன்னைச் சேவித்து நில்லு' மென்றார்.

1066. அழகிய நம்பிபதி - அழகிய நம்பி கோயில் கொண்டிருக்கும் திருக்குறுங்குடி.
1067. உம்பர் - தேவர்; உற்ற - தன்னுடன் வந்த; நெருங்கிய தொடர்பு கொண்ட.
1069. வம்பணிந்த - வாசனை பொருந்திய.
1070. நம்பியார் - அழகிய நம்பி - திருக்குறுங்குடிப் பெருமாள்.
1071. சன்னதி - சன்னிதி; தெய்வத்தின் திருமுன்பு.
1072. கொடிமரம் - கோவிலில் விழாவின்போது கொடியேற்றுவதற்காக அமைந்துள்ள பெருமரம்.
1073. நம்பு - விருப்பம்; நாட்டாறு - திருக்குறுங்குடியை அடுத்து ஓடும் ஆறு; இதனை நம்பியாறு என்றும் வழங்குவர்.
1074. அருண மணி - செம்மணி; பொன்மண்டபம் - அழகிய பொன் வேலைப் பாடுடைய மண்டபம்.
1075. சுத்துகள் - சுற்றுகள், பிராகாரங்கள்; கமலவாள்வி - தாமரைத்தடாகம்.
1079. பருந்து - கருடன்; பாவித்தல் - எண்ணுதல்.
1081. சேவித்து நிற்றல் - வணங்கி நிற்றல், தொண்டு செய்து நிற்றல்.

1066-1077. The town of Aḻakiya Nampi possessing fame over the fine earth'.
When Māyavaṉār whom celestials bow to, the Māyaṉ[327]
Wearing the garland of-fine scent-bearing *tuḷaci* leaves came with
The Guardian deity, the trustful brahman follower and the good *Caṅkili* goblin,
The great Nampi of this place[328] met Him
And made usual enquiries of His welfare; and the Māyavaṉār
The Beautiful one, then stayed in the temple (of the place).[329]
Māyaṉ the Lord who measured the worlds,
Māyavar,[330] dear to sweet Tamil accents,
Saw the precious edifice of glittering gold, the great staff
Of the holy flag, the groves of sweet flowers,
The river Nāṭṭāṟu, the ponds, the beautiful tower
Facing the rising Sun,[331] the fine, golden pillared-hall,
The enclosing wall and the rounds within, and the tanks
Of fair lotus flowers; feeling happy He
Deigned to stay there.

Māyaṉ stops his Kēttirapālaṉ

1078-1081 As he stayed seeing the place, the Towering Māl of fame
Took to saying something;[332] Māyavaṉār who mounts the Eagle
Staying there with fascination (for the place),
Said: "You guardian of my residence,[333]
Stay here with the *Caṅkili* goblin travelling with you,
Worshipping duly the god Nampi (of this place)".

---

327. Pleasing stylistic repetition of the name 'Māyavaṉār' (reverential) with Māyavaṉ (less formal) nuances.
328. Kuṟuṅkuti.
329. Ls.1070-71. The participle *viṉavi* may be taken to mean *Viṉaviyapiṉ* so that the meaning may allow the narration of Māyavaṉār's stay at the place in the next line. If it is taken as a non-finite participle to mean making enquiries, the local god of Kuṟuṅkuṭi should be understood to have stayed in the presence of the guest Māyavaṉār, the beautiful one.
330. Stylistic alternation of Māyaṉ and Māyavar for the same Deity.
331. *Aruṇamaṇikkōpuram* is interpreted in the same way as *aruṇ. maṇṭapam* in l.111 of the text.
332. *ētō colvār:* formulaic phrase calling attention to what follows, a narrative marker in Tamil ballads.

என்னைவிட்டுவிட்டு எங்கே நீர் போறீர் என்றான் கேத்திரபாலன்

நில்லுமென்று இவருரைக்க, நேசமுள்ள கேத்திரபாலன்,
சொல்லுவானாஞ் சிலபேச்சு, துய்யமாயன் தன்னுடனே:
'உம்மைநான் சேவித்து உம்மருகே பூசைகொண்டு,
வண்மையுட னிருப்பமென்று வந்தோம்நாம் உம்பிறகே;
இ(டை)டவழியி லம(ர்)த்திவிட்டு எங்கேநீர் போறீ' ரென்றான்.

மாயவன் மனம் நொந்து, அவனிடம் கூறிய எதிருரை

குடையுடைய கேத்திரபாலன் கூறுமொழி தனைக்கேட்டு,
'தவத்திவிட்டீ' ரென்றவார்த்தை தானெடுமால் கேட்டபோது,
நமர்த்தமுள்ள செவிதனிலே நாராசம் தைத்ததுபோல்,
கண்ணான மாயவனார் கண்கலங்கி, மனம்நடுங்கி,
புண்ணாக மனசுநொந்து, பூண்டுமங்கே யேதுரைப்பார்:
'வாராய்நீ கேத்திரபாலா! (வார்த்தை)யொன்று சொல்லுகிறேன்:
சீரான மலைநாட்டில் திருவனந்தா புரந்தனிலே
நேராக நாம்போறோம்; நீயுமங்கே வந்ததுண்டால்,
ஓராம லெவர்தனையு முயிர்வதைகள் செய்திடுவாய்.

தெய்வமலை நாட்டிலுள்ள சீர்கேளு, கேத்திரபாலா!
மெய்ப்பான சேரர்பூமி, மேதினியில் வண்மைகேளு:
போதமுற்ற மறையவர்கள் பொருந்துமறை முறைமைகளும்,
வஞ்சிக் கொடியார்கள் மதனனென வந்த மன்னன்
திருவஞ்சி ஆதித்த மன்னன் செங்கோலின் நீதிகளும்,

1082. நேசம் - அன்பு, பக்தி.
1083. துய்ய - தூய்மையான.
1085. வண்மையுடன் - வளமாக; பிறகே - பின்னால்.
1087. குடையுடைய - குடையைத்தாங்கிய; குடைபிடித்து வருகிற.
1088. தவத்திவிடுதல் - கைவிடுதல்.
1089. நமர்த்தமுள்ள - புண்பட்ட; நாராசம் - கூரிய இரும்புக்கோல்.
1091. பூண்டும் - மீண்டும்.
1094. வந்ததுண்டால் - வந்தாயானால்.
1095. ஓராமல் - சிந்தித்துப் பார்க்காமல்; உயிர்வதை - உயிர்க்கொலை.
1096. தெய்வ மலைநாடு - தெய்வத்தன்மையுள்ள சேரநாடு.
1097. மெய்ப்பு - புகழ்ச்சி; மேதினி - உலகம்; வண்மை - வளப்பம்.
1098. போதம் - அறிவு, மெய்ஞ்ஞானம்; மறைமுறைமை - வேதநெறி.
1099. மதனன் - மன்மதன்.
1100. வஞ்சி - வஞ்சிநாடு, சேரநாடு; திருவிதாங்கூர் தேசம்; ஆதித்தமன்னன் - பெருமாள் திருவனந்த புரத்துக்கு எழுந்தருளிய காலத்து அந் நாட்டை ஆண்ட அரசன்; செங்கோல் - நல்லாட்சி.

1082-1086. **His protest**

With the God saying: 'stop here', the kind Kēttirapālaṉ,
Took to speaking a few words with the pure Māyaṉ;
"I[334] followed you behind, thinking to pay obeisance to you
And partake of worship (offered by devotees) in your company,
And (thus) live with prosperity. Making me
Stay on the way, where do you travel?" he said.

Māyaṉ's reply

1087-1095. Towering Māl, on hearing the words spoken by *Kēttirapālaṉ*
With an umbrella-insignia,[335] and his utterance
'You have abandoned me,[336] (got afflicted) like a black rod
Piercing an already wounded ear. Māyavaṉār, precious
As the eye, became agitated in his eyes
And his mind was shaken and it pained as a sore.
And he began saying.[337] 'Come, you Kēttirapālā,
One thing I am telling you; we are going straight
To Tiruvaṉantapuram in excellent Malaināṭu.[338]
If you also are to come there, you will
Resort to destruction of life of every person without discrimination.

The divine Malaināṭu

1096-1100. Oh Kēttirapālā, hear the glory of the divine Malaināṭu,
The truthful Cēra-land; hear its riches on earth—
The Vedic procedures in which followers of the Veda,
Possessed of spiritual knowledge, are engaged; the just policies,
Of the right sceptred King Ātittaṉ of Tiruvañci,[339]

---

333. *Kēttirapālaṉ* is a mythological deity attached as a sentinel to particular temples, mentioned earlier in l.291.
334. The ballad-writer carelessly alternates the first person singular *nāṉ* with the inclusive first person plural *nām* (used as an honorific) in the same sentence.
335. Two parallel clauses in participial construction: 'on hearing: on hearing'.
336. *tavattivittīr* dialectal usage.
337. *ēturaippār*-formulaic phrase.
338. An old name for the Cēra-nāṭu, modern Kerala, indicating the preponderance of mountain-areas in its limits.
339. The traditional name of the Cēra land and capital in old literary works.

ஆறிலொன்று கடமைகொண்டு ஆண்டிருந்த சேரர்பூமி;
கூறிலொன்று தான்பிரிந்த கொத்தவர்கள் மலைநாடு;
பிரமவழி மறையோரும் பெண்ணீதி குன்றாமல்,
மரபுநெறி யழியாமல், மாதேவர் பூசைகளும்
தெய்வநெறி குன்றாமல் செங்கோலின் முறைநடத்தும்
வையகத்தில் நெறிநடக்கும் வ(ள) நாடு தென்னாடு,
அந்தமலை நாடுதன்னில், ஆனதெய்வ சன்னதியில்,
வந்தால்நீ அந்நாட்டில் மனிதரையும் வதைகள் செய்வாய்;
நல்லோர்கள் தனைவதைப்பாய்; நாட்டிலுள்ளோர் (நமைநகைப்பார்),
சொல்லுமிந்தப் பதியான திருவனந்தந் தனிலிருப்போம்;
நில்லுமிந்தப் பதிதனிலே, நேசமுடன் கேத்திரபாலா!'

கேத்திரபாலனை நிறுத்திவிட்டு ஏனையோருடன் மாயவன் புறப்படுதல்

மல்லனைய மாயன் சொல்ல மனம்பொருந்திக் கேத்திரபாலன்
(நல்லதென்று நகைபுரிந்து, நம்பியைச் சேவித் திருந்தார்.)
மின்பயிலு மாயவனார் (விரையவழி தானடக்க)
அன்பாக வந்ததொரு அருள்மறையோன் பின்வரவே,
வேதாள பூதம்வர, வெகுகணங்கள் பின்துடர,
பாதாள பூதமுடன் பலபூதந் தான்வரவே,
கூளி குறட்பேய்கள், குன்றாதமலைக் கன்னியும்,

1101. கடமை - வரி.
1102. கொத்தவர்கள் - கொற்றவர்கள்; அரசர்கள்; மலைநாடு - சேரநாட்டுக்குரிய ஒரு பெயர்.
1103. பிரமவழி - பிரமனது கால்வழி; பெண்ணீதி - பெண்களுக்குரிய நெறி முறை.
1104. மரபுநெறி - வழிவழியாகவந்த நடைமுறை; மாதேவர் - சிறந்த கடவுளர்.
1106. வையகம் - பூமி, உலகம்; நெறி நடக்கும் - நீதியின்படி நடக்கும்.
1108. வதைகள் - கொலைகள்.
1110. சொல்லும் - புகழ்ந்து பேசப்பெறும்.
1111. நில்லும் - தங்கியிரும்; நேசமுடன் - விருப்பத்தோடு.
1112. மல் - மங்குல், மேகம், இரவு; மனம் பொருந்தி - மனம் ஒத்து; சமாதானமாய்.
1113. நகைபுரிந்து - புன்முறுவல்கொண்டு, ஒப்புக்கொண்டு.
1114. மின்பயிலும் - மின்னல்போல் ஒளிபடைத்த; மின் ஒத்த நிறமுடைய திருமகளைக் கொண்ட.
1116. வேதாளம் - பேய், பிசாசு; பூதம் - பருத்தவுடல் படைத்த பேய்வகை; துடர - தொடர.
1117. பாதாளபூதம் - கீழுலகிலிருந்துவந்த பூதம்.
1118. கூளி - பேய்; குறட்பேய் - குறுகிய வடிவுடைய பேய்; மலைக்கன்னி - மலையில் உறையும் பெண்தெய்வம்.

1101-1111 A king come (to rule) like Mataṉaṉ[340] attracting women,
Tender like *vañci* - creeper plants. (It is) the Cēra-land
In which kingly rule takes place with the tax
Of one out of six shares (of people's income),[341]
The Malai-nāṭu in which a branch of a group[342] of monarchs rule;
And the fertile land, the southern land which keeps up
The right path in the world, with Vedic followers
Pursuing the path of Piramaṉ,[343] women sticking to
Their ordained path with no violation thereof,
And kingly sceptre duly conducting worships of great deities
Without spoliation of tradition and disturbance of the divine path.
In that Malai-nāṭu, to its established shrine of Divinity
If you come, you will take to killing people
Even in that land; you will torture good men.
And the people of the land (will laugh at us).
We will stay in this town of Tiruvaṉantam we mentioned.
Oh Kēttirapālā! stay with pleasure in this town itself (of Kuṟuṅkuṭi),

Kēttirapālaṉ stops; Māyavaṉ goes beyond to Vaḷḷiyūr

1112-1118. When Māyaṉ, mighty like a great wrestler, told him,
Kēttirapālaṉ consented, saying "well and good" and smiled
And he stayed (there) paying obeisance to Nampi.
Māyavaṉār, resplendent like lightning, walked the way quickly
And the gracious Vedic-follower who joined Him with love
Came behind; the vētāḷa-goblin[344] came behind;
Many groups (of goblins) came behind; along with *pātāḷa* goblin[345]

---

340. The Indian god of love, corresponding to Cupid.
341. The royal tax is prescribed as one-sixth of people's income (Parimēlaḷakar's commentary to *Kuṟaḷ* 756).
342. The meaning of the phrase *kūṟiloṉṟu-tāṉ-pirinta koṟṟavarkaḷ* is not clear. It may refer to the Cēra kings of Tiruvaṉantapuram as one branch of parallel lines of Cēra royal families ruling from several capitals like Karuvūr, Takaṭūr etc.
343. The Vedic path, Piramaṉ (Brahma) being the source of the Vedas.
344. New types of goblins *(pūtam)* are here mentioned adding to the list first given in ll.284 to 296. The vētāḷam-goblin is supposed to hang on to trees (specially *muruṅkai* tree)
345. *pātāḷa* means the 'world below the earth'.

காளி கணங்களுடன் கன்னியர்கள் குரவையிட,
கன்னலுடன் கதலிகளும், காலணையு மேரிகளும்,
சென்னல் விளையுந் திருநிலமும், தென்னமரச் சோலைகளும்,
சேலையொத்த வேல்விழியார் தெய்வமாதர் சூழ்ந்துவர—

பாலைபுத்தூர்விட்டு மாயவனார் வள்ளிநகருக்கு வருதல்

பாலைபுத் தூரும்விட்டு பள்ளிகொண்டார் தான்வரவே,
மைய்க்குன்றா மேனியனார், வன்னமுள்ள மாயவனார்,
நெய்(க்)குன்றா மலைகடந்து, நீலநெடு மலையும்விட்டு,
(அப்பிலே) கண்வளர்ந்த அச்சுதனா ரப்பொழுதே
உப்புக்கண்டம் பொத்தைவிட்டு, உயந்தமரக் காவும்விட்டு,
பள்ளிகொண்ட மாயவனார் வள்ளிநகர் தன்னில்வந்தார்.

திருக்கிராமம் முதலிய ஊர்களைக் கடந்து திருமால் பூதநாதரைக் காணுதல்

மின்னிநல்ல மழைபொழியும் (பொன்னிவாய்க்கால்) கரைகடந்து,
வன்னமுள்ள வண்மைநகர் வாள்விகளும் தான்கடந்தார்,
அட்டதிக்கு மளந்தமாயன் ஆனதொட்டிச்சி குளமுமிட்டு,
செப்பமுடன் மாயவனார் திருக்கிராமம் தன்னில் வந்தார்.
ஆடல்வன்னப் புகழ்ப்பெருமாள் அரக்கியரைத் தான்வதைத்த

1119. காளிகணங்கள் - மாகாளியைச் சேர்ந்த பேய்க்கூட்டங்கள். கன்னியர்கள் - பெண்கள்; குரவையிடுதல் - வாயால் எழுப்பும் ஒரு வகை மங்கல ஒலி.

1120. கன்னல் - கரும்பு; கதலி - வாழை; கால் - வாய்க்கால்; அணை - நீர்த்தேக்கம்; ஏரி - பெரிய நீர் நிலை.

1122. சேல் - கெண்டைமீன்; வேல் - வேலாயுதம்; விழியார் - கண்ணையுடையவர்; தெய்வமாதர் - தேவலோகத்து மகளிர்.

1123. பாலைபுத்தூர் - குறுங்குடியிலிருந்து வள்ளியூருக்குவரும் பாதையிலுள்ள ஓர் ஊர்; பள்ளிகொண்டார் - அரவணையில் அறிதுயில் கொள்ளும் மாயன்.

1124. மைய்க்குன்று - அஞ்சனமலை, கரியமலை; வன்னம் - அழகு.

1126. அப்பு - நீர், கடல்; இங்கே பாற்கடலைச் சுட்டும்; கண்வளர்தல் - துயிலுதல்; அச்சுதனார் - அழிவில்லாதவராகிய திருமால்.

1127. பொத்தை - சிறுகுன்று; உயந்த - உயர்ந்த; மரக்கா - மரச் சோலை.

1128. வள்ளிநகர் - வள்ளியூர்.

1129. பொன்னிவாய்க்கால் - வள்ளியூருக்கு மேல்பால் உள்ளது; பணகுடியைச் சார்ந்து ஓடுவது.

1119-1128. Many goblins came along; with them were
Spirits called *kūḷi*[346] and *kuṟaḷ*[347] and daunting hill-maids.[348]
With these spirit-groups of *Kāḷi*, maidens raised the noise
Of *kuravai*. The divine maids with piercing
Fish-like eyes, went along, rounding in their course[349]
Plantain and sugar-cane trees, tanks
From which water-channels flow in fields
Producing red rice and groves of coconut trees.
The sleeping God[350] as he went, left behind Pālaiputtūr;
The Lord like a collyrium[351]-hill, the beautiful Māyavaṉār
Went beyond Neykkuṉṟā mount and left behind him
Nīla-netu-malai;[352] The Lord Accutaṉār[353] immediately
Left Uppukkaṇṭam Pottai[354] and woods rising high (on the way);
The God who slept on the waters,[355] Māyavaṉār, came into
Vaḷḷiyūr town.

Onward from Vaḷḷiyūr through Nāñci-nāṭu

1129-1133. He passed beyond the bank of the Poṉṉi channel over which
The rains pour with lightning and went beyond the tanks
Of beautiful Vaḷḷiyūr; Māyaṉ who strode the eight directions
Left Toṭṭicci-kuḷam; Māyavaṉār (then) came in full form
Into Tirukkirāmam. The Lord famous for his charming dance[356]

346. A variety of *pēy* considered to attend on the goddess *Kāḷi.*
347. Dwarf spirit, also part of *Kāḷi's* train.
348. Female spirits believed to inhabit hills, here taken with attendant - spirits of *Kāḷi.*
349. The syntax requires l:1122 with the verb to be taken first
350. Māyavaṉ as Visṇu sleeping on Āti-sēṣa, the serpent-bed.
351. Traditional simile for the dark-blue person of Viṣṇu.
352. The name of a mountain meaning: 'Blue, long mount'
353. Name of Visṇu - Māyavaṉ.
354. Place-name; *pottai,* means 'hillock'.
355. Viṣṇu as sleeper on the Milky Ocean.
356. As a child Bālakruṣṇa All *avatāras* are treated as one here.

தாடகை மலைதனிலே தானிருந்த தாடகையை
ஊடுருவச் சரந்தொடுத்த உலகளந்தார் தானுமப்போ
தோடணிந்த மலைமார்பன் தோவாளை தான்கடந்தார்,
பாதம் வருந்த நடந்து பூதநாதர் தன்னைக் கண்டார்.

மாயவனார் நாஞ்சிநாட்டு வளம் காணுதல்

மாஞ்சோலைக் குயில்கூவ, மந்திகுதி பாயும் நாடு;
நாஞ்சிபுகழ் நாடுகண்டார், நல்லபுகழ் மாயவனார்.
காராளர், ஏராளர், காசினியில் பெரியோர்கள்,
சீரார்ந்த நங்கைகுலம் சிறக்கவந்த நல்லோர்கள்,
பேராளர் தன்கீர்த்தி பேசவுமோ துலையாதே.
மோருக்கு முத்தளக்கும் முதுநாஞ்சி நன்நாட்டார்,
பாருக்குள் நெறிநடத்தும் பரிந்தபுகழ் வெள்ளாளர்,
சென்னெல்லா லெவ்வுயிர்க்கும் திருந்தவறம் வளர்த்தோர்கள்,
கன்னெல்லால் சிவபூசை கண்டிருந்த காராளர்,
ஏரடித்துத் தொளிகலக்கி, இசைந்த சென்னல் நடுவாரும்;
பாரகத்தி லுழுவாரும், பகடுதனைப் பூட்டிடுவார்;
கூறுகூ றாகப்பகுந்து கூர்விழிசேர் கடச்சியர்கள்
நாற்றுநடக் குரவையிட, நல்லொலியும் சொல்லொலியும்,

1134. தாடகைமலை - நாஞ்சிநாட்டின் வடபால் உள்ளது.
1136. தோடு - மலர்களால் தொடுத்த மாலை; மலை மார்பன் - மலை போல் திண்ணிய மார்பையுடையவன்; தோவாளை - ஆரல்வாய் மொழியை அடுத்துத் தென் மேற்கேயுள்ள ஊர்.
1137. பூதநாதர் ! பூதப்பாண்டி என்னும் ஊரில் கோயில் கொண்டருளும் சிவபெருமான்.
1138. மாஞ்சோலை - மாந்தோப்பு; குயில் - இனிய குரலெழுப்பும் பறவை; மந்தி - குரங்கு.
1139. நாஞ்சி - நாஞ்சில், கலப்பை; நாஞ்சி புகழ் நாடு - உழவுத் தொழிலால் புகழ் பெற்ற நாடு.
1140. காராளர் - பூவைசியர், நிலக்கிழார்; ஏராளர் - உழவர்; காசினி - உலகம்.
1141. நங்கை குலம் - பெண்வழி வாரிசு உரிமை கொண்ட மருமக்கள் தாயம்; நாஞ்சில் நாட்டு வேளாளரின் குலம்.
1142. பேராளர் - பெரும்புகழ்படைத்தோர்; துலையாது - தொலையாது; அளவிட முடியாது.
1144. பாருக்குள் - பூமியில், உலகில்; நெறி நடத்தல் - வழி காட்டிப் பிறரை ஆளுதல்; பரிந்த புகழ் - எல்லாரும் அறிந்த பெரும் கீர்த்தி.
1145. சென்னல் - செந்நெல்; திருந்த - நன்றாய்.
1146. கன்னெல் - நெல்லில் ஒருவகை; சிவபூசை கண்டிருந்த - சிவபூசை செய்கிற.
1147. ஏரடித்தல் - கலப்பை பூட்டிய ஏரினால் உழுதல்; தொளி - சேறு.
1148. பாரகத்தில் - பூமியில்; பகடு - எருது, எருமைக்கடா.
1149. கூறுகூறாக - பகுதிபகுதியாக; கடச்சியர் - கடைச்சியர்; உழத்திப் பெண்கள்.
1150. நல்லொலி - மங்கலவொலி; சொல்லொலி - புகழ்ப்பாடலின் ஒலி.

1134-1150. Who shot his arrow through Tāṭakai[357] who lived in Tāṭakai-hill,[358]
He, the World-Measurer,[359] the Lord with mountain-like chest,
Wearing the flower-garland, then went beyond Tōvāḷai.
Walking with His feet paining, He (went and) saw Pūtanātar,[360]
Māyavaṉār of exquisite fame saw the famed land of Nāñci.[361]
There is no limit to speaking of the fame of (this land's) men:[362]
Land-proprietors, ploughmen, great men on earth,
Good men following matrimonial inheritance,[363] and men of name.
People of the good old Nāñci-land measure out pearls
In exchange for butter-milk; Veḷḷāḷar of known fame
Establish the righteous path on earth, foster
Open-handed charity giving to everyone of their red paddy,
And promote worship of Civaṉ with black paddy.[364]
Those who drive the plough, stir the mud
And plant the wanted red paddy,
Those who plough deep into the earth,
And yoke the bullocks (to their plough-poles),
Peasant women of piercing eyes, plant paddy-saplings,
Grouped in groups and raise sounds of *kuravai* notes,
With these propitious notes and the sounds of songs of praise,

---

357. The demoness killed by Rāma when he went to protect Vicuvāmitra's sacrifice.
358. Tāṭakai-malai, situated in northern Nāñcil-nāṭu.
359. Viṣṇu's exploit as Tirivikramaṉ; His broad mountain-like chest goes with this *avatāram*.
360 Lord Civaṉ of the place called Pūtappāṇṭi.
361. Also called Nāñcil-nātu literally, land of the plough, at the southern-most tip of the peninsula.
362. Line 1142 is taken first for prose order.
363. Naṅkai-kula Veḷḷāḷar: This has reference to the marumakkaṭ-tāyam (matriarchal) system of inheritance followed in old Nāñcil-nāṭu. The clauses about Veḷḷāḷar in the text are loosely structured and do not fit into sentences.
364. *kaṉṉel:* taken to mean black paddy as contrasted with *ceṉṉel* red paddy. They need not be actually black or red as the names suggest.

மடைதனிலே மொகுமொகென வலம்புரிநின் றோசையிட,
நடைதனிலே தனமசைய நல்லசென்னல் நடுவாரும்;
துடைதனிலே குழலசைய துண்டநுதல் மங்கையர்கள்
இடையதனில் தனமசைய, இசைந்ததனம் கும்பமென்ன,
கடைத்தெருவில் நடப்பாராம், கானவன்ன மயிலெனவே;
நெல்விளைந்து கதிர்விரிய, நெடுங்கரம்பைக் குலைவிரிய,
வல்லவயல் கூறுகண்டு, வளைந்துசென்ன லரிவாரும்;
(போரேறக்) கதிர்விரித்துப் பெரும்பகடு தனைப்பூட்டிச்
சூடேறச் சூடடித்துத் தூத்திநல்ல கதிர்விரித்து,
அறலினமும் புனலினமும் ஆனசென்னல் வயலினமும்,
(பறளி) நல்ல யாறுகளும், பாங்குபாங்காய்ச் சோலைகளும்,
கறவைசுரந் தானினங்கள் கன்றினத்துக் கிரங்கிநிக்க,
(முறனாலே) நெல்முகந்து, முன்றுதன்னில்க் குவித்திடுவார்;
பொன்னாடுநன் னாடிதற்குப் போராது மென்றுசொல்லி
நன்னாஞ்சி நாட்டிலுள்ள நகர்ச்சிறப்புங் கண்டருளி
நாஞ்சிவளர் நாடு கண்டார், நாதவினோ தப்பெருமாள்.

1151. மடை - நீர்பாய் தூம்பு, மதகு; மொகுமொகென - நீர் பாய்ந்தோடும் போது எழும் ஒலிக் குறிப்பு; வலம்புரி - வலம்புரிச் சங்கு.

1152. நடைதனில் - நடக்கும்பொழுது.

1153. குழல் - கூந்தல்; துண்டநுதல் - பிறைத்துண்டம் போன்ற நெற்றி.

1154. தனம் - முலை; கும்பம் - குடம்; தனத்தைக் குடத்திற்கு ஒப்பிடுகிறார்.

1155. கானம் - காடு; மயிலின் நடை மாதர் நடைக்கு ஒப்பிடப்படுகிறது.

1156. கரம்பை - வயல்வரம்பு; குலை,'- நெற்கதிர்.

1157. கூறு காணுதல் - ஒவ்வொருவரும அறுக்கவேண்டிய பகுதியைப் பிரித்தல்; சென்னலரிவார்-கதிர் அறுப்பார்.

1158. போரேற - சூடடி வட்டத்தில் பொருந்த.

1159. சூடடித்தல் - கதிர் பரப்பிய வட்டத்தில் மாடுகளைப் பிணைத்து மிதிக்கச் செய்தல்; தூத்துதல் - தூற்றுதல்; காற்றில் தும்புதூசுகள் போகத் துவுதல்; கதிர்விரித்தல் - நெல்லின் பொன்னொளி துலங்கச் செய்தல்.

1160. அறலினம் - கருமணற்குவியல்; புனல் - நீர்.

1161. பறளி - பறளியாறு; இது பழையாறு என இப்பொழுது வழங்கப்படுகிறது. பாங்கு பாங்காய்-பக்கம் பக்கமாய்.

1162. கறவை சுரந்து - மடியில் பால் ஊறி; ஆனினம் - பசுக்கூட்டம்; நிக்க - நிற்க.

1163. முறன் - முறம், போலி, சுளகு; முன்று - முற்றம்.

1164. பொன்னாடு - தேவருலகம்; போராது - ஒப்பாகாது.

1166. நாதவினோதன் - இசையெழுப்புவதில் வல்லவன்; ஒலி வடிவானவன்.

1151-1166. The right-curved conch, standing in watered-fields, raises
A *mogu-mogu* sound[365] as women with their heaving breasts
Plant the good paddy plants, walking (in the fields).
Women with foreheads like the crescent moon, have their hair
Fluttering over their thighs while their breasts heave
Over their hips; the shaking breasts look like pots, as they
Walk in the market-street like the colourful jungle peahens.
As the rice-plant grows and its grains open out, and
As the grain-stalks spread over long field-banks, people see
The nature of the yielding field and bending low,
Cut the red paddy; they spread the (gathered) grain
So that their name (as farmers) goes up.
Tying big bulls to the yoke they drive[366] them over the grain.
And separate it, winnow[367] it and gather the good, sifted grain.
(Against the background) of river-sands, water-courses
And fine red, paddy-fields, good rivers (like Paṟaḷi)
And groves on all sides,[368] groups of cows stand,
Their udders yielding milk as they long for their groups of calves
And please meas use (the gathered) paddy with the winnow-fan
And heap it in the yard.
Saying that the celestial world will not equal this good land,
And graciously seeing the excellences
Of the city area of good Nāñci-nāṭu,
The God, used to divert Himself with sweet sounds,
Saw the prosperous Nāñci-nāṭu (in full).

---

365. The *mogu-mogu* sound is obviously the onomatopoeic imitation of water gurgling against *valampuri* conches said to be strewn in well-watered fields. The ballad-poet's appreciative response to the landscape of watered fields is noteworthy.
366. Driving bulls over gathered grain, called *cūṭaṭittal* sifts and makes them fit for winnowing. The phrase *cūṭēṟa* means to impart *cūṭu*, 'heat'.
367. The winnowing called *tūttal* is done with a *sieve*, allowing matter extraneous to the gathered grain, to be carried on the wind.
368. The sentence construction is loose and the overall sense is indicated by additions in brackets.

சிவிந்தாபுரியில் தாணுமாலையருடன் பெருமாள் உரையாடுதல்

தென்னாடு சிவிந்தாபுரி சென்றுகண்டார் பெருமாளும்;
வன்னமுள்ள திருமதிலும் வளந்த சிகரமுடியும்,
(அந்தரமார்க்க) மாகவேதான் ஆனதெய்வ (நாயகனார்)
இந்திரன் பூசித்ததலம் இதுவேதா னெனமகிழ்ந்து,
சிவிந்தா புரிதனிலே தெய்வங்கள் பெருமாளானார்
சவுந்தரிய மானதெய்வம் தாணுமா லையனாரை
விந்தைநெடு மாயவரும் மெய்ப்பாக வந்துகண்டு,
வந்துகண்டார் மாயவனார், வாய்த்ததிரு கண்ங்களிக்க;
கண்ங்களிக்கக் கண்டுநின்று, கமலபதங் கைதொழவே,
தண்ங்களிக்கப் பெருமையுள்ள தாணுமா லையனாரும்,
'வந்தீரோ மாயவரே! வடக்கிருந்து இப்பொழுது;
ஏன்தானீ ரிங்கே போந்தீர்?' எனமொழிந்தா ரீசுரனார்.
'ஆசையுட னொருவார்த்தை அருளக்கேள் என்பெருமாள்:
பெருவனந்தந் தனிலான பேரானதென் பூமியிலே
திருவனந்தந் தனிலிருப்போம், சீராக' வென மொழிந்தார்,
'நன்றுநன்று வந்ததென்ன, நாரணரைத் தான்மகிழ்ந்து,
தென்ங்கடலுந் திரைமோதி (திசைவேள்வி) மலையளவும்
(விண்ங்கடந்து) கொள்வனென்று வீறுடனே நிக்கிதுகாண்:
கிட்டவங்கே கீழ்ப்பாலே, கிருபையுட னம்முடனே

1167. சிவிந்தாபுரி - சிவந்தரம்; சுசீந்திரம் என்னும் ஊர்.

1168. வளந்த - வளர்ந்த; சிகரமுடி - கோபுரத்தின் உச்சி.

1169. அந்தரமார்க்கம் - ஆகாயவழி; தெய்வநாயகனார் - தேவர்கள் தலைவன்; இந்திரன்.

1172. சவுந்தரியம் - அழகு; தாணுமாலையனார் - சுசீந்திரத்தில் கோயில் கொண்டருளும் சிவனார் திருநாமம்; தாணு - சிவன்; மால் - திருமால்; அயன் - பிரமன்; மும்மூர்த்தியாக விளங்குகிறார் என்பதாம்.

1173. விந்தை - வித்தை; ஆச்சரியம்; மெய்ப்பாக - புகழ்ச்சியாக.

1175. கமலபதம் - தாமரைமலர் போன்ற திருவடி.

1176. தண்ங்களிக்க - நீர்சூழ் உலகம் மகிழ.

1178. போந்தீர் - வந்தீர்; ஈசுரனார் - சிவனார்; தாணுமாலையன்.

1179. வார்த்தை அருள - வார்த்தை சொல்ல.

1180. பெருவனந்தம் - பெருங்காடு.

1181. திருவனந்தம் - திருவனந்தபுரம்.

1183. தென்ங்கடல் - தெற்கிலுள்ள குமரிக்கடல்; வேள்விமலை - நாஞ்சி நாட்டின் மேலெல்லையாக அமைந்தமலை.

1184. விண் - ஆகாயம்; வீறுடன் - எழுச்சியுடன்; நிக்கிது - நிற்கிறது.

1185. கிட்ட - அடுத்து; கீழ்ப்பால் - சிவிந்தாபுரியின் கிழக்குப் பகுதியில்.

At Civintāpuri

1167-1185. The Ruler-God walking, saw Civintāpuri[369] of the southern land;
Seeing its beautiful outer wall and tall crown-summit[370]
And feeling happy that this is indeed the holy place at which
The Lord of the celestials Intiraṉ[371] worshipped,
(Coming) here by the path of the sky.[372]—
In the town of Civintāpuri, the God among gods,
Is the beautiful deity Tāṇu-māl-ayaṉ; the towering and wonderful
Māyavar came eagerly to see(Him); Māyavaṉār came and saw[373]
So that the holy eyes He had, became delighted;
As Māyavar stood with eyes delighted and hands
Saluting (His) lotus-feet, Tāṇu-Māl-ayaṉār,[374] whose greatness
Gladdens the water-girt earth, the Īcuraṉār[375] said:
"Oh Māyavar! you have come now from the North; why did you,
Of all things, come down here?". "My Lord, Hear me
Speak a word (in reply) with love. In the famed southern land,
In the big jungle, in Tiruvaṉantam we will stay in dignity"
So (Māyaṉ) said. Feeling pleased with Nāraṇar[376]
(Tāṇu-māl-ayaṉ said) "Your coming is good indeed;
The southern (Kumari) sea swelling over the (southern) direction,
Till the Ticai-vēḷvi[377] mount, vaults over the sky and stands
As if saying 'I will seize it all' with pride. Near it.

---

369. Literary name for modern Sucīntiram.
370. The enclosing wall and the crown-like summit of the *gōpuram* of the temple.
371. So local legend says and explains name *Suci-Indiram.*
372. The lines are broken off with incomplete predication.
373. Repetitive lines meant to impart jauntiness in narration.
374. Tāṇu-māl-ayaṉār (with suffix- *ār* added for honorific significance) is the Śiva-deity at Sucīntiram (near Kanyākumari), worshipped as Trimūrtti-Civaṉ (Tāṇu), Viṣṇu (Māl) and Piramaṉ (Ayaṉ) in one form. The offering of worship by a Viṣṇu deity to a Trimūrtti passes off as a flight of mythological fancy at folk level.
375. Śiva with honorific suffix-ār., in apposition with Tāṇu-māl-ayaṉār.
376. An abbreviation of Nārāyaṇar, one of the names of Tirumāl used interchangeably with Māyaṉ, the travelling Deity of this poem.
377. The western boundary or Nāñci-nāṭu.

மட்டணிந்த பூங்குழலாள் மாறியாட வந்தவள்தான்
திட்டெனவே தென்கரைக்கே திசையாம லலையமத்தி
வன்னமுள்ள (மாதங்கியாள் மயிலனையாள்) மனமகிழ்ந்து,
கன்னியவள் குமரியென்றுங் கலங்காமல் வீத்திருந்தாள்.
அப்படியே தென்பூமி அலைகடலுங் கொள்ளாமல்,
இப்படிநீ ரிருப்பதும் எமைவேண்டிச் செய்ததுதான்'
என்றுசொல்லி அரனாரும் இன்பமுற்று மனமகிழ்ந்து,
அன்றிரவு நாரணர்க்கு ஆனபூசை யருள்புரிந்து—

சிவிந்தாபுரியில் விடைகொண்ட மாயவன் வள்ளியாற்றுக்கு வருதல்

குன்றுதனையன் றெடுத்த மாயன் கோலமுடன் விடையுங்கொண்டு
மன்றளந்த மாயவனார் வருமளவில் மறையோனும்
பின்னேதான் தான்வரவே பெருமாளைக் காணாமல்,
அந்நேர மனசுநொந்து அருள்மறையோன் தான் நடந்தார்.
சிவிந்தைவிட்டு மேற்கே நோக்கித் திருமாலும் வரும்நேரம்—
குவிந்தைமரச் சோலைகளும் கூட்டமலர் வாள்விகளாம்;
வேட்டமுட னிந்திரனார் வெள்ளானை முன்னாளில்
கோட்டாலே குத்திவந்த கோட்டாறு தான்கடந்து,
அஞ்சன(ந)ல் மேனியனார், ஆன புகழ் மாயவனார்
பஞ்சவன்னக் காடுவிட்டு, பள்ளிகொண்டார் தானடந்து,

1186. மட்டு - தேன்; மாறியாடவந்தவள் - சிவபெருமானுக்கு எதிராகப் போட்டியிட்டு ஆட வந்தவள்; காளி.
1187. திட்டெனவே - உறுதியாக; திசையாமல் - திரியாமல், அழியாமல்; அலையமத்தி - கடலைத் தணியச்செய்து.
1188. மாதங்கி - மாகாளி.
1189. குமரி - குமரித்தெய்வம்.
1193. பூசையருள்செய்தல் - சிறப்புச்செய்தல்.
1195. மன்றளந்த - பூமியை அளந்த.
1198. சிவிந்தை - சிவிந்தாபுரி, சுசீந்திரம்.
1199. குவிந்தைமரச்சோலை - கூட்டமாக நெருங்கிய சோலைவனம்; மலர்வாள்வி - பூந்தடாகம்.
1200. வேட்டம் - விருப்பம்; வெள்ளானை - வெள்ளைநிறம் படைத்த ஐராவதம்.
1201. கோட்டால் - கொம்பினால்; வெள்ளை யானை கொம்பினால் குத்திவந்த ஆறு - கோட்டாறு; பறளியாறு.
1202. அஞ்சனம் - மை.
1203. பஞ்சவன்னக்காடு - ஐவகை வண்ணங்கள் கொண்ட பூக்கள் மலரும் செடி கொடி மரங்களடர்ந்த காடு; கோட்டாற்றுக்கு மேல்பாலுள்ள பகுதி.

1186-1193. In the eastern side, the lady of the braid with honeyed flowers,
Who came graciously to dance[378] as our competitor,
Has firmly kept down the waves to the southern shore
Without transgression (of the limit) and she, the colourful Mātaṅki
Like the pea-hen, the virgin, the Kumari goddess, resides in dignity,
Undisturbed. Even so your (intended) stay in this place
So that the wavy ocean does not take away the southern land,
Is a deed done, in fact, thinking of our[379] interests"
So saying, Araṉār[380] happy and glad of heart—
Favoured Nāraṉar with worship due to him that night —

Journey from Civintai to Vaḷḷiyāṟu

1194-1203. Māyaṉ who the other day lifted up the hill[381]
Took leave (of Araṉ) in fine form
And as - Māyavaṉār who had measured the world-went,
The Vedic brahman who went behind Him,
Missing his God from his sight and becoming instantly
Afflicted with sorrow — the gracious Vedic personage walked on.
As Tirumāl, leaving Civintai came west,[382] there were
Grows of clustering trees and tanks with multitudes of flowers.
The Lord of collyrium-dark, auspicious person,
Māyavaṉār of established fame, passed beyond
The river Kōṭṭāṟu which arose as Intiraṉār's white Elephant[383]
Eagerly Pierced (the earth) with its tusks in days of old.
The God of the Sleeping pose left Pañca-vaṉṉa[384] wood

378. The rival dancer to Śiva is the goddess Kāḷi, also called Mātaṅki and Kumari later.
379. The ballad-poet's delicate poetic fancy excels here as the presence of Māyavaṉ at Tiruvaṉantapuram is said to limit the depredations of the southern ocean, enforcing the pre-existent rule of the goddess Kumari in the area.
380. Śiva.
381. Allusion to the lifting of the Kōvarttaṉa hill in *Kṛṣṇāvatāram.*
382. The text has *varum nēram:* 'time of coming' but the following line has only a descriptive detail without any action.
383. The river Kōṭṭāṟu (*kōṭu*—tusk and *āṟu—river*) has a legendary origin; it is said to have flowed from the earth pierced by the tusk of Airāvatam the white Elephant of Intiraṉār, the king of the good celestials.
384. A jungle to the west of Kōṭṭāṟu with thick growth of trees and plants yielding flowers of five colours.

மஞ்சாரும் மேனியனார் மறையோனைப் (பின்னகத்தி),
வஞ்சமற்ற திருமாலும் வள்ளியாறு தன்னில் வந்தார்.

விருத்தம்

15. வந்தார் வள்ளி யாறுதன்னில், வளமைகண்டு உளமகிழ்ந்து,
செந்தா ருறையும் சோலைகளும், சேரர் பூமி நகரிதென்ன,
பொந்தா துறையு மடவாரும் புனமா மயிலு மெனநடக்கும்
சந்தோச மாய்க்கண் டனுபவித்து தானெடுமால் தனித்து நின்றார்.

16. வேள்வி மலையில் தலையை வைத்து, வெண்பூமியிலே யுடலைவைத்து,
ஆழி தனிலே கால்நீட்டி, அருஞ்சென்னலிலே கைப்பரப்பி,
நாளும் நாளும் புகழோங்கி நடந்த நதிகண் டகமகிழ்ந்து,
வாளும் சிலையும் தரித்தபிரான் வள்ளியாறு தன்னில் வந்தார்.

மலைநாட்டின் நீதியை மாயவர் காணுதல்

வேறு

வள்ளியாறு தான்கடந்து மாயவரும் வாறபோது—
தெள்ளியதோர் சீரங்கத்தில் சேவித்த மறையோனும்

1204. மஞ்சு - மேகம்; பின்னகத்தி - உடன் தொடர்ந்து வராமல் பின்னே வருமாறு நீக்கி.
1205. வள்ளியாறு - வேள்விமலையிலிருந்து ஓடி வரும் ஆறு.
1207. செந்தாது - அழகிய பூங்கொத்து.
1208. பொந்தாது - பொன்றாது; குறைவின்றி.
1210 வேள்விமலை - நாஞ்சிநாட்டின் மேல்பால் எல்லையான மலை; வெண்பூமி - வெளியான நிலப்பரப்பு.
1211. ஆழி - கடல்; கால்நீட்டியது - கடலின் சங்கமமானது; சென்னல் - செந்நெல் விளையும் வயல் பகுதிகள்; கைப்பரப்பியது - கால்வாய்கள் வழியாகச் சென்று பாய்ந்து வளப்படுத்தியது.
1212. நாளும் நாளும் - எந்நாளும்; நடந்தநதி - பாய்ந்து செல்லும் வள்ளியாறு.
1213. வாள் - வாளாயுதம்; சிலை - வில்.

1204-1213. And walked; the Lord with the cloud-hued body, leaving
The brahman behind, the guileless Tirumāl came to Vaḷḷiyāṟu.[385]

Viruttam Verse-15

He came to Vaḷḷiyāṟu; and seeing its prosperity
He felt glad in heart; He saw groves with red fruit-clusters;
And women with golden pollen (in their braids)
Walking like great pea-hens in fields; He enjoyed the sights
With pleasure; the towering Māl stood alone,
Saying (in admiration): " this is the Cēra land and city".

Viruttam Verse-16

Seeing the river, which keeps its head in Vēḷvimalai,
And its body in the land of open plains,
Stretches its legs into the ocean,
And spreads its hands in precious red-paddy (fields),
And flows along with fame waxing day by day,
And feeling happy in heart, the Lord who wears sword and bow[386]
Came into the Vaḷḷiyāṟu (basin).

Māyavaṉār sees the just order of Malai-nāṭu

1214-1220. When Māyavar went leaving Vaḷḷiyāṟu behind,[387]
When the brahman who had served Him in tranquil Cīraṅkam,[388]

---

385. A river flowing from Vēlvi-malai mentioned earlier.
386. Allusion to Māyaṉ in his incarnation as Irāmaṉ.
387. Sentence not pursued to its conclusion. It runs parallel to l.1217 below.
388. *teḷḷiyatōr cīraṅkam* may also be taken to mean 'Cīraṅkam the town of men of pure vision or clear understanding'.

பள்ளிகொள்ளு மாயவரைப் பற்றிவந்த பாப்பானும்
தெய்வமலை நாடதிலே திருமாலும் வாறபோது—
வையகத்தை யளந்தமாயன் மலைநாட்டி னீதிகண்டார்.
நீடுபுக ழானதெய்வ நேசமலை நாடதிலே
நாடுகளும் வீதிகளும் நல்லமன்னர் திருமுறையும்
வஞ்சியாதித்தமன்னர் வாழுந்தெய்வ மலைநாடு;
செஞ்சொல்வளர் சேரமன்னர் தெய்வவீர மலைநாடு;
சிறந்தபல கலைநூல்கள் தெரியுந் திருநாடு;
அறந்தழைக்க வந்தமன்னன் ஆளுந்தெய்வ மலைநாடு;
கன்னதெலுங் கர்சேனை களிப்பத்துடன் வந்தவரை
சொன்ன சொன்ன வீரஞ்செய்து துரத்தும் வீர மலைநாடு;
மங்காத கீர்த்தியுள்ள (மாசனங்கள்) வாழும் நாடு;
சிங்காரத் துரைமக்கள் செல்வர்களு மிருக்கும்நாடு;
பகையைத் துரத்தி வென்று பஞ்சவர்கள் கீர்த்திபோல
அகத்தடியர் சனங்கள் அன்ம்புடனே வாழும் நாடு;
வருசைக் குருமையுள்ள வன்னத் தெய்வ மலைநாடு;
அரசிபடியர் சனங்கள் அன்ம்புடனே வாழும் நாடு;
எங்கெங்கும் புகழாக லெட்சிமியார் சிறந்திருக்கும்,

1216. பற்றிவந்த - பின்பற்றிவந்த; தொடர்ந்துவந்த.
1217. மலைநாடு - மலைகளை அரணாகவுடைய சேரநாடு.
1218. வையகம் - உலகம்; நீதி - செங்கோல் முறையும் பிறநெறி முறைகளும்.
1219. நீடுபுகழ் - பெரும்புகழ்; தெய்வ நேசம் - தெய்வத்திடம் வைக்கும் பக்தி.
1220. மன்னர் திருமுறை - அரசரின் செங்கோலாட்சி முறை.
1221. வஞ்சி - வஞ்சிநாடு, சேரநாடு; ஆதித்தமன்னர் - பெருமாள் அனந்தபுரம் வந்த காலத்து வாழ்ந்த சேரமன்னராதல் வேண்டும்.
1222. செஞ்சொல் - நற்சொல்; மங்கலச் சொல்.
1223. கலை நூல்கள் - சாத்திரங்கள்.
1225. கன்னதெலுங்கர் - கர்நாடக தேசத்தவர், தெலுங்கு தேசத்தவர்; களிப்பத்துடன் - மகிழ்ச்சியாய்; வந்தவர் - போரை மேற்கொண்டு வந்தவர்.
1226. துரத்துதல் - புறமுதுகிட்டு ஓடச்செய்தல்; விரட்டுதல்.
1227. மங்காத - குறையாத, அழியாத.
1228. துரைமக்கள் - தலைவர்; ஆட்சியாளர்.
1229. பஞ்சவர்கள் - பஞ்சபாண்டவர்கள்.
1230. அகத்தடியர் - அணுக்கத்தொண்டு செய்வார்.
1231. வருசை - வரிசை, சிறப்பு; உருமை - உரிமை.
1232. அரசிபடியர் - அரசாங்கத்தில் பணிபுரிவோர்.

1216-1233. The brahman who came, following the God of the Sleeping pose,
When Tirumāl came into the divine Malai-nāṭu,
The Lord who had measured the world, saw the just order
Prevailing in Malai-nāṭu. In the highly famed, divine and dear
Malai-nāṭu (He saw) territories and streets and the blessed rule
Of good kings. It was the divine Malaināṭu where king Ātittaṉ of Vañci lived,[389]
The divine and valiant Malaināṭu of the Cēra kings of undiminishing noble fame,
The sacred land given to the study of many good works of art;
The divine Malaināṭu ruled by the king who came (on earth) for virtue's weal;
The valiant Malaināṭu which could drive away the proud, advancing army of Kannada and Telugu people,
Performing each heroic exploit it vowed to do against them,
The land where (great people) lived whose fame never came down;
The land in which aristocrats with pleasant pastimes and wealthy men flourished;
The land where intimately serving folk chased away enmity[390]
And won over it and lived with love, having fame like that of the Five;[391]
The divine and beautiful Malaināṭu entitled to all awards of distinction,
The land where people serving the ruler live in love,
The land where the benefactions ever grew,

389. Ātittaṉ evidently ruled from Vañci (the Cēra capital town, here identifiable as Tiruvaṉantapuram) at the time of the building of the Padmanabha temple in the town.

390. enmity-abstract for the concrete-inimical people.

391. Five Pāṇḍavas proverbial for heroism and brotherly love.

கங்கைகுல வங்குசத்தோர் கருணை வளரும் நாடு;
தங்கம் வளரும் நாடு, தலத்தே யவனநாடு;
குங்குமம்செந் தாமரையும் கூடவே வாழும் நாடு;
சேரகுல மன்னவரும், சிறந்த மறையவரும்,
வாரமான வயித்தியரும் வல்லசூத் திர(ர்) குலமும்
நேராக நாங்குசாதி நீதியுடன் வாழும் நாடு;
தெய்வமுந் திருமுறையும் (தேசமதில் நீதிகளும்)
மைய்விழிசேர் பெண்பிறப்பும் வரம்பழியா மல்காத்து,
பெரும்பகைகள் வாராமல், பேர(ர)சு குன்றாமல்,
வரம்பழியா மல்கார்க்கு மன்னன் (சேரன் மலைநாடு);
மைய்க்கொடிய கண்ணாரை வைய்த்ததோ ரடைக்கலத்தால்
கைய்க்கடிகை பட்டணத்தை கண்டு மகிழ்ந்து மாயன்—
மாமரமும், பூமரமும், வாய்த்ததோர் பிலாமரமும்,
காமரமும் செண்பகமும், கன்னலுங் கதலிகளும்,
ஆசனியுங் குங்குமமும், அரசிதிரு மாமரமும்,
வேசுடனே தாழைகளும், விளங்குந் தெனங்காவும்,
வன்னச் சோலைகளும், வாள்வியுஞ்செந் தாமரையும்,
அன்னமும் குருகினமும் அன்புடனே என்றும் நன்றாய்
வேந்தர் திருமுறையால் வேதநீதி குன்றாமல்
சே(ர்)ந்து மிகவாழும் தெய்வவீர மலைநாடு;

1234. கங்கைகுல வங்குசத்தோர் - வேளாளமரபினர்.
1235. தங்கம் - பொன்; யவனநாடு - யவனர்களும் வந்திருக்கும் நாடு.
1238. வாரம் - அன்பு; வயித்தியர் - வைசியர்; வணிகப்பெருமக்கள். நான்கு சாதியும், மன்னவர், மறையவர், வயித்தியர், சூத்திரர் எனக் குறிப்பிடுதலின் இவ்வாறு பொருள் கொள்ள வேண்டும் - வைசியரும் என்றும் பாடம் கொள்ளலாம்.
1239. நாங்குசாதி - நான்கு சாதி.
1241. வரம்பழியாமல் - எல்லை கடவாமல்; நெறிதவறாமல்.
1243. கார்க்கும் - காக்கும்.
1244. மைய்க்கொடிய கண்ணார் - மைதீட்டப் பெற்ற கொடுமை செய்யும் கண்ணுடைய பெண்கள்.
1245. கடிகை - ஊர்ச்சபை; கடிகைபட்டணம் சேரநாட்டு ஊர்களில் ஒன்றாகவும் உள்ளது.
1246. பிலா - பலா.
1247. காமரம் - அகில், ஆல்.
1248. ஆசனி - ஆசினி, ஈரப்பலா; அரசிதிரு - அரசு ஆகிய புனித மரம்.
1249. வேசு - வேய், மூங்கில்; தெனங்கா - தென்னைமரச்சோலை.
1251. அன்னம் - அன்னப்பறவை; குருகு - கொக்கு, நாரை.
1252. திருமுறை - செங்கோலாட்சி.

1234-1253. Of members of the Kaṅkai clan,
Living everywhere in fame with glory conferred by Lakṣmi[392]
The land with gold growing (more and more); the prosperous, fine land with sacred *talas*[393] and areas.
The land with red *kumkum* and red lotus flowers flourishing in company,
And the land with kings of the Cēra dynasty,
Excellent brahmans, kindly *vaiciyar*[394] and skilled *cūttira*-clans,
All four castes living with orderly justice,
The Malai-nāṭu of the Cēras with kings guarding the routine
Of observances to the gods, the holy law
And the policies of justice in the land and the honour of women
With collyrium-laden eyes against the destruction of their course,
And averting big enmities, keeping up their admired rule,
And protecting the arrangements in force from spoliation.
Māyaṉ saw the good Kaṭikaippaṭṭaṇam[395] in which women with dark eyes
Like creeper plants were given refuge, and (He) felt happy—
Nāraṇaṉār praised the land,[396] saying:
"This is indeed the excellent land—
Trees—mango, *pūvaracu,* the fine jack, scented wood, *ceṇpakam*
Sugarcane, plantain, *ācaṉi-jack, kuṅkumam,* and big holy *pīpal,*
And screw-pines, fair coconut woods, colourful groves, tanks,
And red lotuses (flourish here) with bamboo trees.
And swans and swarms of sparrows always live
Well verymuch together in love
In this divine, valiant Malaināṭu having
The holy, just rule of kings, without dimunition of the Vedic dispensation."

392. The Kaṅkai-kula-Veḷḷāḷar were traditionally wealthy and favoured by Lakṣmi, the goddess of wealth and prosperity.
393. sacred spots of temples called *talas* and *tēya-tēca* areas or territories within a kingdom.
394. Allusion to the four castes of Hindu society.
395. The story behind the allusion involving this town of Kaṭikaippaṭṭaṇam, is not known.
396. Line 1255 is taken first to link up the meanings intended in the intervening lines.

தென்னாடு பொன்னாடு சேரமன்னர் வாழும் நாடு;
நன்னா டிதுவெனவே நாரணனார் கொண்டாடி,
சென்னல்வளர் நன்னாடு செண்டையன் பதியில் வந்தார்.

பெருமாள் திருவனந்தவனம் வந்து அமர்தல்

மன்னர் நீதி யும்வளமும் மாயவரும் கண்டருளி,
இந்தமலை நாட்டி லிருந்து பூசை கொள்ளவேணும்
வந்தபெரு மாளுமந்த மறையோனும் (முன்னும் பின்னும்),
இருக்கத் தலம் நமக்கு ஏத்ததலம் வேண்டுமென்ன,
மருவெட்டுந் திருமார்பன் மாயவரு மப்பொழுதே
திருவெட் டாறுதனிலே சென்றாரே திருப்பெருமாள்.
மாதிலங்குந் திண்புசத்தான் மாயவனார் தானுமப்போ,
ஆதிகேசப் பெருமாள் தன்னைக் கண்டங் ககமகிழ்ந்து—
குழித்துறையுந் தான்கடந்து, குத்தமற்ற மாயவனார்
பழிப்பத்த வீரசரம் பாறைச்சாலை தன்னில் வந்தார்.
குவளைவிழி மாயவனார் குன்றாம லப்பொழுது
தவளைகரை யாதகுளந் தான்கடந்தார் பெருமாளும்.
(உதியங்குளங்) கடந்து, உத்தாண்மைக் கோடும்விட்டு,
நெதியாரும் மாயவனார் நெய்யாத்தங் கரைகடந்தார்.

1256. செண்டையன்பதி - செண்டாயுதத்தையுடைய ஐயனார் கோயில் கொண்டுள்ள ஊர்; செண்டை கொட்டும் இசையாளர் வாழும் ஊர் என்றும் கொள்ளலாம். செண்டை - ஒருவகைக்கொட்டு.

1260. ஏத்ததலம் - எற்றதலம்; தகுதிவாய்ந்த இடம்.

1261. மரு - மறு, சிவற்சம்; திருமாலின் மார்பிலுள்ள மறு.

1262. திருவெட்டாறு - திருவாட்டாறு; திருவட்டாறு என வழங்கும் திவ்விய தலம்; இது நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளுள் ஒன்று.

1263. மாது - இலக்குமி; திண்புசத்தான் - வலிய மார்பினையுடையவன்.

1264. ஆதிகேசப் பெருமாள் - ஆதிகேசவப் பெருமாள்; திருவட்டாற்றில் பள்ளி கொண்டருளும் திருமால் திருநாமம்.

1265. குழித்துறை - நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் தமிழ் நாட்டின் மேற்கெல்லையில் உள்ள ஊர். குத்தமற்ற - குற்றமில்லாத.

1266-1270. பாறைச்சாலை, தவளை கரையாத குளம், உதியங்குளம், நெய்யாத் தங்கரை என்பன திருவனந்தபுரம் பெருவழியில் உள்ளவை. பழிப்பத்த - பழிப்பற்ற, இகழ்வில்லாத; கரையாத - கத்தாத; உதியங்குளம் - சேரன்பெயரால் வழங்கும் குளம்; உதியன் - சேரன்; நெதி - நிதி, செல்வம்.

1254-1256. The southern land is the golden land, the land
Where Cēra kings live. (So saying) He came
Into Ceṇṭaiyaṉpati[397] in the good land of thriving red rice-crops.

Journey through places in Malaināṭu

1257-1270. Māyavar graciously saw the just rule of the kings
And the prosperity (of the land)
And this God who came there (before) and that brahman (behind, him)
Thinking to stay in this Malaināṭu and receive people's worship,
And wanting a place for stay, a suitable place,-
Then itself Māyavar with the mole on his holy chest,
The holy Ruler-God went into Tiruveṭṭāṟu,[398]
Then Māyavaṉār, his mighty shoulder luminous with the Lady
Saw the deity Ātikēcavar and felt glad of heart;
Passing beyond Kuḻitturai,[399] the faultless Māyavaṉār
Came into blameless Vīracaram Pāṟaiccālai;
Māyavaṉār of *kuvaḷai* flower-like eyes then went
With effort undiminished, beyond Tavaḷai-karaiyāta-kuḷam;
The Ruler God then crossed over Utiyaṅkuḷam,
And left behind Uttāṉmaikkōṭu as well;
And Māyavaṉār himself a treasure of wealth,
Then crossed over Neyyāṟṟaṅkarai;

397. A town with the temple of Ayyaṉār (Sāstā) wielding the *Ceṇṭu* weapon.

398. A famous Viṣṇu temple of Malaināṭu with the Deity known as Ātikēcavapperumāḷ. The Lady in the next line is Lakṣmi.

399. This and the catalogue of place-names below on the way from Nagercoil to Tiruvaṉantapuram show the poet's delight in reciting dearly loved places covered by rural walkers on the highways and by-ways.

கூட்டப்பனை தான்கடந்து, குறும்பனைச் சேரியிலே
(வேட்டத்துட) னேயந்த வெங்கான லூருவிட்டு,
வெங்கான லூருவிட்டு, விழிஞ்ஞமுந் தான்கடந்து,
நீங்காம லப்பொழுதே நேமங்கண்டார் பெருமாளும்.

கோட்டுக்கா லதனைப் போட்டுக் குருந்தேறு மாயவனார்
காட்டூரு தான்கடந்து, கரும்பனை யாறுகண்டார்;
சோலைக்கரும் பனையாத்தைச் சொல்லத்துலை யாதெனவே
சாலையம் பதிகடந்தார், தண்டரள மாயவனார்.
அருமாந்த மாயவனார், அழகு சிறந்த தெய்வம்,
திருவனந் தாவனத்தைச் சென்றுகண்டார், பெருமாளும்.

விருத்தம்

17. திருவ னந்தா வனத்தைச் சென்றுகண் டங்கு மாயன்
வருவனம் பிறவித் துன்ம்பம் மறுக்கறுத் தாண்ட செல்வன்,
பெருவன மீதே யென்னப் பேதலித் தமந்து நின்று,
அருமை யும்பெருமை யானோன்அம(ர்)ந்தன னவ்வ னத்தே.

1271-1274. கூட்டப்பனை, குறும்பனைச்சேரி, வெங்கானலூர், விழிஞ்ஞம், நேமம் என்பன கிழக்கேயிருந்து திருவனந்தபுரம் செல்லும் வழியில் உள்ள ஊர்கள்; வேட்டம் - விருப்பம், வெங்கானலூர் என்பது வெங்கானூர் என இப்பொழுது வழங்கும்.

1275. கோட்டுக்கால் - மரக்கொம்பாலாகிய ஏறுகருவி, ஏணி; குருந்து - குருந்தமரம்.

1276. கரும்பனையாறு - இப்பொழுது கரமனையாறு என வழங்கும் ஆற்றின் பழம் பெயர்; இந்த ஆறு திருவனந்தபுரத்தின் கிழக்கு எல்லையில் உள்ளது.

1277. கரும்பனையாத்தை - கரும்பனையாற்றை.

1278. சாலையம்பதி - சாலை என வழங்கும் ஊர்; கரும்பனையாற்றின் மேற்கில் உள்ளது. இது பத்மநாபசுவாமி திருக்கோயில் விளங்கும் கோட்டைக்குக் கிழக்கே உள்ளபகுதி: தண்டரள மாயவனார் - குளிர்ந்த முத்துமாலையணிந்த திருமால்.

1279. அருமாந்த - அருமந்த, அருமையான.

1280. திருவனந்தாவனம் - சாலைப் பகுதிக்கு மேல்பால் உள்ளது. இந்நாளில் திருக்கோவிலுடன் கூடிய கோட்டைப்பகுதியாக விளங்கும் இடமாயிருத்தல் வேண்டும்.

1282. மறுக்கறுத்து - முற்றிலும் போக்கி; ஆண்ட - ஆட்கொண்ட, ஏற்றுக்கொண்டருளிய.

1283. பெருவனம் - முன்பே பெருமாள் சொல்லியிருந்த திருவனந்தாவனம்; 'பேதலித்து- அறிவு மயங்கி.

1271-1284. Then leaving Kūṭṭappaṉai and Kurumpaṉaiccēri and then
Leaving with pleasure Veṅkāṉalūr—
Leaving Veṅkāṉalūr,[400] going beyond Viḻiñam too,
Instantly the Ruler-God saw Nēmam without impediment,
Māyavaṉār who climbed by a contrivance on the kuruntam tree[401]
Went onward, crossing Kāṭṭūru and saw Karum-paṉaiyāṟu,
Saying "The grove-girt Karumpaṉaiyāṟu river defies description."
Māyavaṉār, with pearl-like eyes,
Passed through the beautiful town of Cālai,
Precious Māyavaṉār, Deity of excelling beauty.
Ruler-God, went and saw the wooded Tiruvaṉantāvaṉam.

Viruttam-17

The Lord who fully cuts off the sufferings coming with our birth
And rules us, Māyaṉ went and saw Tiruvaṉantāvaṉam;
The precious and great one stood fixed there, his mind dazed,
Saying: 'this is indeed a big wood' and He remained in that wood.

400. Repetition of previous line, characteristic of cues.
401. An exploit of Kṛṣṇāvatāra drawled out in oral singing. The contrivance of climbing the tree is its branches bent together like a ladder.

திருவனந்தாவனத்தில் திருமால் சிறுகுழவியாதல்

வேறு

சென்று திருமா லனந்த வனத்தில்
திற்குந் திசையுந் தெரியாமல் நின்றார்;
அன்று புவன மளந்ததொரு மாயன்
ஆழிநெடு மால்சிறு குழவியுரு வானார்;
தள்ளும் நடையும் தலைமொழியு மாகி,
தாலநெடு மால்சிறு குழவியுரு வானார்.
வள்ளைப் பெருங்காது (மஞ்சனைய) மேனி
வாசமுறு பூந்துளசி மாலைமணம் வீச,
தண்டையசை யக்கனக (பாதமலர்) கொஞ்ச
சதங்கைமணி கிங்கிணி யசைந்துஇசை பாட,
துண்டநுத லில்கண்ட சுட்டியது புரள,
துய்யஅரை யில்கனக அரைஞ்ஞா ணசைய,
முண்டக (மலர்ந்ததிரு உந்தியதின் மேலே)
(முத்துவட) மாலையது (கொத்துமணி மார்பிலே)

1286. திற்குந்திசையுந் தெரியாமல் - திக்குந் திசையும் தெரியாமல், ஒன்றும் தோன்றாமல் என்றபடி; திற்கு - திக்கு; திக்குந் திசையும் தெரியாமல் என்பது பேச்சுவழக்கு மரபுத்தொடர்.

1287. அன்று - முன்னாளில்; புவனம் - உலகம்.

1288. ஆழி - சக்கராயுதம்; குழவியுரு - குழந்தைவடிவம்.

1289. தள்ளும்நடை - தடுமாறி நடக்கும் நடை; தளர்நடை; தலைமொழி - குதலைமொழி, மழலைச்சொல்.

1290. தாலம் - பூமி.

1291. வள்ளை - வள்ளைக்கொடி; இதன் இலையைக் காதுக்கு ஒப்பாகக் கூறுகின்றார்; மஞ்சு - மேகம்.

1292. வாசம் - வாசனை, நறுமணம்; பூந்துளசி - அழகிய துளசி; துளசிமாலை - துளசி இதழ்களால் கட்டியமாலை.

1293. தண்டை - காலில் அணியும் அணிவகை.

1294. சதங்கைமணி - ஓசையெழுப்பும் மணிகள் கோத்த காலணிவகை; கிங்கிணி - அரைச்சலங்கை.

1295. துண்டம் - பிறைத்துண்டு - நுதல் - நெற்றி; சுட்டி - நெற்றியில் அணியும் அணிவகை; நெற்றிச்சுட்டி என்பர்.

1296. துய்ய - தூய்மையான; கனக அரைஞ்ஞாண் - பொன்னாலாகிய அரைஞ்ஞாண்கொடி.

1297. முண்டகம் - தாமரை; உந்தி - கொப்பூழ்.

Māyaṉ reaching Aṉantam, becomes a child seen only by a cowherd woman

1285-1298. Going into Aṉantam forest, T rumāl stood
Without knowing the location and the direction.
Māyaṉ who measured the universe the other day,
Tall Māl with the Discus-weapon took the form of a little child;
Ears big as *vaḻḻai* leaves; body like a cloud, wafting
The fragrance of the fine scent-yielding *tuḷaci* garland.
Anklets shake, golden flower-like feet gently fondle (the earth),
Foot-ornaments[402] moving, sing a music of their own;
The ornament seen on the crescent-like forehead swings;
The golden waist-string on the spotless waist shakes;
Above the holy navel blossoming like the lotus, the chest
With the clustering[403] gem, has (now) the pearl - necklace.

402. *Catańkai-maṇi* and *kiṅkiṇi* are provided with small tinkling bells unlike *taṇṭai* worn like a bangle on the foot.
403. The *Kaustubha* gem-jewel is a permanent adornment of Viṣṇu's chest. The phrase *Koṭṭumaṇi* may also mean 'clustering gem'.

கொண்டலெனு மேகவுரு நாயறொளி போலே
கொஞ்சுமொழி வாசகமு மஞ்சனை யழகும்
தஞ்சமுற வேயுலகைத் தானாண்ட பெருமாள்
சங்கைபெற வேகுழவி தன்னுடைய (வடிவாய்)—

தெய்வக்குழந்தையைக் கடைமாது ஒருத்தி காணுதல்

வஞ்சமற வேபுவி யனந்தா வனத்தில்
வந்தபெரு மாளையொரு கடைமாது கண்டாள்;
கண்டசிறு குலமாது வண்டரு மில்லாள்
கார்வண்ண ரேதுவர வேதென நினைந்தாள்.

பெருமாளுடன் வந்த மறையவன் அவரைக் காணாது திகைத்துத் தேடுதல்

தண்டமிழ் மறையவன் பின்னாகத் தேடித்
தாகமுற வேவரவே, ஒருவரையுங் காணான்;
எப்பரெல் லாம்புகழ இவ்வனத்தில் நின்ற
இலுப்பையின் (பேட்டில்) ஒளிந்தார் பெருமாள்.
அப்போது கண்டதொரு சிறுகுல மடந்தை,
ஆருமறி யாவனத் தேதுவர வென்ன,
நின்றபொழு தேஅந்த நீதிமறை யோனும்,

1299. கொண்டல் - மேகத்திற்கு ஒருபெயர்; நாயறு - ஞாயிறு, சூரியன், சூரிய ஒளி; கௌத்துவமணி ஒளிக்கு ஒப்பாம்.

1300. மஞ்சனை - உடலின் மேற்பூசும் சந்தனம், கஸ்தூரி முதலியவற்றாலான வாசனைக் குழம்பு.

1301. தஞ்சமுற - அடைக்கலமாக; தஞ்சம் - அடைக்கலம்.

1302. சங்கைபெற - சந்தேகப்படும்படி.

1303. வஞ்சம் - வஞ்சனை.

1304. கடைமாது - கடைக்குலத்துப் பெண்; புலைச்சி.

1305. சிறுகுலம் - கீழ்க்குலம்; வண்டரும் - வண்டரம், மேகம். வண்டருமில்லாள் - மேகத்திற்கு உறைவிடமானவள்; கரிய நிறமுடையவள்.

1306. கார்வண்ணர் - கரிய நிறமுடையவர்; திருமால்; ஏதுவரவு - வருவதற்கு என்ன காரணம்.

1308. தாகமுற - வேட்கைமிக, விருப்பம் மிகுதியாக.

1309. எப்பர் - எல்லா இடங்களிலும் உள்ளவர்.

1310. இலுப்பையின் பேடு - இலுப்பமரத்தின் பொந்து.

1312. ஆரும் - யாரும், எவரும்.

1299-1306. The form like the eastern cloud,[404] is like the sun's light;
With endearing tenderness of speech and winsome, dark beauty
The Ruler-God who brought the earth to find refuge (under him),
Assumed a shape which could be doubted as that of a child.
A woman of lower birth saw the Ruler-God who came
Guileless into Anantāvaṉam on earth;
The lowly born woman, an inmate of a cowherd household, thought:
'The cloud-hued One - What, what about His coming (here)?

The Vedic follower's distress, search and cry

1307-1313. As the brahman of sweet Tamil accents came behind,
Searching with longing (for the Lord), he saw none;
The Ruler-God hid Himself in a hollow of the *iluppai* tree
In this wood, as people everywhere were singing His praises.
At that moment a woman of a low clan saw Him, and remarked:
'What is this visit to a wood which none knows about?: Meanwhile
The brahman of disciplined life running around, searched for

404. This is called *konṭal,* and supposed to be beautiful with gentle movement.

நீலநெடு மாலடியை ஓடியே தேடி,
மன்றுதனில் நின்றவனு மாயவரைக் காணான்,
நொந்துமறை யோன்வனந் தேடியே காணான்.

தேடிக்காணாத மறையோனின் சிந்தையும் செயலும்

இந்தஇலுப் பையடியில் வந்தாரே பெருமாள்;
எங்கேஒளித் தாரோ இசைந்தடியைக் காணேன்!
ஓடுவான், மீளுவான், உயர்வன மெங்கும்;
உத்தகன் றைத்தேடு மாவினத்தைப் போலே
வாடுவான், தேடுவான்; நெஞ்சற வோதுவான்;
'வாகுபெறு தெய்வமே! மாயமோ!' என்பான்;
'மாயமோ! அரிகிட்டிணா! கோவிந்தா!' என்பான்;
வளமையுடன் மாயவர் மந்திர முரைப்பான்;
'நேயமோ, அரிகிட்டிணா! கோவிந்தா!' என்பான்;
'நேராக என்னைமனம் விட்டிரோ!' என்பான்;
'அரிகரி நாரா யணாநமா !' என்பான்;
அழுவான், விழுவான், அகங்குலைந் திடுவான்.
'தெரியரி சிங்கமே! சிறீகிட்டிணா!' என்பான்;
'சிறீபல்ப்ப நாபா! வெளிநில்லும்' என்பான்;
'அரிகோவிந்தா! கோவிந்தா! கேசவா!' என்பான்;
'கூராழி மாயனே, மாயமோ!' என்பான்;
'புவிமகள் புருசனே! புற்பநாயகா!' என்பான்;

1315. மன்று - வெளியிடம்; வெளியிடமான திருவனந்தாவனம்.
1316. நொந்து - மனம் வருந்தி.
1319. மீளுவான் - மீண்டு வருவான்; திரும்புவான்.
1320. ஆவினம் - பசுக்கூட்டம்.
1322. வாகுபெறு - அழகிய; மாயம் - மாயவித்தை; கண்கட்டுவித்தை.
1324. மாயவர் மந்திரம் - திருமாலைக்குறித்த எட்டெழுத்து மந்திரம்'ஓம் நமோ நாராயணாய என்பது.
1325. நேயம் - அன்பு, விருப்பம்.
1328. அகம் - மனம்; குலைதல் - வருந்துதல்.
1329. சிங்கமே - சிங்கமே; நரசிம்மாவதார மூர்த்தியை நினைந்தபடி; சிறீ - ஸ்ரீ.
1330. பல்ப்பநாபன் - திருவனந்தபுரத்து எம்பெருமான் திருநாமம்; வெளிநில்லும் - வெளிப்பட வாரும்.
1332. மாயம் - மாயவித்தை; கண்கட்டுவித்தை.
1333. புவிமகள் - பூமிதேவி; புருசன் - கணவன்; புற்பம் - புட்பம்; புற்பநாயகன் - புட் பத்து உறையும் திருவின் நாயகன்.

1314-1333. The Feet of the Blue, Towering Māl; standing in the open
He could not see Māyavar; the sorrowing brahman
Saw him not even when he searched the jungle. (He cried):
'My God-Master came here at the foot of this *iluppai* tree;
Where has he hid himself? I do not see his linked footstep?
Through all the good forest he ran and returned (to run);
Like cows searching for their dear calves, he became pale;
He went on searching, and said in desperation:
'Oh worthy Deity, Is this your wonder-working magic?'
Ari kiṭṭiṇā![405]
Kōvintā! Is this your wonderful deception? He said.
'Did you remove me straight off your mind?' He said.
'Arikari[406] Nārāyaṇa Namō' He said.
He wept, fell down, and felt heart-broken
'Unknowable Lion-form![407] Ciṟī[408] Kiruṭṭiṇā! He said;
'Ciṟī Palppanāpā![409] Come out (of your hiding) He said.
'Arikōvintā! Kōvintā! Kēcavā!' He said.
Oh Māyaṉ with sharp wheel-weapon! Is this your wonder-working magic' He said.
'Oh Lord of the Earth-goddess, O Lord of the Lady of the flower!'[410] He said.

---

405. Harikrṣṇa compound of Hari (Ari) and Krṣṇa - (Kiruṭṭiṇa), names of Viṣṇu.
406. *Arikari: Hari Hari; Namō* is the salutation formula.
407. *Ciṅkam* - Man-lion-incarnation of Viṣṇu as Naraciṅkaṉ (Nara-simha).
408. Srī Kriṣṇa.
409. Colloquial form of Srī Padmanāpa (the Lord with the lotus-navel) a name of Tirumāl. After Māyaṉ took his stay in Tiruvaṉantapuram He was called by this name.
410. Lakṣmi, Consort of Viṣṇu.

'புண்ணிய மோஇதுவும்!' என்றுமுறை யிடுவான்;
காவிலுறத் தேடுவான்; காணுமதி யறியான்.
காடுமல்ல, நாடுமல்ல வீடுகுடி யில்லை;
தாவியே தாயிழந்த கன்றது போலே
தடுமாறி யேமனசு கெடுமாறி மிகவாய்,
ஆருமில் லையோ, வனந்தனிலு மீதே;
ஐயகோ, வெய்யகோ!' என்று மழுவான்.
'ஊருமில்லை யே, வனம் ஒருவரு மில்லையோ!
உண்மையுடன் மாயவரைக் கண்டவரு மில்லையோ!'
என்றுசொல்லி மறையோனும் முறையிட்டழுது,
இரங்கிமறை யோனவனும் வீதியில் பாத்தான்.

மறையோனின் பார்வையில் கடைமாது இலக்காதல்

குண்டனைய தனமசைய, வஞ்சியிடை துவள,
கோலமயி லென்னவொரு கொம்பனையும் நின்றாள்.
கொஞ்சும் விழிமொழியும், செஞ்சொல்மொழி அழகும்,
குத்தமற வன்னமுள்ள அன்னமென்னும் நடையும்,
கஞ்சமுக மென்ன, விழி காமசர மென்ன,
(கன்னல்) மொழி யென்னும், நுதல் காமதனு வென்ன,

1334. புண்ணியம் - நற்செயல்; முறையிடுதல் - குறைகளை வெளியிட்டு வேண்டிக்கொள்ளுதல்.
1335. கா - சோலை; காணுமதி - காண்பதற்குரிய வழி.
1336. குடி - குடித்தனம், குடும்பவாழ்வு.
1338. தடுமாறி - தள்ளாடி, இடறி; கெடுமாறி - எல்லைகடந்து.
1339. ஆரும் - யாரும், எவரும்.
1340. ஐயகோ, வெய்யகோ - இரங்கலுரைகள்.
1344. பாத்தான் - பார்த்தான்.
1345. குண்டு - உருளையான பொருள்; வஞ்சியிடை - வஞ்சிக்கொடி போன்ற இடுப்பு; துவள்தல் - அசைதல், வருந்துதல்.
1346. கோலம் - அழகு; கொம்பனை - பெண்.
1347. விழிமொழி - கண்ணால் பேசுகிற நயனபாஷை
1348. குத்தமற - குற்றமற; அன்னமென்னும் நடை - அன்னத்தின் நடை போன்ற நடை.
1349. கஞ்சமுகம் - தாமரை மலர் போன்ற முகம்; விழி - கண்; காமசரம் மன்மதனின் அம்பு; என்ன - என்று சொல்லும்படி.
1350. கன்னல்மொழி - கரும்புபோன்ற இனிய பேச்சு; நுதல் - நெற்றி; காம தனு - மன்மதனின் வில்; கருப்புவில்.

1334-1344. 'Is this my fortune?' He complained.
He searched throughout the forest; he knew not the art to find Him.
For him there was neither forest nor people's land; there was no house or family.
Like a calf which lost its mother he hopped and stumbled;
His mind became much affected; he wept saying: 'In this forest
Is there nobody at all? Oh pity, Oh sorrowful pity!'
'There is no village here; it is a forest; is there no one at all around?
Is there no one who in truth has seen Māyavar?'
So the brahman said and complained with weeping;
Sorrowing, the brahman there looked on the pathway nearby.

The brahman sees the maid and learns of Tirumāl's whereabouts

1345-1350. She stood like a tender tree, and a beautiful pea-hen,
With her breasts in cylindrical shape heaving, her *vañci*-creeper-like hip swaying,
Her endearing looks with a language, her sweet utterances with a charm;
Her gait like that of the bright-hued faultless swan,
Her face, a lotus, her eyes like love's arrows,
Her speaking like (the taste of) sugarcane[411] and her forehead like Kāmaṉ's bow[412]

411. Repetition of the earlier phrase *Ceñcol-moḻiaḻakum* with a little variation.
412. The bow of Kāmaṉ the Love god (made of sugarcane) is a stock object of comparison with women's brows.

வானுலகில் தெய்வ அரம்பையிவ ளென்ன,
பஞ்சென நடந்துவரும் பாதமல ரென்ன,
பகர்ந்ததநல்ல கொங்கைநல் கோர்வை யழகும்,
இடைதுவள, (நடையசைய), இருவிழிகள் புரள,
இரணமுக (சிங்கமென), ராசமத னென்ன,
இடைகனக வல்லிசைய உருவசிபோ லொருத்தி
உலகுதனி லேஒரு கடைமாது நின்றாள்.
நின்றசிறு குலமாதை வென்றிமறை யோனும்
நேரிட்டு மடந்தைதிரு முகத்தைக் கண்டான்.

மறையவன் வினாவும் கடைமாதின் விடையும்

‘இன்றதிலே நின்றதொரு ஏந்திழையே! நீதான்
எங்கும்நின் றிங்கொருவர் வந்ததுகண்டீரோ?’
‘கண்டீரோ?’ என்றுமறை மாமுனிவன் கேள்க்க,
காரிகையு மங்கோ ரிசைந்தமொழி சொன்னாள்:
‘தண்டையொடு கிங்கிணியும் பாதமலர் கொஞ்ச,
தாவட மரைஞ்ஞாணு மேகவுரு வாகி,
தள்ளாடி யேநடை யிட்டுஒரு பாலன்
தானாக இந்தப் பொந்தாப்போய் நின்றார்.

1351. அரம்பை - தேவலோகத்திலுள்ள நடனமாது.
1352. பஞ்சென - பஞ்சுபோல மெத்தென.
1353. பகர்ந்த - ஒளிவிடுகின்ற; கோர்வை - கோவை, கழுத்தணி.
1354. துவள - வருந்த; புரள்தல் - பிறழ்தல்.
1355. இரணம் - பொன்; இரணமுகம் - பொன்னிறமான முகம்; மதன் - மன்மதன்.
1356. கனகவல்லி - பொற்கொடி; கற்பக மரத்தைச் சார்ந்த கொடி; இதனைக் காமவல்லி என்பர். உருவசி - உருப்பசி; தேவ லோக நடனமாது.
1357. கடைமாது - கீழ்க்குலப் பெண்; புலைச்சி.
1358. சிறுகுலம் - கீழ்க்குலம், தாழ்ந்த குலம்.
1360. ஏந்திழை - ஆபரணங்களை அணிந்த பெண்; ஏந்திழையே - விளி.
1362. கேள்க்க - கேட்க, வின்ாவ.
1363. காரிகை - பெண்.
1365. தாவடம் - பூணூலை மாலையாக அணிதல்; கழுத்தணி மாலை என்றும் கொள்ளலாம்.
1367. பொந்து - மரத்தில் உள்ள இடைவெளி.

1351-1367. (She looked as if) she was herself the divine Arampai[413] dancer in the heavenly world;
Her flower-like feet were soft as cotton in their gait;
Her good breasts mentioned before, had a beauty of formation.
A woman like Ūrvaci,[414] a woman of a low caste stood with none in the world to equal her,
With her hip swaying (gait moving) and her two eyes rolling;
As her manner resembled that of a golden-faced lion, and of the royal god of love.
And her hip moved like the golden[415] creeper of heaven.
The brahman, going forward to success in his effort,[416]
Saw directly the notable[417] face of the woman.
'Oh jewel-wearing woman standing here today, Did you see
Any one arrive here from somewhere? Did you see?
When the great holy sage (of a brahman) asked thus,
The woman there said in response: 'A child with toddling gait
Having the colourful form of the cloud wearing necklace
And waist-string, himself went near this hollow (of this tree);

413. Name of one of the professional dancers at the court of the celestial king Intiraṉ - a byword for beauty.
414. Another heavenly dancer, proverbial for her beauty like Arampai.
415. *Kaṉakavalli:* golden creeper-plant attached to the wish-fulfilling golden *Kaṟpaka* tree of heaven. The ballad-poet runs riot in collecting details of female beauty as a semi-literary exercise enlivening his narration.
416. veṉṟi-maṟaiyōṉ: Literally victorious brahman, the epithet *veṉṟi* being anticipatory of the *maṟaiyōṉ's* success.
417. *tiru:* is here an epithet of simple padding.

என்னாரு மாவனந் தன்னோ டுற்ற
இலுப்பையின் (பேட்டில்) புகுந்ததொரு பாலன்,
பிள்ளையொழிந் திங்கொருவர் நாங்ஙளவர் காணோம்.
பெரியோர்க ளாகவே வந்தவரு மில்லை'.
வள்ளைப் பெருங்கண் கடமாது வுரைசெய்ய —

மறையவன் தியானிக்கப் பெருமாள் திருநடஞ்செய்தல்

மறையோனு மங்கே மனங்குளிர்ந் தன்பாய்,
ஓடியே சென்றவனும் நாடிவன மூடே
உயந்தமரப் (பேட்டி) லுத்தவனும் பாத்தான்
தேடியே பாத்தவன் நாடி மெலிவான்;
சீரணி மேனியுரு தேடியவன் காணான்,
'வந்துமரப் (பேட்டில்) புகுந்தவரு மெங்கே?
வரவழைத் தென்னைநீர் மாயமோ செய்தீர்!'
அந்தமறை யோனுடைய விழிதனிலுங் காணான்
அரவணையில் பள்ளிகொள்ளு மாயனுரு தன்னை;
சிந்தைதனி லஞ்செழுத்தை உச்சரித்து நாடி,
'சிறீபல்ப்ப நாதா!' என் றுத்தவனும் பாத்தான்.
விந்தைசெறி பாதமலர் கிண்கிணிகள் கொஞ்ச,
வீரதண்டை யாடவே விரைந்துநடஞ் செய்தார்.

1368. ஆருமாவனம் - அருமையான தனிச்சிறப்புடைய காடு.
1369. இலுப்பை - இருப்பை மரம்; பேட்டில் - பொந்தில்; பேடு - போடு; பொந்து.
1370. பிள்ளை - பாலன்; ஒழிந்து - தவிர்ந்து; நாங்ஙள் - நாங்கள்; மலையாள உச்சரிப்பு.
1372. வள்ளைப் பெருங்கண் - வளப்பமான பெரிய கண்.
1372. கடமாது - கடைமாது.
1374. நாடி - தேடி.
1375. மரப்பேடு - மரப்பொந்து.
1376. நாடி - நரம்பு; மெலிதல் - வருந்துதல், தளர்ச்சியடையதல்.
1377. மாயம் - வஞ்சகம்.
1382. அஞ்செழுத்து - பஞ்சாட்சரம்; பொதுவாகச் 'சிவாயநம' என்னும் சிவதுதி என்பர். ஆயின் அடுத்து, 'சிறீபல்ப்ப நாதா' என்று உரைக்கும் நாமமும் அஞ்செழுத்தே. ஆகவே மேலே சுட்டிய ஐந்தெழுத்து என்பது இந் நாமமே ஆகலாம். இதனை விஷ்ணு பஞ்சாட்சரம் என்னல் வேண்டும்; உத்தவனும் - உற்றவனும், உற்று அவனும்.
1384. விந்தை - வித்தை, அற்புதம்.
1385. வீரதண்டை - வீரக்கழல்; நடஞ்செய்தார்; நடனமாடினார்.

1368-1372. In this big wood defying description, the little boy has entered into the (hollow of) the *iluppai* tree.
And the boy has hidden himself; none of us have seen him.
No grown-ups have come (with him) here
Thus the sharp, big-eyed, low-born maid spoke.

The brahman searches and sees the Lord

1373-1385. The brahman, feeling pleased with love welling in his heart,
Went running and searching within the forest.
And he looked intently into the high tree-hollow.
Searching and seeing he became tired and thin; he saw not
The form of beauty adorned; (He exclaimed):
'Where is the one who came and entered into the tree-hollow?
Did you take me with you and practise magic on me?'.
Even then He did not appear to the eyes of the brahman.
The affected brahman mentally performed the ritual utterance of the five letters[418]
And searched, saying 'Cirī Palppanātā!' and looked (into the hollow).

The Lord appears as a child and gets worship

(The Lord as a child) then speedily danced with the foot-ornaments
On his fine flower-like feet sounding tenderly.

418. This may have reference to the five letters of the name Sri Palpp a nā tā (5 syllabic letters).

நடங்கண்ட மறையோன் காணப் பெருமாள் பள்ளிகொண்ட காட்சி

அச்சுதன் திருநடங்கண் டந்தமறை யோனும்,
அனந்தமது தானே இசைந்தவனு மிருந்தான்.
மெச்சியே மிகுந்தவனும் நிச்செயங் கண்டு,
விண்ணவர்க ளென்னவரு மாமுனிவ னிருந்தான்.
இருந்தபொழு தில்பெருமா ளிலுப்பையின் பேட்டில்
இலங்குமுடி தெற்குவடக் காகநிமிர்ந் தாரே.
பருந்தேறு மாயவர் பாதம்வடக் காக,
பைம்பொன்னொளி மின்னுமுடி பாதாள மட்டாய்,
தெற்குவடக் காகவே பள்ளிகொண்டு மாயன்,
சீரான இன்பந் திருவனந்தஞ் செய்தார்;
நிற்கும் புகழான இலுப்பையி னூடே
நெடியமா யவனங் கனந்தம்பள்ளி கொண்டார்.

விருத்தம்

18. பள்ளிதான் கொண்டு மாயன் பருவரை யென்ன, ஈண்டு
உள்ளுறை யிருந்த சோதி, உலகினி லொன்றாய் நின்றோன்,
(புள்ளின்மே) லேறுஞ்செல்வன், பூதல மளந்த கோமான்,
தெள்ளிய மலை(பொன்) நாட்டில் திருவுரு வனந்தஞ் செய்தார்.

1386. அச்சுதன் - அழிவற்றவனாகிய திருமால்.
1387. அனந்தம் - அனந்தவனம்.
1388. நிச்செயம் - நிச்சயம், உறுதி.
1389. விண்ணவர் - தேவர்; மாமுனிவன் - பெருமாளின் பின்வந்த மறையவன்.
1390. இலுப்பை - இருப்பை மரம்.
1391. நிமிந்தார் - கிடந்தார், பள்ளிகொண்டார்.
1392. பருந்து - கருடன்.
1393. பாதாளம் - தாழ்ந்த கடல்வரைப்பு.
1395. திருவனந்தம் செய்தல் - பள்ளிகொள்ளுதல்.
1397. நெடிய மாயவன் - நெடுமால்; அனந்தம் பள்ளி கொண்டார் - அனந்தன் என்னும் ஆதிசேடனாகிய படுக்கையில் அறிதுயில் கொண்டு கிடந்தார்.
1398. பருவரை - பெருமலை; ஈண்டு - இங்கே, மரப்பொந்து.
1399. சோதி - ஒளிவடிவானன்.
1400. புள் - கருடன்; பூதலம் - பூவுலகம்; கோமான் - தலைவன்.

1386-1401 As that brahman saw the holy dance of Accutaṉ, the Lord
Wished to assume his sleeping pose. Seeing this decision
The[419] brahman commended it and he the rare, great sage
Remained (watching) like the celestials. As he thus remained,
The Ruler-God stretched himself with his luminous head
From south to north in the hollow of the *iluppai* tree.
The Eagle-riding Māyavaṉār, lay down in the south-north direction
With his feet towards the north; effulgent with
The brightness of fresh gold, his head
Reached down below to the under-world. Māyaṉ took on
A holy, sweet, sleeping-pose of dignity within the *iluppai* tree.
Now become famous; Towering Māyavaṉ there assumed the pose of his *aṉantam*[420] sleep.

Viruttam-18

The Radiance which is immanent here (in this earth)
The Person who stands as the one (support)of this world,
The Lord who climbs his vehicle, the Bird, the Master who measured the earth-space
Stretched His holy shape to a sleeping position in clear, golden Malaināṭu.

---

419. The construction of the lines is not regular and the use of pronouns and participles gives rise to incomplete meanings. A possible meaning has been given above.

420. *Ananta-sayanam* means sleep on Ananta (the original serpent Āticēṣa)' called 'sleep of awarness' *(aṟituyil)* in Tamil religious literature.

மறையோன் பெருமாளுக்குத் தீப தூபம் காட்டல்

வேறு

திருவனந்தா புரந்தனிலே, தெற்குவடக் காகமாயன்,
வருசையுடன் பள்ளிக்கொண்டார், வானமுட்ட நின்றமாயன்,
உருமையுள்ள மறையோனும் ஊர்தேடிப் போனபோதே
எதிராக மறையோன்ஒரு ஈழுவனை எதிரே கண்டான்.
ஈழுவனை எதிரேகண்டு, ஏதுசொல்வார் மறையோனும்:
'திருமாலுக்குத் தீபஞ்செய்யத் (தீநெருப்பு) வேணு' மென்றார்;
அரியதொரு ஈழுவனும் ஆனதென்னஞ் சிரட்டை தன்னை
தீபதூபங் காட்டவேணும் சிரட்டை யின்னங் கொடுவா' வென்றார்.
ஆயவனு மப்பொழுதே ஆனசிரட்டை தான்கொடுத்தான்.
நெருப்பெடுத்து மறையவனும் நீதியுடன் வந்துநின்று,
திருக்குங் கிலியம்விட்டுத் திருமாலுக்குத் தீபஞ்செய்தார்.

மன்னர் தாம் கண்ட கனவை மந்திரி முதலியோருக்கு உரைத்தல்

அந்தார நேரத்திலே, ஆனதிரு நெடுமாலும்,
இந்தநல்ல ராச்சியத்தை யிருந்தரைசாளு மன்னவர்க்கு
நினைவாகவே நித்திரைக்கே நித்தியஞ்செய் தார்பெருமாள்.
புவனமதி விருந்தவர்க்கும் பூவுலகில் மன்னவர்க்கும்
திருச்சேர மன்னவன்தன் திருமனதி (லுற்றபோது).
மருச்சேரும் மாலைமார்பன் மந்திரிமார் (தனக்குரைத்தார்).
இன்றிரவு கண்டகினா இசம்புகிறேன் கேளுமென்றார்:
வன்னமுள்ள (மறையவனார்) வந்துநின்றார் (தாமொருவர்);

1403. வருசை - வரிசை, சிறப்பு; வானமுட்ட நின்ற மாயன் - திருவிக்கிரமா வதாரத்தில் கொண்ட பேருரு.

1404. உருமை - உரிமை; ஊர் - மக்கள் வாழும் பகுதி.

1405. ஈழுவன் - ஈழுவகுலத்தைச் சார்ந்தவன்; மலையாள நாட்டில் கள்ளிறக்கும் சாதியைச் சார்ந்தவன்.

1407. தீபஞ்செய்தல் - தூபங்காட்டுதல்.

1408. தென்னஞ் சிரட்டை - தேங்காயின் ஓடு, கொட்டாங்கச்சி.

1412. குங்கிலியம் - சாம்பிராணி போன்று நெருப்பிலிட்டுப் புகைக்கும் வாசனைப் பொருள்.

1413. அந்தாரம் - அந்தரம், இருள்; அந்தார நேரம் - இராப் பொழுது.

1415. நினைவாக - உணர்வில் காணும் வகை; நித்தியஞ்செய்தல், காட்சி தருதல்; தோற்றமளித்தல்.

1416. புவனமதிலிருந்தவர் - உலகில் வாழும் மக்கள்.

1418. மரு - மணம், வாசனை; மருச்சேரும் மாலை மார்பன் என்றது அரசனை.

1419. கினா - கனா, கனவு; இசம்புகிறேன் - இயம்புகிறேன், சொல்லுகிறேன்.

1420. மறையவனார் ஒருவர் - ஓர் அந்தணர்.

1402-1412. Māyaṉ who once stood touching the sky, took on with dignity
The sleeping position, head to foot in the south to north directions.
As the brahman bound to His service went in search of a place
(near the jungle).
Of human habitation, he saw an *Īḻuvaṉ*[421] in front of him
And the brahman told him;[422] 'For worshipping Tirumāl with
light,
Fire or burning coal (for lighting lamps) is required'
And the excellent *Īḻuvàn* (brought) a good coconut shell.[423]
The brahman said: 'bring more coconut shells to burn incense[424]
and wave camphor light,
And the person addressed, then itself gave the coconut shell
asked for.
The brahman kindled the fire, went and stood ceremonially (before
the Lord)
And burning *kuṅkiliyam* incense, performed the ritual of the
waving of light to Tirumāl.

The king's dream and speech to his ministers

1413-1420. In the time of night, the famous, Towering Māl fully showed
himself
In sleep, to the king who continues to rule this good realm[425]
(of Malaināṭu)
(When He came) into the blessed mind of the sacred Cēra king,
Master of residents of the earth and kings of the earth's world,
The king with the scented flower-garland on his chest then
Spoke to his ministers: "I relate the dream seen by me tonight,
hear'
He said, "(An exceptional one), a beautiful (brahman)[426] came
and stood (before me);

421. A member of the Harijan castes, officially called scheduled castes.
422. *ētu-colvār:* 'what would he say' a formulaic expression, a gap-filler of the ballad style. see also footnote 332.
423. The sentence leaves its verb to be understood from the run of the narration.
424. *tūpam* incense which is usually powdered material *cāmpirāṇi*, and *kuṅkiliyam* (l. 1412).
425. This reference in the present tense read with l.122 indicates Ātitta-maṉṉaṉ as the Ruler of Vañci at that time.
426. The God Māyaṉ in the shape of a Vedic follower.

வடநாடு தனிலிருந்து (வந்தோம்உன்) பூமியிலே;
அடவுடனே திருக்கோவில், ஆனசுத்து மாளியலும்,
இடமுடைய மண்டபமும் எனக்குவைய்த்துத் தாருமென்றார்.
வடமலையும் புரிநூலும் மறையவனாய் வந்துநின்றார்.
சேடனைப்போ லோரரவம் சீறிமுன்னே வரவுங் கண்டேன்;
ஈடுடைய கெருடனொன்று இவர்கூட வரவுங் கண்டேன்;
கோடுடைய கொலையானை கொஞ்சிமுன்னே வரவுங் கண்டேன்;
நாடுதனில் நம்முடைய நாராயணர் பதியுமில்லை;
ஈதேது மந்திரிக(ா)ள் இதுக்கிசைந்த மொழி சொல்லு மென்றார்.

மந்திரிமார் முதலியோரின் விண்ணப்பம்

மாவேறும் புசத்தழகர் மன்னவனார் கேட்டபோதே,
மந்திரிமார் தந்திரிமார் மறுத்துவிண்ணப் பஞ்செய்தார்:
'செந்தமிழ்சேர் (மன்னவனே!) சேரகுலத் (தாதிபனே!)
விந்தைசெறி திண்புயனே! வீரமணி மாலை மார்பா!
அந்தவுருபொற் குடையுடைய அரசே! கெம் பீரமன்னா!
சிந்தையுத்துன் திருமனதில் சிறந்ததோர் கினாவின தெல்லாம்

1422. அடவுடனே - அடைவுடனே; முறையாக; சுத்துமாளியல் - பிராகார மண்டபம்.
1424. வடம் - சரடு; புரிநூல் முப்புரி நூல், பூணூல்.
1425. சேடன் - ஆதிசேடன்; அரவம் - பாம்பு.
1426. ஈடு - வலிமை; கெருடன் - கருடன்; கருடன் திருமாலின் ஊர்தி.
1427. கோடு - கொம்பு, தந்தம்.
1428. நாராயணர் பதி - திருமால் திருப்பதி.
1429. இசைந்த மொழி - பொருத்தமான வார்த்தை.
1430. மா - வெற்றித்திருமகள்; புசம் - புயம், தோள்.
1431. மந்திரிமார் - அமைச்சர்கள்; தந்திரிமார் - படைத்தலைவர்கள். மறுத்து விண்ணப்பஞ் செய்தல் - மறுமொழி பகர்தல்.
1432. செந்தமிழ் - நல்லதமிழ்; ஆதிபன் - அதிபன், தலைவன்.
1433. விந்தை - வீரமகள்; திண்புயன் - வலிமைபடைத்த தோள்களையுடையவன்; வீரமணிமாலை - வீரத்திற்கு அடையாளமாக அணியப்பெற்ற மாலை.
1434. அந்தவுரு - அழகிய வடிவம்; பொற்குடை - அழகிய குடை; கெம்பீரம் - மிடுக்கு, பெருமிதம்.

1421-1429. 'We came into your territory from the Northern land
Build and provide me a regular temple with buildings on the rounds[427]
And spacious maṇṭapams' He said. He came and stood (before me)
As a brahman with necklace and garland and sacred thread. I saw
Also a serpent like (Āti)Cēṭaṉ, going with a hiss before Him,
I saw also a mighty *Karuṭaṉ*[428] bird coming with Him; I saw
Also a killer, tusked elephant (with endearing gait before Him);
In (our) country there is no holy temple-spot of Nārāyaṇar;
What is this, Oh ministers, speak words explaining this (happening)".

The ministers' reply

1430-1435. When the beautiful king with the goddess of victory[429]
Adorning his shoulders, asked (his question), the ministers and commanders
Made their submission in response: "Oh king to whom good Tamil belongs!
Oh Lord of the Cēra line! Oh person of mighty, wonder-working[430] shoulders!
Oh Person with the hero's gem-garland on his chest!
Oh king with beautiful form and golden umbrella!
Majestic monarch! About all that occurred in your mind in your great dream,

427. Subsidiary *maṇṭapams* and walls along circumambulatory paths of a temple: *pirakāra-maṇṭapams.*
428. The sacred Eagle-mount of Tirumāl.
429. *Mā-vērumpucam:* A king's shoulders are said to be the mount of the goddess of victory; *Mā* means Lakṣmi, here the victory-goddess.
430. *vintai-ceṟi: vintai* means wonder, miracle etc.

எங்களுட ராசாவே! ஏறாம்விண் ணப்பங் கேளாய்!
சங்கையுட னுரைத்திடலாம், தாரரசே! கேளு' மென்றார்:
'மாயவனார் தென்பூமியில் வந்ததுண்டு மாநிலத்தில்;
பாயமுட னனந்தமதில் பள்ளிகொண்டார் பெருமாளும்;
ஆசையுட னொருவார்த்தை அம(ர்)ந்திருந்தா ரெனக்கேட்டோம்:
தேசமதில் பிரகீர்த்தி சென்றுநாம் காண்போம்' என்றார்.

மன்னவர் பரிவாரத்துடன் பள்ளிகொண்ட பெருமாளைக் காணல்

அந்நேர மன்னவரும் ஆனபுகழ் மந்திரிமாரும்,
வன்னமுள்ள ராசாவும் வந்துகண்டார், வனந்தனிலே.
ஒருகாத நீளமென்ன உலகளந்தார் (பள்ளிகொண்டார்).
வருங்காதங் கூடவந்த மறையவனுந் தானிருந்தான்.
இருந்தந்த மறையோனையும், இன்பமுள்ள மாயோனையும்,
திருந்தவே மன்னவர்கள் செப்பமுடன் கண்டுகொண்டு,
கருதிவந்த மன்னவர்கள் கண்டார்கள் கண்களிக்க.

வேதியனிடம் கேட்க, அவன் பெருமாள் வந்த வரலாறு கூறுதல்

வேதியனோடே கேள்ப்பளவில், விரைந்து சொன்னான் வரலாறு:
(சோதியுடன்) தெய்வப்பதி சீரங்கத் திருந்ததுவும்,
வேதியர்கள் வெறுத்ததுவும், மிகுதவங்கள் செய்ததுவும்,
ஆதிமறை மாயவரு மருள்புரிந்து வந்ததுவும்,
அனந்தமதில் போந்ததுவும், அரிநெடுமா லிருந்ததுவும்,
வனந்தனிலே வந்ததுவும், மாறாடி யொளித்ததுவும்,
கண்டுநின்ற கடைமாது காட்டியங்கே கொடுத்ததுவும்,

1436. ஏறாம்விண்ணப்பம் - சிறந்த வேண்டுகோள்.
1437. சங்கையுடன் - சந்தேகமாக; தாரரசு - மலையணிந்த அரசன்.
1439. பாயமுடன் - விருப்பத்துடன்.
1441. பிரகீர்த்தி - பிரகிருதி, மூலப்பொருள்.
1443. வன்னமுள்ள ராசா - அழகுடைய அரசன்.
1444. காதம் - காதஅளவு தூரம்.
1445. வருங்காதம் - வருகின்ற வழி; கூடவந்த - உடனாக வந்த, பின்பற்றி வந்த.
1449. வரலாறு - பெருமாள் திருவனந்தபுரம் வந்த செய்தி.
1454. மாறாடி - உருவம் முதலியன மாறி; வேற்றுருவாய்; ஒளித்தது - மறைந்து கொண்டது.

1436-1441. Our own king! Hear our submission, may we express our surprise?
Oh monarch wearing the flower garland! Māyavaṉār's coming
Into the large area of the southern land has taken place;
The Ruler-God has with pleasure taken on His sleeping position
In Aṉantam;[431] pleasing news that He is resident here;
We will go and see His Form in this our land" - so they said:

The king and others see the God and hear the story of His coming

1442-1455. Then the king and the famed ministers and other colourful
Territorial rulers went and saw(the god) in the wood.
The Lord who measured the world lay in sleep,
Looking stretched for over a *kātam's* length[432]
The brahman who had covered the way (with Him) was also there.
The monarchs saw the brahman who stayed there
And the bliss-conferring Māyaṉ perfectly and clearly;
The monarchs coming with a motivation, saw,
And their eyes filled with delight.
On their enquiring of the brahman he quickly told the story
Of the Lord's effulgent stay in the divine spot of Cīraṅkam
And of brahmans hating him and his performance of many penances;
Of Primal, Vedic Māyavar graciously appearing before him,
Of His going to Aṉantam and the stay
Of Ari, Towering Māl there,
Of his coming into the forest (in search of Him)
And His hiding, transforming Himself,
Of the low-caste woman who saw Him, directing (him) there,

431. Aṉantam here may also mean Āticēṭaṉ.
432. *kātam:* a distance-measure equal to that covered in 7½ *nāḻikais* of time. See footnote 284.

கெண்டை யங்கண் விழியாருங் கிருபையுடன் சொன்னதுவும்,
(சென்றபோது) ஈழுவனும் தென்னஞ் சிரட்டை கொடுத்ததுவும்,
அன்றுதிருத் (தீபதூபம்) அருள்மறையோன் செய்ததுவும்,
அவ்வாறெல் லாமறையோன் அரசருக்கங் கேயுரைத்தான்.

மன்னவர்கள் திருமால் திருவுருவைச் சென்று காணுதல்

இவ்வாறு கேட்ட போதே இயல்மன்னர் மனமகிழ்ந்து, 1460
(மறைதேட) வுயிர்தேட, மாதவர்கள் தான்தேட,
உரைதேட, மாதவர்கள் உத்த தெய்வார் தான்தேட,
தமைத்தேட எல்லோரும் தட்டளிந்து காணாதார்
(நமைத்) தேடி வந்தார்காண், நல்லபுகழ் மாயவனார்!
என்றுமன்ன னின்ம்பமுத்து இறையோனைத் தான்வணங்கி, 1465
முன்றுதனில் நிறைந்திருந்த மூன்றுதொரு பத்துமன்னர்
இன்றதிலே கோவில் வைக்க இசைந்தாரே மன்னவர்கள்.
மன்றுதனில் மாளியலும் மன்னவர்கள் வைய்க்கவென்று,
திருமால்தன் திருவுருவஞ் சென்றுகண்டார் மன்னவர்கள்.

பெருமாள் பருமேனி சுருக்கிக் காட்சியளித்தல்

வேறு

உருவேது பதமேது ஒளிமுடிதா னிங்கேது 1470
திருமேனி யளவேது தெய்வமே என நினைந்து,
மருதுளசி மாயவனார் மண்மீதில் பள்ளிகொண்டார்.
அருமேனி உசரமது ஆகாச முட்டிநிற்கும்;
திருமேனி நீளமது தெரியா தொருவருக்கும்.

1456. கெண்டை - கயல்மீன்.
1463. தட்டழிந்து - தடுமாறி, திகைத்து.
1466. முன்றுதனில் - எதிரில்; மூன்றுதொருபத்து - முப்பது.
1467. இசைந்தார் - ஒருப்பட்டார்.
1468. மன்று - பொதுவிடம்; பூமி.
1470. உரு - வடிவம்; பதம் - பாதம்; ஏது - எங்கேயுள்ளது.
1471. நினைந்து - கண்டவர் எண்ணி.
1473. அருமேனி - அருமையான திருமேனி; முட்டிநிற்றல் - தொட்டு நிற்றல்.

1456-1459. Of the woman of fine fish-like eyes kindly telling him (the news),
Of the Īḻuvaṉ giving a coconut-shell when approached,
And (he), the blessed brahman performing the *(tūpa-tūpam)*
On that day - all these the brahman narrated to the kings.

The monarchs decide to build His temple

1460-1469. When they thus heard (the narration) the monarchs felt glad;
The king, felt delighted and paid obeisance to the god, saying:
'See, Māyavaṉār of perfect form
Has come in search of us even when Vedas search for him,
Human lives search for him, great sages search for him,
Words search (to describe) Him, and worshipping priests
Search for Him with great penances and all
Who search for Him stand puzzled without seeing.
The three times ten (thirty) monarchs assembled in council,
These monarchs agreed today to raise a temple there.
The monarchs in order to raise (god's) edifice in the open,
The monarchs went and saw the holy Form of Tirumāl.[433]

The Lord's colossal Form gets reduced in answer to prayer

1470-1474. Māyavaṉār with fragrant *tuḷaci* assumed His Sleeping Pose on earth
Thinking "Oh God![434] where is (the limit of) my form, my feet?
Where is the limit of my holy body?"
The height of His body, it stands knocking against the sky,
The length of his sacred body, no one knows it.

---

433. As this seeing Tirumāl is for a second time, (the first having been mentioned in some detail in l.1446-1448) it may be taken as closer look for aiding their intended temple-building.

434. Māyavaṉ, Himself exclaiming 'O God!' carries the genuine stamp of folk narrative imagination, apart from other mythological flights of fancy.

வேறு

இருபாதம் வடமலையில்; இசல்முடிதான் கடலள(க்)கும்;
உருவான பொருளமைய உசர்மாடம் வைப்பமென்னா,
என்றுஅந்த மன்னவர்கள் எல்லோரும் ஒருமனமாய்,
குன்றுதனையன் றெடுத்துவரே! கோபாலா! சரணமென்ன—
கன்றுதனைக் கால்வாரிக் கனியெறிந்த (கார்வண்ணனே!)
பேச்சிமுலைப் பாலையுண்டு, (பேதைதுகில்) கொண்டோனே!
வாச்சதொரு கடல்வண்ணரே! மலர்மா திருமார்பா!
ஏச்சித் துண்டோதரனை யியல்முடிக ளறுத்தோனே!
காச்சியபால் வெண்ணை(யுண்டு), கட்டுண்ட கார்வண்ணனே!
உன்னுடைய பெருமைதன்னை உலகிமுள்ளோ ரறிவார்களோ!
என்னுடைய தேன்றளவு மேனிசுருங்க வேணுமென்றார்.
(கோத்திரத்தில்) மன்னரெல்லாங் கூடநின்றங் கப்பொழுதே
தோத்திரங்கள் செய்துநிக்க, துய்யமுடி மாயவனார்
சேரமன்னர் திருக்கரத்தில் தேன்றளவும் சுருங்கியதாம்!
பாரமுடி மன்னர்கள் பாவித்தங் ககமகிழ்ந்து,
வருமேனிப் பெருமாள்தான் மன்னவர்கள் தங்களுக்காய்,
பருமேனி தான்சுருங்கிப் பள்ளிகொண்டார், பாரளந்தோர்.

மன்னவர்கள் திருக்கோவில் எடுக்கவேண்டிக் கண்ணாளர்களை அழைத்தல்

திருமேனி சுருங்கக் கண்டு, தெய்வமுறை மன்னவர்கள்
திருக்கோவில் வைக்கவென்று தெய்வக்கண்ணார் (தனையழைத்தார்.)
கண்ணாளர், பண்ணாளர், காசினியில் சிறந்தோர்கள்,
மண்ணாளு மன்னவர்க்கு மணிமுடிகள் சமைத்தோர்கள்,

1475. வடமலை - மேருமலை; உலகின் வடபாலுள்ள பெருமலை. இசல்முடி - இயல்முடி; பொருந்திய திருமுடி; கடலளக்கும் - கடல் எல்லையைத் தாண்டும்.
1480. பேதை துகில் - பெண்களின் ஆடை.
1481. வாய்ச்சு - வாய்த்த; மலர்மாதிருமார்பா - மலரிலிருக்கும் திருமகள் வீற்றிருக்கும் மார்பையுடையவனே.
1482. ஏச்சி - ஏச்சு, வசவு; துண்டோதரன் - சிசுபாலன்.
1485. என்னுடைய தேன்றளவு - எங்களுக்கு இசைந்த அளவு.
1486. கோத்திரத்தில் - பூமியில்.
1488. தேன்றளவு - அடங்குமளவு.
1489. பாரம் - பெருமை; பாவித்து - தியானித்து.
1493. கண்ணார் - கண்ணாளர், சிற்பியர்; கல், மரம், இரும்பு, பொன் இவற்றால் பணிசெய்யும் தச்சர்கள்.
1494. பண்ணாளர் - செயல்திறம் மிக்கவர்.
1495. மணிமுடி - அழகிய கிரிடம்; சமைத்தோர்கள் - செய்தவர்கள்.

1475-1491. The two feet are on the Northern[435] mount;
The stretching head[436] measures the sea (in the south)
Intending to raise a high temple for housing the majestic Form
All those monarchs single-mindedly (sang);
"Oh one who lifted up the [437] hill!
Protector of (grazing) cows! We are your refuge,
Oh (cloud-hued one) who seized the legs of a calf and
By throwing them against a tree, brought it down with fruits!
Oh one who drank off the breast-milk of the demoness
And seized women's clothes (playfully)!
Oh one with the befitting sea-colour!
Oh one with the Lady of the flower in your chest!
Oh one who cut off the proud heads of mocking[438] Cicupālaṉ!
Oh cloud-hued one who (stealthily) ate boiled milk and butter
And got tied (to a mortar)! Can men of this earth (adequately)
Know about your greatness? May your body shrink
To the size which we wish for!" when all the land's monarchs
Stood together instantly and took to singing praises,
Māyavaṉār with his holy crown, shrunk to a size falling
Within the arms of the Cēra king. The crowned monarchs of esteem
Paid their obeisance, feeling glad in heart. For the monarchs
The Ruler-God of ever growing Form, reduced His huge figure
And took the Sleeping pose-the One who had measured the earth.

Artisans of Māntai are asked to build the temple

1492-1495. The monarchs devoted to divine law, seeing the holy form shrunk,
(Invited) divinity's artisans to raise a holy temple (for God)—
(These were) artisans, experts in work, the best on earth;
Makers of beautiful crowns for monarchs ruling the earth; givers

---

435. Mēru mountain of the North, called *Vaṭa-mēru.*
436. *ical muṭi* may be taken as *iyal-muṭi* the lying or stretching head. It may also be a colloquial form of *icai*: 'fame'. Measuring the sea is 'going beyond it'.
437. This and other allusions are to the exploits of Tirumāl as Kiruṭṭiṉaṉ.
438. Kiruṭṭiṉaṉ brought down Cicupālaṉ's head with his Discus-weapon for the insult he heaped on him at the sacrifice performed by the Pāṇṭavar. The plural heads, seems to be an over statement.

பொன்னுலுகி லிந்திர(ர்க்கு)ம் புற்பகத்தேர் கொடுத்தோர்கள்,
மின்னுமணி மாந்தையர்கள், வீறாக இருந்தோர்கள்,
ஆகாசந் தனிலேற அரும்பொறிகள் சமைத்தோர்கள்;
வாகான நீரில்வர மரக்கலங்கள் சமைத்தோர்கள்;
எண்ணரிய பல்லுயிரு மிதமாக வேவளக்க,
மண்ணையுழ வாயுதங்கள் வகுத்துமிகக் கொடுத்தோர்கள்;
உட்சமையம் பிறச்சமையம் உகந்துநன்றாய்ச் சிவனருளால்
நட்சமையம் பன்னிரண்டும் நல்வேடங் கண்டவர்கள்;
மண்ணிலுள்ள மனிதருக்கு மானியங் காத்தவர்கள்;
பண்ணிய பாவலர்க்கும், பாரம(றை)ற வேதியர்க்கும்,
எண்ணுமறை முறையாக எழுத்தாணி சமைத்தோர்கள்;
விண்ணாளும் வேந்தருக்கும் வீரசரங் கொடுத்தோர்கள்;
நட்டுவர்கள், முட்டுவர்கள், நல்லதொரு நாடகமும்,
கொட்டநல்ல மத்தாளமும் கூர்மைபெறக் கொடுத்தவர்கள்;
மாகுத்தன் தனக்கடங்கா மதகரியைத் தானெறுத்தி
வாகொத்த தொறட்டியுடன் வாளுஞ் சமைத்தோர்கள்;

1496. பொன்னுலகு - தேவருலகு; புற்பகத்தேர் - புட்பகத்தேர்; புட்பக விமானம்.

1497. மாந்தையர்கள் - மாந்தை நகரில் வாழ்பவர்கள்; மாந்தை சேரனுக்குரிய ஒரு நகர்; சிறந்த சிற்பியர் வாழும் இடம்.

1498. ஆகாசந்தனிலேற அரும்பொறி - வானவூர்தி, ஆகாய விமானம்.

1499. மரக்கலங்கள் - கப்பல்கள்.

1500. இதம் - நன்மை, இன்பம்; வளக்க - வளர்க்க.

1501. உழவாயுதங்கள் - கலப்பை முதலிய உழவு கருவிகள்.

1502. சமையம் - சமயம், மதம்; உட்சமையம் சைவத்தின் வகைகளாகிய வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம் என்பன. பிறச்சமையம் - புறச்சமையம்; வேற்றுமதங்கள்; மாறுபட்ட கொள்கையுடைய மதம்.

1503. நட்சமையம் - நற்சமையம், பன்னிரண்டு சைவம், வைணவம் முதலான பலமதங்கள்.

1504. மானியம் - இறைலிநிலம்; உதவித்தொகை.

1505. பாவலர் - புலவர்; பாரமறை - பெருமை பெற்ற வேதம்; வேதியர் - வேதம் வல்ல அந்தணர்.

1506. எழுத்தாணி - ஏட்டில் எழுத உதவும் எழுத்தாணிக்கோல்.

1507. வீரசரம் - வீரத்தை வெளிப்படுத்தும் மாலை.

1508. நட்டுவர்கள் - நாட்டியம் பயிற்றுவிப்போர்; முட்டுவர்கள் - இசைகாரர்கள்.

1509. மத்தாளம் - மத்தளம், கொட்டப்பெறும் தோற்கருவி வாத்தியம்; கூர்மை பெற - விளக்கமுற.

1510. மாகுத்தன் - மாவுத்தன்; யானைப் பாகன்; மதகரி - மதம்பிடித்த யானை; நெறுத்தி - நிறுத்தி; நெறிப்படுத்தி என்றாம்.

1511. தொறட்டி - யானையை அடக்க உதவும் அங்குசம்; வாள் - கத்தி.

1496-1511. Of the *Puṭpaka*-chariot[439] to even Intiraṉ in the golden world;
Residents of Māntai[440] of glittering beauty;
Dwellers living in dignity;
Makers of rare vehicles for flying in the sky;
Makers of ships for going over the high seas;
Givers of implements shaped for tilling land so that countless
Living beings may flourish comfortably (with food).
Knowers, by Śiva's grace, of the blessed aspects
Of the twelve good[441] faiths, well understanding the inner and
outer faiths[442]
Protectors of endowments made to men on earth
(As they carve epigraphs, copperplates etc.),
Makers of stylus pens (for writing on palmyrah-leaves)
As prescribed in the esteemed Vedic tradition,
For verse-composing poets and Vedic followers of deep study;
Givers, even to kings in heaven, of the hero-garland;
Dance-instructors; musicians; providers of good dance[443]
And drum for striking beats, enabling smart performance,
Makers, along with the sword, of the suitable, shapely
elephant-goad, checking
Even the mad elephant, going out of control of the driver;

---

439. The aerial chariot called *puṣpaka-vimāṉam* of the celestial world, here called the golden world. The *Rāmāyaṇa* speaks of its hero returning from Ilaṅkai to his capital town Ayōtti in this *vimāna*.
440. A town in the Cēra land, famous for its wealth and beauty referred to in the *Caṅkam* poems.
441. These are six 'inner' and six 'outer' faiths of *Caiva-Cittāntam* mentioned in line 1502.
442. Inner faiths *(akaccamayam)* and outer faiths *(Puṟaccamayam)* are varieties of the Caiva religion classified with reference to their distance from the core faith of *Cittānta-Caivam.*
443. *nāṭakam* is here to be taken in this sense.

வெல்ல வல்ல சமர்தனிலே வில்லெடுத்துக் கொடுத்தோர்கள்;
இல்லாளும் பத்தாவும் இருபேரு மொருசரட்டில்
நல்லதிரு மாக்கலங்கள் நாள்முகிழ்த்த மிட்டோர்கள்;
கல்லுருவம் தனைச்சமைத்துக் கைதொழவே வைத்தோர்கள்;
வல்லநல்ல இசைபாட வாணரென்னுந் தமிழோங்கும்
வில்லுடனே வீசுகோலும் வெத்தியுடன் கொடுத்தோர்கள்;
மண்ணிலுள்ள மன்னவர்கள் மனமகிழ்ந்தங் கப்பொழுதே
கண்ணுள்ளோ ரிவரெனவே கண்ணாளர் (தனையழைத்தார்.)

கண்ணார்கள் வந்து மன்னர்களைப் பணிந்து பணிவிடை ஏதெனக்கேட்டல்

மன்னர்விட்ட (ஆளோடே வந்துகண்டார் மாந்தையர்கள்).
'தென்னேறு முலகாண்ட சேரகுல மன்னவரே!
சீரார்குரு மன்னர்களே! திருவஞ்சி கார்த்தோரே!
பாராள வந்ததிரு பாரமுடி மன்னர்களே!
திருந்தமுடி யரசர்களே! சிறந்தாளை விட்டுமிப்போ
பரிந்து(நம்மை அழைத்துவிட்ட) பணிவிடையே தெ'னத் தொழுதார்.

1512. சமர் - யுத்தம்; வில்லெடுத்துக் கொடுத்தல் - வில் என்னும் கருவியை ஆக்கி உதவுதல்.
1513. இல்லாள் - மனைவி; பத்தா - பர்த்தா, கணவன்; சரடு - கயிறு.
1514. மாக்கலங்கள் - மாங்கிலியம் முதலிய ஆபரணங்கள்; முகிழ்த்தம் - முகூர்த்தம்.
1515. கல்லுருவம் - கற்சிலைகள்; கைத்தொழ - வணங்க.
1517. வில் - வில்லுப்பாட்டிற்காகப் பயன்படுத்தும் மணிகோத்த வில்லிசைக் கருவி; வீசு கோல் - வில் நாணை அடித்து ஒலி எழுப்புவதற்கான கருவி; இரு கையிலும் பற்றி ஓங்கிச் சுழற்றி அடிக்கப் பயன்படுவதால் வீசுகோல் எனப்பட்டது.
1518. கண்ணுள்ளோர் - அறிவுடையோர்.
1520. விட்ட ஆள் - ஏவி விட்ட ஆள்; மாந்தையர் - மாந்தையிலிருந்துவந்த சிற்பத்தொழில் வல்லார்.
1521. தென்னேறுமுலகு - தென்னாட்டிலே சிறப்புடைய வஞ்சிநாடு.
1522. குருமன்னர் - குறுமன்னர், சிற்றரசர்; திருவஞ்சிகாத்தோர் - வஞ்சி நாட்டை ஆளும் உரிமையுடையார்; கார்த்தோர் - காத்தோர்.
1524. சிறந்தாளை - சிறந்த தூதுவனை.
1525. பரிந்து - விரும்பி; பணிவிடை - தொழில், திருப்பணி.

1512-1525. Providers of bows shaped by them to win in battles;
Makers of good, sacred neck-strings[444] for auspicious hour
Of the wedding-day, (inscribing) in one string
Both the names of the wife and the husband;
Makers of stone images making people salute them,
And providers in fine-form of the bow[445] and striker theron
With which playing artists raise music
Good and impressive, with Tamil accents sounding high.
The monarchs on earth, feeling glad, then and there
Called in the artisans, saying 'these are indeed men with eyes.'[446]
The artisans of Māntai, came along with the messengers.
Sent by the king. Bowing, they said:
"Oh King of the Cēra line, ruling the best of the southern world,
Oh smaller Kings of worth! Oh commanders
Who guard the holy capital Vañci!
Oh Kings of responsible holy crowns[447]
Who have come to rule over the earth!
Oh Kings of faultless crowns! What is the service for which
You have specially sent men and called us here with concern?"

444. *tālis* tied round women's necks as sacred tokens of married prosperity. The auspicious hour of wedding is called *mukūrttam* - here *mukuḷttam*.

445. bow called *vil* adorned with bells, used for the accompaniment of the *villuppāṭṭu*. The striker is *vīcukōl* used to strike the taut string of the bow and raise musical notes.

446. There is a pun on *kannālar* (men with skill) and *kaṇṇuḷḷōr* (men with eyes), suggesting that artisans are the really gifted and knowledgeable people (for work).

447. This may be taken as a reference to kingship in general embracing both the Cēra king and his tributary princes.

திருக்கோயில் கட்டவேணும் என மன்னர்கள் பணித்தல்

'எழுதவொண்ணாத் திருமேனி ஈசர்கோவில் வைய்க்க வேணும்!-
பழுதறவே மரங்கள் வெட்டப் பாங்குடனே மாந்தையர்க்கு
சொல்லுவாராந் திருவாக்கு துங்கமுடி மன்னவர்கள்:
'மல்லனைய திண்புசத்தார் மாயவருக் கிப்பொழுது
வல்லமணி மண்டபமும், வாய்த்தமதில் சுத்துகளும்,
அல்லனைய மாயனுக்கு அழகுபெறக் கட்டவேணும்.'

மாந்தையர்கள் விடைகொண்டு மலைநோக்கி நடத்தல்

மன்னவர்கள் அருள்புரிய, மாந்தையர்கள் விடைகேட்டு,
சின்ன வுளியுடனே, சிறந்தநல்ல வாச்சிகளும்,
சீரான சித்துளியும், சிறந்தநல்ல பெருவுளியும்,
காராரும் மலைபிளக்கக் கனத்ததொரு கொட்டலாவும்,
(நேராகத் தானேடுத்து நீதியுள்ள மாந்தையர்கள்)
பேரான மலைநோக்கிப் பெருமையுட னேநடந்தார்.

விருத்தம்

19. நடந்தனர் மாந்தை வேந்தர், நல்லதோர் மலையை நோக்கி;
கடந்துவெங் கானம் (புக்குக்) கனவரை தன்னில் மீதே
அடந்ததோர் சோலைதன்னில், அரியதோர் மரங்கள் கண்டு,
நடந்திரு திருநி லைக்கால் தான்குறித் தவர்கள் நின்றார்.

1526. எழுதவொண்ணாத்திருமேனி - சித்திரத்தில் எழுத இயலாத பேரழகு படைத்த தெய்வவுரு.
1527. பழுது - குற்றம்.
1528. திருவாக்கு - மன்னரின் திருவாணை; துங்கமுடி - விளக்கமான ஒளிபடைத்த கிரீடம்.
1529. மல் - வலிமையுள்ள, மலை.
1530. வல்ல - ஏற்ற, பொருத்தமான.
1531. அல் - இருள்.
1533. உளி - தச்சுக்கருவிகளுள் ஒன்று; மரம்செதுக்கும் உளி, கல் பொளியும் உளி என வெவ்வேறு வகையான உளிகள் உண்டு. வாச்சி - மரம் செதுக்க உதவும் கருவி.
1534. சித்துளி, பேருளி - உளிவகைகள்; இவை தச்சுக் கருவிகளாகும்.
1535. கொட்டலா - மலையைப் பிளக்கப் பயன்படும் இரும்புக்கருவி; சம்மட்டி. இதனைக் 'கொட்டுலா' எனவும் கூறுவர். உளிமேல் அடிக்கும் கருவியாகிய கொட்டாப்புளியை இது குறிக்கும் போலும்.
1537. பேரானமலை - பெரியமலை.
1539. கனவரை - பெரியமலை.
1540. இரு திருநிலைக்கால் - பெரிய கதவுநிலைக்காகும் மரம்.

1526-1541. "A temple should be raised to the Lord, whose beauty of form
Is beyond representation (in art)'— So the monarchs
Of lofty crowns spoke royal words and duly told
The men of Māntai to cut the wood required
In faultless manner; (they added):
"For Māyavar with mighty mountain-like shoulders now
Beautiful pavilions and fitting enclosing walls—
These[448] have to be built in fine manner,
For Māyaṉ, dark-hued as night."
The kings having graciously spoken,
The men of Māntai took leave (of them)
And the principled men of Māntai directly took (with them)
The small chisel and specially good wood-cutting tools
The well-readied smaller chisel and the specially good big chisel
And the heavy iron striker for breaking down the black mountain;
They walked with pride towards the well-known mountain.

Viruttam Verse-19

The noble men of Māntai walked towards the good mountain;
Passing (places and entering) a wild forest,
On the big mountain itself, in a dense grove
They saw precious trees and they stood,
Sighting wood for holy door-frames of the temple.

448. The sentence repeats its subject Māyaṉ and gets out of gear. Metrical requirements of alliteration also play a part in this upset of the sentence structure.

மாந்தையர் கற்களையும் மரங்களையும் கொண்டுவருதல்

வேறு

கண்டு வாள்மலை தன்னைக் குறித்தவர்,
கடிய மாமலை தன்னைப் பிளக்கவே,
துண்ட மாய்நல்ல வுளிகள் நிறுத்தவே,
தூண்டு பாண்டிக் குழிகள் பறித்தனர்.
கொட்ட லாவுடன் கூட மெடுத்தனர்;
கோல மாந்தையர் ஒன்றுபோல் கூடியே
திட்டென வேயெ டுத்துடன் போட்டல்லோ
செவ்வ தாக மலையைப் பிளந்தனர்.
வண்மை யான திருநிலைக் கால்களும்
வாய்த்த நல்ல வரிக்கல்லும் வெட்டியே,
வண்மை யானபெரு மாமரம் நாடியே
வாய்த்த நல்ல வரிக்கல்லும் வெட்டியே,
நன்மை யான பெருமரம் நாடியே
நாடு மடவியும் புகுந்து மாந்தையர்,
நல்ல நல்ல மரங்கள் தனைக்கண்டு,
நாடி யேமரம் வெட்டத் துடங்குவார்.
கோங்கை வெட்டி ஒன்றுபோல் செருக்கியே
குன்றதிலே பெருமரம் நாட்டினார்.
பாங்கானதோர் தேற்கமரம் வெட்டி,

1542. வாள் - ஒளி.
1543. கடிய - கடுமையான, உறுதியான.
1544. துண்டம் - துண்டு; உளிகள் - கல்லுளிகள்.
1545. பாண்டிக்குழிகள் - பாண்டி விளையாடுவதற்கு அமைப்பதுபோன்ற சிறு குழிகள்.
1546. கூடம் - சம்மட்டி.
1548. திட்டு - சிறுகுன்று.
1549. செவ்வதாக - நேராக.
1550. வண்மை - வளப்பம்; திருநிலைக்கால் - வாசல் நிலைக்கு உதவும் கற்கள்.
1551. வரிக்கல் - நீளமாக அடித்துத் திருத்திய கல்; குறுக்காக இடப்படும் கல்.
1553. 1551 ஆம் அடி போலவே மீண்டும் அமைகிறது.
1555. நாடும் அடவியும் - நாட்டிலும் பெருங்காட்டிலும்; நாடும் என்பதற்குத் தேடும், விரும்பும் என்றும் கொள்ளலாம்.
1557. நாடி - ஆராய்ந்து; துடங்குவார் - தொடங்குவார்.
1558. கோங்கு - கோங்கமரம்; செருக்குதல் - செதுக்குதல்.
1560. தேற்கமரம் - தேக்கமரம்.

Artisans fetch stone and timber

1542-1560. Having seen the bright mountain aimed at (by them),
To break down the hard, big mount,
With good chisels planted in sets
They dug proper puts as for the *pāṇṭi*[449] game.
They took the striker and the hammer implements;
The fine men of Māntai joined together;
Removing hill-like pieces and throwing them off,
(They) cut down the mountain straight.
They cut strong stone-beams for holy doorways
And suitable stones to be laid cross-wise;
They searched for a strong, big tree
And fashioned good cross-wise beams (out of its wood);
The men of Māntai going in search of good, big trees
Went into country and forest and wherever they saw
Good trees, they began felling them particularly.
Cutting the *kōṅku* tree and smoothening its surface.
They placed a big log on the hill.
They cut a fine teak wood

449. *pāṇṭi:* A game played by children with little pits made to mark points of squares on earth.

பலகை பலது மறுத்தனர்.
கட்ட மான கிடாக்கள் வலித்திட,
கானில் வண்டி கிறுகிறென் றேவர—
வட்ட மிட்ட மலையைப் பிளந்தகல்,
வண்மை யான பலகை மரங்களும்
திட்டென வேயி ழுத்து வலித்துடன்
திருவனந்தா புரத்தில் கொணர்ந்தனர்.

திருக்கோவில் திருப்பணி

கொண்டு வந்த திருநிலைக் கால்களை
கோல மாந்தையர் வாங்கியே வைத்தனர்;
வண்டுகள் பாடியே சோலை மாந்தையர்
வன்ன வன்னங்கள் செய்து முகித்தனர்;—
சிங்கத் தூணு மாளியத் தூண்ங்களும்,
சீராகிய ரத்தினத் தூண்ங்களும்,
அங்கத் தூண மழகிய தூண்ங்களும்,
அம்மானை யாடிய தூண்ங்களும்,
அன்னத் தோடே அழகிய தூண்ங்களும்,
அருமையான உருப்பிணித் தூண்ங்களும்
வன்னத் தூணும், வள்ளொளித் தூண்ங்களும்,
வாகானதொர் வாரணத் தூண்ங்களும்,
பத்தி பத்தியாய்ப் பலவன்னத் தூண்ங்களும்,

1562. கட்டமான - வலிமை படைத்த; கிடாக்கள் - எருமைக் கடாக்கள்.
1563. கான் - காடு; கிறுகிறெனல் - ஒலிக்குறிப்பு.
1566. திட்டெனவே - திடமாக, உறுதியாக, வலித்து - இழுத்து.
1571. வன்னவன்னங்கள் - வகைவகையான வடிவங்கள்; முகித்தனர் - முடித்தனர்.
1572. ஆளி - யாளி; யாளியின் உருவமாய்ச் செய்த தூண்கள்.
1573. ரத்தினத்தூண் - இரத்தினங்கள் பதித்த தூண்.
1574. அங்கத்தூண் - பல்வேறு உறுப்புகள் வடிக்கப்பெற்ற தூண். அங்கம் - உறுப்பு, பலவகை உருக்கள்.
1575. அம்மானை - அம்மனை, தாய், பெண்; அம்மானையாடிய தூண் - பெண்கள் அம்மானையாடும் காட்சி கொண்ட தூண்.
1576. அன்னத்தூண் - அன்னப்பறவையின் வடிவம் பொறித்த தூண்.
1577. அருமையான உருப்பிணித் தூண் - அருமையான சித்திர வடிவங்கள் பொறிக்கப்பெற்ற தூண்.
1579. வாகு - அழகு; வாரணத்தூண் - யானை உருவுடன் கூடி அமைக்கப்பெற்ற தூண்; வாரணம் - யானை.
1580. பத்திபத்தியாய் - வரிசை வரிசையாக.

1561-1567. And sliced many planks out of it.
They brought into Tiruvanantāpuram
The stones cut out of circling mountains,
And the rich planks and timber pieces,
Exerting force and dragging them strongly
By the cart going in the forest with grating sound[450]
As tough he-buffaloes pulled it.

Temple-building

1568-1580. The fine men of Māntai received and kept
The sacred doorway logs brought;
The men of Māntai where bees hum in groves,
Finished their making of beautiful shapes and shapes:[451]
Lion-pillars and yāḷi-[452]pillars,
Excellent gem-set pillars,
Pillars with different parts, and beautiful pillars,
Pillars with women's figures in *ammāṉai*[453] sport,
Pillars beautiful with shapes of swans,
Pillars with precious sculptured forms;
Pillars of colour, pillars of waxing luminosity,
Pillars beautiful with figures of elephants,
Many fine pillars in rows and rows,

---

450 Onomatopoeic word *kiṟu-kiṟu-eṉṟē*.

451. *vaṇṇa-vaṇṇaṅkaḷ:* Different colourful shapes repetitive phrase of plurality with variety retained in translation

452. A mythical animal shown with prancing feet in sculptures

453. *Ammāṉai* is men's game of throwing balls up in succession and catching them without intermission.

பார மானதொர் ரத்தினத் தூண்ங்களும்,
முத்தி லங்கும் முகப்பணித் தூண்ங்களும்,
முதுமை யாகப் பலவன்னஞ் செய்துதான்
சித்திரப்பணி செய்து முகித்துடன்—

சிறப்ப தாக வரிக்கோல் செருக்கினார்.
உத்தி ரங்களும் செய்து முகித்துடன்—
உறப்ப தாகவே மாந்தையர் கூடியே
சித்திர மாதம், தெய்திபத் தானதில்,
சிறந்த நல்லதோர் சுக்கிர வாரத்தில்,
உத்திர மான நாளது தன்னிலே,
யோக வாரங்கள் அமர பக்கமும்
சிக்கென் நல்ல சிங்க முகுர்த்தத்தில்,
தேங்கா யுமுன் னடித்துச் சாத்தியே
வெள்ளிலை யுமடக் காயும் வைத்துடன்
விக்கினேசுரா என்று வணங்கியே—
பக்க மான வியாழ வுதையத்தில்
பன்னிரண்டு மடங்களுஞ் சுத்தமாய்,
உத்திர மான திருநிலைக் கால்நாட்டி,
ஒளிமாட மண்டபம் வைத்தனர்,
உத்திரங்கள் நிமிசமாய் வைத்தல்லோ

1581. பாரம் - பளு, கனம்.
1582. முகப்பணித்தூண் - கோவிலின் திருமுன்பை அலங்கரிக்கும் தூண்.
1584. சித்திரப் பணி - சித்திர வேலைப்பாடு.
1585. வரிக்கோல் - கூரைமேல் அமைக்கப்பெறும் நீண்ட மரக் கோல்கள்.
1586. உத்திரம் - தூண்களின் இடையே மேலாக வைக்கப்பெறும் நீண்ட பகுதி.
1587. உறப்பு - செறிவு; உறப்பதாக - ஒருவருடன் ஒருவர் நெருக்கமாக.
1588. சித்திர மாதம் - சித்திரை மாதம்; தெய்தி - நாள்.
1589. சுக்கிரவாரம் - வெள்ளிக் கிழமை.
1590. உத்திரமான நாள் - உத்திர நட்சத்திரம்.
1591. யோகம் - கிரகங்கள் முதலியவற்றின் நற்சேர்க்கை; அமரபக்கம் - கிருஷ்ணபட்சம்; தேய்பிறைப்பக்கம்.
1592. சிங்கமுகுர்த்தம் - சிங்கராசி உதயமான வேளை.
1593. அடித்துச் சார்த்துதல் - உடைத்துப் படைத்தல்.
1594. வெள்ளிலை - வெற்றிலை; அடக்காய் - அடைக்காய்; பாக்கு.
1595. விக்கினேசுரன் - விநாயகன் திருநாமம்; விநாயகரை முதலில் வணங்குவது மரபு.
1596. பக்கமான - ஒளியான; வியாழம் - வியாழம் என்னும் கிரகம்; உதையம் - தோற்றம்.
1597. பன்னிரண்டு முடங்கள் - பன்னிரண்டு ராசி வீடுகள்.
1600. நிமிசமாய் - கணநேரத்தில்.

1581-1600. Pillars of large size with gems inlaid,
And pillars adorning fronts (of temples) with shining pearls.
Making (thus) decorations in full
And artful sculptural work,
And finishing it, (they) fashioned rafters in excelling manner.
Making roof-beams and finishing them
The men of Māntai, coming thick together,
Fell in salutation saying 'Vikkiṉēcurā!' [454]
On the tenth day of *Cittirai*[455] month,
On an excellent, beneficial Friday,
And on the day of the star *uttiram*
With good *yōkam*[456] and *vāram*[457] coinciding and *pakkam*[458] falling pat,
In the auspicious hour[459] of *Ciṅkam* they first
Broke a coconut and offered it;
Placing betel leaves and arecanut with it (before the god).
At the dawn of Thursday falling in the auspicious fortnight,
With the twelve houses of the zodiac staying pure,
They fixed the beam of the sacred (main) doorway
And raised the lustrous, storeyed *maṇṭapam*.
They instantly placed beams

454. This is in l.1595 below, but comes earlier in syntactical order in translation. *Vikkinēcura* is *Vināyaka* the god removing obstacles.
455. *Cittirai*—April-May.
456. *yōkam*: planetary conjunctions in different days.
457. *vāram:* auspicious days.
458. *pakkam* : auspicious forenight *(pakṣam)*.
459. *Cinkam:* The zodiacal house name after the 'lion'.

உடனே நல்ல பலகை பரப்பினார்.
பத்திதோறும் பலகை பரப்பியே,
பாதாள வானம் பதித்தனர்.
மெத்த வேமண லிட்டுக் குத்தியே,
வேண்டு வண்ணம் வரிக்கல் லடுக்கினார்.
அத்தித் தூணு மழகிய தூண்ங்களும்,
ஆனை யாளி யரிநிறத் தூண்ங்களும்,
வண்ணத் தூண்ங்கள் பலாபலா நாட்டியே
வண்மை யானதொர் மேல்க்கட்டி கெட்டினார்
கண்ணா ளர்க்கு மனங்களி கூரவே
கனகமாய் நல்ல ரெத்தினம் வைத்தனர்.
மேலாம் பலகை நிரைத்துடன்
மெய்ப்பதாய் நல்ல செம்பு கிடாவினார்;
மாலானதொர் மாயவன் மண்டபம்
மணிமாட கூடங்கள் வைக்கவே,
வண்ண மாமலர்ச் சித்திரம் குத்தியே
வளையொட்டி நிரைகள் வகுத்தனர்.
பொன்னாலே ரெட்டிணஞ் சேர்த்துடன்
பொருத்த நல்ல பலகை வகுத்தனர்.
செம்புத் தகடடித்துச் சேர்த்து,

1601. பலகை - உத்திரத்தின் மேலாகப் பரப்பும் கூரைப் பலகை.
1603. வானம் - அடிநிலை, அஸ்திவாரம்.
1604. மணலிட்டுக் குத்தல் - அஸ்திவாரத்தில் இடம்பெற்ற தூண் முதலியன அசையாமல் இடுக்குகளில் மணிவிட்டு இறுக்குதல்.
1605. வரிக்கல் - நீளமாக அடித்துத் திருத்திய கல். அடுக்கினார் - வரிசையாக வைத்தனர்.
1606. அத்தி - யானை.
1607. ஆனையாளி - ஆனையை அடக்கியாளும் யாளி என்னும் விலங்கு. அரிநிறம் - மரகதநிறம்.
1608. பலாபலா - பலபல.
1609. மேல்க்கட்டி - துணியால் அமைத்த மேல் விதானம்.
1610. களிகூர - மகிழ்ச்சி மிக.
1612. நிரைத்தல் - வரிசையாக வைத்தல்.
1613. மெய்ப்பதாய் - புகழும் வண்ணம்; 1633-ல் மெய்யதாக என வருவதும் நோக்கத்தகும்; செம்புகிடாவுதல் - செம்புத்தகடு பதித்தல்.
1614. மாலானதொர் மாயவன் - திருமாலான மாயவன்.
1616. சித்திரம் குத்துதல் - சித்திர உருக்களைப் பொறித்தல்.
1617. வளை - மோட்டு வளை; நிரைகள் - வரிச்சட்டங்கள்.
1618. ரெட்டிணம் - இரத்தினம்.
1619. பலகை - கூரைப்பலகை.
1620. சேர்த்தல் - பலகையுடன் பிணைத்தல்.

1601-1620. And with them spread good roof-planks above.
They spread the planks over each section;
They set up the underground foundation;
They poured much sand into it and pressed it
And fixed margin-stones (in foundation work) as required.
They established pillars of *atti* wood, fine pillars,
Elephant and *yāḷi* and emerald-coloured pillars,
Colourful pillars, many, many of them.
They[460] fashioned a canopy of luxuriance;
They placed good jewels of golden make
Delighting the hearts of the artisans.
They arranged roof-planks above
And spread good copper-plates in close proximity;
In building *maṇṭapam,* and storeyed mansions and halls
For Māyavaṉ who is Tirumāl,
They sculpted figures of big, beautiful flowers
And arranged them serially along small curved roof-supports.
They made good planks having blended gold and precious stones.

They made copper plates and fixed them,

460. They—seems to refer to the patrons of the artisans in this and the next line.

சிறக்க நன்றா யலங்கரித் தார்களே.
பண்ம்பு முறையு மறிந்தல்லோ
பணிசெய்து மணிமாடம் கெட்டியே
சீரான திருமண்டபந் தன்னிலே
செம்பொன் மாமணி மண்டபம் வகுத்தனர்.
காரார் கருநிற மாயவன் தன்னுட
கனகத் திருப்பாத(த்)தைக் காணவே
நேராக வொருவாசல் நீக்கியே—
நீல நெடுமால் திருவுந்தியைத்
திருவாசல் நடுவில் வகுத்தனர்.—
தெய்வ மாயவன் மேனி யழகனார்
செந்தா மரைமுகம் காணவே
மெய்ய தாகத் திருவாசல் கண்டபின்—
வீற தாக மாந்தையர் வேந்தர்கள்
சீராகத் திருவாசல் வகுத்துடன்
திருமாமணி மண்டபம் வைய்த்தனர்.
காரார் கருநிற வண்ணனார்
கமலப்பதம் போத்தியே நின்றுதான்,
திருக்கோவில் வைத்து முகித்துடன்
தெருச்சுத்து மதிலுக் கடிப் போட்டார்.

1622. பண்பும் முறையும் - தன்மையும் வைக்கும் முறைமையும்.
1623. கெட்டியே - கட்டியே.
1624. திருமண்டபம் - அழகிய பெரிய மண்டபம்.
1625. செம்பொன் மாமணி மண்டபம் - பெருமாள் பள்ளிகொண்டுள்ள கருவறை.
1627. கனகம் - பொன்.
1628. நீக்கியே - விட்டு, அமைத்து.
1629. திருவுந்தி - கொப்பூழ்.
திருப்பாதம் - திருவுந்தி, திருமுகம் மூன்றும் காண மூன்று வாசல் தனித்தனி வகுத்தனர் என்பதாம்.
1636. திருமாமணி மண்டபம் - கருவறையின் முன் மண்டபம்.
1638. கமலப்பாதம் - தாமரை போன்ற திருவடிகள்; போத்தியே - போற்றியே, வணங்கி வாழ்த்துகை.
1640. தெருச்சுத்துமதில் - கோவிலை அடுத்த தெருவீதிகளை அடுத்துக் கட்டப்படும் புறமதில்; அடிப்போடுதல் - தொடக்கம் செய்தல்.

1621-1640. Decorating beautifully, to good effect.
Knowing indeed the (required) quality and manner
They worked, built the fine storeyed structure
And in the (big) sacred *maṇṭapam*
Fashioned the fresh golden, prime *maṇṭapam*.[461]
To enable the view of the holy, golden Feet
Of Māyavaṉ, of cloud-dark hue
One door-opening (in the *maṇṭapam*) was left in front (of them);
The sacred navel of the Blue, Towering Māl
Was positioned in the middle of the (main) doorway.
For beholding the red lotus-like face
Of Divine Māyavaṉ, God of the Body Beautiful,
A sacred door-opening was unfailingly arranged
And then the king-like men of Māntai
In dignified manner, made the (main) sacred doorway (complete)
And raised the holy prime *maṇṭapam*.
Standing indeed with obeisance to the lotus feet
Of the Lord with the cloud-dark hue,
They built the sacred temple and finishing it,
Took up work for the outer walls going round the streets,

461. *Cempoṉ-mā-maṇi-maṇṭapam:* This is the sanctum forming part at one end, of the beautiful large sacred *maṇṭapam* mentioned before it.

பருக்க வேநல்ல எட்டுத் திசைகளும்
பண்ம்ப தாக அளந்து பெருக்கியே,
அகலம் நீள மளந்து பெருக்கியே,
ஆனபூமியில் வானம் பதித்தனர்.
செகமீதில்ப் புவியைப் பிளந்துதான்
சேரவே நல்ல சீவலக்கல்ப் போட்டனர்.
வரிக்கல் எடுத்து அடுக்கியே
வன்ன மாய்நல்ல சித்திரம் வைய்த்துடன்,

பெருக்கச் சாந்து வழித்தன ரெங்குமே,
(பின்ம்பதிலே) தகடுக ளொட்டினார்.
செம்பு நல்ல தகடுக ளொட்டினார்;
(திருமாமதில்ச்) சுத்துகள் கெட்டினார்.
முன்ம்பு திருவாசல் தன்னிலே
முத்தம் சித்திய சித்திரம் வைய்த்தனர்.

மாந்தையர் திருப்பணி முடித்து மன்னரைத் தொழுதுநிற்றல்

விருத்தம்

20. *சித்திரம் பலதுங் கண்டு திருமாமணி மண்டபத்துள்*
செம்பொன்னால் கதவு செய்து, திருக்கோவில் வைத்தார்கள்,
அருமையுடன் திருக்கோவில் அழகுபெறத் தான்முகித்து,
அருமையுடன் திருமாலை யன்ம்புடனே தான்தொழுதார்.

1641. பருக்கவே - விரிந்து செல்ல.
1642. பண்ம்பதாக - முறையாக; பெருக்குதல் - விரிவைக் கணக்கிட்டு அறிதல்.
1644. வானம் - அஸ்திவாரக் குழி.
1645. செகம் - உலகம்; புவி - பூமி.
1646. சீவலக்கல் - ஸ்ரீபலியிடுவதற்கான பீடம்.
1649. சாந்து வழித்தல் - சாந்து பூசுதல்.
1650. தகடுகள் - உலோகத் தகடுகள்; செம்புத் தகடுகள்.
1652. சுத்துகள் - பிராகாரங்கள்.
1654. முத்தம் சித்திய - முத்துக்கள் பதித்த.

1641-1654. Enriching the good eight directions (with activities)
They measured and swept (the street-areas);
Measured the breadth and length and multiplying them
They laid the foundation on the marked earth.
Only by breaking the earth they put up securely
In this world the *Cīvala*[462] stone of ritual offerings.
They planted marking stones in order,
And placed good decorative figures in beautiful manner
And applied plaster in plenty everywhere
Then they fixed plates thereon,
Good copper plates they fixed. (Thus) they built
The rounds (of the holy enclosing walls); In front
In the sacred gateway they placed pearl-studded figures.

Artisans finish their work and get honoured
Viruttam Verse - 20

1655-1658 Fashioning many decorations, making a door of fresh gold
In the holy prime *maṇṭapam* they built the sacred temple;
Heedfully completing the sacred temple building in fine form,
They paid obeisance to Tirumāl with sincerity and devotion.

462. *Cīvala* stone: *Srī-bali-pīṭam*, a round stone-platform for placing offerings made as part of daily worship.

21. கோவிலும் பலசிறப்புங் கோத்தமணி வாசல்களும்
தேசமெங்கு மெண்ணரிய சிறப்புகள் பலதுஞ்செய்து,
அறையு மணியரங்கு மானமண மண்டபமும்
குறையறவே செய்தவர்கள் கொத்தவரைத் தொழுது நின்றார்.

வேறு

22. ஒளிமணி மாட கூடம், ஒருதிரு மதிலுஞ் சுத்தும்,
தெளிவுறு செம்பொன் னாலே செய்துதான் மாந்தை வேந்தர்,
வளிமறை நூலின் வந்த மறையவர் தன்னைப் போற்றி,
உளமகிழ்ந் தரசர் பாதம் போற்றியே புகழ்ந்து நின்றார்.

மாந்தையர்க்கு மன்னர் சிறப்புச் செய்து அனுப்புதல்

23. போற்றநின்ற மாந்தையரைப் புகழ்வேந்தர் கண்டருளி,
ஏற்ற முள்ள நெதிபலதும் இன்ம்பமுறத் தான் கொடுத்து,
வன்ன முள்ள பச்சைவடம் வண்மைபெற உபசரித்து,
அன்னரசர் மாந்தையரை யனுப்பிவிட்டா ரப்பொழுதே.

1659. கோத்தமணி வாசல் - மணிகள் கட்டப்பெற்ற வாசல்.
1661. அறை - பொருள்களைக் காப்பதற்கான பல அறைகள்; அரங்கு - நாடகமாடுமிடம்; மணமண்டபம் - திருக்கல்யாண மண்டபம்.
1662. கொத்தவர் - கொற்றவர், அரசர்.
1663. மாடகூடம் - உப்பரிகையுள்ள மண்டபம்.
ஒருதிருமதிலும் சுத்தும் - ஒப்பற்ற அழகிய மதிலும் சுற்றுப் புறமும்.
1665. வளிமறை நூல் - வழிமறை நூல்; வழிவழியாக வரும் வேதமுறை நூல்.
1668. ஏற்றம் - உயர்வு; நெதி - நிதி; செல்வங்கள்.
1669. பச்சைவடம் - பச்சைமணி கோத்தமாலை.
1670. அன்னரசர் - அன்று அரசர்.

Viruttam Verse - 21

1659-1670. Raising the temple and many excellent[463] structures and doorways with attached bells
And countless excellent things[464] beyond imagination all over the land
And building treasure-houses, fine arenas, and noble marriage-*maṇṭapas*
In faultless manner, they prostrated in salutation before the king and stood.

Viruttam Verse - 22

The kingly men of Māntai built bright and fine storeyed pavilions,
And unequalled, sacred walls and circling paths, using transparent, fresh gold;
They revered brahmans following the path of the Veda coming down (the ages)
And greatly rejoiced; they stood, venerating the feet of the king, and praising him.

Viruttam Verse - 23

The celebrated king graciously looking on the men of Māntai standing in reverence,
Gave away much valuable riches (to them) causing them pleasure;
Honouring them with beautiful garlands of green beads, in a generous manner
The king (of such generosity) sent away the men of Māntai that very time.

---

463. *Ciṟappum:* abstract for concrete-excellence for excellent structures.
464. *Ciṟappukaḷ:* A repetition of the usage above, resorted by the narrative poet as a convenient gap-filler expression.

மறையோனுக்குப் பெருமாளின் திருமுன்பு பணிசெய் உரிமையளித்தல்

வேறு

மாந்தையரை யுபசரித்து, மறை யோனையும் வரவழைத்து,
போந்த நல்ல மறையவர்க்கு பொற்பணமுந்தான் கொடுத்து,
ஓமமது தான்முகித்து, உத்தமறை வேதமோதி,
காமவரும் திருக்கோவில் கலசமது தானாட்டி,
புத்தியுட னெங்குஞ் சுத்திசெய்து, புகழ்மாலை யுச்சரித்து,
சத்திகளுந் தானெறுத்தி, சாஸ்திரத்தால் மறையவர்கள்,
வர்க்கமுள்ள மன்னவர்கள் வரலாறு தானினைந்து,
அக்காரை யரிக்க(ா)ரையா ஆனதொரு தேசிகரை
சிக்கெனவே தானழைத்துத் தெய்வமறை யோர்களையும்,
வந்தவந்த மறையோரும் மன்னவருங் கூண்டிருந்து,
இந்தநெடு மால்பிறகே இசைந்துவந்த மறையோனும்
முந்தமுந்த முறைபாடும் முன்னீதி தான்கேட்டார்.
அந்தநல்ல மறையோனும் அறிவித்தா னடிவணங்கி:
சீரங்கத் திருந்ததுவும், திருப்பூசை செய்ததுவும்,
வாரங்கமாய் மன்னவர்கள் வழிப்பூசை பறித்ததுவும்,
வனந்தனிலே போயிருந்து மாதவங்கள் செய்ததுவும்,
புனந்தனிலே திருமாயன் புகழாகத் தோன்றினதும்,
திருமறையோன் தன்னுடனே திருமாலன் றுரைத்ததுவும்,
வரும்பிறவி தனைமாய்க்க வைய்குண்டங் கொடுத்ததுவும்,
'திருவனந்தா புரம்போறோம், தெற்கேவா' வென்றதுவும்,

1672. பொற்பணம் - பொன் நாணயம்; தட்சிணை.
1673. ஓமம் - நெருப்பில் நெய் முதலியன சொரிந்து வழிபடும் அக்கினி வழிபாடு.
1674. காமவரும் - விருப்பம் உண்டுபண்ணும்; கலசமது தானாட்டுதல் - கும்பாபிஷேகம் செய்தல்.
1675. சுத்திசெய்தல் - புனித நீரால் தூய்மைப் படுத்துதல்; புகழ்மாலை - இறைவன் புகழ் கூறும் தோத்திரப் பாமாலை; இறைவன் புகழை வெளிப்படுத்தும் திருநாமங்கள்.
1676. சத்திகள் - ஆற்றல் பெற்ற திக்குத் தேவதைகள்.
1677. வர்க்கமுள்ள மன்னவர்கள் - அரசமரபைச் சார்ந்தவர்கள்.
1678. அக்காரை - அக்காரையடிசில் பண்ணும் மடைப்பள்ளியார். அரிக்காரர் - வெள்ளித் தடிபிடித்துக் கட்டியங்கூறுவோர்; தேசிகர் - குருக்கள்.
1679. சிக்கெனவே - விரைவாக.
1680. கூண்டிருந்து - கூடியிருந்து.
1682. முறைபாடு - முறையீடு; முன்னீதி - முன் நடந்த நடைமுறை.
1685. வாரங்கமாய் - ஒருதலைப்பட்சமாய்; ஒரு சார்பாய்.
1687. புனம் - மலைச் சார்பான தவவனம்.

The king performs rites; the brahman becomes the God's servitor in the sanctum

1671-1690 Having rewarded the men of Māntai, (the king) called for
The brahman,[465] and to the Brahmaṇ he gave gold coins.
He finished the *ōmam*[466], chanted the prescribed Vedic *mantrās,*
Performed the ritual bathing of the beautiful pot (on the tower)
Of the temple,[467] carefully purified every place (with sanctified water)
Chanted hymns[468] of praise and caused deities of power to appear,
And honoured the ~~names of~~ brahmans and groups of kings
According to scriptural injunctions; he quickly called
Men of the kitchen and mace-bearers and attending religious men;
He attended to the godly brahmans (of the temple)
And the brahmans and monarchs come from different places.
He (then) asked the brahman who had come willingly
Behind this Towering Māl his very old grievance
And the procedures of old. And that good brahman
Venerating his feet, spoke of his living
In Cīraṅkam, his performance of holy ritual worship,
His accustomed worship being wrested by kings in a partial manner
And his going into the forest and performing great penances
And holy Māyaṉ appearing in famed glory in the field (before him)
And granting Vaikuṇṭam to him to end recurring birth
And saying "We are going to Tiruvaṉantāpuram; come south"

465. The text has a long sentence manipulated by verbal participles without restriction, acting in place of finite verbs. The participles have been rendered by finite verbs in separate sentences for clarity of the English rendering.

466. ritual fire-sacrifice called *hōma.*

467. This is called *kumpāpisēkam.*

468. *pukaḻ-mālai:* hymn-garlands used as a set phrase through as object it does not agree with the connotation of the verb *'uccarittu'.*

அருமையுடன் திருமுன்ம்புனக் காக்கிவைப்பே னென்றதுவும்,
திருமுன்பு தருவோம்நாம், திருவனந்தா புரந்தனிலே
வரும்வாறு அத்தனையும் மறையவனும் புகழ்ந்துரைத்தான்
அப்படியே மன்னவரும் ஆதிமறை யோருங்கேட்டு
செப்பமுடன் திருமுன்பு கொடுத்தார்கள் மன்னவர்கள்.

பலப்பல திருப்பணிகள் மேலும் தொடர்ந்து நடத்தல்

விருத்தம்

24. திருமுன்பி லவனிருக்கத் தெய்வமறை யோர் மகிழ,
அத்திறஞ்செம் பொன்மின்னு மரசர்கோன் கண்டு மெய்க்க,
பத்திய ரெத்தினங்கள் பலபல வண்ணங் கண்டு,
வித்தாரமாக மாந்தை வேந்தர் விரும்பியே பணிசெ யென்றார்.

25. மட்டார் ரொளிமாட மண்டபஞ் சிறப்புடனே
கட்டான திருமதிலும் கனத்தமணிக் கோபுரமும்
திருமதிலுஞ் சுத்துகளும் செம்பொன்னால் கதவு செய்து,
அருமாமணி மண்டபங்கள் அழகுபெறச் சமைத்தனராம்.

வேறு

பூசைப்பிரை, அன்னப்பிரை, பூவரிக வாள்விகளும்,
தேசிகர்க்கு அன்புடனே தேவாரப் பிரையுங் கண்டு,
முன்மண்டபம் பின்மண்டபம் முத்திலங்கு மண்டபமும்,
மன்னவர்கள் சிறந்திருக்க மணிமாட மண்டபமும்,
ஆதிநூல் மறைவர்க்கு மலங்கார மாளிகையும்,
சோதிமணித் தூணழகும், துய்யமணி வாசல்களும்,
மாலைகட்ட மண்டபமும், வன்னவன்னச் சோலைகளும்,

1691. திருமுன்பு - இறைவன் திருமுன்பு பூசை செய்யும் உரிமை; முதலிடம்.
1693. வரும்வாறு - வந்தவழி; வந்தவரலாறு. அத்தனையும் - முழுமையும்.
1698. பத்திய - வரிசையான.
1699. வித்தாரமாக - விரிவாக.
1701. கட்டான - வலிமையான; கனத்தமணிக் கோபுரம் - பெரிய அழகான கோபுரம்.
1703. சமைத்தனர் - அமைத்தனர், செய்தனர்.
1704. பிரை - புரை, இடம்.
1705. தேவாரப்பிரை - பூசை மண்டபம்.
1710. மாலை கட்டு மண்டபம் - திருக்கோயில் மூர்த்திக்கான பூமாலைகள் கட்டும் இடம்.

1691-1695. And saying "With love I will make yours
The worship of my sacred Front.[469]
We will give you our sacred front, in Tiruvaṉantāpuram"
(Thus) the brahman narrated with appreciation
All (details) of the story of his coming (with Māl)
The king and the original brahmans (of the place)
Heard (the story as narrated) and the kings gave (the brahman)
The (duty) of worship of His sacred Front.

More building work by the artisans

Viruttam Verse-24

1696-1710 The brahman attending to the sacred Front of the God
In the sanctum, and the (other) brahmans in divinity's train
Feeling happy, the king of kings with shining gold (crown)
Saw this situation and commended it; and he got rows of gems
Of many, many colours and said to the men of Māntai:
"Work elaborately using these (in His service) with pleasure"

Viruttam Verse-25

They made doors of fresh gold in excelling fashion for the
Fragrant bright-storeyed *maṇṭapam*, the strong (main) wall,
The heavy, beautiful tower, the sacred (outer) wall
And the (inner) circle walls and built.
Big noble *maṇṭapams*, investing them with beauty.
They built places of worship, dining-halls,
Flower-strewn tanks and worship-places
For men in temple services they built with love.
They built many *maṇṭapams*[470]
Front *maṇṭapam*, back *maṇṭapam*, and pearl-adorned *maṇṭapam*
And fine storeyed *maṇṭapam* for kings to be seated in glory,
And decorative mansion for brahmans following ancient scripture,
And luminous, fine pillars of beauty, pure gem-like doorways,
Maṇṭapam for making flower-garlands,
And gardens of many many hues,

---

469. *tirumuṉpu:* the prime ritual worship of God's image, carried on by *arcakas* a right devolving by heredity and custom.
470. This is in l. 1723, but has to be construed with l.1706 itself for syntactic linkage.

கோலவட்ட மானதொரு கோத்தமணி மண்டபமும்,
ஆலவட்ட வேல்விழியார் அன்னமென்னு மரம்பையர்கள்
நீலவட்டக் காரழகாய் நிரம்ப மலர்முடித்து,
கச்சையிட்டுத் தனத்தைக் கெட்டிக் கானமயில் போலனையார்,
அச்சிட்ட ஒளிதனத்தில் ஆனசுத்துத் துகில்நெகிழ,
மன்னவர்கள் கண்களிப்ப, மணிக்கலைகள் தான்புரள,
நூல்புரங்கள் சதங்கை தண்டை நுன்மத்தி லேயசைய,
நாவால்க் கீதம்பாடி, நங்கையர்கள் நடந்துவர,
கைவளைகள் கலிரெனவே கட்டுக்கால் நடம்புரிய,
மைவிழியும் கண்மடவார் வாய்த்த தெய்வ கன்னியர்கள்,
வல்லவட்டப் பிறையெனவே வாணுதல்க்குத் திலதமிட்டு,
கோலவட்டக் கன்னியர்கள் கூன்றாடு மண்டபமும்—
மண்டபங்கள் பலதுங் கண்டு, வன்னமணிச் சுத்துங்கண்டு,
கண்டவர்கள் கொண்டாட, காசினியில் வேந்தர் முன்னே
மாமறையோர் சொல்படியே மாந்தையர்கள் தானுமங்கே,

1712. ஆலம் - நஞ்சு; ஆலவட்டவேல் - நஞ்சு தடவிய வட்டவடிவான வேலாயுதம்; அரம்பையர் - தெய்வமகளிர்.

1713. நீலவட்டக் காரழகு - கருநிறக் கூந்தல்; நிரம்ப - மிகுதியாக.

1714. கச்சை - தனத்தைக் கட்டும் துணிவகை.

1715. அச்சிட்ட - பதிந்த; துகில் - மேலாடை.

1716. மணிக்கலைகள் - இரத்தினக் கோவைகள்.

1717. நூல்புரம் - நூபுரம்; சிலம்பு என்னும் காலணி; நூபுரம், சதங்கை, தண்டை இம் மூன்றும் காலணிவகைகள்; நுன்மத்திலே - நடமாடுகையில்.

1718. கீதம் - இன்னிசை.

1719. கலிரென - ஒலிக்குறிப்பு; கட்டுக்கால் - சதங்கை கட்டிய கால்; நடம்புரிய - நடனம் செய்ய.

1720. கோலவட்டக் கன்னியர்கள் - அழகிய இளம் பெண்கள்.

1721. நுதல் - நெற்றி; திலதம் - திலகம், பொட்டு.

1722. கோலவட்டக் கன்னியர்கள் - அழகிய இளம்பெண்கள்; கூன்றாடு மண்டபம் - கூண்டாடு மண்டபம், கூடி ஆடும் மண்டபம்.

1711-1725. *Maṇṭapam* with suspended gems in fine round shape,
And *maṇṭapam* where maids dance together[471] in elegant circles,
Divine maids, modest women with collyrium-dark lashes and eyes,
Putting the *tilakam*-mark on their bright foreheads
Like the round, waxing crescent moon,
Women[472] with lance-eyes like round hand-fans,[473]
Divine dancers like swans, women having
Dark, round, comely cloud-hued braids full with flowers
And breasts tied with cloth pressing on them,
Looking like peahens in woods,
Sing[474] songs raising sounds with their tongues, as the clothes
Wrapped round their breasts, impressed with marks, slip loose
And the precious dresses swing about
And anklets, bells and bracelets shake lightly
And they dance with the ornaments tied on their legs
As their hand-bracelets sound tinglingly[475]
To the delight of the eyes of kings (looking on).
The men of Māntai fashioned many *maṇṭapams*
And beautiful circumambulatory structures[476]
Which on-lookers praised; they built
According to the instructions of brahmans
In the presence of kings of the earth.

---

471. *kūṉṟātu maṇṭapam* This is in l. 1722, but is taken to l.1712 for translation according to syntactic order.
472. l. 1712 *ālavaṭṭa vēl-viḻiyār*
473. *ālavaṭṭam* is an old semi-round hand-fan used in temples.
474. l.1718 is taken after l.1714, for syntactic linkage. *nūpuram, cataṅkai* and *taṇṭai* (l.1717) are all ornaments worn on the leg.
475. loud: onomatopoeic word here is *kaṇīṟeṉa*.
476. *cuttukal*: May be the walls enclosing inner *prākāras* or *maṇṭapams* associated with them.

பூவறையு மாமணஞ்சேர் பொன்னறையு மஞ்சிகண்டு
முன்பந்த லலங்கரித்து, முத்துரெட்டினத் தூணாட்டி,
சொன்ன சொன்ன வண்ணம் வச்சு, சுடுவர்ன்னம் பதித்து,
மைவர்ண நிறமுடைய மாயனுட வாகனமாய்
தெய்வக்கெரு டாழ்வார்க்குச் சிறக்கவட கீழ்மூலை
பொற்பூடம் பண்ணிவைத்து, புதியவழி கட்டிவைத்தார்.

பள்ளிகொண்ட திருநெடுமால் பூசை கொண்டிருத்தல்

மெய்ப்பாய் மஞ்சன சாலை விளங்க அலங்கரித்து,
திருமஞ்சன மெடுக்கச் சிலமறையோர் பூசை செய்ய,-
தூத்திடுவார், மெழுகிடுவார், தூபதீபங் காட்டிடுவார்;
சூத்திர ரானபேர்கள் துய்யமுறை செய்திடுவார்;
மருவனைய மலரதனால் வடமாலை கட்டிடுவார்;
அமுது நல்ல கறிகள் வைப்பார், ஆனசில மறையோர்கள்.
குமுர்தமொழி மடவார்கள் கூத்தாடு வார்சில பேர்;
நட்டுவர்கள் முட்டெனவே நல்லதொரு மேளதாளம்
கட்டாகப் பணிமாறக் காவலர்கள் கற்பித்தாராம்.

1726. பூவறை - பூவைக்கும் அறை; பொன்னறை - பொன்னாபரணங்கள் வைக்கும் கருவூலம்; மஞ்சி - பனி; மஞ்சிகண்டு - சிறிதாகச் செய்து.
1727. பந்தல் - கீற்றுகளிட்டு அமைக்கும் காவணம்.
1728. வைச்சு - வைத்து; சுடுவர்ன்னம் - சுட்டவர்ணக் கற்கள்.
1731. பூடம் - பீடம்.
1732. மெய்ப்பாய் - அழகாய்; மஞ்சன சாலை - திருமஞ்சனமாட்டுவிக்கும் இடம்.
1733. திருமஞ்சனம் - அபிஷேகத்திற்கான நீர்.
1734. தூத்திடுதல் - அலகிடுதல், பெருக்குதல்; மெழுகுதல் - நீரால் சுத்தி செய்தல்; தூபதீபம் - புகையும் விளக்கும்.
1735. முறைசெய்தல் - முறையாக ஏற்படுத்திய பணிகளைச் செய்தல்.
1736. வடமாலை - வடம் போன்ற பெரிய மாலை; தூக்குமாலை.
1737. அமுது - அன்னம்.
1738. குமுர்தமொழி - அமுர்த மொழி; இன்சொல்; கூத்தாடுதல் - நடனமாடுதல்.
1739. நட்டுவர் - நடனம் பயிற்றுவோர்; முட்டு - கருவி.
1740. கட்டாக - முறையாக; கட்டுப்பாடாக; பணிமாற - செய்வதற்கு; காவலர்கள் - அரசர்கள்; கற்பித்தல் - ஆணை பிறப்பித்தல், கட்டளையிடுதல்.

1726-1731. Rooms where great fragrance (of flowers) prevailed,[477]
Rooms for keeping gold-ornaments and small (granary) storeys;
(They) decorated the front pandal,
Established pillars with pearls and gems,
Made (each fixture) as they said, fixed baked colourings,
(They) made for the divine Karuṭa-āḻvār,[478] the Vehicle-mount
Of dark-hued Māyaṉ, a golden platform in excelling manner,
In the north-eastern corner and built a new way thereto.

Tirumāl's worship in his new temple

1732-1740. Some brahmans decorated in fine manner
The place of the God's ceremonial bath
And performed His sacred bathing and worship;
Those belonging to cūttira community performed allotted duties,
They swept, wiped, and showed incense and light;
With scented flowers they made wreaths and garlands;
Some brahmans cooked food and good side-dishes;
Some women of ambrosial speech danced;
Kings are said to have ordered to sound
As aids of dance-teachers the drum
And the cymbals[479] together in harmonious fashion;

477. *māmaṇamcēr:* greatly fragrant. This epithet though placed before *poṉṉaṟai* the treasure-room, is construable with *pūvaṟai* the flower-room.

478. *Āḷvār* is affixed to *Karuṭaṉ* as honorific for the Eagle - deity.

479. Mēḷam

மெய்(ப்)பாக மாயனுட வெகுபூசை தானடக்க,
உற்பனமே முதலாக உலகுமுறை தானடக்க,
திருவிளக்குத் தெய்வமுதல் சிவபூசை குன்றாமல்,
அருவிளக்கும் அம்புவியில் அமுதுபடி குன்றாமல்,
தேசங்கள் தானும்விட்டு, சிறந்தநல்ல குடையுமிட்டு,
நேசமுடன் நெடுமாலும் நீடூழி காலமெல்லாம்
பூசைகொண்டு தானிருந்தார், பூலோகம் வாழவென்று.

வாழிபாடல்

'மாசனங்கள் நன்றாக, மன்னவர்கள் சிறந்தோங்கத்
துருவத்துப் பிள்ளமாரும் துதித்தோங்கி வாழியதே!
குருவினருள் மறவாமல் குவலையங்கள் தழைத்தோங்க!
வேதமுறை மறையோரும் வெள்ளாளர் தன்குலமும்
பாசமுறு வயிசியரும் பலகுலமும் தான் வாழ்க!
கருவிருந்து முகில் வளந்து, கனகமென மின்னல்மின்னி,
திருவருளால் மழைபொழிந்து, செல்வமிகத் தழைத்தோங்க!
மன்னவர்கள் வாழிவாழி! மந்திரிமார் தான்வாழி!

1742. உற்பனம் - உற்பத்தி, தோற்றம்.

1743. திருவிளக்குத் தெய்வம் - திருவிளக்கு நாச்சியார்; திருவிளக்குப் பூசை.

1744. அரு - அருமையானபொருள்; அமுதுபடி - அன்னம் வழங்குதல்.

1745. தேசம் - தாம் உறைந்திருந்த இடம்; குடை - குடை முதலிய எடுபிடிச் சிறப்புகள்; நீடூழிகாலம் - நெடுநாள்.

1746. நேசமுடன் - விருப்பத்தோடு; நெடுமால் - திருவனந்தபுரத்தில் பள்ளி கொண்ட பெருமாள்.

1749. துருவத்துப் பிள்ளை மார் - திருக்கோவில் பணியில் ஈடுபாடுடைய வேளாளர்.

1750. குவலையங்கள் - குவலயங்கள், பூமிகள்.

1752. வயிசியர் - வணிகர், 1748 முதல் மன்னர், மறையோர், வெள்ளாளர், வயிசியர் என நாற்குலமும் கூறி, இவற்றுடன் தொடர்புடைய பல சாதியரையும் பலகுலமும் என்று குறிப்பிடுகிறார். பலகுலம் - நாற்குலம் ஒழிந்த பிறசாதியார்.

1753. கரு - கருப்பம்; இங்கே மழைக்கரு; முகில் - மேகம்; வளந்து - வளர்ந்து.

1741-1747. As the many worships of Māyaṉ fervently continued,
As the world-order continued (unaffected) from its creation,
As the sacred worships from the holy Divinity of the Lamp
To Civaṉ continued undiminished,
As the food-offerings (to Deities) on this earth
Of esteemed values, continued undiminished,
Towering Māl, leaving his (earlier) residences,
And fine and excellent offerings to him (in those places)
Lovingly stayed through all the long ages (in Tiruvaṉantapuram)
Accepting worship, so that the world of this earth may prosper.

Benediction

1748-1755. They said: may people of the land thrive and kings prosper high!
May Piḷḷaimār,[480] temple-devotees, praise (God) and prosper high!
May the worlds flourish high, forgetting not the Guru's love!
May brahmans of the Vedic path and the clans of Veḷḷāḷar
And the loving Vaiciyar and various classes prosper[481]
May the cloud conceiving, growing and flashing lightning
Like gold, pour down rain by holy grace
Causing riches to increase and prosperity to rise high!
May kings thrive and flourish! May ministers prosper!

---

480. Veḷḷāḷar engaged in various temple services and noted for their religious devotion.
481. The poet follows the traditional benediction, wishing prosperity to the four castes and others besides.

பண்ணுதமிழ் தான்தெரிந்து பாடினவர் தான்வாழி!
திருமாலின் திருக்கதையைச் சீராகவே படித்து,
அருமையுட னகமகிழ்ந்து, அன்புடனே குருமுறையால்
கருத்துடனே படித்தவரும், களரியிட்டுக் கேட்டவரும்,
உத்து நன்றா யகமகிழ்ந்து உள்பொருள்கள் தெரிந்தோரும், 1760
புத்தியுட னகமகிழ்ந்து புகழ்விரித்த புண்ணியோரும்,
எத்திசையும் தான்புகழ எழுதிப் படித்தவரும்,
நித்தயகலி யாணமாக நீடூழி வாழி!' என்றார். 1763

1756. பண்ணுதமிழ் - இசைத்தமிழ்.
1759. களரியிட்டு - சங்கமாகக் கூடி; களரி - சபை.
1760. உத்து - உற்று.
1763. நித்திய கலியாணம் - நிரந்தர சுகம்; என்றும் இன்பம். நீடூழி - நெடுநாள், நீண்ட காலம்.

1756-1763. May this singer knowing music-filled Tamil[482] prosper
Those who read the holy story of Tirumāl in fitting manner,
Those who read (this story) with appreciation, love
And attention in the guru-disciple method,
Those who hear it (sung), forming groups (of listeners),
Those who look at it carefully and understand
Inner meanings with delight in their hearts,
Those meritorious people who with knowledge
Spread the fame of this work (by exposition),
Those who copy it (in manuscripts)[483] and read them
So that every direction has praise (for them),
May (all these) live for long ages, with permanent prosperity!

---

482. *paṇṇu-tamiḻ:* This is not merely musical Tamil but Tamil incorporating music as one of its essential components and called *muttamiḻ*.

483. Copying in palm-leaf manuscripts for reading purposes according to the practice in force before the era of printing began in late nineteenth century India.

ஆதிநாராயணர் துதி
(கொச்சகம்)

1. மன்னர் திசரதர்க்கு மதலையென வந்துதித்து,
முன்னரக்கி யைச்செயித்து, முனிவேள்வி காத்தோனே!
சன்னையாய் நீயிருந்தால், தரிப்பிடம்வே றில்லையப்பா!
அன்னை யல்லோ, கோபாலா! ஆதிநா ராயணனே!

2. வில்லெடுத்து லெட்சுமியை வீறாய் மணமுகித்து,
வல்லபரசு ராமன் மாமுனியை வென்றோனே!
தொல்லை வினையாலே துயரமுத்து வந்தேனய்யா!
அல்ல(ல்) தவிர்க்கும் பெருமாள், ஆதிநா ராயணனே!

3. கைய்கேசி சொல்கேட்டுக் கானகத்தி லெய்திமிக
செய்யாத்தி லேகுகனைச் சென்றிணக்கங் கொண்டோனே!
வையகத்தி லென்னுடைய வாட்டமதைத் தீருமய்யா!
அய்யனே, ராமகிட்டிண! ஆதிநா ராயணனே!

4. தவசிருந்த ராச்சுதரைத் தான் செயித்துச் சூர்ப்பனயைக்
கவனமாய்ப் பூமிதனில் கார்வண்ணனாய் நின்றோனே!
புவனமதி லென்வருத்தம் புகழ்ந்து மிகத் தீருமய்யா
அவனி யளந்த பெருமாள், ஆதிநா ராயணனே!

---

1. திசரதர் - தசரதர்; இராமனின் தந்தை. மதலை - குழந்தை; அரக்கி - இங்கே தாடகை; முனி வேள்வி - விசுவாமித்திர முனிவர் செய்த யாகம்; சன்னையாய் - பராமுகமாய்; தரிப்பிடம் - புகலிடம்; அன்னை - தாய்; ஆதிநாராயணன் - உலகம் தோன்றுமுன் பிரளயநீரில் பள்ளிகொண்டிருந்த முதல்வன்.
2. லெட்சுமி - இலக்குமி; இங்கே சீதை; வீறாய் - வெற்றியுடன், பெருமிதமாய்; தொல்லை வினை - முன்செய்த வினை, பழவினை; துயரமுத்து - துயரமுற்று; துன்பமடைந்து; அல்லல் - துன்பம்.
3. கைய்கேசி - தசரதனின் இரண்டாம் மனைவி; இராமனின் சிற்றன்னை. செய்யாத்தில் - பகீரதனால் கொண்டுவரப்பட்ட கங்கையாற்றில்; இணக்கம் - நட்பு; வையகம் - உலகம்; வாட்டம் - தளர்வு, வருத்தம்; அய்யன் - தலைவன்.
4. தவசிருந்த - தவஞ்செய்திருந்த; ராச்சுதர் - ராட்சதர், அரக்கர், சூர்ப்பனய் - சூர்ப்பணகை; புவனம் - உலகம்; புகழ்ந்து - அலசிப்பார்த்து; அவனி - உலகம்.

Hymn of praise of Āti-Nārāyaṉar (Viṣṇu)

1. Oh Lord who came down as the child of King Tacaratar and first
Conquered the demoness[484] and protected the sage's[485] sacrifice!
If you are indifferent (to me), I have no other refuge, sire,
Are you not my mother (as well), Protector of cows![486] Primal Nārāyaṇa[487]!

2. Oh Lord who bent the bow and got married in glory
To Ilaṭcumi,[488] and conquered the great sage, mighty Paracurāmaṉ!
I came, afflicted by ancient fate, sire!
Oh Master who saves from sorrow! Primal Nārāyaṇa!

3. Oh Lord who hearkening to Kaikēyi's word went into the wood.
And meeting Kukaṉ[489] on the contrived river[490] made friends with him,
Put an end to my sorrow on this earth,
Sire! Rāmakiṭṭiṇa![491] Primal Nārāyaṇa!

4. Oh Lord who stood on earth as the cloud-hued One,
Conquering the penance-doing demons[492] and Cūrppaṇakai![493]
Relieve specially my affliction on the earth, noting it,
Lord who measured the world! Primal Nārāyaṇa!

---

484. Tāṭakai
485. Viṣvāmittirar.
486. *Gōpāla:* cow-herd of the Brindāvaṉam.
487. Āti-Nārāyaṇa means primal or great here.
488. *Cītai* is taken as an incarnation of Lakṣmi (Ilaṭcumi)
489. This is the chief of the hunter-tribe who helped Irāmaṉ to cross over the Ganga river with their boats.
490. Gaṅga river brought from heaven by the penances of Pākīrataṉ.
491. A combined name of two *avatāras* of Rāma and Kṛṣṇa.
492. Rākṣasas like Rāvaṇa acquired their powers by their terrible penances.
493. Cūrppanakai sister of Rāvaṇa, who made love to Rāma and got disgraced and disfigured.

5. நிலையாய்ப் படையுடைய நீண்டரக்கர் தூஷணனை
குலைசெய்து மாரீசனையும் கொண்டுசினந் தீர்த்தோனே!
மலையாம லென்னுடைய வருத்தமதைத் தீருமய்யா!
அலையாத ராமகிட்டின, ஆதிநா ராயணனே!

6. கச்சுப் பெருமுலையாள் கன்னியவள் தாடகையை,
வைச்சிருந்த வாலியையும் வதைத்துவிட்ட சேவுகனே!
எச்சிடைந்து வந்தேன்நான், இரங்கியென்னைக் காருமய்யா!
அச்சுதனே, கோபாலா! ஆதிநா ராயணனே!

7. சீதைக்கனு மாரிடத்தில் திருவாழி தான்கொடுத்து,
மாதர்கைச் சூடாமணியை வாங்கிவா வென்றோனே!
தாதைபோல் நீயெனக்குச் சடத்தில்வருத் தந்தீர்க்க
ஆதரவுறும் கிட்டண, ஆதிநா ராயணனே!

8. கட்டாக வானரங்கள் கடலையடைத் திலங்கை
சுட்டழித்து ராச்சுதரைத் துணித்துவிட்ட சேவுகனே!
இட்டமுட னீரிரங்கி, என்வருத்தந் தீருமய்யா!
அட்டதிற்கும் கோபாலா, ஆதிநா ராயணனே!

---

5. தூஷணன் - வனத்தில் இராமனுடன் எதிரிட்டுப்போர் தொடுத்து மடிந்த அசுரன்: குலை - கொலை; மாரீசன் - மாயமானாக வந்து இராமன் பாணத்தால் கொலையுண்டவன்; மலையாமல் - மயங்காமல்.

6. தாடகை - விசுவாமித்திரரின் வேள்வியை அழிக்க வந்து இராமனால் கொலையுண்ட அரக்கி; வாலி - கிட்கிந்தை மலைக்கு அதிபதி; குரங்கினத்தலைவன்; வதைத்துவிட்ட - கொன்றழித்த; சேவுகன் - ஆற்றல் படைத்தவன், வீரன்; எச்சிடைதல் - எய்த்து இடைதல், இளைத்து வருந்துதல்; அச்சுதன் - அழிவில்லாதவன்; திருமால்; கோபாலன் - பசுக்களைக் காப்பவன்.

7. ஆழி - மோதிரம்; சூடாமணி - மகளிரின் தலையணி; தாதை - தந்தை; சடத்தில் - சடலமாகிய உடம்பில்.

8. கட்டாக - கூட்டமாக; கட்டுப்பாட்டுடன்; இலங்கை - இராவணனது நகரம்; இட்டமுடன் - விருப்புடன்; அட்டதிற்கு - அட்டதிக்கு, எட்டுத்திசை.

5. Oh Lord who killed the strong demon-Dūsaṇa with an army
And took (the life of) Mārīcaṉ and ended your anger,
Refuse not (my request), extinguish my sorrow (on earth), sire!
Oh Rāmakiruṭṭiṇa, unswerving in action! Primal Nārāyaṇa!

6. Oh doughty hero who killed the maid. Tāṭakai
With big breasts held tight with a cover-cloth,
And did away with Vāli, of royal position as well!
I have come exhausted and weak, pity and protect me! Sire!
Lord never-failing to His devotees![494] Protector of cows! Primal Nārāyaṇa!

7. Oh Lord who gave his holy ring to Hanuman to (reach) Cītai
And told him: "bring the braid-ornament from the lady (to me)"!
Like a father give me support to put an end to the sorrow
Attendant on my inert body, Kiṭṭiṇa! Primal Nārāyaṇa!

8. Oh doughty hero who acting together with monkeys dammed the sea
And destroyed Ilaṅkai, burning it and hewed down the Rākṣasas!
Willingly take pity on me and put an end to my sorrow,
Oh Protector of cows and eight directions too, Primal Nārāyaṇa!

494. Accutaṉ—one who never lets down.

9. எத்திசைக்கும் ராவணனை யேகமுதலாச் செயித்து,
தொண்டன் விபுசணற்குத் துலங்குமுடி சூட்டிவைத்தாய்!
மண்டலத்தில் என்னுடைய வருத்தமதைத் தீருமய்யா!
அண்டர்தொழும் ராமகிட்டண, ஆதிநா ராயணனே!

10. திருவனைய லெட்சுமியைச் சிறைமீண் டயோத்திவந்து,
பதிவாய முடிசூட்டிப் பாருலகை யாண்டோனே!
வரும்பிணிநோய் வந்தாலும், வாறபிணி தீர்த்தருள்வாய்!
அந்நறு கோபாலா, ஆதிநா ராயணனே!

11. மாயா இரணியர்க்கும் மதலையென வந்துதித்து,
ஓயாமல் நெஞ்சை உகிராமல் பிளந்தோனே!
காயங் கலங்காமல் காப்பாத்திக் கொள்ளுமய்யா!
ஆயனே! கோபாலா! அரிராம கோவிந்தனே!

12. கஞ்சன் மருகனென்றே காசினியில் வந்துதித்து,
வஞ்சகமாய்க் கஞ்சனையும் வதைத்துவிட்ட சேவுகனே!
தஞ்சமென்று வந்தேனான், தரிப்பிடம்வே றில்லைஐயா!
அஞ்சலென் றோரைக் காக்கும் ஆதிநா ராயணனே!

13. சூரன்திரி யோதனனைத் துணித்துச் செயிக்கவென்று,
நீதி விசையனுக்கு நின்றுதே ரூர்ந்தோனே!
பாதந் தொழுவாரைப் பச்சம்வைத்துக் காருமய்யா!
ஆதிநா ராயணனே, அரிராம கோவிந்தனே!

---

9. எத்திசைக்கும் - எல்லாத் திசைகளுக்கும் புகழ்படைத்த; ஏகமுதலா - தனியொருவனாய்; தொண்டன் - அடியன்; விபுசணன் - விபீஷணன்; இராவணனின் இளைய தம்பி; முடி - கிரீடம்; மண்டலம் - உலகம்; அண்டர் - தேவர்.

10. திருவனைய லெட்சுமி - சீதை; அயோத்தி- இராமபிரானுக்குரிய கோசல நாட்டின் தலைநகரம். பதிவாய - உரிமையுள்ள; வழிமுறையில் வந்த; பாருலகு - பரந்தபூமி; பிணி - நோய்; வந்தடைகிற துன்பம்.

11. மாயா இரணியன் - சாகாவரம் பெற்றிருந்த இரணியன்; மதலை - புதல்வன், பிரகலாதன்; நெஞ்சு - மார்பு; உகிர் - நகம்; உகிரால் பிளந்தவன் - நரசிம்ம மூர்த்தி; காயம் - உடம்பு; காப்பாத்தி- காப்பாற்றி; ஆயன் - இடைக்குலத்து வந்தவன்; கோவிந்தன் - பசுக்களைப் பாதுகாப்பவன்; இடையன்.

12. கஞ்சன் - கம்சன்; மருகன் - மருமகன்; தஞ்சம் - அடைக்கலம்; அஞ்சல் - அஞ்சாதே.

13. சூரன் - வலியோன்; விசையன் - அருச்சுனன்; தேரூர்ந்தோன் - தேரைச் செலுத்தினோன்; பச்சம் - பிரியம்.

9. Conquering Rāvaṇa singly, (earning) fame in every quarter
You placed the shining crown on the servitor Vipīṭaṇaṉ;
Put an end to my sorrow in this world, Sire!
Rāmakiṭṭiṇa, bowed to by celestials! Primal Nārāyaṇa!

10. Oh Lord who rescued Leṭcumi-like Sīta[495] and came back to Ayōtti
And assumed his righful crown and ruled the world of this earth!
Even when usual ache and illness occur, graciously end the occurring ache.
Oh sweet Protector of cows! Primal Nārāyáṇa!

11. Oh Lord who came down as the son of Iraṇiyaṉ having no death,
And unremittingly clove his chest with claws[496].
Save me from my body's suffering, Sire!
Oh Āyaṉ![497] protector of Cows! Govindan with the name of Hari!

12. Oh brave hero who came down in the terrestrial world
As Kañcaṉ's nephew and artfully killed Kañcaṉ[498] too!
I have come as your refuge; (I have) no other staying place, Sire!
Primal Nārāyaṇa who protects (devotees), saying 'fear not'!

13. Oh Lord who stood up and drove the chariot for the just Vicaiyaṉ[499]
So that brave Turiyōtaṉaṉ could be hewed down and conquered,
Protect with kindness those who prostrate in veneration at your feet, Sire!
Primal Nārāyaṇa! Kōvinta called Ari!

---

495. *tiruvaṉaiya leṭcumi:* Tautological phrase - *Tiru* is itself Lakṣmi; the author means *tiruvaṉaiya cītai* (Leṭcumi being used as the name of *Śita* herself here).

496. Viṣṇu assumed the Man-Lion (Narasimha) form and clove the chest of the Rākṣasa Iraṇiyakacipu.

497. *Āyaṉ:* cow-herd, a Tamil variation of the Sanskrit *kōpālaṉ* translated here as 'protector of cows'.

498. Kamsa the king of Matura, uncle of Kṛṣṇa.

499. Arccuṉaṉ, the Pāṇṭava hero famous for skill in archery; Kṛṣṇa was his charioteer in the *Makāpāratam* war.

14. கன்னிவடி வாய்ச்சமைந்து காசினியில் வேசமதாய்,
முன்னாளில் தூண்டுமா முனியை எரித்தோனே!
என்னவினை வந்தாலு மிடர்தீர்க்க வேணுமய்யா!
அன்னயல்லோ கோபாலா! ஆதிநா ராயணனே!

15. ஓசை உலகளந்தா ளுபதேச லிங்கமதை
வேசமாறிப் பறித்து, விரிகடலி லெறிந்தோனே!
வாசம்புகழ் எந்தன் வருத்தமதைத் தீருமய்யா!
ஆசைகொண்ட ராமகிருஷ்ண, ஆதிநா ராயணனே!

16. காச்சியபல் நெய்திருடிக் களவாண்டு தான்குடித்துப்
பேச்சிமுலைப் பாலுநஞ்சைப் பிசைந்தமிர்த முண்டோனே!
தாளச்சித்து வாராமல் தற்காத்துக் கொள்ளுமய்யா!
ஆச்சியிடைச்சி வளத்த அரிநாம கோவிந்தனே!

17. வட்டமாய்ச் சீமையெங்கும் மாவெலிக்காய் ஓரடியால்
கட்டாக வேயளந்து காசினியில் நின்றோனே!
திட்டமா என்னுடைய தீவினையைத் தீருமய்யா!
அட்டகிரி வைய்குண்ட ஆதிநா ராயணனே!

18. வரங்கொடுத்த தோர்சிவன் வண்டாட்டஞ் செய்தோரை
குரங்காட்டி யேயவரைக் கொன்றதொரு சேவுகனே!
உளாங்கமாய் வந்தபிணி யுள்வினையைத் தீருமய்யா!
அரங்கனே ராமகிருஷ்ண! ஆதிநா ராயணனே!

---

14. கன்னிவடிவு - கன்னிப்பெண்ணுரு; மோகினி அவதாரம். தூண்டுமாமுனி - பஸ்மாசுரன்; இடர் - துன்பம்.

15. உலகளந்தாள் உபதேச லிங்கம் - துர்க்கையின் போதனையால் அசுரர் பூசித்த சிவலிங்கத் திருமேனி. வேசமாறி - உருமாறி; வேற்றுவடிவு கொண்டு.

16. பேச்சி - பூதனை; தாளசித்து - தாழ்ச்சி, வறுமை; தற்காத்து - தன்னைக் காத்து.

17. மாவெலி - மகாபலி; திட்டமாக - உறுதியாக; அட்டகிரி - எட்டுமலை.

18. வண்டாட்டஞ்செய்தல் - வண்டுபோல் ஓடி ஒளியச் செய்தல். குரங்காடுதல் - குரங்காட்டுதல் போலச் சொற்படிநடக்கும்படி அலைத்தல். உளாங்கம் - உடம்பினுள்.

14. Oh Lord who on earth assumed the shape of a maid
And burnt in former days the big interfering ascetic![500]
Whatever misfortune occurs, put an end to the difficulty, Sire!
Are'nt you (my) mother? Protector of cows! Primal Nārāyaṇa!

15. Oh Lord who threw into the wide ocean! seizing the venerated Liṅkam
Of the famous goddess Ulakaḷantāḷ, assuming a changed guise!
I sing your praise; put an end to the sorrow of such a one,
Rāmakriṣṇa, dear to me! Primal Nārāyaṇa!

16. Oh Lord who stole boiled milk and ghee and drank (them)
And drank ambrosia, kneading the poison of the breast-milk of the demoness,
Save me from falling into ill fortune, Sire!
Kōvintaṉ, called Ari, brought up by cowherd-maids![501]

17. Oh Lord who measured dutifully with one foot,
Circling all lands for Māveli[502] and stood in this world!
Surely put an end to my ill fortune, Sire! Lord
Of eight directional mountains[503] and Vaikuṇṭam! Primal Nārāyaṇa!

18. Oh Warrior-hero who caused those whirling (destructively)
Like beetles with powers granted by Civaṉ's[504] boon
To dance like monkeys and killed them!
Put an end to (my) inner affliction, come as a part of my body,
Oh Araṅkaṉ![505] Rāmakriṣṇa! Primal Nārāyaṇa!

---

500. Allusion to Pasmācuraṉ, a demon who obtained a boon to kill everyone he touched but was outwitted and made to die himself by Kṛṣṇa, assuming the form of a beautiful maiden.
501. Pleonastic *phrase—ācci-iṭaicci* both words in the compound meaning 'cowherd maids'
502. This measuring is in accordance with the boon granted by the Acura emperor Makāpali.
503. *Aṭṭakiri* - Mythological *kula-kiri,* traditional mounts dominating the eight directions.
504. The allusion is not clear.
505. Araṅkanātar, the Viṣṇu Deity of Cīraṅkam, celebrated in this ballad. Viṣṇu is regarded as the Father of the beautiful god of love—Kāmaṉ in verse 19.

19. காமனுக்குத் தந்தையென்றே காசினியில் வந்துதித்து,
மாமனையும் தான்வதைத்து, மாமியையும் கைப்பிடித்தாய்
சீமானே, என்னுடைய தீவினையைத் தீருமய்யா!
நாமமுள்ள ராமகிருஷ்ண, நமக்கோடி நாராயணனே!

20. வல்லதொரு மாமுனிவன் மங்கையரைக் கல்லாக்கி,
கல்லைமிதித் தேயகலி கடுஞ்சாபம் தீர்த்தோனே!
தொல்லை வினையாலே துயரமுற்று வந்தேனய்யா!
அல்லல் தவிர்க் கும்பெருமாள், ஆதிநா ராயணனே.

---

19. காமன் - மன்மதன்; மாமன் - மாமன் முறையான கம்சன்; மாமி - லட்சுமி, சீதை; சீமான் - திருவாளன். நாமம் - பெருமை, புகழ்; நமகோடி நாராயணன் - நவகோடி நாராயணன்.

20. முனிவன் - கோசிக முனிவன்; மங்கை - கோசிக முனிவரின் பத்தினியாகிய அகலிகை; அகலி - அகலிகை; கல்லை மிதித்து அகலிகை சாபம் தீர்த்தது, தம்பி இலக்குவனோடு விசுவாமித்திர முனிவருடன் மிதிலை நோக்கி செல்லும் வழியில் நிகழ்ந்த நிகழ்ச்சி. தொல்லைவினை பழவினை. அல்லல் தீர்க்கும் - துன்பம் போக்கும்.

19. You came on earth as the Father of Kāmaṉ
And you killed your uncle and took the hand of Leṭcumi![506]
Oh Lord of Ciṟī,[507] put an end to my ill fortune, Sire!
Famous Rāmakriṣṇa! A crore of *namaskāras*[508] to you, Oh Nārāyaṇa!

20. Oh Lord who ended the cruel curse on Akalikai,[509] the lady
Made into stone by the mighty and great sage, stepping thereon,
I have come, afflicted by the action of ancient fate, Sire!
Oh Ruler-God removing sorrow; Primal Nārāyaṇa!

506. *Māmi* The poet has a verbal jingle with *māmaṉ:* uncle Kañcaṉ and *māmi* meaning not uncle's wife but the goddess seated on the lotus, Lakṣmi.
507. *Cīmāṉ* is from *Ciṟī-māṉ* the Person with *Ciṟī-meaning Lakṣmi.*
508. *Namakkīṭi: Nama* may be taken as the shortened form of *Namaskāram* - word of obeisance.
509. The episode of Sage Gautama's wife Akalikai being cursed for adultery with Intiraṉ and redeemed by Rāma is part of the *Rāmāyaṇam* story.

பாட வேறுபாடுகள்

பாட வேறுபாடுகள் அடி எண் குறிப்புடன், முன்பின் இணைந்து வரும் வேறுபடாச் சொற்களுடன் சேர்த்துக் காட்டப்படுகின்றன. வடிவு வேறுபடும் சொற்களில் அவ்வத்திரிந்த வடிவங்களே மூலவடிவங்களைச் சுட்டும் நிலையினவாயிருத்தலின், திரிந்த வடிவம் மட்டும் காட்டப்பெற்ற இடங்களும் உள. பொருள் தொடர்புடன் பாட வேறுபாடுற்ற அடிகளை நோக்குவோமாயின் வேறுபடும் இடங்கள் தெள்ளிதின் புலனாகும்.

1. மருவணி துளசிமாலை மாயவனரங்கன் கண்ணன்
2. கமலையோந் திருவனாதன்
3. தன்னிலுத்த
4. காற்ப்பதாமே, கார்ப்பதாமே
5. சக்தி தனம்பரம்
6. உபத்திரன் வளந்து நின்ற உருத்திரன் பதத்
7. விபத்தருள் விட்டுணு
8. நபத்தரு ளுலகந் தன்னில் நரரிடத்
19. தேவர்களும் நலரும்
34. சீறிராமர்
46. பொராது வீரமகள் நாமாது புகழ
48. நாயகன் குழைத்தொந்தி பாதமது போத்தி
49. யான்சிறிது புஞ்சொல்லைநான் சொல்வேன், செறிது புன் சொல்லினால் சொல்ல
50. இயன்றோர்கள் பெறுமே
51. மருவளரு
52. மங்காத
53. அமுர்தமொழி மோகன்
55. குருவின் முறை மறவாத யோகன்
56. அருதான் அருதகுட்டி இக்கதையைச் சொன்னான்
57. புன்சொல் கதை இஞ்சொல்லினால் பாடயிசை பெறுமே
58. இந்த அடி மாற்றேட்டில் இல்லை. இங்கும் பிற இடங்களிலும் மாற்றேடு என்பது இந்நூலின் பரிசோதனைக்குக் கிடைத்த இரண்டாவது சுவடியைக் குறிக்கும்.
60. ஏது போலாச்சு
61. கமந்த செந்தாமரை
62. தானுஞ்சதி
63. தன்னொளிவைக்
64. துய்யவானின் மின்னினொளி தானுஞ்சதி
66. வாரணங்கள் மிதிப்பதடிக்கு, வாரணம் விழிப்ப தொக்கும்
70. கனக மின்னல் இடியிடித்து
71. பருமா வரையைப் பொருதமுகில் பாரேழ் பெருகப் பெய்வது தொல், பொதிந்த முகில் பாரேழ் பெருகப் பெய்வது போல்
72. நனையப் பெய்யாத உற்றபனிசென்றெதுத்ததுவே
73. திருவளரும் புயரூபன் அரிய திரு மால் தான்
76. ஆனைமுக வேளவனும்வந்
79. கரியதிரு மாலயனே சிறீபல்ப்ப நாபா
80. அரிய நெடுமாலே
81. இலகுபுகழ்
83. யொரடியினால்
84. உதவியருள் தருவாய்

85. வெண்ணை திருடியுண் டோனே
86. கரிய நிற வர்னா
89. இரு பிளவு செய்தாய்
90. அமுர்த நாயகமே
94. வர்ணனே—கொழுந
95. பாரதம் பொருதாய்
97. சரவணையிலமர்ந்த
99. கதையையருள், கதைக்கு அருள்
102. சீதையை—மீண்டவந்நாள்
103. மேவியே இனிதிருந்தாரே
104. கொண்டிருந் தாரே
105. தேவார முங்கொண் டிருந்தாரே
107. வாசமுறுங்
110. மோதியத் தாளமெக்
112. சிவாலயமும்
113. சிகரமொடு, சிகரமுடி
114. அமரசிறை யிடமீண்ட
115. வர்க்க மண்டபமும், காலமண்டகமும்
117. வயித்த மண்டபமும்
119. இனிதிருந் தாரே
122. நகரிக்குழல்
123. சூழ இனிதிருந் தாரே
124. இந்த அடி மாற்றேட்டில் இல்லை.
125. மாதரிசல் பாட
127. நாமலர் பாட
128. தெய்வார் பூசைபணி
130. சீரங்க ராசன்
132. இசலான
133. நாலுமுறை
134. சீரங்கராயர், சீரங்கராசன்
135. ரெட்டிணக் குடைகள் நிகழ்த்த
136. ரெஸ்தின, ரெட்டிண
138. திருமாலு முன்னே
140. மறையோர்கள் முன்பாக
141. மெய்ப்பான பேர்சிலபேர்
142. என்றுமொரு, இன்னமுறை என்முறை என்றொரு மறையோன்
143. செய்துவரும் அந்நாள்
145. தாரரைச ரோடு
148. மன்னவர்க ளிம்முறை, மன்வர்கள் என் முறை
149. வளமையா யிம்முறை
150. கன்மமிது
151. கைமுறை
152. இன்பமுடனே
154. முன்முறையும்
155. பூண்ட கருமந்தான் நடந்துவரும் அந்நாள்
156. செய்துவரும் அந்நாள்
156-157. இந்த அடிகள் மாற்றேட்டில் முன் பின் மாறியுள்ளன.
159. தளர்ந்தான்
161. திசைமாறியே
162. முறைமையைத் தவிர்க்கையாலே
164. நாடென மனது, நாடனமனதில்
166. வேதியனும் உணர்வசன மில்லாமல், இதன்பின், 'ஒருவர் துணையின் றெனவே உயர்மறையோனும் நினைந்து' என ஓரடி மாற்றேட்டில் உள்ளது.
168. மாமறையோ னவ்வினத்தில்
169. தானமறை யோனுமுகித்து
170. தார்மறை யோனும் தொழுது
175. பேச்சிமுலை யுண்ட

177. மார்பகத்தை யிருபிளவாய்ப், மார்புதனை
178. இன்பமுள்ள
180. வல்லசரத் தாலறுத்த வரிசைத்
181. வேசையூதி, நிரையூதி; காலி நிரை மேய்த்துக் கண்டவர் கொண்டாடிடவே
182. கஞ்சனை நெஞ்சடைத்த கரியமுகில் வர்ணனே
184. தூஷணை மடியச் சரந்தொடுத்த
186. கட்டான மாளிகையும்
187. எழுகடலை யடைத்து
188. எரியச்சரந்
189. இலங்காபுரி சேனையையும்
190. சரந்தொடுக்க
192. பச்சமாலே
193. தான்கடவா தேயிலங்கைத்
194. தாலமும்பூங் காவனமும், தண்டரள மாளிகையும்
197. முசித்து நடத்திடவே. முன்றே கருமம் நமக்கு முடித்துத் தரவும் வேணும்
200. சங்கடங்கள் உரைத்து
201. காலும் நொந்தான், உரைத்துப்பல கால முந்தான்
202. வெற்றிமறை யோன்வனத்தில்
203. எண்ணும்மாயன்
205. மங்கையர் குரவையிட
209. சங்கையுடன் தெய்வப் பெண்கள்
210. நான்முகத்தில்
217. செய்யவே
218. முனிமாதவன் அனியாய முரைத்தான்
219. முறையானது அடரயெடுத்தா யீந்தார், முறையானதுயிடவே யெடுத்தாய்ந்து
220. மறையோன் முன்னேயுக மேகன்முன்னே
221. உற்றமாயவ னுரைத்தே உயர்மறையோ னையும் அனுப்பி
223. பதிபூசையும் நடப்பும்
224. முதலானதோர் ஆதிகாலத்தில் முன் பூசையும் முறையும்
225. முறைமாறுகள் செய்தார், முறைமாறு கள் செய்தால்
228. தாங்கள் நடத்தாமல்
229. தலைமீதினில் மதிகேடுகள்
232. அனியாயமதுரைத்தான்
233. தேசமன்னவர்க்
234. கேட்டவர்களும்
235. பய்யரவினில் விழிகள்துயில்
236. பரனேயெனக் கருள்வாயென்ன பரமா வன மடைந்தேன்
238. உனக்கவயம் உனக்கவயம், உனக்கப யம் உனக்கபயமே
239. உனக்கவயம், உனக்கபயமே
240. திருவானவள் கணவா, உனக்கவையம், உனக்கபயமே
242. அனியாயமே உரைத்தார், அனியாயம துரைத்தான்
243. தேவர் சூழவே சகலநெடுமாலும், சபை யாகிய தேவர் சூழவே சகல வேதமும் தெரியாமல்
244. மறையோனையும் தஞ்சமென்றருள் புரிந்தேன்
246. வேதநீதிகள் அருள்மாயவர்க் குரைத்தார்
247. வருமாறுகள் தவமேபெற வைகுண்ட பதம் அளந்தோன்
248. வந்தாயெனப் பரிந்தேன், புரிந்தேன்

249. புரிந்தேன் சீரங்கப் பதியுமிட்டு மறுபூமி யில் போகவே

251. திருந்தேசில தென்பூமியில் போக வேணுமுன்

252. திருவனந்தாபுரம்

253. உறைந்தாலென்ன

254. உற்ற மாயவனுரைத்தே, உத்தமாயவ னுரைத்தே

257. தனிமாயவன் பதிவந்திடில் சகலநெடு மாலும்

259. போகவேணுமென விசைந்து

260. நெடுமால் இசலுட னறிவித்தாரே

261. அமரதானும்

262. மறையோர்தம்மை வேற்றுமை

263. கூறாய் முன்முறை தவிர்க்கையாலே

266. திருமுறை யாகவே

267. மன்னர்க் கருள்செய்ய

268. காரியங்கள் செப்ப

269. செப்பமான திருவரங்கந் தன்னில்

272. இசைந்து தானத்

275. புண்ணியத்தலம்

278. இன்ம்ப மான

279. என்ம்பிறகே போந்தாய், என்பிறகே போந்தால்

285. குடைகள் பிடித்திட, குடைகள் விரிக்கவே

288. கன்னிமார், கன்னியர்கள்.

289. கோத்திரமுள்ள பூதப் பிசாசு சூழ்ந்திட

293. அங்கிலங்கியே

294. செய்யென்ன, சேயென, செய்ம்மென்ன

296. தாகமான பெரும்பூதம்

297. நடந்துடன்

299. திருவனக்கா, திருவணங்கா

301. பண்ணாகிய

305. புண்டரீகம தாகிய

307. அண்டர் தெய்வார்கள்

309. வாலி யானவன் மாறிப், மாவலி வாணன் மாறிப்

311. ஆனையும்

314. கயிலாசத்தில்

316. திருமாமணி மண்டபங்

317. வரமீறிய ராவணன் தன்னையே, வரமா றிய ராவணன் தன்னையும்

318. வதைத்த இராமன் விடாமலே, வதைத்த பிரமன் விடாமலே

319. இராமனவ தாரந்

320. லிங்கைப் பிரதட்டை, லிங்கப் பிரதிட்டை

321. பூரண கெதியுமாகு மனுமுறை

331. தருளென்ன

333. பரனாரு மப்போது

335. வென்று மாயன், வேண்டும் மாயன்

337. கண்ட மாயன்

340. பூதம் சேவித்துப், பூதம் கைதட்டிப்

343. மீளச் சரந்

344. தன்னைத் தரித்தமால்

345. கூட்ட மாபூதம்

348. நின்ற சோதி, நின்ற மாயன்

350. தெருவைய ரிசைகள் பாடச் சீகாழியன், சீயாளியன்

353. லெட்சி, லெச்சிமி

356. கொடிய நூத்துவர் தன்னை வென்றான்

357. கன்னன் தனைவென்று, கன்னன் தனை யன்று

350-360. இந்த இரண்டடிகளும் மாற்றேட்டில் இல்லை.

361. தொரோணா சாரியையும்

362. துய்யசிறி வீட்டில், துய்ய சிறு வீட்டில்

365. தீரன்திருமாலும்

367. வீரன் திருமாலும்

370. வரிசை

371. குழல்சேர் கன்னியர்கள்

373. சீலாப் பதிகளை யலங்கரிப்பார்

374. பணிமாறி

375. குழலார் மாதுநல்லார்

377. வீதியெல்லாம்

378. பரிமளம் எழுதிடுவார்

380. மாயன் வருகிற வீதியெல்லாம்

382. மிக்க தெருவாசல் மெழுகிடுவார்

384. தெருவெல்லாம் விளக்கிடுவார்

385. வய்ப்பார் தெருக்களெல்லாம்

386. கோலத் திருவாசல் மெழுகிடுவார்

389. செந்தாமரைமாது லெச்சிமிவாசர்

391. குழல்சேர் பூசணங்கள்

396. தெருக்கள் தோறும்

401. கொத்து மலராய்க் குளித்திடுவார்

403. சித்திர வர்ன்னத்

404. தெருக்கள் தெருக்களை யலங்கரிப்பார்

405. முறும்நகையான மங்கையர்கள்

407. கயலை விரித்திடுவார்

408. கதிரோ னுதையத்தைக்

409-410. மாற்றேட்டில் இவ்வடிகள் தம்முள் மாறிக் காணப்படுகின்றன.

413. சியாளி யன்பதி தனிலே, சீகாளியன் பதிதனிலே

415. மாயப் பொருளாலே யீசுபரரை

416. வந்து கண்டாரே

418. இந்த அடிக்குப்பின் மாற்றேட்டில்,
ஆச்சிமுலைப் பாலை யுண்டு
அரவணையி லமர்ந்த செல்வா
என ஈரடிகள் மிகுந்துள்ளன.

420. பிறப்பட் டிங்கே போந்ததென்ன

422. செய்தியேது எனக்கேட்க, எனக்கேட்டார்

424. வய்த்தபூசை

430. தனைக் கொடுத்து

431. போகவந்தேன்

432. எனமொழிந்தார்

436. ரருள் கொடுத்தார்

